
இனி என் முறை



894.8113
BAL

# பாலகுமாரன்

# இனி என்முறை



குறிப்புதவி நூல்

**இனி என் முறை** (நாவல்)


முதற் பதிப்பு : அக்டோபர், 1988
இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 1990
மூன்றாம் பதிப்பு : ஆகஸ்ட், 1991
நான்காம் பதிப்பு : ஆகஸ்ட், 1993
ஐந்தாம் பதிப்பு : மார்ச்சு 1998
உரிமை : ஆசிரியருக்கு.

---

**Visa PUBLICATIONS**

---

**விசா பப்ளிகேஷன்ஸ்**
ENI EN MURAI
*by : BALAKUMARAN*
*Fifth Edition : March 1998*

**விலை ரூ. 52-00**

கிடைக்குமிடம் :
**திருமகள் நிலையம்**
**55, வெங்கட்நாராயணா ரோடு,**
**தி. நகர், சென்னை-600 017.**
போன் : 4342899
*Fax : 91—44—4341559.*

---

அச்சிட்டோர் :
*சித்ரா பிரிண்டோ கிராபி,*
*24, பொன்னுசாமி தெரு,*
*சென்னை-600 014.*


578341
CONNEMARA ... LIBRARY
18 May 2004
894.8113
BAL

குறிப்புதவி நூல்

வெள்ளக்கால் **இரா. கந்தையா** ஆலடியூர் அஞ்சல்
அம்பா சமுத்திரம்

'இனி என் முறை' கதையில் புதிய அணுகு முறையைக் காண முடிந்தது. காவல் துறைக்குச் சிலர், களங்கம் ஏற்படுத்திக் கொண்டிருப்பதைச் சமீப காலச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே காவல் துறையில் செல்வராஜ் போன்ற கடமை வீரர்களும் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளீர்கள். இன்னொன்று; சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடும் 'கந்தசாமி'களின் மறு பக்கத்தையும் காண முடிந்தது.

—வெள்ளக்கால் **இரா. கந்தையா,**

(மேலும் விமர்சனங்கள் : 121ஆம் பக்கம்)

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| நானே எனக்கொரு போதி மரம் | ... | 32 | 00 |
| இனி என் முறை | ... | 30 | 00 |
| மெர்க்குரிப் பூக்கள் | ... | 42 | 00 |
| கரையோர முதலைகள் | ... | 38 | 00 |
| என் கண்மணி | ... | 22 | 00 |
| ஆசை என்னும் வேதம் | ... | 40 | 00 |
| அகல்யா | ... | 24 | 00 |
| சிநேகமுள்ள சிங்கம் | ... | 40 | 00 |
| காதல் வெண்ணிலா | ... | 22 | 00 |
| என்றென்றும் அன்புடன் | ... | 27 | 00 |
| சுந்தரி கண்ணால் ஒரு சேதி | ... | 22 | 00 |
| கானல் தாகம் | ... | 22 | 00 |
| போராடும் பெண்மணிகள் | ... | 22 | 00 |
| ஆசைக் கடல் | ... | 44 | 00 |
| இரவல் கவிதை | ... | 28 | 00 |
| நெல்லுச்சோறு | ... | 38 | 00 |
| வன்னிமரத் தாலி | ... | 30 | 00 |
| அன்புக்கு பஞ்சமில்லை | ... | 26 | 00 |
| பந்தயப் புறா | ... | 46 | 00 |
| ஆனந்த வயல் | | 40 | 00 |
| தாயுமானவன் | ... | 38 | 00 |
| சின்ன சின்ன வட்டங்கள் | ... | 25 | 00 |
| ஒருவழிப் பாதை | .. | 27 | 00 |
| கிருஷ்ண அர்ஜுனன் | ... | 22 | 00 |
| இனி எல்லாம் சுகமே | ... | 50 | 00 |
| தலையணைப் பூக்கள் | ... | 36 | 00 |
| வர்ண வியாபாரம் | ... | 34 | 00 |
| அடுக்கு மல்லி | .. | 23 | 00 |

# இனி என் முறை

## 1

நிலவொளியில் கோவில் பளபளத்துக் கொண்டிருந்தது. உற்றுக் கவனிக்க, கூண்டு வளைவுகளில் ஆட்கள் நடமாட்டம் தெரிந்தது. இடது பக்கம் கீழ் வளாகத்திலிருந்து சமையல் புகை அடர்த்தியாக எழுந்து அவ்வப்போது கூண்டை மறைத்தது. இரண்டு பக்கமும் நீர்த் தடாகங்கள். நடுவே சலவைக் கல் பாதை கோவில் பலி பீடம் நோக்கிப் போயிற்று. அமைதி. மரண அமைதி.

மணி நாலு நாப்பது. இன்னும் இடி இடிக்க இரண்டு மணி நேரம் இருக்கிறது. வெறும் இடியா? கருப்பு இடி. இடியில் கோவில் சேதமாகக் கூடாது. உள்ளே இருக்கிற பலி பீடம் தொடப்படக் கூடாது. கலசங்களைத் தகர்க்கக் கூடாது. பதினைந்து பதினைந்தடி வெல்வெட் மெத்தையில் குண்டு படக்கூடாது. அந்த மெத்தையில் ஒரு புத்தகம் நாலடியில் விரிக்கப்பட்டுப் பட்டுத்துணி போர்த்தப்பட்டிருக்கும். அதன்மீது தூசு கூடப் படக்கூடாது.

ஹோட்டல் மாடியிலிருந்து முந்நூறு கஜ தூரத்தில் இருக்கிற கோபுரக் கூண்டுகளை நாலு மார்டர் குண்டுகள் சிதறடித்துவிடும். உள்ளே இருக்கிற நூறு

தாடிக்காரர்களும் சமாதியாகி விடுவார்கள். அவர்கள் கையிலிருக்கிற அத்தனை துப்பாக்கிகளும் அமைதியாகும். மிகச் சுலபம். மூன்று நிமிட வேலை. ஆனால், இடி, கோவில்மீது படவே கூடாது. கோவிலை ஆக்கிரமிப்புச் செய்பவர்கள்மீதுதான் பாய வேண்டும். அவர்களை உயிருடனோ, அல்லது பிணமாகவோ அப்புறப்படுத்த வேண்டும்.

செல்வாவுக்குப் புரியாத விஷயம் இதுதான். இதே கபாலீஸ்வரர் கோவில் என்று வைத்துக் கொண்டால் என்ன செய்யும்? கதவுகள் மூடி நூறு பேர் கபாலி கோவிலில் ஏ.கே நாற்பத்தியேழு ரைபிளுடன் பொஸிஷன் எடுத்துக்கொண்டால் ஜனங்கள் என்ன சொல்வார்கள்?

''ஏரோபிளேன்லேர்ந்து குண்டு போட்டுக் கொல்லுடா. மூக்கு நோண்டிண்டிருக்கையே, பத்து நாளா காய்கறிக் கடை இல்லை. வெண்ணெய் வாங்க முடியலை. ஆபீசுக்குச் சுத்திச் சுத்திப் போக வேண்டியிருக்கு. எவனோ உள்ளுக்குள்ள துப்பாக்கி வச்சுண்டுருக்கானாம். என்னைப் போய் விரட்டறான். போ, போய் அடி. துவம்சம் பண்ணு, கபாலீ கபாலீன்னு குண்டு போடு. இதவிட பெரிசா கோவில் கட்டிக்கலாம். கோவில்லதானா சுவாமி? சுவாமி எங்கேயும் இருக்கார். இத்தனை பேசியும் பேந்த பேந்த முழிக்கறானே! இண்டியன் ஆர்மியே யூஸ்லெஸ்.''

செல்வாவுக்கு அந்தக் கற்பனையே சிரிப்பு கொடுத்தது. தமிழர்கள் படபடப்பானவர்கள். கொஞ்சம் பயந்தவர்கள். ராணுவமோ, முற்றுகையோ அறியாதவர்கள். 'ஏ.கே நாற்பத்தி ஏழு' என்றால், எத்தனை தமிழனுக்குத் தெரியும்.

''ஏதாவது ஸ்கூட்டர் நெம்பரா சார்? இல்ல, நெல்லு ரகமா?''

ஸ்கூட்டர், சினிமா, செட் தோசை, மானாவாரி பயிர், அண்ணாதுரை, எம். ஜி. ஆர்., கலைஞர், ஆனந்த



விகடன், குமுதம், தீபாவளி, பொங்கல்—இவைதானா நினைவுக்கு வரணும்?

தேசத்தின் அமைதியான பகுதி அது.

'அபிராமபுரமா? மீட்டருக்கு மேல இரண்டு ரூபா ஆகும்.''

''என்னது?''

''இரண்டு ரூபா கூட கேட்டேன்.''

''ஏன்? குடுக்க மாட்டேன்னா...?''

''இஷ்டமிருந்தா கொடு சார். ஏதோ உன் பேரச் சொல்லி டீ சாப்ட்டு போறேன்.''

முதல் வசனத்துக்கும் மூன்றாவது வசனத்துக்கும் இடையே மிகப் பெரிய உணர்வு இடைவெளி இருக்கும்.

''சார் போலீஸா?''

''இல்லை.''

''முடி வெட்டியிருக்கிறதப் பார்த்தா அப்படி இருந்துச்சு.''

''சி. பி. ஐ.''

''அப்படினா?''

என்ன சொல்வது இவனுக்கு? எப்படி விளக்குவது?

''பூனைப்படைங்றாங்களே டி. வி.ல நீல நிறக் கோட்டுப் போட்டுக்கினு வராங்களே அதா? எல்லோரும் டுபாக்கி வச்சிருக்காங்க சார்.''

இல்லையென்பதா? ஆமாம் என்பதா?

''நம்மூர் போலீசுக்கு நீ பயங்காட்ட மாட்டேயில்ல?''

''மாட்டேன். மெள்ள போப்பா.''

''எனக்குக்கூட போலீஸ் ஆவாது. போன வாரம் வண்டிய மடக்கி சத்தாய்ச்சான். நெம்பர் எழுதிட்டான்னு கிளப்பிக்கினு வந்துட்டேன்.''

போலீஸ்காரனுக்கு வண்டிய கிளப்பியவன சப் இன்ஸ்பெக்டர் சட்டைக் காலரை இறுக்கியதும் 'சாமி, சாமி வுட்டுறு சாமி' என்று அலறுவான். போலீஸான்னு

பயந்துதான் போவணும். என்ன பண்றது? ஆட்டோ ஓட்ட வந்துட்டமே. உணர்வு இடைவெளி சொல்லாய், செயலாய் திசை மாறும்.

நேற்று இருபது வயது தாடிக்காரனை ஆறு பேர் புரட்டிப் புரட்டி எடுத்தார்கள். விரல்களை நெரித்து முகம் முழுவதும் மாறி மாறிக் குத்தினார்கள்.

சத்ஸ்ரீ அகால்...

சத்ஸ்ரீ அகால்...

வலி உச்சத்திலும் கடவுள் வாழ்த்தைத் தவிர அந்தப் பஞ்சாபியிடமிருந்து ஒரு வார்த்தை வாங்க முடியவில்லை. உரம் உரம் அசைக்க முடியாத உரம்.

மதமா, மண்ணா, பிறப்பா, வளர்ப்பா, உணவா, மனசா?

தோள் பட்டை காய்த்துப் போயிருந்தது. லைட் மெஷின் கன் சுட்டுப் பழகி அந்தத் தழும்பாம். பிரித்துப் போட்ட த்ரீ ஸீரோ த்ரீயை முப்பது விநாடியில் லோட் செய்து தயாராவானாம்.

முழங்கால், முழங்கை தேய்ந்திருந்தது. க்ராலிங் செய்திருக்கிறான். தவழ்ந்து தவழ்ந்து சுடப் பழகியிருக்கிறான்.

இவன் சிவிலியனா?ராணுவமா?வியப்புமேலிட்டது.

இரண்டுமில்ல.

இவன் டெரரிஸ்ட்.

பயங்கரவாதி.

அவன் சிரித்தான். இல்லை நான் ஒரு பஞ்சாபி சீக்கியன் என் மதத்தை, மண்ணை நேசிக்கிறேன். என்னுடையது பொன் விளையும் பூமி. என் மதம் புனிதத்தின் புனிதம். என் கிரந்தம் கடவுள் கட்டளை. என் குரு என் தலைவன். என் உயிரும் உடலும் இவற்றிற்கே சமர்ப்பணம்.

வேதனையும் வியப்பும் மண்டிற்று. வாழ்க்கையின் சகல விஷயமும் மதத்திற்குள்ளே அடங்கிவிடுமா?மதம்



தாண்டி மனிதனை உணராதது நாகரிகம்தானா? எத்தனை இளைஞர்கள் இப்படி விஷம் தலைக்கேறிக் கிடக்கிறார்கள்.

செல்வா அழுந்த உட்கார்ந்துகொண்டு இன்ஃப்ரா ரெட் பைனாக்குலர் வழியே மறுபடி கூண்டுகளைக் கவனிக்க ஆரம்பித்தான். கெட்டிலும் டீ டம்ளருமாக ஒரு பெண் நடந்து போனாள். வேளா வேளைக்கு ரொட்டியும் டீயுமாய் வசதியாய் இருக்கிறார்கள். டீ, ரொட்டி வசதியே செய்து கொண்டிருக்கும்போது ஆயுதம் இல்லாமல் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பார்களா?

கோவிலுக்கு இடது வாசல், வலது வாசல் என்று இரண்டு வாசல் தாண்ட தடாகம், தடாகத்து நடுவே பாதை. விடிகாலை நிசப்தம் கலைந்து பலிபீடக் கூண்டிலிருந்து துப்பாக்கி சரமாரியாய் வெடித்தது. ஏ. கே. நாற்பத்தியேழு. நடுப் பாதையில் குண்டு பட்டு சலவைக் கல்லில் தேய்ந்து வருகிறது. நாற்பத்தியேழின் கில்லிங் ரேன்ஜ் இருநூறு கஜம். நடுப்பாதை ஆரம்பிக்கும் இடத்தில் தாராளமாய் ஆர்மி பொஸிஷன் எடுக்கலாம். லைட் மெஷின்கள் இருந்தால் சல்லடை போட்டுவிடும்,

இடது வாசல் வலது வாசலில் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டுக் கமாண்டோஸ் பொஸிஷன் எடுத்திருக்கிறார்கள். கோவிலைச் சுற்றிப் பாரா மிலிட்டரி காவல் போட்டிருக்கிறார்கள்.

ஆறு பத்துக்குத் தாக்குதல் துவங்கும். கோவில் சேதப்படுத்தப்படாமல், பலிபீடம் கறை படியாமல் உள்ளே இருப்பவர்கள் உயிருடனோ, பிணமாகவோ... இது எப்படி சாத்தியம்...?

செல்வாவுக்கு அயர்ச்சியாய் இருந்தது. ஆறு பத்துக்கு கருப்பு இடி இறங்க வேண்டும்.

மதம் இந்த தேசத்தை நாசப்படுத்தியது போல உலகில் வேறு எந்த தேசத்தையும் நாசப்படுத்திய

தில்லை. நாற்பத்தி ஒன்பது மதமும் நானூறு ஜாதிகளும் உள்ள தேசம் இது மட்டும்தான்.

இந்தியாவில் நதி தீரங்கள் அதிகம். நதி தீரங்கள் கலாச்சாரம் வளர்க்கும். இந்தியாவில் பலவித கலாச்சாரங்கள் வளர்ந்துவிட்டன. இக் கலாச்சாரத்தின் மோதல்களில் மேலும் புதிய கலாச்சாரங்கள் பிறந்தன. இது தவிர அந்நியர் படை எடுப்பு இந்தியாவின் முகத்தை முற்றிலும் மாற்றியது. பெண்கள் திரையிட்டுக் கொண்டார்கள். இந்திய நாகரிகமும் திரையிட்டுக் கொண்டது. சிக்கல்கள் அதிகமாயின. எல்லாக் கலாச்சாரத்துக்கும் அடிவேர் மதம் என்னும் ஸ்தாபனம். ஒற்றுமையையும், அன்பையும் குறித்து இவை தோன்றிய போதிலும் மறைமுகமாய் மனிதரிடையே பிரிவையும், குழு மனப்பான்மையும், காழ்ப்பையுமே விளைவித்தன. உலகம் அழியும் மட்டும் இந்த மதஸ்தாபனங்களும், இதன் விளைவுகளும், இந்த தேசத்தில் அழியாது.

டெல்லியிலிருந்து சண்டிகார்வரை இன்ஸ்பெக்டர் ஜெனரல் விமானத்தில் பேசிக்கொண்டு வந்தது நினைவில் ஓடிற்று.

''மறந்து போயும் செருப்புக் காலோடு உள்ளே போய்விடாதீர்கள். தலையில் தொப்பியோ, கைக்குட்டையோ இல்லாமல் கோவிலுக்குள் நுழையாதீர்கள்.''

கமாண்டோக்களுக்கு விமானத்திலேயே உத்தரவு போடப்பட்டுவிட்டது.

வெறுங் காலோடு நூற்றுப் பதிமூன்று கமாண்டோக்கள் தொப்பி அணிந்தபடி கோவில் வாசலில் தயாராக இருக்கிறார்கள்.

தோளில் தொங்கின ஆலிவ் க்ரீன் வயர்லஸ் கரகரத்தது. பொஸிஷன் ஸெவன் டெர்மினல் காலிங். ராஜர்.

'யெஸ், டெர்மினல் பொஸிஷன் ஸெவன் ஹியரிங் யூ. ஸார். ராஜர்.''



ஏப்போர்ட் டெர்மினல் இம்மீடியட்லி.'

'யெஸ் சார்.'

திரும்ப மாடிப்படிமீது வாசுதேவன் நாயர் ஏறிவந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'எந்தடா செல்வராஜ் எங்கள இரிக்கு?'

'சுகமாயிட்டுண்டு சார்'

'ஏ...இது எந்து பணியானு நாலு திவசமாயிட்டு ஒரு ஈச்சயக்கூட வந்திட்டில்லா. நூத்துக் கணக்கில் ஆள் உண்டடுன்னு பறைஞ்சால் ஈ ஆளுகளுக்கு சோறு எங்கன கிட்டுன்னது?''

'உள்ள ரொட்டி சுடறாங்க சார்.'

'அது எங்கன? டெரரிஸ்ட் பொஸிஷன் விட்டு ரொட்டி உண்டாக்குமோ?'

'பொம்பளைங்க சுடறாங்க சார். பத்துப் பதினைஞ்சு பேர் லேடீஸ் இருக்காங்க. இடம் இடமாய் ரொட்டி எடுத்துக்கிட்டு பயமில்லாம அலையறாங்க.''

'கொன்னு களையணும்!' பைனாகுலர் வாங்கி நோட்டமிட்டார்.

'ஆ...வலட் எ ஸைட்! இவடயிருந்து இரண்டு த்ரியிஞ்ச் மார்டர், ஒற்றை பஸீக்கா அஞ்சு நிமிஷம் அடிச்சால் மதி-ஈ நாயிண்ட மக்கள் அத்தரையும் செத்து ஒழியும். முள் காட்டில் புஷ்பம் பறிக்கானாயி ஒரு ஜோலி பேரு ப்ளாக் தண்டர், சடனோடு சாட்டியம் போய்க்கோ கமாண்டர் நின்னை விளிக்குன்னு.'

'எதுக்கு ஸார்?'

'அனலைசிங், அஸெஸிங் ஏதாயிட்டும் இருக்கும்.'

'இன்னிக்கு ஆப்ரேஷன் நடக்குமா? கேன்ஸலாயிடுமா சார்?'

'ஏ...ஏ...' நாயருடைய பாஷையில் இதற்கு, தெரியாது என்று அர்த்தம். செல்வா கிளம்புமுன் மெல்லிய

விரைப்போடு சல்யூட் அடித்தான். வாசுதேவன் பதிலுக்குக் கையசைத்தார்.

நாயர் டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல். கோட்டயம் பக்கம். கள்ளச்சாராயம், விபச்சார ஒழிப்பில் இருந்த வரை போன மாதம்தான் மத்திய அரசு பிடுங்கி டெல்லியில் நட்டது. செல்வா சூப்பரின்டென்ட் ஆஃப் போலீஸ். சென்னை க்ரைம் பிராஞ்சிலிருந்து ஐந்து வருடம் முன்பு ஸென்ட்ரல் இன்டெலிஜன்ஸ் பெரு கேட்டு வாங்கிக் கொண்டது.

யூனியன் மினிஸ்ட்ரி சம்பளம் கொடுத்தது. காக்கி உடுப்பும் கனத்த பூட்ஸூம் மறந்து போயின. தேசமெங்கும் பல்வேறு பிரச்சனைகள் இருந்தன. பிரச்சனை முளைக்கும் இடங்களுக்கெல்லாம் மத்திய அரசு சி பி ஐ ஆளாய் இவர்களை அனுப்பியது. கஸ்டம்ஸுக்குத் துணையாகப் போக வேண்டியிருந்தது. லோக்கல் போலீஸையே உளவு பார்க்க அனுப்பியது. மந்திரிகளை ரகஸ்யமாய்ப் பின் தொடரக் கட்டளையிட்டது.

வரி ஏய்ப்பு, கள்ளக் கடத்தல், அரசியல் கொலை, பெரிய மனிதர்கள் அந்தரங்க விவகாரம் என்று பலதும் அலச வேண்டியிருந்தது. சி பி ஐ இல் ஆயிரக்கணக்கான ஏஜெண்ட்கள் இருந்தார்கள். பலவிதமான பயிற்சி கொடுத்தார்கள். பலவிதமாய்ப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

எப்போது, எங்கே, என்ன வேலை என்பது இல்லை.

இப்போது செல்வாவின் வேலை கமாண்டோக்களின் திறமையைக் கண்காணிப்பது. நிஜமாகவே இவர்கள் கமாண்டோக்களா இல்லை சோற்றுப் பட்டாளமா? நேரடி ரிப்போர்ட் கொடு.

உன்னை உளவு பார்க்கிறேன் என்று ஒரு ஆளை பாரா மிலிட்ரி போர்ஸுக்கு அனுப்ப முடியுமா?

செல்வா எஸ் பி உங்களுடன் போராடுவார்.



உலகத்தில் உள்ள சகல ராணுவத் தளவாடங்கள் பற்றி ஞானம் உள்ளவர். எதிரி பலம் அறியும் தந்திரம் உள்ளவர். டெரரிஸ்ட் பற்றி நேரடி அனுபவம் உள்ளவர். உபயோகித்துக் கொள்ளுங்கள் என்று அனுப்பியது.

உள் வேலை. வெளி வேலை இரண்டும் செய்தாக வேண்டும்.

சாதாரண கட்டம் போட்ட நீல டெரிகாட்டன் சட்டை, நீல பேண்ட், மேலே ஒரு லெதர் ஜெர்கின், கான்வாஸ் ஷூ, கருப்பு சன் ஷேட் தொப்பி, கரும் பழுப்பு பெல்ட், பின்பக்கம் சொருகிய பாயிண்ட் ஸிக்ஸ் ரிக்காயிலிங் ரிவால்வார், உள்ளங்கைகளை மட்டும் மறைக்கிற கருப்பு லெதர் க்ளவுஸ், வலது பக்கக் கால் சாக்ஸில் ஒரு சின்ன 'ஸ்டில்லட்டோ' என்கிற ஸ்பிரிங் கத்தி.

நான்கு நாட்களுக்கு முன்பு ஒரு நடுநிசியில் விமானம் ஏற்றி இங்கே கொண்டு வந்து விட்டார்கள். ஏர் இந்தியாவின் போயிங். இரு நூற்று நாற்பது பேர் உட்காருகிற போயிங்.

நூற்றுப் பதினொன்று கமாண்டோஸ் ஆர்ம் சப்ளை டிவிஷன். மெடிக்கல் கோர் ஸிவில் அதிகாரிகள் சி.பி.ஐ. ஆட்களாய் ஆறு டி.ஐ.ஜி. இரண்டு ஐஜி. பத்து எஸ்.பி. கமாண்டோஸுக்கு ஆர்மி லெப்டினெண்ட் கர்னல் தலைமை வகித்தார். கமாண்டோஸ் அத்தனை பேரும் உர்ரென்று அசையாது உட்கார்ந்திருந்தார்கள்.

விமானத்திலேயே வெள்ளைத்திரை போடப்பட்டுக் கோவில் பற்றிப் படம் காட்டப்பட்டது. பல கோணங்களில் கோவில் தெரிந்தது. வரைபடம் சகலருக்கும் கொடுத்தார்கள்.

மறுபடி பயங்கரவாதிகள் உள்ளே புகுந்து ஆக்கிரமித்துக் கொண்டார்களாம். அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ அப்புறப்படுத்த வேண்டுமாம்.

கோவில் சேதமடையக் கூடாது. புனிதப் புத்தகம் மீது தூசுகூடப் படக்கூடாது. பூட்ஸ் காலோடு உள்ளே போகக்கூடாது.

"இதே கபாலி கோவிலின்னா இந்தப் பசங்க என்ன பண்ணுவானுங்க?" அப்போதே தோன்றியது.

நான்கு நாளாய்க் கோவிலைச் சுற்றியுள்ள கடைகளை மூடிவிட்டு ஒலிபெருக்கி மூலம் லோக்கல் போலீஸ் கெஞ்சுகிறது.

"நல்ல முறையில் சொல்கிறோம். உடனே வந்து சரணடையுங்கள். புனித இடத்தை மாசு படுத்தாதீர்கள். கடவுள் பெயரால் கேட்கிறோம்-ஆயுதங்களைப் போட்டுவிட்டுச் சரணடையுங்கள்."

எட்டு நிமிடத்தில் கட்டடத்தைச் சிதற அடித்து ஆட்களை மடக்கி விடமுடியும். ஆனால் இது கட்டடமல்ல, கோவில். மத உணர்வு. மதமும், அரசியலும் பின்னிப் பிணைந்த இடம்.

நாலு நாளாய் ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை ஆள் ஆளாய்க் கெஞ்சுவது கேட்க வெறுப்பாக இருந்தது. ஒலி பெருக்கி இரைச்சலுக்கு உள்ளேயிருந்து ரைபிள் சத்தம் பதிலாய்க் கேட்டது.

முதல் நாள் கோவிலை நெருங்கியதும் டீ கொடுத்தார்கள். எதிரி பொஸிஷன் இடங்கள் தெளிவாகிவிட்டதாம். எங்கேயிருந்து தாக்குதல் வரும் என்று யூகிக்க முடிந்ததாம். என்னவித ஆயுதங்கள் இருக்கக்கூடும் என்று தெரியவில்லையாம். இண்டலிஜண்ட்ஸ் பெரு உதவ முடியுமா என்று கேட்டார்கள். இது வெளி வேலை. செல்வாவின் வேலை.

"எத்தனை பேர் இருக்கிறார்கள் உள்ளே?"

'நூறு நூற்றிஐம்பது பேர்கள் இருக்கக்கூடும்.'



'இத்தனை பேரை உள்ளே ஆயுதங்களுடன் விட்டு விட்டு மயிரா பிடுங்கிக் கொண்டிருந்தீர்கள்?'

கொஞ்சம் கூடத் தயங்காமல் செல்வா ஹிந்தியில் கேட்டான்.

லோகல் எஸ். பி. கோபமானார்.

'துஸ்டர்.'

'யோவ் போய்யா அண்ணாண்ட!' தமிழில் விளக்கினான்.

'சாலா மதராஸி.'

'ஒரே குத்து சாவடிச்சுடுவேன்.' முஷ்டி மடக்கினான். உள்ளே நிறைய கோபமும் கொஞ்சம் பயமும் பரவி எழுந்தன.

'போ போய் மைக் பிடிச்சு எதுனா கத்து.மடையன் மாதிரி கேள்வி கேட்கறாம் பாரு.'

வாசுதேவன் நாயர் சமாதானப்படுத்தினார்.

"செல்வா! வாட்ஸ் யுவர் ப்ராப்ளம்?"

உள்ளே நூறுபேர் இருக்கானாம். மூன்னூறு கஜத்லேர்ந்து எட்டிப்பார்த்து அவன் கிட்ட என்ன இருக்குன்னு நான் பார்த்துச் சொல்லணுமாம்.நான் சொன்னா இவன் டைரில குறிச்சுகிட்டுப் பேப்பர்காரணுக்குப் பேட்டி குடுப்பான், போட்டோவோட. லோக்கல் போலீஸா இவன்?

"ஸ்டெரெங்த் எனிக்கு அறியணும், பரா."

"எப்படி சார் முடியும்."

"நீ கோட்டயம் போலீஸ் கான்ஸ்டபிள் அல்லா இன்ட்லிஜென்ஸ் ஆளானும். பரா அஸெஸ் இட்."

"சார்."

"ஐஸே டு இட்."

அருகே உள்ள ஹோட்டல் லாபியில் கோவிலின் மிகப் பெரிய வரைபடம் தொங்க விடப்பட்டிருந்தது. செல்வா ஐந்து நிமிடம் அசையாமல் வரைபடம் பார்த்

தான். பிரதமரின் வருகையை முன்னிட்டு இந்தக் கோவிலின் இண்டு இடுக்கு விடாமல் இரண்டு வருடம் முன்பு சுற்றிப் பார்த்திருந்தான். வரைபடம் பார்க்கப் பார்க்க இடம் மனசுள் தெளிவாயிற்று.

ஆர்ம் சப்ளை டிவிஷனில் ஏகே நாற்பத்தியேழு ஆடோமடிக் ரைபிள் கேட்டான், கோவிலின் இடது பக்க வாசலை நோக்கி நடந்தான். ஷூக்களை உதறி எறிந்தான். இடது வாசல் கதவு ஒன்றைச் சாத்தி மறு இடைவெளி முழுதும் மணல் மூட்டை அடுக்கியிருந்தார்கள். தோள் உயர மணல் மூட்டை சுவர் எழுப்பியிருந்தார்கள். அங்கே பொஸிஷனில் இருந்த கமாண்டோக்கள் நகர்ந்து இடம் கொடுத்தார்கள்.

''ஹலோ ஐயாம் செல்வா இன்டலிஜென்ஸ் எஸ்பி.''

ஹலோ!'' சிரித்தார்கள்.

''எது மிக அருகில் உள்ள தாக்குதல் இடம்?''

'நடு கோபுரத்திலிருந்து நாற்பது டிகிரி வலது நேர் கீழே முதல் கூண்டு.''

செல்வா வலது கைநீட்டி முஷ்டி மடக்கி ஆட்காட்டி விரல் மேட்டை நடு கோபுரத்தில் நிறுத்தி கோணம் பார்த்தான்.

''டக் யுவர் ஸெல்ஃப்.''

ஏகே நாற்பத்தியேழு ஸேப்டி கேட்ச் ரிலீஸ் செய்தான். மேகஸினைக் கட்டி மேலேற்றினான். லிவர் இழுத்து நகர்த்தி லாக் செய்தான். ஆடோமேடிக் பொஸிஷனுக்குத் தளர்த்தினான்.

ட்ரிகரில் விரல் வைத்து மணல் மூட்டையில் துப்பாக்கி முனை வைத்து அழுத்த,பின் கட்டையைத் தோளில் தாங்கி மெல்ல ட்ரிகர் அழுத்தி முதல் க்ளிக் செய்து காத்திருந்தான்.

எதிரே கூண்டுக்குள் தலைகள் பின்வாங்கின. பைனா குலரில் கவனித்துச் சொல்கிறார்கள். மெல்ல அடுத்த அழுத்து ட்ரிகருக்குக் கொடுக்க 'ச்சொய்ங்' என்று முதல் புல்லட் பறந்து கூண்டு சுவர்தாக்கிக் காரை உதிர்ந்து, பத்து விநாடி இடைவெளி விட்டு மறுபடி ஒரு ரவுண்ட் சுட்டான். மறுபடி தாமதித்து ஒரு ரவுண்ட் அனுப்பினான். எதிரே ஒரு மரத்தடுப்பு நகர்ந்து கூண்டு வாசலை மறைத்தது. சுடப் போகிறார்கள்.

சட்டென்று துப்பாக்கியோடு,

மண் மூட்டைக்குள் பதுங்கினான். சடசடவென்று சத்தம் கேட்டது. மணல் மூட்டைகள் அதிர்ந்தன. தலைக்குமேல் சரமாரியாய்க் குண்டுகள் பறந்தன. செல்வா தவழ்ந்தபடி மணல் மூட்டையை விட்டு வெளியேறி வாசலுக்கு வந்தான்.

மணல் மூட்டைகளுக்கு நேர் பின்னே வாசல் இருந்தது. வாசற்கதவுகளில் துளைகள் தெரிந்தன. கதவின் பின் பக்கம் போய்த் துளைகளை உன்னிப்பாகப் பார்த்தான். கத்தி எடுத்து நோண்டி துளைத்த ரவையை வெளியே எடுத்தான். மிஷின் கன் நசுக்கின ஈயக் குண்டு விரல் நீளம் இருந்தது. ஈயக்குண்டில் ஒட்டை இருந்தது. இந்த புல்லட் வரும்போதே குட்டிக்கரணம் போட்டு வரும். நெஞ்சில் பட்டால் முதுகு கிழியும். எடுத்து முகர ஆயில் வாசனை தெரிந்தது. குண்டுகளின் கீறல் அதிகமில்லை. எனவே ஆயுதம் புதியது. பக்கா கண்டிஷன்.

எண்டரி பொஸிஷனில் மிஷின் கன் ரேன்ஞ் இருக்கிறது. விநாடிக்கு எட்டு குண்டுகள் வரும். அகப்பட்ட ஆளை சுக்குச் சுக்காய்ப் பியத்து எறியும். இதைத் தாண்டி நுழைவது கடினம். முதல் குண்டே மணல் மூட்டையத் தாக்கிற்று, வேலை தெரிந்தவன் ஆயுதம் எடுத்திருக்கிறான். படுக்கை பொஸிஷனில் படு வாட்டமாய் 'ஏக் கோலி கா ஏக் துஷ்மன்' என்று காத்திருக்கிறான்.

ஒரு பலீக்காவில் அவன் முதுகைஒடித்துவிடலாம்.

ஆனால் பனிக்கா சுவர் இடிக்கும். கட்டிடம் நாசம் பண்ணும். இந்த அரசியல் முட்டாள்கள் உபயோகிக்காதே என்று கூச்சல் போடுவார்கள். கமாண்டோகாரன் பனிக்கா கொண்டு வந்திருக்கிறானா தெரியவில்லை. கேட்டால் சொல்லமாட்டான். ஏன் கேட்கிறாய் என்று பதிலுக்குக் கேட்பான்.

ஆனால் பனிக்காவை பேண்ட் பாக்கெட்டில் போட்டுக் கொள்ள முடியாது. ஆறங்குல விட்டம், நாலடி நீளக்குழாய்—நடுப்பகுதியில் ட்ரிகர். இன்ப்ஃரா ரெட் டெலாஸ்கோப்;உள்ளேமுழுநீள குண்டு போட்டு தோளில் தாங்கி குறிபார்த்து ட்ரிகர் அழுத்த 'ப்ஹோம்' என்று எறி குண்டு ஏவுகணை போல் சீறி இடம் தாக்கும். கும்பலாய் நாற்பது பேரைச் சாகடிக்கும்; நாலு கல் சுவரை சுல்பமாய்ப் பிளக்கும்.

இங்கே கமாண்டோகாரனுக்கு பனிக்கா போட உரிமை உண்டா? தெரியவில்லை.

ஜீப் ஏறி தெருக்களைச் சுற்றி வலது பக்க வாசலை அடைந்தான். அங்கேயும் வாசலில் மணல் மூட்டைகள் இருந்தன. இன்னும் இளமையான கமாண்டோக்கள் இரண்டு பேர் பொஸிஷனில் இருந்தார்கள். சரியாய் மணல் மூட்டை உள்ளேயும் அடுக்கியிருந்தார்கள்.

''போலோ-பாரத மாதாகி ஜெய்!'' என்று கூறியபடி படுத்துக் கொண்டான். கமாண்டோக்கள் சிரித்தார்கள்.

''அடி என்னாடி முனியம்மா உன்
கண்ணுல ண்மயி—இது
யாரு வச்ச மையி—இது
நாவச்ச மையி.''

பாடியபடியே கட்டிடம் கவனித்தான்.

''மதராஸி ஹை.''

''ஹிங்.''

''தெலுகு?''

''தமிள் தமிள்.''



ப்ரியமாய் சிரித்தார்கள்.

எதிரி பலம் அறிய வந்திருக்கிறேன். என்ன செய்யலாம்? கேள்வி கேட்டான்.

பாக்கெட்டில் கைவிட்டு ஒருவன் ஒரு உலோகத் துண்டைக் காட்டினான்.

''டபிள் பேரல் ரைபிள் குண்டு. தொடர்ந்து இது தான் வந்து கொண்டிருக்கிறது.

''என்ன மேக் தெரிகிறதா?''

இன்னொரு உலோகத்துண்டு காட்டினார்கள்.

பாகிஸ்தான்.

செல்வா உற்று பலமுறை பார்த்தான். ''பன்றி, காட்டெருமை சுட உபயோகப்படுத்தும் குண்டு. வெடித்து வெளியே வரும்; வந்து டார்ஜெட் பொத்து மறுபடி வெடிக்கும். டமார் டமார் என்று ஒரு விநாடியில் இரண்டு சுட முடியும்.''

சந்தோஷம், மறுபடி எதிரியைச் சோதிக்கலாமா? பொஸிஷன் கேட்டு ஏ. கே. நாற்பத்தியேழை முழு வேகத்துடன் இயக்கினான். மேலும் ஒரு மேகஸின் மாற்றி மறுபடி இடைவிடாது சுட்டான் பதுங்கினான்.

இரண்டு நிமிட மௌனம்.

நிமிடத்துக்கு முப்பது குண்டுகள் வெடித்தன. நாலு அடுக்கு மணல் மூட்டை சுவராய் இருப்பினும் அதிரல் அதிகமிருந்தது.

ஆக பத்து பேராவது டபுள் ரைபிளுடன் இருப்பார்கள். ஒரே கோட்டில் படுத்து, ஒன்று, இரண்டு, மூன்று என்று முறை மாற்றி வெடிக்கிறார்கள். ஒருவன் குறி தப்பினாலும் ஒருவன் குறி தாக்கும். இதுவும் கடினமான இடம்.

பலி பீடத்துக்கு மேலே உள்ள கூண்டில் என்ன இருக்கிறது? தெரியவில்லை. உயர கோபுரத்தில் மார்டர் அல்லது பனிக்கா இருக்காது. பனிக்காவைத்

தாழக் குறி பார்ப்பது கடினம். சுடுபவன் தோளில் பலத்த அடிவிழும்.

பலிபீட வாசலில் இருக்கலாம். நீண்ட பாதை. இரண்டு பக்கமும் தண்ணீர். கவச வண்டி வந்தாலும் ஒரே பஸீக்காவால் தகர்க்கலாம். நான் டெரரிஸ்ட் ஆக இருந்தால் பஸீக்காவை அங்குதான் வைப்பேன்.

பலிபீடத்தை நோக்கிச் சுட்டுப் பார்க்க முடியாது. அனுமதி இல்லை. அங்கே அமைதியாய் இருக்கிறது. ஆயுதம் இல்லை என்று கணக்கிடவும் முடியாது. செல்வா ரைபிளை முகவாய்க்கு முட்டுக்கொடுத்து யோசித்தான்.

''இளைஞர்களே! நான் அங்கு நீந்திப் போகப் றேன். எனக்குக் கவர் கொடுங்கள்.''

''ஆபரேஷன் துவங்கிவிட்டதா?'' ஒரு கமாண்டோ ஹிந்தியில் கேட்டான். அவன் முகத்தில் கவலை தெரிந்தது.

''இல்லை குழந்தாய் இல்லை! என் வேலை கணக் கெடுப்பு மட்டுமே.'' துப்பாக்கியை மணல் மேட்டில் சார்த்திவிட்டு ஜெர்க்கினை உருவி அதன்மீது போர்த்தி னான். தடாகத்துக்கு ஓடத் தயாரானான். மணல் மூட்டைக்கும் நீர் விளிம்புக்கும் இடையே பதினாலு அடி தூரம் இருந்தது. கவர் கொடுக்கத் துவங்கியதும் ஓடி நீரில் புகுந்துவிடவேண்டும். புகுந்தவுடன் திசை மாற வேண்டும்.

''ரெடி ரெடி.''

''பொஸிஷன் ஸாப்.''

''ஃபையர்.''

இரண்டு இளைஞர்கள் அவர்களது ஏ.கே நாற்பத்தி யேழை அதிரவிட்டார்கள். செல்வா இரண்டு சொடக்கு நேரத்தில் இடைவெளி தாண்டி நீரில் மூழ்கினான். ஐந் தடி ஆழம் இருந்தது. ஒரே வீச்சில் நீண்ட பலிபீடம் நோக்கிப் போகும் பாதைச் சுவருக்குப் போனான். ஒண்டினான். நீரில் குண்டுகள் கொப்பளித்தன. கவ



னித்து விட்டார்கள். தலை தூக்கினால் சுடுவார்கள். விரைந்து பலிபீடம் நோக்கி நீந்தினான். நேர் எதிர் சுவர் போய்த் தலை தூக்கினான். பின்னே பலிபீடம், நேரே வலது, இடது மணல் மூட்டைகள்.

செல்வா குதித்த இடத்தில் இரண்டு எறி குண்டுகள் விழுந்தன. எங்கேயிருந்து வந்தன. தெரியவில்லை. நமது ஆட்கள் கவனித்திருப்பார்கள். ஆக பாஸீக்கா (அல்லது) மார்டர் உண்டு.

முழுவதுமாய் காற்று இழுத்து, நுரையீரல் நிரப்பி மறுபடியும் நீரில் மூழ்கினான். நேர் எதிர் கரை நோக்கிப் போனான். நடுப்பாதையில் மூன்றடி டன்னல் அடுத்த குளத்தை இணைத்தது. உடம்பை இறுக்கி டன்னலில் நுழைந்தான். டன்னலின் மறு விளிம்பில்நின்று கடிகாரம் பார்த்து திசை உறுதி செய்துகொண்டான். முழு வேகத் துடன் இடதுபக்க மணல் மூட்டை நோக்கி நீந்தினான்; முதலில் வந்து பொஸிஷன் எடுத்து ஒற்றை ஒற்றை யாய் சுட்ட மணல் மூட்டை பக்க சுவரோரம் ஒதுங்கி தலை நீட்டினான்.

வலது பக்க கமாண்டோ மூட்டையிலிருந்து தலை தூக்கி நீரைப் பார்த்துக் கொண்டிருந்தான். இவனைக் கவனித்துவிட்டான்.

வலக்கை கட்டை விரலைப் பின்னுக்கு ஆட்டி வெளியே வா என்று கத்தினான்.

செல்வா மிஷின் கன் இருக்கும் இடம் காட்டி ''கவர்!'' என்று கத்த பொஸிஷன் எடுத்துக் கொண் டான்.

'ரெடி' என்று விரலை உயர்த்தினான்.

'நௌ' என்று செல்வா வெட்டுக் கத்தியாக் கை காட்ட மிஷின் கன் பொஸிஷன் இடத்தை நோக்கி சரமாரியாய் சுட்டார்கள். செல்வா ஒரே ஜம்ப்பில் வெளியே வந்தான். வழுக்கினான். உருண்டு மணல்

மூட்டைக்கு ஓடி எகிறி அடுத்த பக்கம் விழ, மணல் மூட்டைகளை டெரரிஸ்ட் மிஷின் கன் மூர்க்கமாய்த் தாக்கிற்று.

வழுக்கி, உருண்டு, எகிறி மணல் மூட்டையில் விழ ஆறு விநாடிகள் ஆயிற்று. அந்த ஆறு விநாடிகள் தான் கேம். வீர விளையாட்டு. உயிர்ப் பணயம்.போர் நேரச் சூது. இந்த முறை தாயம். பிழைத்தாயிற்று.

நன்றி உணர்வோடு கமாண்டோக்கள் கைபற்ற அவர்கள் அவன் முதுகில் தட்டினார்கள். தவழ்ந்து வாசலுக்கு வர அதிகாரிகள் சூழ்ந்து கொண்டார்கள்.

இடதில் மிஷின் கன்,

வலதில் டபிள் ரைபிள் குருப்.

நேரே பலீக்கா.

டெலஸ் கோப் அட்டாச்ட் பலீக்கா விவரம் சொன்னார்கள்.

பாம்பைச் சீண்டிவிட வாய் பிளந்து சீறும், சீறி வாய் பிளக்கும் பாம்பைப் பார்த்து விஷமா இல்லையா என்று சொல்லிவிட முடியும்.

செல்வா சீண்டி விட்டான்.

விஷயம் வெளியாயிற்று.

வயர்லஸ் வாங்கி இடதுபக்க மணல் மூட்டைக்குத் தொடர்பு கொண்டான்.

''தாங்க்யூ பார் குட் கவர் ராஜர்.''

''மார்வலஸ் ஜாப் சார் ராஜர்.''

''நன்றி. என் ரைபிள் ஜெர்கின் அனுப்பு. ஆள்வரும் ராஜர்.''

ஹோட்டல் வரைபடங்களில் உத்தேச ஆயுதபலம் குறிக்கப்பட்டது.

செல்வாவுக்கு டீ குடிக்கக் கொடுத்தார்கள். அவனுடைய சித்தான் பை வந்தது. உடுப்பு மாற்றினான். புது



சாக்ஸ் தந்தார்கள். ஷூ எடுத்து வந்தார்கள். ரைபிளும் ஜெர்கினும் தனி ஜீப்பில்வந்தன.

ஹோட்டல் டவருக்குப் போகச் சொன்னார்கள். பொஸிஷன் லெவன் என்று பெயரிட்டார்கள்.

படியேற, வாசுதேவன் நாயர் வழிமறித்தான்.

''ஹ...ஹீரோ வருன்னு...''

''அதொன்னுமில்லா, நான் சிப்பாயாணு.''

''என்ட குருவாயூரப்பா. எங்கன ஈ ஆளுகள் பலீக்கா எடுத்துப் போயி.''

''தலைப்பாலியா கட்டிகிட்டுப் போயிருப்பான். ஏமாத்த லோகல் போலீசும் இவனுங்க ஆளுங்க சார்.''

''அதொன்னும் பறயண்டா.''

பொஸிஷன் லெவன் வாட்ச் டவர் போல கோவில் நடமாட்டம் அனைத்தும் கண்காணிக்க முடியும். சற்று ஒதுக்குப்புறமான இடம். சற்று அபாயம் குறைவு. அதாவது 'செல்வா, வேலை முடிந்துவிட்டது. 'ரிலாக்ஸ், என்று அர்த்தம். செல்வா நான்கு நாட்களும் மாடியில் முறை போட்டு காவல் காத்தான்.

இப்போது கூப்பிடுகிறார்கள்.

மறுபடி நீரில் குதிக்கச் சொல்வார்களோ? அப்படி குதிக்கச் சொன்னால் மறுபடி தாயம் விழுமோ?

சென்னைக்குப் போன் போட்டு அமுதாவோடு ஒரு முறை பேசியிருக்கலாம். பேச அனுமதிக்கமாட்டார்கள். ஒருவேளை காயம் பட்டுச் சாய்ந்தால் ஒழிய, கருப்பு இடி இடித்து ஓய்கிற வரை நகர விடமாட்டார்கள்.

இப்படிப்பட்ட ஆபரேஷனில் பாதியில் கழன்று கொள்ள முடியாது. செய் அல்லது செத்து மடி.

ஹோட்டல் லாபி தாண்டி பெரிய ஹாலுக்குள் போனான். மேஜையைச்சுற்றி அதிகாரிகள் இருந்தார்கள்.

''செல்வா?'' ஐ.ஜி. கூப்பிட்டார்.

''யெஸ் சார்'' சல்யூட் செய்தான்.

''குளத்திலிருந்து எழுந்த பிறகு ஏன் விழுந்தாய்?''

''புரியவில்லை ஐயா''

ஒன் செகண்ட் லைட்ஸ் ஆஃப்-ஸ்விட்ச் ஆன்-அறை இருண்டு மூலையில்உள்ள டி.வி.உயிர் பெற்றது. கருப்புப் பூச்சிகள் சில கணம் பறந்து படம் தோன்றியது.

மணல் மூட்டைக்கு அருகே செல்வா பதுங்கி யிருக்கிறான். வலது பக்க கமாண்டோ தொடர்ந்து சுட ஓடிப் போய் நீரில் மூழ்குகிறான்.

சகலமும் படமாக்கியிருக்கிறார்கள்.

எதிரி பக்கமிருந்து வெளிச்சச் சிதறல். காமிரா ஸீம் செய்து பலிபீடம் காட்டுகிறது. வெறும் காலும் நீள ஜிப் பாவுமாய் ஒருவன் பலீக்கா தோளில் தாங்கி மறுபடி சுடுகிறான். சூரிய வெளிச்சத்தில் பலீக்கா கறுப்பு பளபளக்கிறது. டாம் நியூ வெப்பன். உறை பிரித்த சாக்லெட் மாதிரி புதுசு.

காமிரா பின்நகர்கிறது, செல்வாவை நீரில் தேடு கிறது. தலை தூக்கல், மறுபடி மூழ்கல்-மறுபடி தேடு கிறது, வலது பக்கம் தலைதூக்கிச் சிலுப்ப க்ளோசப்பில் நகர்கிறது. கவர் என்று கத்தி, நௌ என்று கைவெட்ட காமெரா லென்ஸ் பின்னடைகிறது. செல்வா நீர் விட்டு எகிறி துள்ளி உள்ளே விழ மணல் மூட்டை முன்பக்கம் இடைவிடாத மிஷின் கன்னால் துளைக்கப்படுகிறது.

''தேர், தேர். ஏன் சறுக்கினாய்? அது நீயா? தரையா? என்ன காரணம்?''

''தரை வழுக்கல் தரை,''

''எப்படிச் சொல்கிறாய்?'' லெப்டினென்ட் ஜெனரல் கொக்கியாய்ப் பார்த்தார். ''நீ பயத்தில் சறுக்கியிருக்கலாம் அல்லவா?''



''இல்லை.''

''வீரம் காட்டாதே, உண்மையைச் சொல்—நீயா, தரையா?''

''தரை வழுக்கல் தரை.''

''நீ நீருக்கடியில் நீந்திப் போனதுபோல் வாட்டர் புருப் ரைபிளுடன் நாலு கமாண்டோஸ் பலிபீடம் நோக் கிப் போக வேண்டும். கரையேறி பலிபீடச் சுவர் ஓரம் ஒதுங்கி வாசல் வழியே புகை குண்டுகள் வீசவேண்டும். கரைக்கும், சுவருக்கும் இடையே பதினேழு அடிகள் நான்கு விநாடிகள் ஓட்டம். எதிரி அதற்குள் சுட்டுவிட் டால் நான்கு பேரும் மரணம். நீ வழுக்கின ஒரு விநாடி தாமதித்தாலும் மரணம். இப்போது சொல் அது நீயா, தரையா?''

''தரை வழுக்கல் தரை.''

ஐ.ஜி. தலை குனிந்து யோசித்தார். லெப்டினென்ட் ஜெனரல் விட்டம் பார்த்தார். எழுந்தார்.

''லெட் மி டேக் தட் ரிஸ்க். வேறு வழியில்லை. தேங்க்யூ ஜென்டில்மென். ஸிக்ஸ்-டென் ஆப்ரேஷன் ப்ளாக் தண்டர்.'' கலைந்தார்கள்.

''மிஸ்டர், உன் பெயர் என்ன?''

''செல்வராஜ்.''

''என்னுடன் வா.'' லெப்டினென்ட் ஜெனரலுடன் கோவில் நோக்கி நடந்தான். இடதுபக்க வாசலில் நான்கு இளைஞர்கள் கருப்பு ரப்பர் உடையுடன், கையில் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

பலி ஆடுகள்—களப்பலிகள். நாலில் எது தேறு கிறதோ தெரியவில்லை, நாலும் தேறுமோ இல்லை நாலுமே அழியுமோ தெரியவில்லை. அந்த இளைஞர் கள் முகங்கள் கல்லாய் இருந்தன.

இந்த ப்ளாக் தண்டர் விதியை இவர்கள்தான் நிர்ண யிக்கப் போகிறார்கள். பலிபீட பலீக்காவை உடைத்து விட்டால் முன்னேறி விடலாம். இவர்கள் அடிபட்டுச்

சரிந்து விட்டால் கமாண்டோ குரூப் மிக மோசமாய் சேதமாகும்.

இடதுபக்க மணல் மூட்டைகளிலிருந்து ஏ.கே நாற்பத்தியேழு வாபஸ் பெறப்பட்டுப் பெரிய மிஷின் கன்கள் சரம்சரமான புல்லெட்களோடு வைக்கப்பட்டன. கட்டிடம் பற்றி கமாண்டோ கவலைப்படவில்லை என்று தெரிகிறது. மண் மூட்டைகள் நடுவே இடைவெளி ஏற்படுத்தி ரேன்ஞ் பார்க்கப்பட்டது. இந்தப் பக்கம் நூத்தி எண்பது டிகிரி அந்தப் பக்கம் நூத்தி எண்பது டிகிரி கவர் கொடுக்கப்பட்டது.

இன்னமும் எதிரி பலம் அதிகம். அவனுக்குச் சுடும் வாட்டம் அற்புதம். உள்ளே நன்கு மறைந்தபடி பஸீக்கா இயக்க மணல் மூட்டைகள் அதிகம் தாங்காது,

நீரடியில் போய்ப் புகைக் குண்டுகள் வீசுவது நல்ல யோசனைதான். ரிஸ்க் அதிகம். நிச்சயம் நடக்கும் என்று சொல்வதற்கில்லை. எதிரிக்கு இந்தத் தந்திரம் புரிய நீருக்குள் அடுத்த குரூப் இறங்கவே விடமாட்டான். நூறு சதவிகித ரிஸ்க்கில் ப்ளாக் தண்டர்.

''கர்னல் சாப்.'' கவலையோடு செல்வா திரும்பினான்.

அவர் கை உயர்த்தினார். தோளுக்குப்பின் கட்டை விரலைக் காட்டினார். பஸீக்கா ஜீப்பிலிருந்து இறங்கியது. ஒரு நேபாளி மானேஜர் அந்த பொஸிஷன் எடுத்துக் கொண்டான்.

''குட் வெரிகுட்.''

கமாண்டோஸ் பஸீக்காவைப் பயன்படுத்தப் போகிறார்கள்.

ஆக பலிபீடம், கட்டிடம் எதுவும் முக்கியமில்லை. சேதமாக்காமல் எதிரியைத் தொட முடியாது. இந்த நாலு நாள் முற்றுகை, இந்தத் தாமதம். இவ்வித அனுமதி கேட்டு நிகழ்ந்திருக்கிறது. வெறும் உயிர்ப்பலி தர கமாண்டோஸ் தயாரில்லை.

சகலமும் தயார்.



''அக்னிக் குருக நெம்பர் டு தயார்?'' வயர்லெஸில் லெப்டினென்ட் கர்னல் கேட்டார். ''தயார்'' என்று பதில் வந்தது. வலது மணல் மூட்டைக்கும் பஸீக்கா போயிருக்கிறது; நொறுக்கப் போகிறார்கள்.

''அப்படி வாங்கடா!'' நாலுநாள் காத்திருத்தல் வெறுப்பும், கோபமுமாய் செல்வாவிடமிருந்து புறப்பட்டன. லெப்டினென்ட் கர்னல் கண் சிமிட்டினார்.

ஆறுமணி.

மெல்ல வெளிர ஆரம்பித்தது. எங்கோ மசூதியில் நமாஸுக்கு அழைத்தார்கள். புறாக்கள் வெளிர் வானத்தில் வட்டமிடத் துவங்கின. பிடரியில் பனி இறங்கி முதுகு முழுவதும் சில்லிட்டது, எதிர்ப்பக்கம் அமைதியாய் இருந்தது.

கமாண்டோ அதிகாரி வயர்லஸ் பொறுத்திக் கொண்டார்.

''லூஸ் ஒன்''

முதல் ஆள் தரைபுரண்டு சப்தமின்றி நீரில் மூழ்கினான்.

''லூஸ் டு.''

மறு ஆள் தரைபுரண்டபடியே போய்ப் படுக்கை வாக்கில் அமிழ்ந்தான்.

''லூஸ் த்ரீ.''

மூன்றாவது ஆள் ஓடிப்போய் கால்விட்டு நழுவினான். எதிரி முகம் சலனமற்று இருந்தது.

''லூஸ் ஃபோர் ஸ்டாப்.''

எழுந்தவன் பின் வாங்கினான்.

எதிரிமுகாமில் சட்டென்று விளக்கு எரிந்தது. வலப் பக்கமிருந்து ரவை கிளம்பி விளக்கை உடைத்தது. நாலாவது ஆள் மணல் மூட்டை விளிம்பில் ஊசலாடினான்.

''வெய்ட்... யூ இடியட் வெய்ட்.''

விழித்துக் கொண்டு விட்டார்கள்.

முதல் ஆள் எதிர்ப்பக்கம் போய்த்தலை தூக்கினான்.

இரண்டாவது ஆள் தலை தூக்கினான்.

மூன்றாவது ஆள் தலை தூக்கினான்.

மூன்றாவது ஆள் நீரினின்று சுவரோராம் எழுந்தான். அங்கிருந்தபடி நான்காவது ஆளைத் தேடினார்கள்.

''ராம் பரத் அவுர் லட்சுமன். கவலை வேண்டாம் சத்துருக்கன் என்னிடம் இருக்கிறான்.'' வயர்லஸில் லெப்டினெட் ஜெனரல் பேசினார்.

''புரிந்தது ராஜர்''

காத்திருந்தார்கள்.

ஆறு ஒன்பது.

புறாக்கள் மறுபடி வட்டம் அடித்தன.

பலிபீடத்திலிருந்து வெறுங்காலுடன் நீண்ட ஜிப்பா அணிந்த ஆள் பளீக்காவுடன் வெளியே வந்தான். சுட்டான், மணல் மூட்டை அதிர்ந்தது. ஆட்கள் குதித்த இடத்தில் மொஸைக் தரை தூள் தூளாயிற்று.

''முட்டாள். எதற்குக் குறி வைக்கிறான்? மணல் மூட்டைக்கா? குதித்த இடத்திற்கா?''

''வெய்ட்... வெய்ட். லெட் ஹிம் கோ பேக்.''

பளீக்கா ஆள் பின் வாங்க புகை மட்டும் அருகே மிதந்தது.

''லாஸ் ஃபோர்.'' இரண்டு ஜம்ப்களுக்கென்று நான்காவது ஆள் நீரில் மூழ்கிக் காணாது போனான். எதிர்ப்பக்க மெஷின் கன் முழு வேகத்தில் நீரையும் மணல் மூட்டைகளையும் தாக்கித் துளைத்தது. காது கிழியும் ஓசையுடன் இயங்கியது. அங்கங்கே கூச்சல் கேட்டது. விழித்துக்கொண்டு விட்டார்கள். இனி இது சுலபமில்லை.

செல்வராஜுக்கு வயிறு கனத்துச் சுழன்றது.

ஆறு பதினொன்று.

எதிர்ப்பக்கம் சத்ருக்கனன் தலை உயர்த்தினான்—தயார்.



''ரெடி. ப்ளாக் தண்டர் ரெடி.''

நான்கு பேரும் வரிசையாய் சுவரோரம் கழுத்து வரை நீரில் அசையாது நின்றார்கள்.

''நௌ...''

பலிபீடம் எதிரியின் மெஷின் கன் இடம். டைபீன் ரைபிள் குருப் பகுதியிலிருக்கும் பொஸிஷன் சகல இடங்களும் நோக்கி ஒரு சேர கமாண்டோக்களின் மிஷின் கன்கள் இயங்கின.

நீர் மூழ்கிகள் நாலு பேரும் ஒரே நேரம் எகிறி, தரையில் குதித்துச் சுவர் ஓரம் ஒதுங்கினார்கள். நீண்ட மரப்பிடி உள்ள புகை குண்டைத் திருகி முதல் ஆள் சுவரோடு ஓடி உள்ளே வீசி எறிந்துவிட்டு உட்கார, அடுத்த ஆள் ஓடி உள்ளே குண்டு வீசிவிட்டு உட்கார, மூன்றாவது ஆள் ஓடி மறுபடியும் ஒன்று வீச, நான்காவது ஆள் அவர்கள் முதுகுக்கு எதிர்ப்பக்கம் உட்கார்ந்து கவர் கொடுக்க.

உள்ளே டபீர், டபீர், டபீர் என்று மூன்று குண்டுகள் வெடித்தன. அழுக்கு மஞ்சள் புகை மேலே அடர்த்தியாய் எழுந்தது.

பளீக்கா ஆள் ஆயுதத்துடன் வெளியே வந்து இரும மிஷின் கன் அவனைச் சல்லடையாக்கியது.

'நௌ... டைவ் பேக்' நால்வரும் மின்னலாய் நீரில் குதித்தார்கள்.

''ஸ்டாப், லெஃப்ட் சைட்...''

இடது மணல் மூட்டை சட்டென்று அமைதியாகக் குனிந்தபடி பத்து கமாண்டோக்கள் நடுப்பகுதி நோக்கி ஓடினார்கள்.

''ஸ்டாப், ரைட் சைட்.''

வலது நாற்பது விநாடிகள் ஓய அதைக் கடந்து பத்து கமாண்டோக்கள் நடுப்பகுதிக்குப் போய் பொஸிஷன் எடுத்துக் கொண்டார்கள்.

''ஸ்ட்ரைக் வெஹிமென்ட்லி.'' இடைவிடாது கூண்டுக் கோபுரங்களை மிஷின் கன்கள் துளைத்து எடுத்தன- வெட்ட வெளியில் நிற்கும் கமாண்டோக் களுக்கு இதுதான் சுவர்; தடுப்புச் சுவர். பலிபீடத்தை விட்டுவிட்டு இடது வலது கோபுரக் கூண்டுகளைத் தாக்கினார்கள்.

''லெப்ட் பளீக்கா அப்...''

இடது பளீக்கா எதிரி மிஷின்கள் இடம் குறி வைத்து அடித்தது. மரக்கதவு தூள் தூளாயிற்று.

நடுப்பகுதி ஆட்கள் பலிபீடம் நோக்கிக் குனிந்த படி முன்னேற-பலிபீட உச்சிக் கோபுரத்தில் ஆட்கள் தோன்றினார்கள். பாவிகளா.

''ரைட் பளீக்கா அப்...''

இடது மணல் மூட்டையிலிருந்து அக்னிக் குஞ்சு புறப்பட்டு உச்சி மாடம் தாக்கிற்று. மாடத்தைச் சிதற அடித்தது. பெரும் கற்கள் தரை விழுந்தன. டைபின் ரைபின் குருப் ஓயாமல் சுட்டுக்கொண்டேயிருந்தார் கள். நடுப்பாதையில் இரண்டு கமாண்டோஸ் சுருண்டு விழுந்தார்கள்.

நீர் மூழ்கிகளில் முதலாம் ஆள் கரைதொட்டு எதிறி கை காட்டினான்.

''கம் அவுட். ஜம்ப் பேக்... ஜம்ப்பேக். ஸ்டாப். லெஃப்ட் சைட்.'' இடது பக்கம் நீர் மூழ்கிகள் கரை யேறுவதற்கு அமைதியாயிற்று. நால்வரும் ஒரே எகிறில் கரையேறினார்கள். ஓடிவந்து மணல் மூட்டை சுவரில் கை வைத்தார்கள். துள்ளினார்கள்.

மணல் மூட்டைச் சுவர் தாங்கவில்லை. சரிந்தது. பொத்துப்பொயிருந்த கோணிகள் கிழிந்து சரிந்தன. இரண்டு பேர் உள்ளே குதிக்க ஒருவன் மணல் மூட்டை யில் பாதியாய்த் தொங்கினான்.

''ஜம்ப் யூ இடியட்.''



லெப்டினெனட் கர்னல் தொங்கியவனை இழுத்தார். எதிரி டைபின் ரைபின் குருப் அவன் முதுகைக் கொத்தி யது. கீழே விழுந்தவனைச் சிதற அடித்தது.

''காட் ஹோல் குருப். அட்டாக் தட் ப்ளேஸ்.'' வலப்புறத்தை ஒன்பது மிஷின்கன் துளைத்து எடுத் தன. இதற்குள் நடுப்பகுதி ஆட்கள் முன்னேறி பலி பீடச் சுவரோரம் பதுங்கிக் கொண்டார்கள்.

''செகண்ட் குருப்.''

அடுத்த கமாண்டோ குருப் மணல் மூட்டை தாண்டி நடுப்பகுதி போயிற்று.

''நெக்ஸ்ட் குருப்!''

இன்னொரு பத்து உள்ளே ஓடிற்று.

''என்டர் இன்ஸைட், அட்டாக்.'' வெளிப்பக்க எதிர்ப்பு ஒய்ந்து கட்டிடத்துக்குள் துப்பாக்கி சப்தம் கேட்டது. பதுங்குகிறார்கள். கமாண்டோ அதிகாரி எகிறி வெளியே குதித்து, ஏகே நாற்பத்தியேழுடன் பலி பீடம் நோக்கி ஓடினார்.

செல்வராஜ் உள்ளே அடிபட்டு விழுந்தவனை அணைத்துக் கொண்டான். இடுப்பில் குண்டுபட்டுச் சதை கிழிந்து தொங்கியது. மெடிகல் கோர் ஓடிவந்து பஞ்சு பிரித்து அப்படியே இடுப்பில் அப்பியது. கமாண்டோ 'ஓ'வென்று கத்தினான்.

அவனைப் புரட்டி ஸ்டெரச்சரில் தூக்கிப் போட் டார்கள். தரையொடு தரையாய் இழுத்துக்கொண்டு குனிந்தபடி ஓடினார்கள்.

மற்றவன் வெளியே வானம் பார்த்துக் கை விரித்து விழி விரியக் கிடந்தான். புறாக்கள் தாறுமாறாய்ப் பறந்தன. வெளிச்சம் அதிகமாயிற்று.

செல்வராஜ் அவன் அருகேபோய் அழுத்தி கண் களை மூடினான். கண்ணில் இன்னும் சூடு இருந்தது. ஹெல்மெட்டைத் தளரவிட்டான். முகம் திரும்பினான். லொடக்கென்று கன்னம் தரை தொட்டது.

''யாரோ?''
யார் பெற்ற பிள்ளையோ
எவள் தாலி அறுந்ததோ
எந்தப் பிள்ளை அநாதை ஆயிற்றோ
தெரியவில்லை.

இவன் பெயர் என்ன? மதம் எது? எரிப்பார்களா? புதைப்பார்களா? குரானா? பைபிளா? கீதையா? எது ஓதுவார்கள்? எப்படி இறுதிச் சடங்கு செய்வார்சள்? எது ஓதினால் என்ன? எப்படிச் செய்தால் என்ன இவன் கதை, முப்பத்தியாறு வயசு கதை, முடிந்து போயிற்று...

## 2

அமுதா நுனிப் பாதத்தில் மெல்ல நடந்து, வீட்டை விட்டு வெளியே வந்தாள். ஓசைப்படாமல் கதவுகளைச் சாத்தினாள். பூட்டை விடுவித்து அகற்றி நாதங்கியை மேலும் கீழும் அசைத்துப் பொருத்தினாள். பூட்டினாள். நகர்ந்து ஹீல்ஸ் ஷூவை மாட்டிக் கொண்டாள். வீடு சுற்றி ஜன்னல் பக்கம் போய்ப் படுக்கையறை திரைச் சீலை விலக்கி உள்ளே எட்டிப் பார்த்தாள்.

உள்ளே செல்வராஜ் அமைதியாய் ஒருக்களித்துத் தூங்கிக் கொண்டிருந்தான். இடுப்பு லுங்கி நெகிழ்ந்து உடம்பைச் சுற்றிக் கொண்டிருந்தது. அகலமான மார்புப் படம் சீராய் சுவாசத்தில் ஏறித் தாழ்ந்து கொண்டிருந்தது.

''குண்டப்பா... சைலண்டா தூங்கு. அரை மணி நேரத்துல வந்துருவேன்.'' தோட்டத்தில் நின்றிருந்த மொபெட் தள்ளி, காம்பவுண்ட் கதவு திறந்து சின்ன உதையில் கிளப்பி, ஹெல்மெட் அணிந்து ஏறி உட்கார்ந்தாள். வண்டி நகர, விரைவாக்கினாள். வீடு இருந்த தெருவிலிருந்து மெயின் ரோட்டுக்குள் புகுந்து இன்னும் விரைவுபடுத்த முகத்தில் உச்சிவெயில் காற்று தாக்கிற்று.



வண்டியைத் திருகி விரட்டினாள். காற்று, வெப்பத்துடன் முகத்தில் அடித்தது.

பள்ளிக்கூட வாசலை ரிக்ஷாக்கூட்டம் அடைத்துக் கொண்டிருந்தது. மொபெட்டை ஓரம்நிறுத்திப் பூட்டுப் போட்டுவிட்டுச் சாவியை உருவி விரலில் கோர்த்துக் கொண்டாள். ஹெல்மெட் அவிழ்த்து உள்ளே போனாள். தெரிந்த முகங்கள் சிரித்தன. கை தூக்கி கடிகாரம் பார்த்தாள். மணி பதினொன்று ஐம்பத்தைந்து. இன்னும் ஐந்து நிமிடம்தான். திலீபன் வந்துவிடுவான். இப்போதே பையை முதுகில் மாட்டி, வாட்டர் பாட்டிலைத் தோளில் போட்டு தயாராய்க் காத்திருப்பான். மின்சார மணி கதறியதும் முதல் ஆளாய் வெளியே வருவான். தொலைவிலிருந்தும் கை காட்டுவான். பூட்ஸ் முழுவதும் புழுதி படிய ஓடி வருவான்.

திலீபன்... திலீபன் எங்கே? அமுதா கூடை கூடையாய் வழிந்த பூக்களில் தன் பூவைத் தேடினாள். திலீபன் நிதானமாய் நடந்து வந்தான்.

''அம்மா கை கொடு.''

''என்னடா?''

''கை கொடு'' அமுதா கை கொடுத்தாள், பிள்ளை இறுகப் பற்றி வேகமாய் குலுக்கினான்.

''இன்னிலேர்ந்து நான்தான் க்ளாஸ் லீடர்.''

''நடராஜு லீடர் இல்லையா?''

''அவன் நாலுநாளா ஹோம் ஒர்க் செய்துட்டு வரலை. அவன் வேணாம்னு என்னைப் போட்டாங்க. இனிமே நான் பெல் அடிச்சா உடனே வரமாட்டேன். எல்லோரும் போன பிறகு க்ளாஸ்ரும் செக்பண்ணி, ஜன்னல் மூடிட்டு, கதவு மூடி சாவி ஹேண்ட் ஓவர் பண்ணிட்டுதான் வருவேன். நீ அஞ்சு நிமிஷம் லேட்டா வா, போறும்.'

மொபெட் விட்டு வாசலுக்கு வந்லபோது அவன் வராந்தாவில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

வாசற் கதவில் பூட்டு தொங்கிற்று.

மொபெட்டை வாசலில் நிறுத்தியபோது கிட்டத்தட்ட சரிகிற வேகத்தில் பிள்ளை கீழிறங்கினான். தோட்டக் கதவு திறந்து உள்ளே ஓடினான்.

வராந்தாவில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த செல்வராஜ் நிமிர்ந்தான். கதவு பூட்டிட்டுப் போனேனே எப்படி? அமுதாவுக்கு புருஷனின் வாசல் இருப்பு ஆச்சரியமாய் இருந்தது.

''எப்படி வந்தீங்க, பூட்டிட்டுப் போனேனே.''

''அப்பா பின் கதவு திறந்து வந்திருப்பாங்க, இல்லப்பா?'' பிள்ளை எகிறி தகப்பனைக் கட்டிக்கொண்டது. வலிவு மிகுந்த தகப்பனின் புஜம் பிள்ளையை இறுக்கிக் கொண்டது.

''கொல்லைப் பக்கமாவா வந்தீங்க?''

நீ போலீஸ்காரன் பெண்டாட்டியேஇல்லடி. உள்ள வச்சு கதவு பூட்டினா புருஷன் வெளியே வர முடியாத படி தவிப்பான்னு நினைக்கிற பாரு... நீ எம் பொண்டாட்டியே இல்ல, இது புள்ளை, எம் புள்ளை, டக்குன்னு புடிச்சாம் பாரு.''

''பொண்டாட்டி இல்லாத புள்ளை வானத்துலேர்ந்து வந்துதாக்கும்.'' முணுமுணுத்தபடி கதவு திறந்தாள் ''பின் கதவு திறந்து போட்டுவிட்டு வந்துட்டீங்களா?'' அவசரமாய் பின்பக்கம் போனாள்.

கதவு சாத்தி உள்பக்க நாதங்கியில் பிளாஸ்டிக் பக்கெட் மாட்டப்பட்டிருந்தது.

''என்ன இது, பக்கெட் மாட்டியிருக்கு?''

''உள்பக்கம் கதவு திறந்து வெளிப்பக்கம் சாத்தி, சாத்தறப்போ பக்கெட் மாட்டியிருப்பாங்க. யாராவது



கதவு திறந்தா டபால்னு பக்கெட் விழும். வாசல்ல இருக்கற அப்பாவுக்குச் சத்தம் கேக்கும்.''

''பின்னிட்டாடா. எட்டு வயசுப் பையனுக்கு இருக்கறது கூட உனக்கில்லை திலீபா... இந்த பக்கெட் விழாம வெளிலேர்ந்து கதவு திறக்கணும். உன்னால முடியுமா?''

பிள்ளை பின் கைகட்டி பக்கெட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். விருக்கென்று பட்சிமாதிரி வெளியே ஓடினான். அமுதா நகர்ந்து ஹாலுக்குப் போக முற்பட, செல்வராஜ் அவள் புஜத்தை, இழுத்து நிறுத்தினான். அருகில் இறுக்கிக் கொண்டான். ''இரு, என்ன பண்றான் பார்ப்பொம்.''

கதவு மெல்ல ஆடிற்று. அரை அங்குலம் விரிந்தது. விரிய பக்கெட் நாதங்கி நுனிக்கு வந்தது. இன்னும் ஒரு தள்ளு. பக்கெட் தடாலென்று விழும். மெல்ல ஒரு மூங்கில் குச்சி உள்ளே நுழைந்து பக்கெட் கம்பிக்குள் நகர்ந்து உறுதியாய் நின்றது. பிள்ளை தடக்கென்று தோளால் கதவு முட்டினான். பக்கெட் குச்சியில் விழுந்து அவன் கைக்குப் போயிற்று. கதவு சின்ன சத்தம்கூட இல்லாமல் அகலத் திறந்தது. பின்பக்க வாசலில் பிள்ளை சிரிப்போடு நின்றது.

செல்வராஜ் கை தட்டினான். ''திருடன் திருடன். பக்காத் திருடன்.'' அமுதா வியப்புடன் கூவினாள்.

திருடத் தெரியாதவன் போலீஸ்காரனாக முடியாது. திமிர் இல்லாதவன் அதிகாரியாக முடியாது. புத்தி இல்லாதவன் இந்த உலகத்துல பிழைக்க முடியாது.

''கிட்ட வா திலீபா.'' பிள்ளையை அருகே அழைத்து, தலையைக் கோதினான்.

''நான் கொஞ்சம் பயந்துட்டு இருந்தேன். அமுதா இவன் போறும் உன் துணைக்கு.'' பிள்ளையும் தகப்பனும் ஹாலில் நுழைந்தார்கள்.

மடமடவென்று அமுதா உணவுப் பாத்திரங்களும், தட்டுகளும் மேஜையில் பரப்ப, சாப்பிட உட்கார்ந்தார்

கள். முஷ்டி மடக்கி புஜபலம் பார்த்தார்கள். எவர் சில்வர் கரண்டியை முழங்காலில் வைத்து வளைத்தார்கள். நிமிர்த்தினார்கள். வளைத்தலுக்கு ஒரு கெக்கலிப்பு. நிமிர்த்தலுக்கு ஒரு கெக்கலிப்பு என்று ஆடினார்கள்.

ஆண்கள் உலகமே வேறு. ஆண்களின் சந்தோஷமே வேறு.

வன்முறையும் வல்லடியும் இயல்பிலேயே அவர்களுக்குள் இருக்கின்றன. சிதறடிக்கிற மூர்க்கம் எப்போதும் உள்ளே இருக்கிறது. ஆளுமை செய்கின்ற ஆசை யாரும் கற்றுக் கொடுக்காமலேயே வருகிறது. ஒரு தாவல்தனம் தானாய் வந்து விடுகிறது.

''இவன் இருக்கான் உன் துணைக்கு. எனக்குப் பய பயமில்லை.'' புருஷன் பிள்ளையைத் தட்டிக்கொடுப்பதும் பிள்ளை தோள் அகல நிற்பதும் ஆச்சர்யமாய் இருக்கிறது.

எட்டு வயசுப் பிள்ளை என்ன காவல்? கூட்டல் கழித்தல் தப்பாய் போட்டு, லொட்டு லொட்டு என்று என்னிடம் அடி வாங்கும் பிள்ளை எப்படி எனக்குக் காவல்? ஏன் பயம்? எதைப்பற்றி பயம்? உனக்குப் பின் புருஷனும் மனைவியும் படுக்கை அறைக்குப் போனார்கள். பிள்ளை வாசலில் அடுத்த வீட்டுப் பிள்ளைகளோடு கிரிக்கெட் ஆடிற்று.

''அடச்சே... நான் சாதாரணமா சொன்னதை பெரிசா எடுத்துக்கிட்டியா? அவன் குழந்தைதான். அது அவன் சந்தோஷத்துக்குச் சொன்னதுதான். ஆனா நான் ஊர்ல இல்லாத போது நீ ஜாக்கிரதையா இருக்கணுமேங்கற பயம் உண்டு. போலீஸ்காரனைப் பிடிக்காதவங்க ஊர்ல நிறைய உண்டு.''

''ரௌடிப் பசங்க தொந்தரவு வருமா?''

''என் வேலை பேட்டை ரௌடிகளோட இல்லை. பெரிய புள்ளிகளோட, அதான் கவலை.'' படுக்கை அறைக்குப் போனார்கள்.



''புரியும்படி சொல்லுங்களேன்.''

''போன வருடம் மெட்ராஸ்ல ஒரு கேஸ் விஷயமா வந்தேன் தெரியுமா?''

''சாராய கேஸ்.''

''கேஸ் போன மாசம் முடிஞ்சுது. ஒன்னரைக் கோடி ரூபா ஃபைன். லைசென்ஸ் கேன்ஸல்ட். ஃபைன் கட்டிட்டு நேரா என்கிட்ட வந்தாரு, தமிழனுக்குத் தமிழன் காட்டிக் கொடுக்கறது நிஜம்தான்னு புரிஞ்சுக்கிட்டேன். நன்றி, தம்பின்னாரு.''

''கந்தசாமியா?''

''ம்ம்...''

''அப்புறம்?''

''நீ தமிழன் இல்லை. உனக்கு ஜாதி இல்லை. கடவுள் காசு தவிர, காசு சம்பாதிக்கிற வெறி தவிர உனக்கு ஒரு ஒழுக்கமும் இல்லை, இந்த உணர்ச்சிப் பேச்செல்லாம் என்கிட்ட வேணாம்னேன்.''

''நான் எதுக்கும் உணர்ச்சிவசப்படாதவன் தம்பி. கோபம்கூட எனக்கு மொள்ளத்தான் வரும். போகப் போக புரிஞ்சுப்பே. அப்படின்னு சொல்லிட்டுப் போயிட்டாரு.''

''மிரட்டலா?'

''இருக்கலாம். இல்லை வெறும் வாய் வீம்பாகவும் இருக்கலாம். அவனுங்களைச் சட்டுன்னு எடை போட முடியாது.''

''அதனால என்னங்கறீங்க?''

''ஜாக்கிரதையா இரு. ராத்திரி கதவு தட்டினா யாருன்னு தெரியாம திறக்காத.''

''வம்பு பண்ணுவாங்களா வந்து?''

''நேரடியா வரமாட்டாங்க?''

''எக்ஸைஸ் டியூட்டி ஏமாத்தினான்னு புடிச்சீங்களே அதானே. அதுக்கு ஒன்னரைக் கோடி அபராதமா?''

''மேலேயே போடணும். அவர் வக்கீல் ரெண்டு பேரு கெட்டிக்கார ஆளுங்க. மறதி, வேலை ஆட்கள்

மோசடின்னு அவரைத் தப்பிக்க வச்சு அபராதம் வாங்கிட்டாங்க.''

''பொய் லேபிள் ஒட்டின கேஸ் தானே?''

''ம்ம்.''

''நீங்க சுண்ணாம்பு அடிக்கிற ஆளா வேலைக்குப் போய் புடிச்சுது...''

''ம்ம்.''

போன ஆகஸ்ட் மாதம் பிடித்த கேஸ் அது. ஒரு வருடத்துக்குமேல் ஆகிறது. திடுதிப்பென்று ஒரு நாள் பெட்டியோடு வந்தான். 'ரெய்ட் போறேன் அமுதா, முடிஞ்ச போது வீட்டுக்கு வரேன். வேற எங்கயும் போகாதே' என்றான்.

இரவு பதினொரு மணிக்கு உடம்பு முழுதும் சுண்ணாம்பு பொட்டுக்களோடிருந்தான் எண்ணெய் தேய்த்துக் குளித்தான்.

''சாராய லைசென்ஸ் ஆளு ஏமாத்தறான். கவர்மென்ட் எக்ஸைஸ் தராம ஒரு நாளைக்கு ஆறாயிரம் பாட்டில் சாராயம் பொய் லேபில் ஒட்டி வெளிய அனுப்பறான். லோக்கல் ஆள் போனா மிரட்டறான். எங்களுக்கு ரிப்போர்ட் பண்ணாங்க. நெசமான்னு தெரிய உள்ள பூந்துட்டேன். ஃபாக்டரி முழுக்க சுண்ணாம்பு அடிக்கறாங்க. அந்த ஆள் கூட்டத்தோட சேர்ந்து இடம் முழுக்க சுத்திட்டேன் புரிபடலை.''

''பொய் லேபிள்ன்னா?''

''அந்த தீப்பெட்டி எடு. அதுல ஒரு லேபிள் ஒட்டியிருக்கு பாரு மூடிக்கிட்ட. அது எக்ஸைஸ் டிபார்ட்மென்ட் லேபிள். ஒரு லேபிளுக்கு இத்தினி பர்ஸென்ட்டுன்னு வரி உண்டு. வரிகட்டி லேபிள் வாங்கிட்டு வரணும். ஒட்டி வெளிய அனுப்பணும். எல்லா பாட்டில்லயும் லேபிள் இருக்கு. அவர் விக்கிற இடத்துலயும் செக் பண்ணினோம். அங்கயும் பாட்டில்ல லேபில் இருக்கு. ஆனா மூணுஷிப்ட் பாக்டரி ஓடுது. நிறைய மொலாஸஸ் வருது. ஸ்கிராப், ஸ்கிராப்னு கணக்கு அதிகம் காட்டறார். எங்கேயோ ஏமாத்து வேலைன்னு ஒரு டவுட் இருக்கு. எங்கன்னு தெரியலை.



நாலு நாளில் கவர்மென்ட் லேபிளைத்தானே அச்சடித்து பண்டில் பண்டிலாய் ஒரு பீரோவில் சுருட்டி வைக்கப் பட்டிருப்பதைக் கண்டு பிடித்து விட்டான். வாசலில் உள்ள ஸ்க்வாடுக்குக் கை காட்ட, நாற்பது பேர் நுழைந்து விட்டார்கள்.

பீரோவை, பிரஸ்ஸை, ப்ளாக்கை கௌவிக் கொண்டார்கள்.

''என் இடத்திலயா, இப்படி ஒரு சூதா...? இல்லவே இல்லை'' என்று சாதித்தார். என்னை மீறி நடந்திருக்குது என்று கைவிரித்தார்.

அரஸ்ட் வாரண்டைக் காட்டியதும் அடங்கி, ஒரு நாள் உள்ளே இருந்து விட்டு மறுநாள் ஜாமீனில் வந்தார்.

''சரி, என் தவறு, ஒத்துக்கறேன். எட்டாயிரம் பண்டில் காட்டாத...எண்பது பண்டில் காட்டு.'' பேரம் பேசினார்.

புலனாய்வுக் குழு சிரித்தது.

தனித்தனியே எல்லார் வீட்டுக்கும் ஆள் அனுப்பினார். இங்கேயும் வந்தார்கள்.

வாசல் வராந்தாவில் உட்கார்ந்து பேசினார்கள். இருபது வயசுப் பையன். கனத்த சங்கிலி. வைர மோதிரம். புஸு புஸுவென்று ஒரு இம்போர்ட்டட் போட்டபடி நிதானமாய் பேசினான்.

''மொத்த பேருக்கும் பிரிச்சுக் கொடுத்துர்லாங்க பெரிய நஷ்டம், அரசாங்கத்துக்குக் கொடுக்கறத உங்களுக்குச் செய்றோம். சொல்லுங்க. எத்தினி?'' பெட்டி திறந்தான். கத்தை கத்தையா நோட்டுகள்.

''எவ்ளோ இருக்கு இதுல?''

''எல்லாருக்கும் தரணுமேன்னு ஒண்ணு முழுசா வச்சிருக்கேன்.''

''ப்ளாக் மணியா?''

''இல்லீங்க. நகை வச்சு துட்டு வாங்கினோம். இதோ ரசீது. உங்கக்கிட்ட ப்ளாக் மணியோட வர முடியுங்களா?''

''விஜிலென்ஸ் ஸெல்ன்னு ஒண்ணு இங்க இருக்கு தெரியுமா? அதுல எஸ்பி, இன்ஸ்பெக்டர் உண்டு கரப்ஷன் தடுக்கறதுக்கு.''

''தெரியுங்க.''

''அவருக்கும் தரணும்''

''தரலாம்.''

''அப்ப இரு. அவருக்குப் போன் போட்டு வரவழைக்கிறேன்.''

''சார்.''

''இருப்பா. அவர் வரட்டும். அவர்கிட்டேயும் பேசு''

''மாட்டி வுட்ராதீங்க சார்,''

''ஏன் பயப்படறே உட்கார்.''

பையன் எழுந்து வெளியே பெட்டியுடன் ஓடினான். அவன் போன இருபது நிமிடத்திற்குப் பிறகு மணியடித்தது.

''செல்வராஜ்.''

''சொல்லுங்க. வணக்கம்.'' எதிர்முனை பேச கேட்டுக் கொண்டான். கேட்டுக் கொண்டிருந்தான்.

''கந்தசாமி, அவன் சின்னப் பையன். விவரம் தெரியாத நுழையறான்னு வுட்டுட்டேன். நீங்க வந்திருந்தா முட்டிக்கு முட்டி அடிச்சு பேத்திருப்பேன். விளையாடறியா என்கிட்ட? உன் காசு என்னடா மயிரு காசு?''

மொத்த பாட்டில்களையும் தொழிற்சாலை பெயருக்கு முன் அடுக்கி அதிகாரிகள் போட்டோ எடுத்துக் கொண்டார்கள். செல்வராஜ் அதில் முதல் வரிசையில் கைகட்டி உட்கார்ந்திருந்தான். பேப்பரெல்லாம் சிரித்தது. அடங்கிப் போயிற்று.

இப்போது அபராத சூடு போட்டிருக்கிறார்கள்.



''அப்புறம் ஒண்ணுமே வரலை, அந்த கேஸ் பத்தி?'' அமுதா வியப்புடன் கேட்டாள்.

''தமிழ் பேப்பர்ல வராது. இன்னிக்கு ஹிண்டுல பார். சின்னதா எட்டாம் பக்கம் ஊர்பேர் இல்லாத அநாமதேய நியூஸ் போட்டிருக்கான்.''

''ஏன் தமிழ் பேப்பர்ல வரலை?''

''போட வேண்டாம்னு கேட்டிருப்பார் கந்தசாமி. சரிங்க ஐயான்னு கைகட்டி சொல்லியிருப்பாங்க.''

''பயமா?''

''உபயோகம். சோப்பு கம்பெனி விளம்பரம், புடவைக் கடை விளம்பரம் அவர்கிட்ட.''

''ரொம்ப பணக்காரரா?''

''ம்ம்.''

''பிறகு ஏன் இப்படி ஏமாத்தணும்?''

''அத்தினி காசு வச்சுக்கிட்டு என்ன செய்வான்?''

''என்ன செய்ய முடியாது அமுதா?''

''தங்கமாவா திங்க முடியும்?

''கந்தசாமி பழையதுதான் சாப்பிடுவார்.''

''பிறகு...?''

''பவர். ஒரு கட்சியைக் கவுக்கற பவர். ஒரு கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வர்ற பவர். அரசாங்கத்தையே பைல போட்டுக்கற பவர். கூப்பிட்டா ஓடி வர எம்,எல்.ஏ. கும்பிடு போட மந்திரி வீட்டு வேலைக்கு ஐ.ஏ.எஸ். ஆபீஸர். பெரிய பட்டாளம் அது.''

''உங்களுக்குப் பயமில்லையா, இத்தனை பெரிய பணக்காரனைப் பகைச்சுக்கறதுக்கு?''

''யார் அனுப்புறது நம்மை. சென்ட்ரல் கவர்ன்மெண்ட். சென்ட்ரல்ல வேற கட்சி. இங்க வேற கட்சி.

லோகல் கட்சிக்கு யார் முதுகெலும்பு, கந்தசாமியா, அவரை ஓடின்னு அனுப்பின காரியம்தான் இது.''

''அப்ப சென்ட்ரல் கவர்ன்மென்ட் கட்சியா இருந்தா விட்டுருப்பாங்களா?''

''சிரிச்சுக்கிட்டே மடக்கி இருப்பாங்க. இவ்வளவு வெளிச்சம் போட்டுருக்க மாட்டாங்க. இதைவிட பெரிய கொள்ளை நடக்கறதில்லையா? உண்டு. ஆள் யாருன்னு பார்த்து உடைக்கறதுதான் முக்கியம்.''

''இந்த வேலை வேண்டாம். விட்டுருங்களேன்.''

''விட்டுட்டு வேறஎன்ன வேலை தெரியும் சொல்லு. மளிகைக் கடைல உட்கார முடியுமா? குமாஸ்தா வேலை செய்ய முடியுமா? ஓடி ஓடிப் பழகிவிட்டோம். நாலு நாள் வீட்ல உட்கார்ந்தா ஏன் ஹெட் க்வார்ட்டர்ஸ் கார் வரலைன்னு கவலையா இருக்கும். நம்ம இடத்தை வேற எவனோ புடிச்சுட்டானோன்னு பயம் வரும்.''

''.....................''

''யேய்...பக்கத்துல வந்து படேன்.''

''பையன் வாசல்லதான் இருக்கான். பகல் நேரத்துல கூப்பிடறீங்களே. நான் வேலையெல்லாம் முடிச்சுட்டு குளிச்சுட்டு எழுப்பறேன். எங்கயாவது வெளிய போகலாம்.''

கால் விரைத்து சோம்பல் நெறித்தான். கண் மூடினான். அமுதா துள்ளலுடன் உள்ளே சென்றாள்.

## 3

'இரண்டு நாள் வண்டி எங்கிட்ட இருக்கட்டும், மாணிக்கம். நான் ஐ.ஜி. கிட்ட சொல்லிக்கிறேன்.'' வயர்லெஸ் பொருத்திய வெள்ளை அம்பாஸிடர் வீட்டுக்



கெதிரே வந்து நின்றதும் பிள்ளை கதவு திறந்து உள்ளே குதித்து ஆடிற்று.

''அப்ப நான் வேணாமா சார்?''

''வேணாம், போய் சினிமா பார்.'' இருபது ரூபாய் தாள் நீட்ட, டிரைவரின் சல்யூட் விரைப்பாய் இருந்தது.

அரை, நிக்கரும் டீ ஷர்ட்டும் ஹவாய் செருப்புமாய் செல்வா வண்டி ஸ்டியரிங் பிடிக்க, அமுதா கதவு பூட்டிக் கொண்டு இறங்கினாள்.

சென்னை பிரிவு சிபிஐ வண்டி அது.

''ரொம்ப தூரம் போயிடாதே செல்வா, லோக்கல் டிரிப்புக்கு வச்சுக்க.'' சொல்லி அனுப்பப்பட்டது. கச்சேரி ரோட் வழியே கடற்கரைக்கு திருப்பி உள்பக்க சாலையில் இறங்கி மணல் ஓரம் நிறுத்தினான்.

''இதுக்குத்தான் அரைநிக்கர் போட்டு வந்தீங்களா?''

''யூனிஃபார்ம் போர். பேண்ட் அதைவிட படு போர். மெட்ராஸ் கசப்புக்கு இதுதான் சரியான டிரஸ்.'' பிள்ளையும் தகப்பனும் அலை இறங்கினார்கள். இடுப்பு ஜலத்தில் குதித்தார்கள். திலீபனுக்கு மார் உயரம் அலை வந்து மோதிற்று. நீரின் இழுப்புக்குப் பயந்து பிள்ளை அலறினான்.

''திலீபா, நல்லா நில்லு. காலு பிரிச்சு மணல்லஊனி நில்லு.''

வேணாம்பா. என்னை வுட்டுரு.''

''ச்சு பயப்படாதடா. நான் நிக்கறேன்ல?''

''வேணாம். நீ போலீஸ்.நீ நிப்ப, என்னை வுட்டுரு. நான் சின்ன பையன்தானே.''

''முட்டாள். போலீஸ்காரன்னா அலை பின் வாங்கி ஓடுமா? காத்து முடி கலைக்காத இருக்குமா? தாங்கணும்டா. உரம்மா நிக்கணும். நில்லு.''

பிள்ளை ஒவ்வொரு அலைக்கும் பின் வாங்கினான். கால் ஊன்றாமல் மல்லாக்கக் கவிழ்ந்தான். இழுபட்ட போது தகப்பன் கைபிடித்துச் சுழன்றான்.

''பயப்படற திலீபா. பயத்தை விடு.''

''பயமாதாம்பா இருக்கு.''

''என்ன பயம்?''

''இழுத்துக்கிட்டு போச்சுன்னா?''

''எகிறி கரைக்கு வர வேண்டியதுதானே.''

''எனக்கு நீச்சல் தெரியாது.''

''கத்துக்க. நான் எட்டு வயசுல எங்கப்பாவுக்குத் தெரியாம கத்துக்கிட்டேன்.''

''குளமா இருந்தா கத்துக்கலாம். இது கடல்பா. பயமா இருக்கு. என்னை விட்டுடுங்க.'' ஓடி அம்மாவின் பின் ஒளிந்து கொண்டான்.

''என்ன அமுதா, இப்படிப் பயப்படறான் தண்ணிக்கு?''

''சின்ன பையன்ங்க.''

''ம்ஹூம், நான் இல்லாம வளர்ற புள்ளை எல்லாத்துலயும் தடுமார்றது பார். பொம்பளை மாதிரி பேசறானே தவிர...எலே இங்க வா.''

''நான் வரலே... நான் வரலே.''

பாய்ந்து பிள்ளையைப் பிடித்து செல்வராஜ் நெஞ்சு ஆழத்துக்குக் கடலில் இறங்கியபோது பிள்ளை தகப்பனை குரங்காய்ப் பிடித்துக் கொண்டது.

''பயப்படாதே. நான் இருக்கேன், எங்க போனாலும் புடிச்சுக்கிட்டு வந்துருவேன். அடுத்த பெரிய அலை வர்றபோது என் கையை விட்டு கரைக்குப் போயிடணும். அலை அடிக்கிற வாட்டத்திலேயே போயிடணும். என்ன... ரெடி. பெரிய அலை வருது, பயப்படாத போ நான் இருக்கேன்.''



பிள்ளை கைவிட்டு நீரில் குதித்தான். அவன் குதிக்கும் முன் அலை கடந்துவிட்டது. கரைக்குப் போன அலை முழு வேகத்தில் பின்னடைய பையன் முற்றிலும் மூழ்கித் தத்தளித்து முன்னேற முடியாமல் புரண்டு ''யப்பா யப்பா'' என்று அலற செல்வா தூக்கிக் கொண்டான்.

''என்னடா?''

''வேணாம்பா.''

''ஏன்?''

''பயமா இருக்கு. ப்ளீஸ் வேணாம்பா.''

''அலை தாண்டி குதிச்சா எப்படி கரைக்குப் போவ?''

''என்னை விட்டுருப்பா?''

''நெசமா?''

''நெசமா.''

''வேணாமா!''

''வேணாம்.''

''சரி போ.''

நாலடி பின்னடைந்து பிள்ளையைக் கரையில் இறக்கினான். பிள்ளை ஓடி மழையில் நனைந்த காகம் போல தாயிடம் ஒன்றிற்று.

''அப்பா இருக்காங்க இல்லை. எதுக்கு பயப்படற திலீபா?''

''குளிருதும்மா.''

''ஓடி வா காருக்குப் போகலாம்.'' பிள்ளை காருக்கு ஓடிற்று. டவலால் உடம்பு துடைத்து வேறு உடை போட்டுக் கொண்டது. உங்களுக்குச் சட்டை கொண்டு வந்திருக்கேன்; மாத்திக்கிறீங்களா?''

''வேணாம். வீட்டுக்குப் போய் குளிச்சிட்டு மாத்திக்கலாம்.''

''கார் கிளம்பி எட்வர்ட் எலியட்ஸ் சாலையில் ஓடிற்று. நட்சத்திர ஓட்டலுக்குள் நுழைந்தது.

''திலீபா, இப்பப் எப்படி இருக்கு?''

''சரியாயிடுச்சு.''

''நீச்சல் கத்துக்கிறியா?''

''பீச்சுல வேணாம்.

''இந்த ஒட்டல்ல ஒரு குளம் இருக்கு. அதில கத்துக்கிறியா?''

''இப்பவா?''

''நாளைக்கு. அடுத்த வாரம் இரண்டு நாள், மூணு நாள் கத்துக்கிறியா?''

பிள்ளை பேசாமலிருந்தான்.

''நாளைலேர்ந்து கத்துக்க. கோச் இருப்பாங்க. முதல்ல ட்யூப் கட்டி விடுவாங்க. பயமில்லாம கத்துக்கலாம்.''

''ரொம்ப ஆழமா?''

''கேள்வியைப் பார் முழங்கால் ஜலத்துல நீச்சல் அடிக்க முடியாது. ஆசை இருக்கா இல்லியா சொல்லு.''

''ஆசைதான்.''

''அமுதா! நீ எல்லோருக்கும் ஏதாவது ஆர்ட்ர் பண்ணு. நான் பையனுக்கு ஸ்விம்மிங்பூல் காட்டிட்டு வரேன். வாடா திலீப்''

படியேறிப் போனார்கள். மூணாவது மாடியில் நீச்சல் குளம் இருந்தது. ஹோட்டலில் இரண்டு தனித் தனிக் கட்டடங்களை இணைக்கும் நடைபாதையில் மேலே திறந்த வானமும் நடுவே ஆறடி ஆழமுமான நீச்சல் குளம் இருந்தது.

''இங்க சொல்லித் தராங்க. ஆள் வச்சு, சேர்த்துடலாமா திலீபா?''

''ஆறு அடியா...மூழ்கிட மாட்டேனா?''

''பிளாஸ்டிக் டியூப் போட்டு வுட்றுவாங்க, அப்புறம் மெள்ள மெள்ள கால் கைஅசைக்க ஸ்விம்மிங் கத்துக்குடுப்பாங்க.''



யாரும் காணலியே?''

''பகல்ல க்ளாஸ் நடக்கும். சனி ஞாயிறு இரண்டு நாள் போறியா?''

''சரிப்பா.''

''விடாம செய்யணும். பயப்படக்கூடாது.''

பிள்ளை பயத்துடன் தலையாட்டினான். தகப்பனின் கையைப் பிடித்துக்கொண்டே நீச்சல் குளம் வந்தான்.

''அமுதா என்ன ஆர்டர் பண்ணினே?''

''உங்களுக்கு சிக்கன் ரோஸ்ட், எனக்கு பீஸா, திலீபனுக்கு மட்டன் ஃப்ரைட் ரைஸ்.''

''இவன் ஏண்டி இவ்வளவு பயப்படறான்?''

''சின்னப் புள்ளைதானே.''

''இல்லை. டிரைவ் இல்லை. கத்துக்கணும்கற ஆசை கூட இல்லை. இவ்வளவு சாஃப்டா ஆம்பளைப் பையன் இருக்கக் கூடாது. பொண் குழந்தைகளே சகலமும் கத்துக்கணும்னு வெளியே வரப்போ நீ அவனைப் படிப்பு மட்டும் கவனிச்சு புண்ணியமில்லை அமுதா. வெளி உலகம் பழக்கணும். உடம்பு பலம் வேணும்.''

''நல்லாதான் சாப்பிடறான். தினம் முட்டை வேற குடுக்கிறேன்.''

''ஸ்விம்மிங் சேர்த்து வுட்டுட்டுப் போறேன். வாரம் மூணு நாள். நீதான் இவனைக் கூட்டிட்டு வரணும், இருந்து முடிஞ்சதும் அழைச்சுட்டுப் போவணும்.''

''பள்ளிக்கூடம் வண்டில போய்ட்டு வர்றதே சிரமமா இருக்கு. இது வேறயா? இரண்டு மைல் போயிட்டு வரவா. வீட்டு வேலை.''

''பையனுக்காகச் செய்.''

''போரடிக்கும்.''

"நான் இல்லேன்னாலும் போரடிக்குதுங்கறே, பையனுக்கு உதவி பண்ணுன்னாலும் போருங்கறே. நீயும் நீச்சல் கத்துக்கயேன்."

"கத்துக்கறதுக்கு வயசு என்ன?"

"புடவையோட முங்கறதுக்கு இதென்ன ராமேஸ்வரமா? ஸ்விம் ஸூட் போட்டுகிட்டு ஒரு ஹோட்டல் குளத்துல...

"ஒரு தப்பும் இல்ல."

"நம்மால முடியாது சாரி."

"அப்ப பையனை என்கரேஜ் பண்ணு. அவன்கூட நாலு நாள் போனா உனக்கும் ஆசை வரும். இது பப்ளிக் குளம் இல்லை. ஸ்டார் ஹோட்டல். ஆளுங்க கம்மி. லேடீஸ்கூட நிச்சயம் நீச்சலடிப்பாங்க. டேய் நீ என்னா சொல்றே?"

"அம்மா வந்தா போறேன்."

"எதுக்கு?"

"நீச்சலடிக்க."

"போடா என்னால் முடியாது நீச்சல் எல்லாம்."

"நாளைக் காலைல முதல் வேலை உன்னை இங்க கொண்டாந்து சேர்க்கறதுதான். அம்மா துணைக்கு வரும். ஓகே."

ராத்திரி—

"திலீப் தூங்கியாச்சா?"

"ம்ம்."

"டெல்லி நியூஸ் பார்த்துட்டுத்தான் வருவீங்களா?"

"தமிழில் அரைகுறையாய் ஒரு நியூஸ் கேட்டேன். மறுபடி டெல்லியில் சொல்வாங்களான்னு பார்க்கிறேன்."

"ஏன்?"

"ஒரு வக்கீல் கொலை சம்பந்தமா ஒரு பெரிய புள்ளிய அரெஸ்ட் பண்ணியிருக்காங்க. இது எங்க



வேலை. லோக்கல் போலீஸ் இது செய்திருக்க முடியாது. பேர் சரியா காதுல வாங்கலை."

"ம்... எப்ப பார்த்தாலும் கொலை, கொள்ளை, சண்டை துப்பாக்கி சூடு, போர், வாங்களேன்."

"கொஞ்சம் இருப்பா... கண்ணுல்ல, என்ன செம மூடா?"

"மூட்தான்."

"ஹோட்டல்லயே கவனிச்சேன். கண்ணுலயே தெரிஞ்சுது."

"இப்படி கொஞ்சிக்கிட்டு உட்கார்ந்திருக்கறதே ரொம்ப சுகமாயிடுத்து."

"சுகம்தான்"

"டிவி பார்க்கணும்றீங்களே?"

"தொழில் கண்ணம்மா."

"வீவுல வந்துட்டு, தொழில் என்ன தொழில்"

"உள்ள எங்கயோ ஒரு பட்சி தப்பா குரல் குடுக்குது. அதான் உட்கார்ந்துக்கிட்டிருக்கேன்."

"காரே பூரேன்னு ஹிந்தில பேசறாங்க. ஸவுண்ட் கட் பண்ணிரட்டுமா? நியூஸ் போது பெரிது பண்ணிக்கலாம்."

எழுந்து வால்யூம் குமிழைத் திருகி அமைதியாக்கினாள். டிவி ஊமைப் படமாய் இருந்தது. எதிரே வந்து நின்று கொண்டாள்.

அமுதாவின் உள்ளே ஒரு அமுதா நெட்டுயிர்த்தாள். சூடு பரவ தயாரானாள். கீழ் உதடு கடித்து கண் சொருகி புருஷ வாசனையை முகர்ந்தாள். உள்ளே ஒரு பெண் குதிரை ஓடிற்று. ஆண் குதிரை துரத்திற்று. சடாரென்று பெண் குதிரை திரும்பி ஓட்டம் காட்டியது. வேண்டாம் போ என்று காலால் உதைத்து சிணுங்கியது. ஆண் குதிரை முன்னே வந்து மடக்கியது. கழுத்தையும் கடைவாய் வரைக்கும் உதடு துடிக்க முகர்ந்து பார்த்தது.

வெறியில் பல் தெரிய சிரித்தது. இடுப்பெல்லாம் உரசி யாது. உரசல் நட்டில் பெண் குதிரை அவஸ்தைப்பட, ஆண் குதிரை பல்லால் பெண்ணின் பிடரி கடித்தது. பெண் குதிரை பொறுமை இழந்தது.

''வாப்பா உள்ள போயிடலாம்.'' எழுந்து அவன் கைகளைப் பற்றி இழுத்தாள், அவன் எழுந்தான்.

போன் மணி அடித்தது.

''யாரு இந்நேரம்?'' அமுதா போன் எடுத்தாள்- ''திஸ் இஸ் எய்ட் சிக்ஸ் செவன் ஃபோர் நைன் டு.''

எதிர்முனையில் கனத்த குரல் கேட்டது. ''ஸி.பி.ஐ. டெல்லி எஸ்.பி. மிஸ்டர் செல்வராஜ் இருக்கிறாரா?''

''ஒன் செகண்ட், ப்ளீஸ், உங்களுக்கு டெல்லி.''

''ஹலோ''—செல்வா போன் வாங்கினான்.

''யெஸ் ஸார். ஃபைன் சார். டெல் மி சார்.'' டெலிபோன் பேச்சை வெகுநேரம் கவலையுடன் வாங்கிக் கொண்டான்.

''யெஸ் ஸார். குட் நைட். ஐல் பி தேர் இன் த மார்னிங் சார்.''

அப்ப... இப்ப இடைஞ்சல் இல்லை. காலைலதான் ஏதோ இடைஞ்சல். அமுதா நிம்மதியானாள்.

''அமுதா.''

''என்னங்க?''

''கிளம்பணும்.''

''டெல்லிக்கா?''

''இல்லை, பெங்களூர்.''

''காலைலதானே?''

''இல்லை, இப்ப.''

''இப்ப எப்படி?''

''பை மிலிடரி ஃப்ளைட்.''

குறிப்புதவிநூல்



578341

''எதுக்கு?''

''வேலை.''

''ப்ச்சு.'' உடம்பு தடு சட்டென்று கலைந்து போயிற்று. தொப்பென்று சோபாவில் உட்கார்ந்தாள். முழங்கால் தூக்கி முகம் புதைத்துக் கொண்டாள்.

''அமுதா.''

............

894.8113
BAL

''அமுதா.''

............

''நாளைக்கு ஈவினிங்கு வந்துருவேன். யேய் என்னைப் பார்,'' முகம் நிமிர்ந்த கண்களின் ஓரம் ஜலம் பெருகி நின்றது.

ஸாரி அமுதா, நிச்சயமா நாளைக்கு ஈவினிங்.''

''எப்ப வேணா வாங்க. நான் எதுக்கும் ஆசைப் படலை. போயிட்டு வாங்க.''

உள்ளே போய் பீரோ திறந்தாள். அவன் துணி களை எடுத்துப் பெட்டியில் அடுக்கத் துவங்கினாள், அவன் டிவி குரலை பெரிதாக்கினான்.

''பெங்களூரில் ஒரு வக்கீல் கொலை சம்பந்தமாக ஜனாதிபதிக்கு அவர் மனைவி கொடுத்த புகாரின்பேரில் நகரில் இரண்டு முக்கிய புள்ளிகள் கைது செய்யப் பட்டனர். சட்ட சபையில் இதுபற்றி எதிர்க் கட்சியினர் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் இது மத்திய அரசு சம்பந்தப்பட்ட விஷயம். இது பற்றித் தனக்குத் தகவல் எதுவுமில்லை என்று சொன்னார். எதிர்க்கட்சியினர் முதல்வரின் சமாதானம் ஏற்காது வெளிநடப்பு செய்தனர்.''

வேலை நடப்பு புரிந்துவிட்டது. அவர்களைச் சென்னைக்குக் கொண்டு வரவேண்டும். பெங்களூரில் வைப்பது அவர்களுக்கும் ஸி.பி.ஐக்கும் ஆபத்து. ஏஸ்

CONNEMARA
10 MAY 20

கார்ட் வேலை காலையில் போகலாம். உடனே வா என்று கட்டளை போடுகிறார்கள்.

தொலைபேசியில் லோக்கல் ஆபீஸுக்குத் தொடர்பு கொண்டான். உடைமாற்றிக் கொண்டான். ரிவால்வரைத் துடைத்து பின் இடுப்பில் சொருகிக் கொண்டான்.

அமுதா ஷேவிங் செட் எடுத்து வைத்தாள், சகலமும் வைத்து மேலே வெள்ளை டர்க்கி டவலால் போர்த்தினாள். பெட்டி அழுத்தி மூடினாள்.

"பிள்ளைகிட்ட எழுப்பி சொல்லிட்டுப் போங்க. காலைல என்னைப் பிடுங்கி எடுப்பான்."

செல்வா உலுக்க கைவைத்து, சட்டென்று "வேணாம் அமுதா" குனிந்து பையனை முத்தமிட்டான். கான்வாஸ் ஷூ மாட்டினான்.

"ஒருவேளை நாளைக்கு ஈவினிங் என்னால வர முடியலைன்னா."... அமுதா முகம் திருப்பிக் கொண்டாள். கன்னத்தில் கண்ணீர் இறங்கிற்று.

"என்ன இது. ரொம்ப தப்பு அமுதா. எனக்கு கஷ்டமாயிடும். ப்ளீஸ். இப்படிப் பணணாத." அருகே நெருங்க முகம் துடைத்துக் கொண்டாள்.

அவளை இழுத்து முத்தமிட்டான். கொடு என்று கேட்டான்.

அமுதா நெருங்கி இறுக்கி புருஷனை முத்தமிட்டாள்.

"ஜாக்கிரதை தாயி, எல்லா ஊரும் கெட்டுக்கிடக்கு. அலர்ட்டா இரு."

"சரி."

"கோவமில்லையே?"

"போயிட்டு நல்லபடியா வாங்க."



வெளிக் கதவு திறந்து தோட்டக் கதவு பூட்டைத் திறந்து கார் கதவில் சாவி பொறுத்தி உள்ளே பையை விசிறிப் போட்டு கிளம்பினான்.

"கார் ஏர்போர்ட்ல ஹேண்ட் ஓவர் பண்ண சொல்லிட்டாங்க. உன்னைக் கேட்டா அப்படியே சொல்லிடு."

"சரி."

சாவி திருக கார் உயிர்பெற்றது.

"பை."

"பை."

நகர்ந்தது. சிகப்பு விளக்கு வலப்பக்கம் மின்ன, திரும்பி மறைந்தது. அமுதா தோட்டக்கதவு மூடினாள். உள்ளே வந்து இரும்பு இருப்புக் கதவு சாத்தினாள். மரக் கதவுகளை அடைத்தாள். பூட்டினாள். திரும்பி கதவில் முதுகு பதிய சாய்ந்து கொண்டாள். உடம்பு கொதித்தது.

ஒரு ஆள் மெல்ல அந்த வீட்டைக் கடந்து போனான். கதவு இலக்கத்தை டார்ச் அடித்துப் பார்த்தான். மனதில் குறித்துக்கொண்டான். அணைத்துவிட்டு நகர்ந்தான். கார் போன திக்கில் நிதானமாய் நடந்தான்.

## 4

"நீச்சல் சேர வேண்டுமா. மூன்றாவது மாடி பின். பக்கம். எம். ஆர். வாசுதேவன். அவர்தான் கோச். அவர் அங்க இருப்பார்."

பின்பக்கம் போய்ப் படியேறினாள். சிறிய நீச்சல் குளம். இரண்டு உயரமான கட்டடங்களுக்கு நடுவே. கீழே கார்பார்க்கும் மேலே குளமுமாய் இருந்தது. குளத்தின் அடியில் சலவைக் கல் பளபளத்தது. கோடியில் சில குழந்தைகள் பிளாஸ்டிக் ட்யூப் மாட்டப்பட்டு கம்பி

பிடித்து கால்களை உதைத்துக் கொண்டிருந்தார்கள். இடுப்பில் டவல் அகல முதுகுடன் ஒரு இளைஞன் அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான். தன்னி ஷவர். அதற்கு வலது புறம் உள்ளடங்கிய அறை. நாற் காலி மேஜை மீது நடுத்தர வயது ஆள் உட்கார்ந்திருந் தார்கள்.

அமுதா குளம் சுற்றிப் போனாள்.

"இங்க ஸ்விம்மிங் சேரணும், எப்படி..."

"ஃபார்ம் இருக்கு. எழுதிக் கொடுங்க." ஒரு அச்ச டித்த காகிதம் நீட்டினார்.

"எவ்வளவு?"

"அறுநூறு ருபா வருஷத்துக்கு. ஷார்ட் டைம் கோச்சிங்னா முன்னூத்திப் பத்து ருபா. வாரம் மூணு கிளாஸ். வருஷமாய் ஜாய்ன் பண்ணுங்க."

"சரி, காசு எங்க கட்டணும்?"

"ரிஸப்ஷன்ல. நீங்க எழுதிக் கொடுங்க, ரிஸப்ஷ னுக்குக் கொடுத்தனுப்பிடலாம்."

பெயர், விலாசம், போன் நம்பர் எல்லாம் கேட்டி ருந்தார்கள். கொடுத்தாள்.

"யாரு உங்க ஸன்னா?"

"ஆமாம்."

"அப்பாவுக்கு என்ன உத்தியோகம்?"

"சென்ட்ரல் கவர்ன்மென்ட் சர்வண்ட்."

"எங்க?"

"உள்துறை இலாகா. டெல்லி." செல்வா தன் உத்யோகம் தேவையின்றி வெளியே சொல்லப்படக் கூடாது என்று எச்சரித்திருக்கிறான். கேட்டால் உள் துறை இலாகா என்று குறிப்பிடச் சொல்லியிருந்தான்.

"நீங்கதான் எம். ஆர். வாசுதேவனா?"



"இல்ல, இல்ல. என் பேத்தி நீச்சலடிக்கிறா. துணைக்கு வந்தேன். அவர்தான் கோச்." கை காட்டி னார். பெரிய முதுகு வெயிலில் பளபளக்க அந்த இளை ஞன் குழந்தைகளைக் கரையேற்றிக் கொண்டிருந்தான்.

மழையில் நனைந்த புறாக்களாய் குழந்தைகள் பற்கள் கிடுகிடுக்க கண்கள் சிவக்க தலைசிலுப்பி ஷவ ருக்கு ஓடின.

"யெஸ்" இளைஞன் நெருங்கி வந்தான்.

"மை நேம் இஸ் மிஸஸ் அமுதா செல்வராஜ். என் ஸன்னை இங்கு சேர்க்க வேண்டும்."

"வயது என்ன?"

"எழுதியிருக்கிறேன்."

வாங்கிப் படித்தான்.

"நல்லது, எப்போது சேருகிறீர்கள்?"

"இன்று சேரலாம். மாலையில் வகுப்பு உண்டா?"

"உண்டு. புதன், வெள்ளி, சனி நான்கு மணி முதல் ஐந்து வரை."

"ஞாயிறு இல்லையா?"

"இருக்கிறது. யார் வருவார்கள். டிவியை விட்டு."

"ஓ... எத்தனை நாளில் நீச்சலடிக்க முடியும்?"

"பையனின் தைரியம் பொறுத்த விஷயம். குறைந்த பட்சம் பத்து நாளில் எவர் துணையுமின்றி குதித்து நீந் தப் பழக்கி விடுவோம்."

"என் பிள்ளை கொஞ்சம் பயந்தவன்."

"எல்லா குழந்தைகளும், ஏன் பெரியவர்கள் கூட தண்ணீருக்குப் பயப்படுகிறார்கள். அந்தக் கவலை என்னுடையது. பையனை அழைத்து வாருங்கள்."

"ஆமாம் அதிகம் போலிருக்கிறதே."

அவன் சிரித்தான்.

''எப்போது உங்கள் பிள்ளை இந்த இடத்தில் கால் வைத்தானோ அவன் பாதுகாப்புக்கு நான் பொறுப்பு. மாலை வாருங்கள். மூன்று வயது பெண் குழந்தை மீன் மாதிரி நீச்சலடிப்பதைப் பார்ப்பீர்கள்.''

''மூணு வயசுப் பெண் குழந்தையா?''

''ஒரு வயசுக் குழந்தை நீச்சலடிக்க முடியும்.''

''கடவுளே''

''மனிதன் கடவுள் போல சக்தி வாய்ந்தவன். அவன் சக்தி அவனுக்குத் தெரிவதில்லை.''

பேச்சு கொஞ்சம் அதிகப் பிரசங்கித்தனமாய்ப் பட்டது.

எப்போது பணம் கட்ட வேண்டும். இப்போதா மாலையா?

இப்போது கட்டி விடலாமா? பர்ஸ் பிரித்தாள். குழந்தைகள் ஓடி வந்து அவன் எதிரே கால் சேர்த்து முதுகு வளைத்து பௌவ் செய்தன, ''குட்டே மாஸ்டர் குட்டே மாஸ்டர்.''

''குட்டே.'' அவனும் கால் சேர்த்துக் குனிந்து குழந்தைகள் முன் பௌவ் செய்தான்.

அமுதா லேசாய் வியந்தாள்.

அவன் வியப்பை வாங்கிக் கொண்டான். ''நீச்சல் மட்டுமல்ல. சகலமும் நாம எப்படிப் பழக்குகிறோமோ அவ்விதமே குழந்தைகள் வளரும். கரம் கூப்பி ஒரு குழந்தையை நமஸ்கரிக்க, பதிலுக்கு அது சகலரையும் நோக்கி கை கூப்பும். நாம் அலட்சியப் படுத்த அதுவும் அலட்சியப்படுத்தும். இப்படிபௌவ் செய்ய நான் உத்தரவிடுவதில்லை. இரண்டு நாள் தானே பௌவ் செய்தேன். இப்போது முந்திக் கொண்டு பௌவ் செய்கிறார்கள் சந்தோஷமாய்.''

''புரிகிறது.''

''முதலில் உங்கள் பிள்ளையைக் கரையில் அமர்த்தி நான் நீச்சல் செய்து காட்டுவேன். அவன் தானாய் நீரில் குதிப்பான். நீந்த ஆர்வம் காட்டுவான். ஏன் உங்களுக்கே நீந்த ஆர்வம் வரும்.''



அமுதா வெட்கப்பட்டாள். வெட்கத்தை மறைத்துக் கொண்டாள்.

காசு வாங்கி பார்ம் சேர்த்து உதவிப் பையனிடம் ரிஸப்ஷனுக்குக் கொடுத்தனுப்பினான். வந்ததும் ரசீதைக் கையில் கொடுத்து, கால் சேர்த்து குனிந்து அவள் எதிரே பௌவ் செய்து ''குட் குட்'' என்றான்.

அமுதாவுக்குப் பௌவ் செய்ய வெட்கம் வந்தது. கரம் குவித்து நன்றி சொன்னாள். பையனுக்கு லஸ் முனையில் இரண்டு ஸ்விம்மிங் நிக்கர் வாங்கினாள். மாலை நான்கு மணிக்கு பையனோடு நீச்சல் குளம் வந்தாள்.

பையன் நகம் கடித்துக் கடித்துத் துப்பினான்.

''ஏன் நெர்வஸா இருக்க திலீபா? தைரியமா இரு. அம்மா கூடவே இருப்பேன். ''சட்டையைக் கழற்றி ஸ்விம் ஸூட் மாட்டினாள். பிள்ளையை அழைத்து வாசுதேவனருகே போனாள்.

''இது என் பிள்ளை திலீபன்.''

'ஹலோ' அவன் கை நீட்டினான். பிள்ளை கை நீட்ட குலுக்கினான்.

''இவர்தான் மாஸ்டர் வாசுதேவன்.''

பிள்ளை கால் சேர்த்துக் குனிந்து வணங்கியது.

வாசுதேவனும் குனிந்து வணங்கினான். முன்னேறி அணைத்துக்கொண்டான். ''நீங்க போய் உட்காருங்க'' என்று அவளைப் பார்த்தான். பிள்ளையை அணைத்தபடி நீச்சல் குள மறுமுனைக்குக் போனான். இடுப்பு டவலைக் கழற்றி படிக் கம்பியில் போட்டான். 'திலீபா, உட்கார்' கரையில் உட்கார வைத்தான்.

'சௌக்' என்று நீரில் நீல ஸ்விம் ஸூட்டுடன் பாய்ந்தான்.

நீச்சலா அது? மீன்வேகம் சுறா வேகம். நாலு எட்டில் எதிர்க் கரைக்குப் படகு மாதிரிப் போனான். பின்னால் திரும்பி மல்லாக்க நீச்சலடித்தர்ன். நீரைக் குடைந்து வித்தை காட்டினான். எட்டடி ஆழத்தில் நேராய் நின்றான். மரக்கட்டையாய் மிதந்தான். பாயில் உருள்வது போல ஜலத்தில் உருண்டான். திடுமென்று மூழ்கி காணாமல் போனான். அமுதா வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ப்ளேர் என்று திலீபன் கால் அருகே எழுந்து வந்தான்.

வா என்று கை காட்டினான்.

திலீபன் பின்னுக்கு நகர உற்சாக மூட்டினான், என் தோள்ல உட்கார் என்று பிள்ளையைத் தோளில் சுமந்தபடி கரையோரமாய் வலம் வந்தான். பிள்ளை குரங்காய் பயத்துடன் அவன் தலைமுடியைப் பற்றிக் கொண்டிருந்தது. இடுப்பு வரைக்கும்தான் நனைந்து போயிருந்தது. கரையில் ஏற்றி உட்கார வைத்து விட்டு மற்ற குழந்தைகளுக்குப் பயிற்சி கொடுத்தான்.

''திலீபா ஜம்ப்.''

''வேணாம் மாஸ்டர்.''

''ட்யூப் மாட்டி விடறேன். உள்ள போகமாட்டே அப்படியே மிதப்பே.''

''வேணாம் மாஸ்டர்.''

''பயப்படாத திலீபா'' டியூப் மாட்டி விட்டான்.

திலீபன் ட்யூபிலிருந்து விடுபடத் துடித்தான்.

''ச்சு, நான் இருக்கேன். ஏன் பயப்படறே.''

''அம்மா அம்மா...'' பிள்ளை பயத்தில் கதறியது. எல்லா குழந்தைகளும் வேடிக்கை பார்க்க அழுதது.

''ச்சு என்ன இது திலீபா.'' அவள் எழுந்து அருகே வந்தாள்.



''நீங்க போங்க மேடம். அவனை என்கிட்ட விடுங்க.

''திலீப், பொட்ட புள்ளை நீந்துது. நீ என்னய்யா பயப்படறே? என் கை பிடிச்சுக்க.''

''வேணாம் மாஸ்டர், ப்ளீஸ்.''

பிள்ளையை வாரி மூன்றடி உயரத்தில் வீச திலீபன் ட்யூபோடு நீரில் அலறலுடன் விழுந்தான். மிதந்தான்.

அமுதா திடுக்கிட்டு எழுந்தாள். நகம் கடித்தாள். பிள்ளை தத்தளித்தது. டியூப் உடம்பைத் தாங்க கை கால் உதைத்தது. ''அப்படியே கால் உதைச்சுக்கிட்டு என் கிட்ட வா.'' வாசுதேவன் கை நீட்ட எட்டி அதைப் பற்றும் முயற்சியில் உடம்பு அசைந்து கரைக்கு முன்னேறியது. மாஸ்டரின் கை பற்றியது.

''அவ்வளவுதான். நீச்சலடிக்கிறியே. ஏன் பயப்படறே... இப்ப எதிர் பக்கம் போ.''

''கண் எரியுது மாஸ்டர்.''

''முதல்ல கொஞ்சம் எரியும். அப்புறம் சரியாயிடும் போ.''

பிள்ளை முகத்து நீரை வழித்தது. கம்பிகளை இறுகப் பற்றியபடி இருந்தது.

''போ திலீபா.''

''வேணாம் மாஸ்டர்.''

கை தூக்கி பிள்ளையைக் கரையேற்றி மறுபடி வாரி நீருள் போட்டான். பிள்ளை மறுபடி அலறலுடன் போய் விழுந்தது. கைகால் உதைத்தது. நீட்டிய மாஸ்டர் கை நோக்கி உடம்பு அசைத்து நகர்ந்தது.

''இப்ப பயம் பொயிடுச்சா?''

''அப்படியே, கம்பி பிடிச்சுக்கிட்டே சுத்தி வா.''

பிள்ளை மெல்ல கை மாற்றி மாற்றி கம்பி பற்றி குளம் வலம் வந்தது. முக்கால் மணிநேரம் நீரில் கிடந்த பிறகு கை நீட்ட கரையேற்றிற்று. ''போ. போய் ஷவர்ல குளி.''

நனைந்த கோழியாய் ஷவர் நோக்கி ஓடிற்று. உடம்பு கழுவி அம்மாவிடம் வந்தது. அமுதா பை விரித்து டர்க்கி டவல் எடுத்தாள். தலை துவட்டினாள்.

''எப்படி இருக்கு திலீப்?''

''நல்லா இருக்கும்மா.''

'குட், நல்லா நீச்சலடிக்கிற திலீபா.''

''நெஜம்மாவா?''

''கால் உதைச்சி கரைக்கு வந்துட்டியே''

உடுத்திக்கொண்டு வாசுதேவன் அருகே வந்தான்.

''ஸாரி, கொஞ்சம் முரட்டுத்தனம் காட்டினேன். இல்லேன்னா இவன் தண்ணிக்கு லேசுல போக மாட்டான். திலீப் எப்படி?''

''நல்லா இருக்கு மாஸ்டர்.''

நாளைக்கு வரியா?''

''வருவேன் மாஸ்டர்.''

''குட்நைட் திலீப்.''

குனிந்து வணக்கம் சொல்ல, பிள்ளை குனிந்து குட் நைட் மாஸ்டர் என்று பௌவ் செய்தான்.

''வரேங்க.'' அமுதா கை கூப்பினாள்.

''வாங்க. நாளைக்கு சாடர்டேதானே, பள்ளிக் கூடம் இல்லையே. மூன்று மணிக்குக் கூட வரலாம். வாங்க.'' திரும்பி நடந்து போனான்.

அமுதா பையனை அணைத்தபடி படியிறங்கினாள்.

இப்படி இதமாய் சொல்லித் தர என் இளம் வயதில் ஆட்கள் இல்லை. காலம் மாறி வருகிறது.

குழந்தைகள் நிறைய முறையில் கற்றுக் கொள்ளுகிறார்கள். திலீப்புக்கு நீச்சல், கராத்தே, யோகா எல்லாம் சொல்லித் தரவேண்டும். அவன் அப்பாவைவிடப் தெரிய ஆளாய் அவன் வரவேண்டும்.



மொபெட்டில் பிள்ளை உட்கார்ந்து இடுப்பைப் பிடித்துக் கொண்டான். அமுதா ஒரு நிமிஷம் யோசித்தாள். சரி. பிடித்துக் கொள்ளட்டும் என்று வண்டியை விரைவாக்கினாள்.

இரவு எட்டு மணிக்கு போன் வந்தது. செல்வராஜ் போன் செய்தான். நாலு நாள் ஆகுமாம். எஸ்கார்ட் வேலைதான். பெரிய புள்ளிகளைப் பெங்களூர் விட்டு நகர்த்த முடியவில்லையாம். லோக்கல் தொந்தரவாம்.

''பையனை ஸ்விம்மிங்ல சேர்க்கறது பத்தி யோசனை பண்ணினியா?''

''சேர்ந்துட்டான்.''

''என்னிக்கு?''

''இன்னிக்கு.''

''வெரி குட்.'' செல்வா சந்தோஷப்பட்டான். அமுதாவுக்கும் சந்தோஷமாய் இருந்தது. புருஷன் பிரிவு பெரிதாய் தெரியவில்லை.

நாளை ஸ்விம்மிங் போக வேண்டும் என்கிற நினைப்பே அதிகம் இருந்தது.

## 5

''நாலாவது நாளே ஸ்விம் பண்றான் பார்த்தீங்களா?''

''ட்யூப் போட்டுத்தானே செய்யறான்?''

''நாளைக்கு எடுத்துடுவேன்.''

''பயப்படுவான்னு தோணுது. வீக்கா இருக்கான்.''

''பலத்துக்கும் பயத்துக்கும் சம்பந்தமேயில்லீங்க, முட்டை, மீன், சிக்கன் சூப் தினம் கொடுங்க. பயத்தை நான் மொள்ள மொள்ள எடுத்துருவேன். இவங்க

அப்பாவை வரச் சொல்லுங்க, ஒரு நாள் ஸ்விம்மிங் பூலுக்கு. அவர் பார்க்கட்டும்.''

''அவர் டெல்லில இருக்கார்.''

''திலீப். தலையத் தூக்கி ஸ்விம் பண்ணு மேன்.'' உட்கார்ந்த இடத்திலிருந்து இரைந்தான். ஷவருக்கு நேர் எதிரே உள்ள பளிங்குக்கல் மேடையில் வாசுதேவனும் அமுதாவும் உட்கார்ந்திருந்தார்கள். வாசுதேவன் முழு உடுப்பில் இருந்தான். உதவியாளர்கள் இரண்டு பேர் நீரில் இருந்தபடி குழந்தைகளை உற்சாகப்படுத்தினார்கள். பெண்கள் இருவருக்கு பேக் ஸ்ட்ரோக் சொல்லிக் கொடுத்தார்கள். அதில் ஒரு பெண் போட்டிக்குத் தயாராகிறாளாம். பேய் நீச்சல் போட்டுக் கொண்டிருந்தாள்.

''மிஸ் கனகம்மா, புஷ் சரியா இல்லை. ஒவ்வொரு தடவை ஒவ்வொரு டைரக்ஷன்ல திரும்பறீங்க.''

''டேய் தம்பி, அந்தப் பையனைப் பாரு. தவிக்கிறான். மேலேத்தி வுடு.''

''என் இன்னிக்கு நீங்க இறங்கலை?''

''வொய். எம். ஸி. ஏ. போறேன் மேடம். அங்க இன்டர் ஸ்டேட் ஆளுங்க நாலுபேருக்கு கோச்சிங் தரேன்.''

''நீங்க காம்படீஷன்ல''

''நாலு தடவை இன்டர் ஸ்டேட்ல ஃபர்ஸ்ட் ப்ரைஸ் வாங்கிட்டேன். ஏஷியன் கேம்ஸ் போனேன். நம்ம பாச்சா அங்க எடுபடலை.''

''இரண்டாவதா வந்தீங்களா?''

''இல்லை.''

''வெண்கலமா?''

''இல்லை''

''பிறகு?''



''நான் தான் லாஸ்ட்.''

''ஏன்?''

''எனக்கு சரியா கோச் அமையலை. சைனீஸ் லெவலுக்கு எனக்கு ஸ்பீட் இல்லை. ஹாட் வாட்டர் நீச்சல் குளம் பயம்.'

''யாரும் திட்டலை?''

''திட்டா? செருப்பால அடிக்காத குறை.''

''அப்புறம்''

''அழுதேன். வந்து ஷவர்ல குளிச்சுக்கிட்டே விக்கி விக்கி பொம்பளை மாதிரி அழுதேன். சரி, நமக்கு முடியலை. நாம நாலு பேருக்கு உற்சாகம் கொடுப்போம்னு...''

''இந்த கோச்சிங்ல வர காசுதானா?''

'காசு இருக்கு மேடம். வீடு இருக்கு. வாடகை வருது. பெட்ரோல் பங்க் இருக்கு. லட்சியம் அடைய முடியலையேன்னு வேதனையும் இருக்கு.'

ட்ரை பண்ணலாமே?''

''வயசாயிடுச்சு.பதிமூணு வயசுலேர்ந்து பதினெட்டு வயசுதான் இதுக்கு சரி. அப்புறம் உடம்பு அகலாமாயிடும். அந்த லெவலுக்கு நீச்சலடிக்க முடியாது. உங்க பையன் மாதிரி நாலுபேர் கிடைச்சா—எனக்கே எனக்குன்னு கிடைச்சா—வருஷக்கணக்குல ட்ரையினிங் பண்ணி ஒலிம்பிக் வரைக்கும்...சரி, அது கிடைக்கறதும் கஷ்டம். பசங்க படிப்பு முக்கியம். நான் வரட்டுங்களா? வெங்கடேஷ், பசங்களைப் பார்த்துக்க. அஞ்சுமணிக்கு மேலே எடுத்துரு. குட் நைட். பாய்ஸ் குட்நைட் எவ்ரிபடி'' குனிந்து குளத்தில் இருக்கிறவர்களுக்கு வணங்கினான்.

சகலரும் திரும்பி கையசைக்க, திலீப் மட்டும் தவறு செய்தான். எட்டடி சுழற்றி ட்யூபோடு நேரே நின்று நீரில் பௌவ் செய்தான். பௌாக் என்று தலைஉள்ளே

போய் கால் மேலே வந்தது சிரித்தார்கள். மேலே ட்யூப் கொண்டுவரும் என்று நம்பினார்கள்.

வாசுதேவன் நகர்ந்தான். ஹெல்மேட் போட்டுக் கொண்டான். தடாப் என்று ட்யூப் மேலே வந்தது. திலீப் தலை வெளியே வந்து திணறி தவித்து ட்யூபுக்கு கைநீட்ட, வெள்ள வேகத்தில் நீரடித்து ட்யூப் நகர்ந்து போனது. திலீப் உள்ளே போனான்.

'திலீப்' சின்ன கூச்சலோடு அமுதா எழுந்தாள்.

வாசுதேவன் திரும்பினான்.

பையன் தலை வெளியே வந்து திணறி உள்ளே போயிற்று. வெங்கடேஷ் என்கிற உதவியாளன் எகிறி கரையேறி திலீப் என்று கூவினான்.

வாசுதேவனுக்குப் புரிந்துவிட்டது.

ஹெல்மேட் சுழட்டி தரையில் உதறி முழு உடுப்போடு நீரில் பாய்ந்தான். ஒரே எட்டில் பிள்ளையை அடைந்தான். கொத்தாய் மேலே தூக்கினான். ஒரு உதையில் கரை திரும்பினான்.

''திலீப் திலீப்!'' அமுதா பதறினாள். கரையில் நின்று பையனை வாங்கினாள்.

''ஒண்ணுமில்லை, ஒண்ணுமில்லை. விடுங்க.''

பிள்ளை துவண்டு தரையில் சரிந்தது. கன்னத்தில் அடிக்க தலை சிலும்பியது. புரட்டி முதுகு அழுத்த குபுக் என்று நீரை வாந்தியெடுத்தது. சகலரும் கரையேறினர் சூழ்ந்து கொண்டார்கள்.

'திலீப் திலீப்?' புரட்டி நிமிர்த்தி கன்னம் தட்ட மறுபடி நீர் வெளியே வந்தது. எழுந்து இடுப்பைப் பிடித்து கரகரவென்று கழற்ற, மேலும் கொப்பளித்தது.

''திலீப் நில்லு, நில்லு.''

பிள்ளை தள்ளாடி நின்றது. மாஸ்டரை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டது. ஓவென்று பயந்தில் அழுதது



''குட். ஒண்ணுமில்ல, ஒண்ணுமில்ல, போங்க.''

''உட்கார வையுங்க. படுக்க வேணாம் சாச்சாப்பல உட்கார வையுங்க. டவல் எடு. உடம்புல போர்த்து.''

''தண்ணில பௌல் பண்ணிட்டான் சார். ட்யூப் ஸ்லிப் ஆயிடுச்சு.'' ஹெல்பர் பேச வாசுதேவன் அவனைக் கூட்டத்தை விட்டு நெட்டித் தள்ளிக்கொண்டு போனான். பளீரென்று அறைந்தான். ''ஒருத்தன் கரைல இன்னொருத்தன் தண்ணில இருங்கன்னு பல தடவை சொல்லியிருக்கேனில்ல. உனக்கு இன்னிக்கு கரை ட்யூட்டிதானே. ஏன் இறங்கின?''

''சார்.''

''பின்னிடுவேன் உன்னை போ வெளியே.''

அமுதா பையனை நெஞ்சு நீவி விட்டாள். மார்பில் கை வைத்துப் பார்த்தாள். வாசுதேவன் ஹோட்டல் சிப்பந்தி கூப்பிட்டு காபிக்கு ஆர்டர் செய்தான். சட்டையை மெல்ல கழட்டினான். பேண்ட் பாக்கெட்டிலிருந்து பர்ஸ், காகிதங்கள் எடுத்துப் போட்டான். சகலமும் நனைந்திருந்தது. ஷுக்களைக் களைந்தான். டவல் கட்டிக்கொண்டு பேண்ட் உருவிப் போட்டான்.

''ஐயம் ஸாரி மேடம்.''

''அதனால் என்ன...என் பையன் தப்புப் பண்ணிட்டான். தினம் மாஸ்டரை பௌல் பண்ணிட்டு வரணும்ங்கறத தண்ணில செஞ்சுட்டான்.''

''தப்பு என்னுது மேடம். நான் பேண்ட் ஷர்ட் போட்டுக் கிளம்பினது தப்பு. இவங்களை நம்பினது தப்பு. உங்கக்கிட்ட பேசினது தப்பு.''

''பேசினதா?''

''உங்க பையன் மாதிரி நாலு பையன் வேணும்னு கேட்டது தப்பு. நான் பேட் லக்கோட பிறந்தவன். நான் இதுக்கெல்லாம் ஆசைப்படறது தப்பு.''

“ச்சே. என்னங்க இது?”

“நிஜம் மேடம். நிஜம் அது. எனக்குத்தான் தெரியும். திலீப், ஆர் யூ ஆல்ரைட்?”

“யெஸ் மாஸ்டர்.”

காபி குடித்து பிள்ளை உடுத்தி ஷூக்கள் அணிந்து மாஸ்டர் எதிரே போய் குட்நைட் மாஸ்டர் என்று பௌவ் செய்தது.

வாசுதேவன் விரல்களால் கண்களைப் பொத்திக் கொண்டான். கண் திறக்க, கண்கள் நீர்கோர்த்துப் பளபளத்தது.

“குட்நைட் மை ஸன், குட்நைட்.”

குனிந்து வணங்கினான் பிள்ளையை. அருகே போய்த் தழுவிக்கொண்டான். “கடவுளே உனக்கு வந்தனம்.” சுத்தமான ஆங்கிலத்தில் சத்தமான குரலில் ப்ரேயர் சொன்னான்.

“நாளைக்கு வருவியா திலீப்?”

“வருவேன் மாஸ்டர்.”

“நீ வரணும். மாஸ்டருக்காக வரணும். குட் நைட்.” மறுபடி குனிந்து வணங்கினான்.

பிள்ளை படியிறங்குகிற வரை கூடவே வந்தான். படி விளிம்பில் கைகூப்பி மறுபடி அமுதாவிடம் மன்னிப்புக் கேட்டான்.

மறுநாள் மழை. ஸ்விம்மிங்கில் யாருமே இல்லை. அடுத்த நாள் வெய்யில். புழுக்கமான வெய்யில். ஹெல்மெட்டுக்குள் தலை முடி கசகசத்தது. நீச்சல். குளத்தில் குழந்தைகள் பெரும் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். திலீப் அவசரமாகச் சட்டை கழற்றி, ஷவரில் நின்று, ட்யூப் இடுப்பில் போட்டு தொளேர் என்று நீரில் குதித்தான். கால் உதைத்து கை விசி நீந்தினான்.

அமுதா கூலிங்கிளாஸ் மாட்டிக்கொண்டு சகலரையும் கவனித்தாள். வாசுதேவனைத் தேடினாள். வாசுதேவன்



நீரில் இருந்தான். ஒவ்வொரு குழந்தையாக எதிர்க்கரைக்கு அனுப்பினான். எதிர்க்கரைக்கு வெங்கடேஷ். நடுவில் இன்னொரு பையன். திலீபின் கவிழ்தலாக ஜாக்கிரதை அதிகமாய் இருப்பது தெரிந்தது.

வாசுதேவன் பேச வரவில்லை, எல்லாக் குழந்தைகளும் கரை ஏற கடைசியில் அவன் கரை ஏறினான். ஷவரில் குளித்தான். ஈரம் துவட்டாமல் துண்டு சுற்றிக் குழந்தைகளுக்கு வணக்கம் சொன்னான். குழந்தைகள் வணங்கின.

“நாளைக்கு ட்யூப் எடுத்து நீந்த அனுப்புவேன் மேடம். பயம் தெளிஞ்சிருச்சு திலீப்புக்கு.”

திலீபைவிட நீங்க பயந்து போயிருக்கீங்கன்னு நினைக்கிறேன். நீச்சல் குளத்தை விட்டு வெளியே வரவேயில்லையே.”

“திலீப் அப்பா வந்து என்ன சொல்லப் போறாங்கற பயம் இன்னும் இருக்கு.”

“பயப்படாதீங்க. சொல்ல மாட்டேன்.”

“திலீப் சொல்லிடுவான்.”

“அவன் கிட்டயும் சொல்லிட்டேன். அப்பாகிட்ட இதுபத்திப் பேசாதேன்னு, பேசமாட்டான்.”

“தேங்க்யூ. நாளைக்கு வாங்க-” கரம் கூப்பினான்.

“அப்புறம் ஒரு விஷயம்.”

என்ன?”

“கூலிங் கிளாஸ் புதுசா?”

“இல்லை. ஏன்? வெய்யில்னு போட்டுக்கிட்டேன்.”

“கூலிங் கிளாஸோட எங்களைப் பார்த்தா கோபமா இருக்கறாப்போல இருந்துச்சு. அதுவும் ஒரு ரீஸன், நான் ஜலத்தை விட்டு வராததுக்கு.”

“அமுதா சிரித்தாள். “அப்படியா, அப்ப போடலை.” கழட்டினாள். கரம் குவித்தாள். படியிறங்கினாள்.

மறுநாள், அதற்கு மறுநாள், திலீப் ட்யூப் இன்றி நீந்தினான். எட்டடி ஆழம். தரை தொட்டுவிட்டு வெளியே வந்தான். சுவரில் கால் உதைத்து குட்டித் திமிங்கலம்போல் நீர் கிழித்தான். அமுதாவுக்கு ஆச்சர்யமாய் இருந்தது. சந்தோஷமாய் இருந்தது. செல்வாவிடம் சொல்ல வேண்டும். திலீப் நீந்துவது காட்ட வேண்டும்.

செல்வா அன்று மாலை பெங்களூரிலிருந்து கைது செய்யப்பட்டவர்களுடன் காரில் வந்தான். ஆட்களைச் சென்னை சி.பி.ஐ.யிடம் ஒப்படைத்தான். களைப்புடன் வந்தான். வீடு குதூகலத்துடன் அவனை வரவேற்றது.

இன்னிக்கு ஒரு நாள் விட்டுருங்கப்பா இரண்டு பேரும். நாளைக்கு நிறையப் பேசறேன்.'' உணவு முடித்து கட்டிலில் சாய்ந்து அயர்ந்து தூங்கினான்.

அம்மாவும் பிள்ளையும் உற்சாகமிழந்தார்கள்.

விடிகாலை போன் ஒலித்தது.

'செல்வராஜ் ஹியர். சொல்லு மகேந்திரன். என்ன விஷயம்? கேஸ் மெட்ராஸ்லதானா? எனக்கு போஸ்டிங் எங்க? மெட்ராஸா? தேங்க்யூ மகேந்திரன். யார் உத்தரவு இது-நாயரா?''

''நான் ஒன்னும் கேட்கவேயில்லை. ரொம்ப இழுத்தடிக்கிறமேன்னு அவரா பார்த்துஇங்க போட்டுருப்பாரு எப்ப கேஸ் முடியும்? ரெண்டு மாசமாவது ஆகுமில்ல. மாத்திடாதீங்கப்பா. தேங்க்யூ. அப்புறம் இன்னிக்கு விட்டுரு. நாளைலேர்ந்து ஆபீஸ் வரேன், ரிஸீவரை வைத்துவிட்டு மணி பார்த்தான். நாலு நாற்பது. நகர்ந்து அருகே தூங்கும் மனைவியை அணைத்துக் கொண்டான். அவள் உடம்பு கதகதப்பு அவனைத் தூக்கிற்று. கன்னத்தில் முத்தமிட்டு இறுக்கிக் கொண்டான். அரைத் தூக்கத்தில் அமுதா புரண்டாள். இவனுக்காகத் திரும்பி இறுக்கிக் கொண்டாள். அனிச்சையாய் அவனுக்கு இடம் கொடுத்தாள்.''



பிள்ளை அன்று பள்ளிக்கு மட்டம் போட்டான். அப்பாவும் பிள்ளையும் வேக வைத்த உருளைக்கிழங்கு உரித்தார்கள். மேல் தொட்டி கழுவினார்கள். கழுவின ட்யூப் வழியே தோட்டத்துக்குப் பாய்ச்சினார்கள். ஒரே பாத்ரூமில் பாடிக்கொண்டே குளித்தார்கள். பரஸ்பரம் முதுகு தேய்த்துக் கொண்டார்கள். சுடச்சுட பகல் உணவு சாப்பிட்டார்கள். வீடியோவில் கார்ட்டூன் பார்த்தார்கள். கதவு அடைத்துத் திரைச்சீலைகளைச் சுத்தமாய் மூடிவிட்டு முழு வேகத்தில் பேன் சுழலத் தூங்கினார்கள்.

''எங்க...மணி மூணு முப்பது. பையனை ஸ்விம்மிங் கூட்டிக்கிட்டுப் போகணும்.''

''இன்னிக்கு வேணாம் அமுதா.'' அவன் புரண்டு படுத்தான்.

''க்ளாஸ் போகணுமே. நீங்களும் வாங்களேன்.''

''போகட்டும்...படு. எனக்குத் தூங்கணும்.'' இழுத்து படுக்கையில் போட்டான். அவள் நெஞ்சில் கை போட்டபடி தூங்கினான். அமுதா தலை தூக்கி பிள்ளையைப் பார்த்தாள். அதுவும் அயர்ந்து தூங்கியபடி இருந்தது. அவளுக்கும் கண் சொருகியது.

சட்டென்று விழிக்க, கடிகாரம் நாலு பத்து காட்டியது. க்ளாஸ் துவங்கியிருக்கும். வாசு நீரில் குழந்தைகளை விரட்டியபடி இருப்பான். தேடுவான்... திலீப் ஏன் வரவில்லை என்று யாரையேனும் கேட்பானா?

மெல்ல அவன் கைகளை விலக்கிச் சமையலறைக்குப் போனாள். காபி போட்டுக் குடித்தாள். எச்சல் பாத்திரங்களைக் கழுவினாள். போன் மணி அடித்தது.

அவன் புரண்டான். ''அமுதா! யாருன்னு பாரு'' திருப்ப சுருண்டு கொண்டான்.

அமுதா போன் எடுத்து ஹலோ என்றாள்.

''நான் வாசு பேசறேன், திலீப் வரலிங்களா?''

''இல்லீங்க அவங்க அப்பா வந்திருக்காங்க. அது தான் வரலை.''

''ஓ...உடம்பு மறுபடி சரியில்லையோன்னு நினைச் சேன்.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க.''

''சரிங்க. வச்சுடறேன்.''போன் துண்டிக்கப்பட்டது.

''கஷ்ட காலம். எதுக்கு இப்ப போன்?செல்வா கேட் டால் என்ன சொல்வது?''

''யாருப்பா போன்ல?''

திலீப் பள்ளிக்கூடத்து சிநேகிதன். அவங்க அம்மா பேசினாங்க. அவங்க பையனுக்குப் பொறந்த நாள் திலீபைக் காணோமே இன்னிக்கு கேட்டாங்க.''

ச்சே? ஏன் பொய் சொல்கிறோம். அதுவும் புருச னிடம். இந்த கோச் பைத்தியம் எதுக்கு அனாவசிய மாய் போன் பண்ணுகிறது? பேச இடம் கொடுத்துவிட் டோமோ? பிசகோ? இஷ்டமிருந்தா வரோம். இல் லேன்னா இல்லை. எதுக்கு போன்? நாளைக்கும் போக வேண்டாம். போனால் பல் இளிக்கும்.

மாலையில் கார் வரவழைத்து ஊர் சுற்றினார்கள். ''ஏர்போர்ட் போலாம்பா. ப்ளேன் பார்க்க ஆசையா இருக்கு.''

''ப்ளேன்தானே? எத்தினி ப்னேன் பார்க்கணும் உனக்கு?'' கார் ஏர்போர்ட் விரைந்தது. வாசலில் மடக்கி டிக்கெட் கேட்க, செல்வா தன் கார்டு எடுத்துக் காட்டினான். கதவு வாய் திறந்தது. பெரிய செக்யூரிடி அதிகாரியிடம் பேசினான்.

ப்ளேன் பார்க்கணுமா தோழரே'' போ கையில் திலீப் முதுகு தடவி உள்ளே அனுப்பினார்கள். அமுதா ப்ளேன் பார்க்க வரவில்லை என்றாள். லவுஞ்சில் உட்



கார்ந்து கொண்டாள். அப்பனும் பிள்ளையும் ப்ளேன் நோக்கிப் போனார்கள். பம்பாயிலிருந்து சென்னைக்கு அப்போதுதான் வந்த விமானத்தில் ஏறினார்கள். காக் பிட் கதவு திறந்து செல்வா பிள்ளைக்குக் காட்டினான்.

உள்ளே சோதனை செய்துகொண்டிருந்த எஞ்ஜினி யரை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் விமானம் பற்றி விவரிக்க இவன் வாய் பிளக்க, செல்வா பைய னைக் காதலோடு பார்த்தான். அமுதா லவுஞ்சில் நகம் கடித்துத் துப்பினாள். 'போர்' என்று கண்களை மூடிக் கொண்டாள்.

''ரொம்ப தேங்ஸ்ப்பா'' பிள்ளை காரோட்டும் தகப் பனைக் கட்டிக்கொண்டு முத்தம் கொடுத்தது. வழி யெல்லாம் சளசளத்துக் கொண்டு வந்தது. வீட்டுக்கு வந்ததும் பொம்மை ப்ளேன் கையில் எடுத்து நெட்டுக் குத்தாய் லேண்டிங் செய்தது.

''தப்பு,திலீப். பாஸஞ்சர் ப்ளேன் நெட்டுக் குத்தலா இறங்காது. இப்படி இறங்கும்.'' தகப்பன் ப்ளேனைப் பறிக்க முயல, பிள்ளை தடுத்தான்.''இப்ப இறங்கறேன் பார்.'' மெல்ல சரியாது கீழே இறக்கினான். தரைக்குச் சமமாய் ப்ளேனைப் பறக்கவிட்டுத் தரை தொட்டான்.

'வெரிகுட். ஃப்ரெண்ட் வீல் முதல்ல தொடாது. நடுவுல இருக்கிற வீல் தொடும். அப்புறம்தான் நோஸ் லேண்ட் ஆவும்.' பிற்பகல் இட்ட சப்பாத்தியும் ஹோட் டலில் வாங்கின கோழிவறுவலும் சுருட்டிசாப்பிட்டனர். சக் நாரீஸ் படம் பார்த்தார்கள். படம் ஆண்கள் உலக மாய் இருந்தது.அமுதா வாக்மேனை காதில் பொருத்திக் கொண்டாள்.

''நேற்று நீர் விட்டது
இன்று வேர் விட்டது
நெஞ்சில் அம்மாடியோ
நூறு பூ பூத்தது

சின்னஞ் சிறு பருவம்
இன்னும் கொதிப்பதோ
சொல்லி சொல்லிப் பொழுதை
இன்னும் கழிப்பதோ?''

கண்கள் மூடி, முகம் தெரியாத யாரையோ காதலிக்கிற கன்னிப் பெண்ணாய்த் தன்னை நினைத்துக்கொண்டாள். திருமணமாகாத கன்னிப் பெண்ணாய் இருப்பதில் ஒரு சுகம் இருக்கிறது. யாரை வேண்டுமானாலும் நெஞ்சுக்குப் பிடித்த காதலனாய்நிறுத்திக்கொள்ளலாம். கனவு காணலாம். திருமணமாகி சினிமா பாட்டு கேட்டு கனவில் மூழ்குவதில் கொஞ்சம் நெருடல் இருக்கிறது. புருஷனைக் காதலனாய் நினைத்துக் கொள்ளலாம். ஆனால், எல்லா நேரமும் புருஷன் காதலன் இல்லை, சில சமயம். எப்பவாவது சில சமயம் புருஷன் மீது கிக் வரும். அப்போது புருஷனுக்கும் கிக் வர வேண்டும்.

'ஏண்டி பிராணனை' வாங்கற' என்று கேட்டுவிட்டால் மறுபடி கிக் தலைதூக்க ஆறு மாசமாகும். குடும்பம் போர், வேதனை, சுமை, கனவுகளே அற்ற நிலை. கனவுகள் நிஜமில்லையெனிலும் பரம சுகம். அமுதா படுக்கைக்குப் போனாள்.

''நீயும் அச்சம் விடு
நூறு முத்தம் கொடு
மீதி மிச்சம் எடு
மேலும் சொல்லிக் கொடு.''

சம்பந்தமில்லாமல் வாசுதேவன் முகம் சிரித்துக் கொண்டு முன்னே வந்தது. ''ச்சு போ அன்னாண்ட!', அமுதா விரட்டினாள்.

''படுக்க சொல்ல இதெல்லாம் எதுக்கு கழுத்துல மாட்டிண்டு.''

''ம்ம்...'' அமுதா திடுக்கிட்டாள்.



''பையன் தூங்கிட்டான்.பெட்ல போட்டுப் போர்த்திட்டேன். இது வேணுமா'' நைட்டியை மெல்லப் பிரித்தான். அவன் கையை விலக்கிவிட்டு அவளே தளர்த்தினாள். இடம் கொடுத்தாள். நேற்று இருந்த கிக் கூட இன்று இல்லை. இவன் விடப் போவதுமில்லை. சரி தின்னு என்பதாய் இருந்தாள். வாக்மென் போட்டுக் கட்டுமா என்று கேட்டாள்!

''ஏன்...''

''கேட்டுக்கிட்டே...''

''சரி.'' அவன் நெஞ்சு முழுக்கப் பரவி இறுக்கிக் கொண்டான். இடது கையால் இருட்டில் வாக்மென் தேடி காதில் போட்டுக் கொண்டாள். பட்டன் தட்டிவிட்டாள்.

''ஆலிலை சிவப்பாக
அங்கமும் நெருப்பாக
நூலிடை கொதித்தேறும்
நிலை யென்னவோ.''

யப்பா... கண்கள் மூடிக் கொண்டாள். என்ன பாட்டு இது? எப்படி இது சினிமாவில் வருகிறது? அர்த்தம் புரியாதா... யாரும் கேட்கமாட்டார்களா?

''மேலும் மேலும் மோகம் கூடும்
தேகம் யாவும் கீதம் பாடும்.''

''அதை எடுத்துரும்மா.'' செல்வா பிடுங்கிப் போட்டான். இன்னும் இறுக்கிக் கொண்டான். சட்டென்று இசை துண்டிக்கப்பட்டது. அமுதா அதிர்ச்சி அடைந்தாள். அந்தக் கணத்தை மிகவும் வெறுத்தாள். வெறுப்பைச்சொல்ல முடியவில்லை. உள்ளே புதைக்க வேண்டியிருந்தது. வெறுப்பு விதையாய் புதைக்க அலட்சியம் முளைவிடும். பழிவாங்கும் குணம் தண்டாய் வளரும். பொறாமை இலையாகும். கோபப் பூக்கள் மலரும்; மலர்ந்தது.

# 6

காலை ஏழு மணிக்கு உடுத்திக்கொண்டு புறப்பட்டு விட்டான். பிள்ளையைப் பள்ளி வாசலில் விட்ட போது கேட்டாள், ''இன்னிக்கு ஸ்விம்மிங் போறமாடா''

''வேண்டாம்மா.''

''ஏன்?''

''அப்பா எங்கயாவது வெளிய கூட்டிட்டுப் போறேன்னாங்க.''

''அப்ப போக வேண்டாம். அப்பா வரலைன்னா போலாமா?''

''சரி.'' உள்ளே துள்ளி ஓடி மறைந்தான்.

வீட்டிற்குள் நுழைந்து பரபரவென்று பகல் சமையயில் ஈடுபட்டாள். சமையலறை ஒழித்தாள். செல்வாவின் ஆபீஸுக்கு போன் செய்து பகல் சாப்பாட்டுக்கு வருவீர்களா எனக் கேட்டாள் ''இல்லப்பா இன்னிக்கு வீடு திரும்ப எட்டாயிடும். வயிறு வேற சரியில்லை. மிளகு ரசம் வச்சுடு.''

''ஏன்... என்னாச்சு?''

''வந்து சொல்றேன், இப்ப வுட்டுடேன். வேலை நிறைய இருக்கு.'' சட்டென்று துண்டித்தான். பிற்பகல் அயர்ந்து தூங்கினாள். விழித்து முகம் கழுவினாள். உடுத்திக் கொண்டாள். கூலிங்கிளாஸ் மாட்டினாள். தலையை வெறுமே ரப்பர் பேண்ட் கட்டி ஹெல்மேட் அணிந்து வெளியே வந்தாள். கதவு பூட்டினாள்.

மொபெட் உதைத்து இயங்கினாள். காதோரம் உள்ள முடி சுற்றி மூக்கில் விழுந்தது. தடவி ஒதுக்க மீண்டும் நகர்ந்து கூலிங்கிளாஸ் எதிரே அலை மோதியது.

ச்சே..புழுக்கம்.ஸ்விம்மிங் போலாமா வேண்டாமா? செல்வா இரவு எட்டுமணிக்கு முன்பு வரப்போவதில்லை..



வீட்டுக்குப் போய் என்ன வேலை? திலீப் விருப்பப்பட்டால் போகலாம். திலீப் போகலாம் என்றான். வழியில் ஒரு ஹோட்டலில் போர்ன்விடா குடிக்க வைத்து மொபெட்டை ஸ்விம்மிற்காக ஹோட்டலுக்குத் திருப்பிய போது திலீப் ஹைய்யா என்று குதித்தான். மொபெட் ஆடிற்று. ''மக்கு... ஆடாத வா.'' சின்ன கோபத்துடன் பிள்ளையை எச்சரித்தாள்.

படியேறும்போது பிள்ளைகள் கூச்சல் கேட்டது. திலீப் சட்டை, நிக்கர் அவிழ்த்து ஸ்விம் ஸூட்டுக்கு மாறி நீரில் குதித்தான். எங்கே வாசு என்று அமுதா நீரில் தேடினாள். வெங்கடேஷ் மட்டும்நீரில் மிதந்தபடி குழந்தைகளை விரட்டிக் கொண்டிருந்தான். இவளைக் கண்டதும் நீந்தி இவள் கரையருகே வந்தான்.

''மாஸ்டர் இன்னிக்கு லீவுங்க.''

''ஏன்?''

''உடம்பு சரியில்லை படுத்திருக்காரு.''

''அப்படியா? எங்கே... என்ன உடம்பு?''

''இங்க ஹோட்டல் ரூம்லதான் வயித்துப்போக்கு.''

''டாக்டர் கிட்ட போனாரா?''

''போயிட்டு வந்தாரு. இங்க வந்து கொஞ்ச நேரம் உட்கார்ந்தாரு. முடியலை. போய் படுத்துட்டாரு.''

''எந்த ரூம்?''

''கடைசி ரூம்,'' முதல் தளம். வலதுபக்க அறையை கை காட்டினான்.

அவன் கைகாட்டுவதை மூன்றாவது தளத்திலிருந்து இருவர் கவனித்தார்கள்.

அமுதா திலீபிடம் போய் கிட்ட வரச்சொல்லி கை காட்டினாள்.

''அம்மா போய் பத்து நிமிஷத்தில் வந்துடறேன். நீ ஸ்விம் பண்ணிட்டிரு.

பிள்ளை தலையாட்டிவிட்டு எதிர் கரைக்குப் போயிற்று. அமுதா படியிறங்கி ரிஸப்ஷனுக்குப் போனாள். ரிஸப்ஷனில் உள்ள தாவாரத்தில் டைனிங் ஹால் தாண்டி வலப்பக்கத் தாவாரத்தில் நடந்தாள். கடைசி அறையை அடைந்து மணிஅழுத்தினாள் லவுஞ்சில் உட்கார்ந்து பேப்பர் படித்த அந்த ஆள் பேப்பர் மடக்கி அவளைப் பார்த்தான்.

உள்ளே அவன் லுங்கியுடன் படுத்துக் கிடந்தான். அமுதாவைக் கண்டதும் டவலைத் தோளில் போர்த்திக் கொண்டான். ''வாங்க'' என்றான்.

என்ன ஆச்சு? உள்ள போன கதவு தானாய் சாத்திக் கொண்டது; திரும்பினாள்.

''அது அப்படி தாங்க ஃப்ளஷ் டோர், சாத்திக்கும் இருங்க. வராண்டாவுக்கு வந்துடறேன்.''

''பரவாயில்லை; என்ன ஆச்சு?''

''உட்காருங்களேன்!'' நாற்காலிக்குக் கை காட்டினான்.

உட்கார்ந்தாள்.

''நேத்திக்கு நல்லாதாங்க இருந்தேன். காலைலேர்ந்துதான் புரட்டி புரட்டி நோவு, டாக்டர் ஏதோ தப்பு சாப்பாட்டுலங்கறார். என்ன அப்படி சாப்பிட்டேன்னு தெரியலை. ஏழு,எட்டு தடவை போயிருக்கு.''

''டயர்டா தெரியறது. எட்டு தடவைன்னா கஷ்டம்.''

''ஹாஸ்பிடல்ல சேர்ந்துடுங்களேன். தண்ணி நிறைய குடிங்க.''

''இன்னிக்கு ஒருநாள் பார்த்துட்டு அட்மிட் ஆகலாம்னு இருக்கேன். ரொம்ப நன்றீங்க.''

''எதுக்கு?''

''வந்ததுக்கு, திலீப் அப்பா வந்துட்டாரா?''



''வந்தாச்சு. இன்னும் ரெண்டு மாசத்துக்கு இங்கதான்!'' குரலில் குதூகலம் அவளை மீறி ஒலித்தது.

''கூட்டிட்டு வாங்க அவரையும்.''

''வரணும். நாளைக்கு அல்லது நாளன்னிக்கு வரலாம்!''

''நான் இருக்கறபோது கூட்டிட்டு வாங்க மேடம், நாளைக்கும் என்னால் வரமுடியாதுன்னு நினைக்கிறேன்.

''அப்படி என்ன சாப்பிட்டீங்க?''

''சாத்துக்குடி ஜூஸ் சாப்பிட்டது தப்போ...''

''எங்க?''

''இங்கதான், ஹோட்டல்ல. அழுகின பழம் புழிஞ்சிட்டான் போலிருக்கு.''

''கேட்டீங்களா?''

''இங்க ஜூஸ் எட்டு ரூபா. எனக்குக் கிடைச்சது ஒளில, எப்படி கேட்கறது?''

''இது என்ன நோட்புச்?''

''கவிதை!''

''யார் எழுதினது. நீங்களா?''

''சும்மா பொழுது போகலைன்னா...''

''காமிங்க!''

''ஐயோ வேணாங்க. நான் யார்கிட்டயும் காட்டறதில்லை.''

''சரி, அப்ப வரட்டுமா? உடம்பு பாத்துக்கங்க.''

எழுந்து வாசல் பக்கம் போனாள். அவனும் படுக்கையை விட்டுத் தள்ளாடி எழுந்திருந்தான். தடேலென்று கதவு திறந்து அவளைப் பின்னுக்குத் தள்ளிற்று 'ஒவ்' என்ற கூச்சலுடன் கீழே விழுந்தாள்.

உள்ளே உயரமும் பருமனுமாய் ஒரு தாடிக்காரன் நுழைந்தான். கதவு தாளிட்டான். அவன் கையில் சின்ன ரிவால்வர் இருந்தது. வாசுதேவனுக்குக் குறிவைத்தான்.

''உட்கார் இளைஞனே! உட்கார்.'' கனமான குரலில் ஆங்கிலத்தில் கட்டளையிட்டான்.

''யார்... யார் நீங்க.''

''உட்கார்டா முட்டாள்.'' இடதுகையிலிருந்து ஒரு குழல் உருவி துப்பாக்கியில் பொருத்திக் கொண்டான். ''மூளை சிதறிவிடும்; பேசாத உட்கார்,'' அருகே வந்து வாசுதேவனை நெட்டிப் படுக்கையில் தள்ளினான். பின்னே நகர்ந்து கதவு பூட்டினான். மெல்ல சிரித்தான்.

''இந்தச் சந்தர்ப்பத்திற்காக நான் பதினான்கு நாட்கள் காத்திருந்தேன். உட்காருங்க மேடம்.''

''உங்களுக்கு என்ன வேண்டும்?''

''சொல்லப்படும்.''

''உங்களுடைய பர்ஸ் அங்கே வையுங்க. மோதிரம் கழட்டுங்க, கழுத்து செயின் கழட்டுங்க.

''கொள்ளையா இது?''

அவள் மோதிரம் கழட்டி தரையில் போட்டாள்.

''தாலிக்கொடி—அதையும் கழட்டுங்க?''

''ப்ளீஸ் பர்ஸ் எடுத்துக்க... தாலிக்கொடி விட்டுடு!'' தமிழில் புலம்பினாள்.

''நோ, கழட்டாது போனால் சுடப்படுவீர்கள்.'' அவன் ஆங்கிலமே பேசினான். அவள் அருகேநெருங்கினான்.

''நீங்கள் அழகானவர், காயப்படுத்திக் கொள்ள வேண்டாம். கழட்டுங்கள்.'' மெல்ல தாலிக் கொடி தூக்கினான். கழுத்திலிருந்து தலைவழியே விடுவித்தாள். பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

பளிச்சென்று வாசுதேவன் நோட்புக் எடுத்துத் துப்பாக்கி மீது வீச, அது குறி தப்பி வந்தவன் காலில் விழுந்தது.



''யங் மேன்...இது பொம்மை துப்பாக்கி என்று நினைத்தாயா...இதோ பார். ''ப்ச்ய்சீங்'' என்று புல்லட் வாசுவுக்கு அருகே உள்ள தலையணையில் தைத்தது.

''ரிமூவ் எவ்ரிதிங். வாட்ச், பாங்கில்ஸ் எவ்ரி தீங்.'' சகலமும் கழட்டினாள் படுக்கையில் போட்டாள்.

அவன், வாரி பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

''இப்போது துணிகள்.''

''என்ன?''

''உங்களுடைய துணிகளை அவிழ்த்துப் போடுங்கள்.''

அமுதாவுக்கு மயக்கம் வந்தது. திலீப் திலீப் என்று உள்ளே கேவல் எழுந்தது.

கூப்பிட்டுச் ''சாக விருப்பமா.ம் ...சீக்கிரம்''

வெளியே கதவு மூன்று முறை தட்டப்பட்டு இடைவெளி விட்டு இரண்டு தட்டு கேட்டது.

அவன் இவர்களை நோக்கித் துப்பாக்கி நீட்டியபடி குமிழைத் திருகினான். சட்டென்று ஒரு ஆள் உள்ளே புகுந்து கதவு சாத்திக் கொண்டான். அவனுக்கும் தாடி இருந்தது. தோளில் சின்ன லெதர் பேக் இருந்தது.

''ம்...சீக்கிரம்''

வந்த ஆளிடம் துப்பாக்கி கொடுத்துவிட்டு முன்னேறி அவள் இடுப்புப் புடவையை இழுத்தான். அமுதா திமிற, ஒரு அறை விட்டான்.

''மறுபடி சொல்றேன், உன்னைக் காயப்படுத்துவது நோக்கமல்ல, ம்...சீக்கிரம். இல்லையெனில் இவை இவை கிழிக்கப்பட்டுவிடும்.''

அமுதா அழுதவள். மண்டியிட்டு அவனிடம் கையேந்தினாள். பயத்தில நாக்கு ஒட்டி வார்த்தைகள் குழறின.

ப்ளீஸ் ப்ளீஸ் என்று மட்டுமே பேச முடிந்தது.

''எல்லாவற்றையும் கழட்டு.'' பெட்டிகோட் உருவப்பட்டது.

இரண்டாவது ஆள் வாசுவுக்கு அருகே போய் பளிச் சென்று லுங்கி இழுக்க முயன்றான். அமுதா முகம் பொத்திக்கொண்டாள்.

''நீ அவிழ்க்காது போனால் நான் சுடுவேன். பத்து வினாடி டைம்.''

எட்டாவது வினாடியில் அமுதா ரவுக்கை முதல் ஹூக் அவிழ்த்தாள்.

அவளைப் படுக்கையில் வாசுவுக்கு அருகே தள்ளினார்கள். மல்லாந்து கிடக்கச் சொன்னார்கள்.

இரண்டாவது ஆள் தோள் பையிலிருந்து ஃப்ளாஷ் காமிரா எடுத்தான். பளிச் பளிச்சென்று பல கோணங்களில் படமெடுத்தான்.

முதல் ஆள் பையிலிருந்து ப்ளாஸ்டர் எடுத்தான். பட்டையான இரண்டங்குல ப்ளாஸ்டர். அமுதாவின் வாயில் ஒட்டினான். வாசுதேவன் வாயில் ஒட்டினான். அமுதாவின் வலக் காலையும் வாசுவின் இடக்காலையும் நைலான் கயிற்றினால் கட்டினான். இருவர் கண்களையும் ப்ளாஸ்டர் பிரித்து மூடினான். மறுபடி ப்ளாஷ் மின்னுவது தெரிந்து காமிராசப்தமும் கேட்டது.

''வருகிறோம். எங்கள் வேலை முடிந்தது.'' கதவு தாழிடும் சத்தம் கேட்டது.

அமுதா அவசரமாய் தன் கண்ணிலிருந்த பிளாஸ்டரை நீக்கினாள். வாசுவும் இரண்டும் உதறிவிட்டு எழுந்தான்.

''ஐம் ஸாரி,,, நான் யாரு இவங்க...?''

அமுதா உடல் பொத்திக் கொண்டாள். கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது.



வாசு கால்கட்டை சிரமப்பட்டு விலக்கினான். வாசல் கதவுப் பக்கம் போனான்.

''இடியட் எங்கே போற...''இரு.''

அமுதா தாவி பெட்டிகோட்உடுத்திக் கொண்டாள். திரும்பி சுவரோரம் போய் நின்று ஜாக்கெட் அணிந்து கொண்டாள்.வாசு லுங்கி சுருட்டி தன்னை மறைத்தபடி பாத்ரூம் கதவு திறந்து உள்ளே போனான். வாந்தி எடுத்தான். அம்மா அம்மா என்று முனகினான். அமுதா புடைவை உடுத்திக் கொண்டாள்.

''ஐயம் டயிங், ஐயம் டயிங்.'' வாசு வயிற்றைப் பிடித்தபடி துடித்தான்.

''என்ன ஆச்சு?''

தண்ணீர் கேட்டான். அமுதா தண்ணீர் எடுத்து வந்தாள். குடிக்கக் கொடுத்தாள்.

வாசல் பக்கம் போனாள். கதவுக் குமிழ் வைத்துத் திறந்தாள்.

''மேடம் வெயிட்.'' மூடினான்.

''இவங்க யாரு?''

''என்னைக் கேட்டா? இது பொருக்கி ஹோட்டல்னு எனக்கெப்படித் தெரியும்?''

''இல்ல மேடம்; இவங்க எனக்காக வரலை. உங்களை எய்ம் பண்ணி வந்திருக்காங்க.''

''என்னையா... என்னை ஏன்?''

''தெரியலை. உங்க வீட்டுக்காரருக்கு எதிரியா இருக்கலாம். அவங்க என்னை சட்டை பண்ணவே யில்லை. உங்களைத்தான் நியூடாக்கினாங்க. நான் நடுவுல மாட்டிக்கிட்டேன். ஒருவேளை...''

''எனக்கு ஆரஞ்சு ஜூஸ் அனுப்பியது இவங்களா இருப்பாங்களோ... ஏதாவது கலந்து கொடுத்திருப்பாங்க...''

''யார் கொடுத்தா?''

''இந்த ஹோட்டல் பேரர்.'!

''பேர் என்ன?''

''தெரியலை. இந்த ஜூஸ் எக்ஸ்ட்டா கிடைச்சது சாப்பிடறியான்னான். சாப்பிட்டேன். ஐதிங்க். எல்லாமே பிளாண்ட்.''

''ஏன்?''

''தெரியலை மேடம். வீட்டுக்காரர் கிட்ட சொல்லீங்களா இதை?''

''ஐயோ.'' அமுதா தலையில் அடித்துக் கொண்டாள்.

''எனக்கு கோச்சிங் இருக்கு மேடம். ஏஷியன் சாம்பியன்கோச்சிங்இதனால் என்ன ஆகப்போரவுதோ.''

''முட்டாள். என் வாழ்க்கையே பாழாயிடுச்சு. உன் கோச்சிங்தான் பெரிசா?''

''அவங்க எனக்கு வரலை மேடம் நிச்சயம். நான் முக்கியமில்லை அவங்களுக்கு.நான் உங்களோட பேசினது தப்பு. உங்களோட பழகினது தப்பு. நான் பார்த்திருக்கேன், இவங்களை—இந்த ஹோட்டல்ல பார்த்திருக்கேன். மேடம் போலீஸுக்கு நான் போன் பண்ணவா? இல்ல நீங்களே உங்க வீட்டுக்காரருக்கு...''

அமுதா எழுந்து வெளியே ஓடினாள். ரிஸப்ஷனைத் தாண்டினாள். பையனிடம் போனாள். கூவினாள். வெளியே வந்தவனைத் தோளில் துண்டு போட்டுத் துடைத்தாள்.

''என்னம்மா?':

''பேசாமல் வா.'' உடுத்தினாள். அவனை இழுத்துக் கொண்டு படியிறங்கினாள். மொபெட் ஏறினாள் பிள்ளையோடு விடு வந்து சேர்ந்தாள்.''

கதவு திறக்க போன் அடித்துக் கொண்டிருந்தது.

''ஹலோ...''



''செல்வா, எங்க போயிட்ட?''

''......''

''ஹலோ அமுதா... அமுதா...''

அமுதா வியர்த்தாள்.

''ஸ்விம்மிங் போனோம்.''

''அடடே, நானும் ஸ்விம்மிங்கு வரலாம்னு நினைச்சேன். பரவாயில்லை இப்ப கிளம்பி வரேன். வேற எங்கயாவது வெளியே போலாம் என்ன... மாஸ்டர் இருக்கானா?''

அமுதா திடுக்கிட்டாள். 'யாரு?'

,'பையன்தான். என்ன பண்றாரு பெரியவரு?''

''தலை துவட்டறான்.''

''துவட்டாதயா கூட்டிட்டு வந்த...நல்லா துவட்டச் சொல்லு. இதோ வரேன்.''

போன் துண்டிக்கப்பட்டது.

அமுதா சோபாவில் உட்கார்ந்தாள்: சரிந்தாள். அழுதாள்.

பையன் அருகே வந்து நின்றான்.

''அப்பா திட்டினாங்களாம்மா, ஸ்விம்மிங் போனதுக்கு?'' கேட்டா போவலை சும்மா பொய் சொன்னோம்னு மறைச்சிடலாமா? அமுதா யோசித்தாள். பையனிடம் இதைச் சொல்வதா வேண்டாமா என்று யோசித்தாள்.

## 7

உள்ளே நுழைந்து முகம் பார்த்ததுமே புரிந்து கொண்டான். ஷூக்களை அவிழ்க்கப் போனவன் நிமிர்ந்து உற்றுப் பார்த்துப் பளிச்சென்று முன்னேற, அமுதா நிதானம் என்று கைகாட்டினாள். பிள்ளையையும் சுட்டிக் காட்டினாள். சிறிய காக்கி உறையிலிருந்து வாட்டர் கேம் என்கிற விளையாட்டுக் கருவியை எடுத்தான்.

''திலீப், இந்தா'' என்று அவளைப் பார்த்தபடி பிள்ளையிடம் நீட்டினான்.

''என்னப்பா இது?''

''வாட்டர்ல இருக்கிற வளையத்தை வெளில இருக்கிற இந்த பட்டன் ப்ரஸ் பண்ணி அந்த குச்சில போடு''

பிள்ளை வாங்கிப் புரட்டிப் பார்த்தது. மெல்ல அழுத்தி ஜலத்தில் கொப்புளம் வரவழைத்து வளையத்தை மேலே தூக்கி ப்ளாஸ்டிக் குச்சி அருகே நகர்த்தியது.

''வாசல்ல உட்கார்ந்துக்க திலீபா. காத்து வரும்.'' உடைந்த குரலில் அமுதா சொன்னாள். பிள்ளை யாரையும் கவனிக்காது வாட்டர் கேமுடன் வெளியே போனான்.

''அமுதா, என்ன ஆச்சு?''

அமுதா இரண்டு கைகளையும் விரித்தாள். உதடு அழுத்திக் கடித்துக் கொண்டாள். தரை வெறித்தாள்.

''அமுதா.'' அவன் தோள் பற்றி உலுக்கினான். அமுதா சற்று இருங்கள் என்பதுபோல் தலையாட்டினாள்.

''ஏதாவது மிரட்டல் போனா?''

''இல்லை'' யென்றாள்.

''வீட்டுக்கு நேர வந்து பயமுறுத்தினானா?''

மறுபடி இல்லையென்று தலையசைத்தாள்.

''என்ன? சொல்லேன்?''

எப்படிச் சொல்வது? எப்படி...இதை வார்த்தையால் விவரிப்பது? எப்படி விளக்கமாய்ப் பேசுவது?

''அமுதா, எதுவாயிருந்தாலும் பயப்படாம சொல்லு''

இனி பயம் என்னைப்பற்றிதான். என் வாழ்க்கையைப்பற்றித்தான். ஓவென்று அழலாம். சகலமும் போய் விட்டதென்று புலம்பலாம். ஆனால் எதுவும் போகவில்லை, போகாமலும் இல்லை, சின்ன நகக் கீரல் கூட



இல்லை. ஆனால் பெரிய ரணம், வாழ்க்கை முழுவதும் மறக்காத ரணம் வந்துவிட்டது.

''அமுதா, என்கிட்ட சொல்றதா வேணாமான்னு யோசிக்கிறியா?'' அவன் அருகே உட்கார்ந்து குரல் தாழ்த்திக் கேட்டான்.

''சொன்னா புரியுமான்னு யோசிக்கிறேன்.''

''ஏன்?''

''விசித்திரமா ஒண்ணு நடந்து போச்சு.''

''என்னன்னு சொல்லேன்.''

''பையனை ஸ்விம்மிங் கூட்டிட்டுப் போனேன். பையன் தண்ணில இறங்கி ஸ்விம் பண்ண ஆரம்பிச்சான். அங்க ஸ்விம் மாஸ்டர் இல்லை. ஏன்னு விசாரிச்சேன், உடம்பு சரியில்லை, உள்ள ஹோட்டல் ரூம்ல தான் படுத்திருக்காருன்னாங்க. சரி போய்ப் பார்க்கலாமேன்னு உள்ளே போனேன்.''

''பேர் என்ன?''

''வாசுதேவன்''

''வயசு?''

''இருப்பத்தியாறு, இருப்பத்தி ஏழு இருக்கும்.''

''ம்ம்''

''உள்ள படுத்துக்கிட்டு இருந்தார். ஃபுட் பாய்ஸன் போல இருக்கு, வாந்தி, பேதி, வயத்துவலி. விசாரிச்சுட்டு ஒரு நிமிஷம்தான் விசாரிச்சிட்டு கிளம்பறப்ப இரண்டு பேர் உள்ள வந்தாங்க. என்னைப் புடிச்சுத் தள்ளிவிட்டுக் கதவைச் சாத்திட்டுத் துப்பாக்கியக் காட்டி மிரட்டினான். என் மோதிரம் வளையல் தாலிக் கொடி எல்லாம் கழட்டச் சொன்னான்- கழட்டினேன்.''

''கொள்ளையா?''

''முதல்ல நானும் அப்படித்தான் நினைச்சேன். புடவைல கை வச்சு உருவினான்.''

''அமுதா...''

''சுட்டுருவேன்னு சொல்லி அவுத்தான். ஜாக்கெட், பெட்டிக் கோட், ப்ரா எல்லாம் மிரட்டி மிரட்டியே அவுக்கச் சொன்னான்.''

''எங்க இதெல்லாம்...?''

''ஹோட்டல் ரூம்ல.''

''அந்த கோச் என்ன செய்துக்கிட்டிருந்தான்?''

''அவரால முடியல.''

''தடுக்க அட்டெம்ப்ட்டே பண்ணலையா?''

''செய்தாரு. கைல கெடைச்ச புஸ்தகத்தைத் துப்பாக்கிமேல வீசினாரு. அவன் காலடிலதான் விழுந்தது. அவரையும் மிரட்டி அவரு லுங்கியையும் அவுத்துட்டாங்க.''

''எங்க ரெண்டு பேரையும்-பக்கத்து பக்கத்துல படுக்கவச்சு. போட்டோ எடுத்தாங்க. ரெண்டு பேர் கண்ல, வாய்ல ப்ளாஸ்டர் போட்டுட்டு காலையும் கட்டிட்டுப் போயிட்டாங்க.''

''யார், யார் அமுதா?''

''தாடிக்காரங்க.''

''அடையாளம் காட்டுவியா? விவரமா சொல். அவன் உருவம் பத்தி.''

''முடியும்'' என்றாள். விவரித்தாள்.

''பாஸ்டர்ட்ஸ். நீ கத்தவேயில்லையா?''

''சுட்டுருவேன்னு சைலன்ஸர் பிஸ்டல் காட்டினானே.''

''ரகஸ்யமா காலிங் பெல் அழுத்த முடியலையா?''

''அழுத்தி?''

''யாராவது வரமாட்டாங்களா?''

''ஹோட்டல் மொத்தமும் என்னைப் பார்க்கவா?''

''அடிச்சாங்களா?''

''இல்லை. தாலிக்கொடி அவுக்க மாட்டேன்னதுக்கு அறைஞ்சான்.''



''அமுதா, திடீர்னு ஏன் அந்த ரூமுக்குப் போனே...? பையன் எங்க இருந்தான்?''

''பையன் ஸ்விம்மிங்பூல்ல இருந்தான். நான் என்ன உடம்புக்குன்னு விசாரிக்கப் போனேன்.''

''யார் அந்த கோச்? அவன் தொட்டானா?''

''இல்லை!''

''பொய் சொல்லாத அமுதா.''

''சத்தியமா இல்லை. அவருக்கு ரொம்பவும் முடியலை.''

''எவருக்கு?''

''கோச்சுக்கு.''

''என்ன முடியலை!''

''லூஸ் மோஷன். எட்டு தடவைக்கு மேல போயி அவரால் எழுந்து நிக்கக்கூட முடியலை.''

''பொய் துப்பாக்கியா இருந்திருக்கும் அமுதா கத்தியிருக்கலாமே.''

''இல்லீங்க, ஒரு தடவை சுட்டான். வாசுதேவன் புஸ்தகம் எறிஞ்சதும், வாசு பக்கத்துல இருந்த தலகாணில பாஞ்சுது.''

''வாசுதேவன் எங்கே?''

''பயத்துல சுருண்டு படுத்துட்டாரு.''

வேகமாய் டெலிபோனுக்குப் போனான். அமுதா தடுத்தாள்.

''ஒரு நிமிஷம். என்ன செய்யப் போறீங்க?''

''எங்க ஆபீஸுக்குப் போன் பண்ணி...''

''பண்ணி?''

''ஏன் அமுதா?''

''அவங்க வாசுதேவனுக்காக வரலை; எனக்காக வரலை. உங்களைப் பழி தீர்த்துக்கறதுக்கு வந்திருக்காங்க.''

''கந்தசாமி ஆளுங்களா? அவர் பேரைச் சொன்னாங்களா?''

''யார் பேரும் சொல்லலை.''

''நான் நேரே ஹோட்டலுக்குப் போறேன். எங்க டிபார்ட்மெண்ட் மொத்த ஆளுங்களைக் கூட்டிக்கிட்டு நாலுமணி நேரத்துல கண்டு பிடிக்கறேன்.''

''உங்க டிபார்ட்டுமெண்ட்ல என்ன சொல்வீங்க. பொண்டாட்டிய மடக்கி நிர்வாணமா ஃபோட்டோ எடுத்தாங்கன்னா?''

''சொன்னா என்ன...''

''உங்களுக்குச் சம்மதம்னா சொல்லுங்க.''

''அவனுங்களை விட்டுறச் சொல்றியா?''

''இல்லை; ரெண்டு பேர் பட்டப்பகல்ல வந்து என்னை மடக்கிப் படம் எடுத்துட்டுப் போயிட்டாங்க. ஃபிலிம் அவன்கிட்ட இருக்கு. உங்க டிபார்ட்மெண்ட் மொத்தமும் கூட்டி அவனைத் தேடறதுக்குள்ள ஊர் முழுக்க என் போட்டோ சிரிக்கும். உங்க டிபார்ட்மெண்ட்டும் சிரிக்கும்.''

''நிச்சயமா இத வச்சு என்னை மிரட்டறதுக்குத் தான். டிபார்ட்மெண்ட் இல்லாம என்ன பண்ணலாம்... ம்...'' செல்வா தனக்குள் பேசிக்கொண்டான்.

''நீங்க மட்டும் போறாதா? வேற யார்க்கும் தெரியாத அவங்களை மடக்க முடியாதா?''

''அந்த கோச்சுக்குத் தெரிஞ்சு போச்சே, அவன் இத்தனை நேரம் யார் யார்கிட்ட சொல்லியிருப்பானோ?''

''யார் கிட்டவும் சொல்லமாட்டார்''

''எப்படிச் சொல்ற?''



''சொல்ல மார்ட்டார்னுதான் தோணுது''

''ஏன் அவன் உன்னை லவ் பண்றானா?''

''பத்து நிமிஷம் முன்னாடியே இந்தக் கேள்விய எதிர் பார்த்தேன்.''

''ஸாரி.''

''பரவாயில்லை. ஏண்டி அவன் முன்னாடி புடவை அவிழ்த்தன்னு அடிக்காம வுட்டீங்களே.''

''நோ, நோ. நான் மிருகம் இல்லை. எனக்கு உன்னைப் பத்தி நல்லா தெரியும், அமுதா.''

''எனக்குத் தெரியும்.''

''நீ அவுத்தது கெட்டிக்காரத்தனம். முரண்டு பண்ணியிருந்தா சுட்டிருப்பான். பயங்கரமா காயப் படுத்தியிருப்பான். எப்படியும் சித்திரவதை பண்ணி அவுக்க வச்சிருப்பான். அந்த கோச் யாருன்னு தெரியணும்.''

''அசடு, இன்னொஸண்ட், கோழை.''

''நீ அவனை லவ் பண்றியா7''

''இல்லை.''

''உடம்பு சரியில்லைன்னா விட வேண்டியது தானே? ஏன் ஹோட்டலுக்கு தனியா போனே?''

''அக்கறையா என் புள்ளைக்கு ஸ்விம்மிங் சொல்லித்தர ஆளுன்னுதான் போனேன்.

''நெருங்கிப் பழகியிருக்கியா?''

''ச்சே, ச்சே, பேசியிருக்கேன்.''

''என்ன?''

''சும்மா. பேரு ஊரு, தொழில்.''

''ஏன் இதெல்லாம் கேட்டே?''

''பையன் ஸ்விம் பண்ணும்போது வேடிக்கைதான் பார்த்துக்கிட்டிருப்பேன். அவரும் கரையில் உட்கார்ந்திருக்கும் போது ஏதாவது பேசணுமேன்னு கேட்டது தான்.''

''பெரியவம்புல மாட்டியிருக்க அமுதா, அடக்கமில்லாம போய் பேசி, எனக்கு கோச் மேலேயே சந்தேகம்.''

''இல்லீங்க அந்த ஆள் நிஜமாவே பயந்தாங்கொள்ளி.''

''நீ பயப்படலியா?''

''இன்னும் என்ன செய்யப் போறாங்களோன்னுதான் பயமா இருக்கு.''

''அமுதா, நிஜமா உன்னை ரேப் பண்ணலையே? பயப்படாதே சொல்லு.''

அமுதா முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டாள்.

''சொல்லு அமுதா. அந்த கோச் ஒண்ணும் பண்ணலியே? இல்லை சொல்லு அமுதா?''

''இல்லீங்க. இத்தனை சொல்லும் போது அது மட்டும் ஏன் மறைக்கப் போறேன்? அழாத பேசறேன்னுதானே கேட்கறீங்க? என் பையன் இந்தக் கண்றாவியெல்லாம் பார்க்கலியேன்னு நிம்மதியா இருக்கேன். வெறும் அழுது புலம்பறதவிட உங்களுக்குப் புரியும்படியா நிதானமா சொல்லி நீங்கமட்டும் தனியா அதைக் கண்டு பிடிக்கணும்னு நினைக்கிறேன். எனக்கும் அவமானமா இருக்கு, மலத்துல விழுந்த மாதிரி அருவருப்பா இருக்கு. வேதனையா இருக்கு, ஆத்திரமா இருக்கு. யார்கிட்டபோய் இத நான் சொல்ல முடியும்? உங்ககிட்டதான்... உங்ககிட்டதான்.'' உதடு கோணி அமுதா அவன்மீது சரிந்து அழுதாள்.

''லீவ் இட்டு மீ. வீட்ல அமைதியா இரு. நான் இருக்கேன். என் குரல் கேட்காம கதவு திறக்காத. அது எனக்கு வந்த அம்பு. உன்னை அடிச்சு சார்சுடுச்சு. பார்த்துடுவோம். ஐ.பி.எஸ். பாஸ் பண்ணி பதினேழு வருஷம் ஆச்சு அமுதா. லெட் மீ மீட் த சேலஞ்ஜ்.''

''எம் மேல வெறுப்பு வராதே.''



''மனசு கெட்டுப் போயிருந்தா வெறுப்பு வந்திருக்கும், என்கிட்ட என்ன குறைன்னு குமைச்சல் வந்திருக்கும். இது உடம்பு. போய் குளி. சாப்பிடு, தூங்கு.''

வெளியே இறங்கினான், கார் திருப்பினான். அமுதா பையனை உள்ளே கூப்பிட்டாள். கதவு மூடினாள்.

வீட்டு வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் நின்றது. மூடின கதவு பார்த்து ஒரு அடிக்கு ஒரு அடி அளவுள்ள பிளாஸ்டிக் கவர் எறிந்தது.

## 8

செல்வா ஹோட்டல் ரிஸப்ஷனுக்குப் போனான்.

பைக்குள் கைவிட்டு அட்டையைப் பிரித்துக்காட்டினான். பயந்தார்கள்.

''ஒரு ஆள் தேடுகிறேன். அமைதியாக இருங்கள். பேச வேண்டாம்'' எச்சரித்துவிட்டு நீச்சல் குளம் போனான். நின்று ஹோட்டலைப் பார்த்தான். எல்லா அறையின் திரைச்சீலைகளும் மூடப்பட்டிருந்தன. மேற்குப் பக்க வெளிச்சம் கருதி இழுக்கப்பட்டிருந்தன போலும், மூன்றாவது மாடி. நான்காவது ரூம். நான்காவது மாடி. எட்டாவது ரூம். முதல்மாடி கடைசி ரூம். திரைச்சீலைகள் திறந்திருந்தன.

ஆக, இம்மூன்றிலிருந்துதான் கவனிக்கப்பட்டிருக்க வேண்டும். விசாரித்தான். முதல் மாடி அக்கௌண்டெண்ட் ரூம். அதற்குத் திரைச்சீலை கிடையாது. யார் வருவார்கள்? குமாஸ்தாக்கள் தவிர யாரும் வரமாட்டார்கள். மூன்றாவது மாடி யார்? யாருமில்லை. எப்போது கடைசியாய் தங்கினார்கள்? பெங்களூர் கடிகாரக் கம்பெனி. பெயர் ஸ்ரீகெடப்பா. பசவப்பா. நான்காவது மாடி புதுமண ஜோடி. ஹனிமூன் கப்பிள். எங்கே?

வெளியே போயிருக்கிறார்கள். கதவு திற. திறக்கப்பட்டது. இது நல்ல உயரம். ஆள் உச்சந்தலை தெரியும். அடையாளம் சட்டென்று தெரியாது. மேலும் ஜன்னல் அருகே நகர்த்தப்பட்டிருந்தது. கார்பெட்டில் தடங்கள் இல்லை. துணிகள் இறைந்து கிடந்தன. மூன்றாவது மாடி நான்காவது ரூம், "திற."

"அங்கே யாருமில்லை." "திற-" திறக்கப்பட்டது. சுத்தமாக இருந்தது. "எப்போது சுத்தம் செய்தீர்கள்" "அரைமணி முன்பு." "எங்கே அந்தக் குப்பை?" "ஹோட்டல் குப்பைத் தொட்டியில்." "குப்பைத் தொட்டி எங்கே?"

செல்வா மண்டி போட்டு முகத்தில் கர்ச்சீப் சுற்றி குப்பைத் தொட்டியை மெல்லக் கிளறினான். ஒரு காக்கி கவர் பிரித்தான். ஒரு காகிதம் கசக்கப்பட்டிருந்தது. நோட்டுப் புத்தகக் காகிதம். சுருட்டப்பட்டுக் கிடந்தது மெல்லப் பிரித்தான்' ஈரம்பட்டு பிரிக்க சிரமமாய் இருந்தது. உட்கார்ந்து கவனமாய்ப் பிரித்தான். கவிதை பேரில் எழுதியிருந்தது. வெளிச்சத்திற்கு வந்து படித்தான்.

அ
மு
தா

என்கிற வரிசையில் தலைப்பிடப் பட்டிருந்தது.

அழகென்பது அழிவென்று புத்தன் சொன்னான்
முன்னோரில் பல பேரும் அதையே சொன்னார்
தான்தோன்றி காமத்தைத் தீமை என்றார்
அடங்காத காமத்தை உள்ளே வைத்து
முட்கிரீட உபதேசம் பலவும் சொல்ல
தாங்காமல் தடுமாறும் வார்த்தை சிலுவை
அடிமரத்தை நுனிநின்று வெட்டும் செய்கை
முட்டாளே செய்யாதே பெண்கள் எல்லாம்
தாயாக நினைக்கின்ற பாதை செல்க



அம்மாவைத் தேடித்தான் அலையுது காமம்
முயற்சித்த திருவினைகள் தோற்றுப் போக
தாயன்பு தேடித்தான் உள்ளே கதறல்
அழுகின்ற எவருக்கும் அம்மா வேண்டும்
முகமெல்லாம் முடிமுளைத்த வயதில்கூட
தாவிஎனைத் தழுவிக் கொள் ஸ்நேகம் வேண்டும்
அழகான அம்மாமை என் நீச்சல் குளத்தில்
முதன் முதலாய்ச் சந்தித்த க்ஷணத்திலிருந்து
தாளாத வேதனையில் தவிக்கும் என்னை
அமுதா புரிந்துகொள், நான் குழந்தை,
முனை முறிந்த அம்பு, முடவம் நெஞ்சு
தாளகதி தப்பெனினும் இது—
உயிரின் துடிப்பு

முகம் வெளிறிற்று. அமுதாதான். அமுதாவா? யார் இது? கவனித்தவன் காதலித்திருக்கிறானா? காதலித்தவன் மடக்கி துணி அவிழ்த்தானா? போட்டோ எடுத்தானா? யார் கையெழுத்து இது? இவன் என் எதிரியா? என்னைப் பயமுறுத்தவா? அமுதாவை ஆள்வதா?

கவிதை எழுதியவன்தான் மடக்கியிருக்கிறான். எனில் கற்பழிக்கப்பட வில்லையே. காரணம் என்ன? எய்ம் என்னவாயிருக்கும்? துன்புறுத்தவில்லையே. அமுதாவுக்கு இந்தக் கவிதை பற்றித் தெரியுமா? இது யார்? ஸ்விம்மிங் கோச்சா, வேறு ஆளா இன்னும் கிளற. பிரிஸ்டல் சிகரெட் பாக்கெட். இது சென்னையில் விற்பனை இல்லை. டெல்லியில் பம்பாயில் உண்டு. கோச் சிகரெட் பிடிப்பானா? பான் பராக் பொட்டலங்கள். டாய்லெட் பேப்பர்கள். வாழைப்பழத் தோல். பிரித்துப் பார்த்தான். நுனி விடப்பட்டு கடிக்கப்பட்டிருந்தது. பல் தடம் இருக்கிறது. உபயோகப்படுமா? காக்கி கவரை அப்படியே எடுத்துக் கொண்டான்.

மறுபடி ரிஸப்ஷனுக்கு வந்தான். ஸ்விம்மிங் கோச் பற்றி விசாரித்தான். வீட்டுக்குப் போய்விட்டாராம்.

"எங்கே தங்கியிருந்தார்?" அறைக் கதவு திறந்து விட்டார்கள்.

என்ன தேடுகிறீர்கள் என்று விசாரித்தார்கள்.

செலவா பதில் சொல்லவில்லை.

இங்குதான் அமுதா நிர்வாணமாய் இருந்திருக்கிறாள். இந்தப் படுக்கையில்தான் படுத்திருக்கிறாள். மூன்று ஆண்கள் பார்க்க மல்லாந்து... நெஞ்சில் வேதனை பொங்கிற்று. யார்... யார் அது?

கார்ப்பெட்டில் பல கால்தடங்கள் இருந்தன. தெளிவாகவில்லை. காலைக் கட்டின கயிறு எங்கே... காணவில்லை—எங்கே தேடவேண்டும்? மெல்லியதாய் ஒரு பேப்பர் இரண்டங்குல நீளத்துக்கு நோட் புக்கிலிருந்து கிழிபட நடுப்பகுதி நூல் பகுதியில் உள்ள காகிதம் எகிறுமே, அப்படி ஒரு பேப்பர் கிடந்தது. எடுத்து பர்ஸில் அப்படியே வைத்து மூடினான். ரிஸப்ஷனுக்கு வந்து வாசுதேவன் விலாசம் கேட்டான். கொடுத்தார்கள். நன்றி சொல்லிக் கிளம்பினான்.

வாசுதேவன் பெட்ரோல் பங்கில் இருப்பார் என்கிறார்கள். பெரிய வீடு. கீழே அறைகளைத் தடுத்துப் பல போர்ஷனாக மாற்றப்பட்டிருந்தது. வயதான பெண்மணி. தாயாராம் பதில் சொன்னாள். பெட்ரோல் பங்க் போனான். "இப்பத்தான் டாக்டர் வீட்டுக்குப் போனாரு. அட்மிட் ஆயிடப் போறேன்னாரு."

"எந்த டாக்டர்"

சொன்னார்கள். ஆஸ்பத்திரியில் நின்றான். உள்ளே போய்ப் பெயர் சொல்லிக் கேட்டான்.

"சலைன் ஏத்தறாங்க. காம்போஸோட தூங்கறாரு. நீங்க யாரு. ரூம் நெம்பர் ஏழு." உள்ளே நகர்ந்தான்.

கட்டிலில் மெல்லியதாய் வாய்பிளந்து அவன் கிடந்தான்.



இவன்-இவனா எல்லாவற்றுக்கும் காரணம்? என் ஒரு பிடிக்கு அடங்குவாயா? மெல்ல முகத்தில் கை வைத்தான். சூடு இருந்தது. விழிப்பு வரவில்லை. சட்டையில் பர்ஸ் இருந்தது. விலாசம். கொஞ்சம் காசு. அலமாரி திறந்தான்.

"யாரு?" நர்ஸ் உள்ளே வந்து கேட்டாள். அடையாளக் கார்டைப் பிடித்துக் காட்டினான்.

"போலீஸா?"

"ம், என்ன இவருக்கு?"

"ஃபுட் பாய்சன்."

"என்னமாதிரி பாய்சன்."

"நாளைக்குத் தெரியும். லேபுக்குக் கொடுத்திருக்கோம்."

அலமாரியில் சட்டைத்துணிகள் இருந்தன. நகர்ந்த சின்னதாய் கால் அங்குல ஈயக்குண்டு உருண்டது. புல்லட். ரிவால்வர் புல்லட். இவன் ஏன் இதை வைத்திருக்கிறான்? கால் பக்கம், தலைப்பக்கம் பச்சை உறைத் தலையணை கை பக்கம், ட்ரிப் ஏற்றிய கைபக்கம் வெள்ளைத் தலையணை. "அது யாருடையது?" தலையணையைச் சுட்டிக் காட்டினான்.

"பேஷண்ட் எடுத்து வந்தது."

"பார்க்கலாமா?"

"கை நகர்த்த வேண்டும். நகர்த்தினா ட்ரிப்ஸ் நீடில் அசையும். வலிக்கும்."

"வலிக்காது எடுப்போம்."

"அவசியமா?"

செல்வா பதில் சொல்லவில்லை.

மெல்ல வாசுவின் கை தூக்கினான். இடது கையால் தலையணையை இழுத்தான். நோட்டுப் புத்தகம் விழுந்தது. தலையணையைப் புரட்டினான். துளை தெரிந்தது.

ஆக இது ஹோட்டல் தலையணை. தலையணையை மறுபடி அண்டக் கொடுத்துவிட்டுக் குனிந்து புத்தகம் எடுத்தான்.

மீனின் கண்ணீர்என்று எழுதப்பட்டிருந்தது. அதே கையெழுத்து. நடுப்பக்கம் வேகமாகப் பிரித்தான். கிழிக்கப்பட்டிருந்தது.

அமுதாவை இவன் காதலித்திருக்கின்றான். என் அமுதாவை இவன் மடக்கியிருக்கிறான். இது நிஜமா பொய்யா? இந்தத் தூக்கம் தப்பித்தலுக்கா?

''ஏய் எழுந்திரு.''

''எதற்கு எழுப்பறீங்க?''

''விசாரிக்க.''

''ப்ளீஸ் வெயிட், டாக்டரைக் கூப்பிடுகிறேன்.'' நர்ஸ் வெளியே ஓடினாள்,

டாக்டருடன் மறுபடி உள்ளே நுழைந்தாள்.

''ஸி.பி.ஐ?'' டாக்டர் புருவம் சுருக்கினார்.''இவரை எனக்கு நன்கு தெரியும். நல்ல இளைஞன். உண்மையாகவே நேற்றுப் பிற்பகலிலிருந்து வயிற்று உபாதையால் அவதிப் படுகிறார். நான்தான் அட்மிட் ஆகும்படி சொன்னேன்.

''இவரால் ஓடியிருக்க முடியுமா?''

''நிச்சயம் முடிந்திருக்காது. பல்ஸ்ரேட் மிக அதிகமாக இருந்தது. டிஹைட்ரேஷன் நாக்கில் உதட்டில் தெரிந்தது. நிச்சயம் இவர் ஓடக்கூடிய நிலையில் இருந்திருக்க முடியாது.''

ஓட முடியாதவன் ரேப் செய்யத் துணிவானா? ரேப் செய்யவில்லையே? போட்டோ மட்டும்தானே எடுத்தான்.

''இந்தப் புத்தகம் எடுத்துப் போகிறேன். இவர் விழித்தால் என் விலாசம் போன் நம்பர் இது. சொல்லுங்கள் அவருக்கு. என் உத்தரவில்லாமல் இவர் எங்கும் போகக் கூடாது. மீறினால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று சொல்லுங்கள். நன்றி''



யார்...யார்... புரியவில்லையே தாடி ஆட்கள்... இரண்டு ஆட்கள். அமுதாவிடம் கவிதைகாட்டலாமா? இல்லை மேலும் கேள்விகள் கேட்கலாமா?

என்ன கேட்பது? மறைக்காமல் சொல் அமுதா. நீ வாசுதேவனை லவ்... சே... அமுதா...நீ இன்னொருத்தனை மனசுல வளர்ப்பாயா, என்ன விட்டு விலகி விட்டாயா? போர் போர் என்கிறாயே. அமுதா நான் போரடித்து விட்டேனா? அலுத்து விட்டேனா? உண்மையைச் சொல் அமுதா, நீ வாசுதேவனை?

அமுதா கேட்பாள் என்ன செய்தீர்கள் என்று. என்ன சொல்வது?

ஒன்றும் புரியவில்லை என்றா? வீட்டு வாசலுக்கு வந்து மெல்ல ஹார்ன் அடித்தான். அமுதா அவசரமாய் கதவு திறந்தாள். அக்கம் பக்கம் பார்த்தாள்.

''ப்ளீஸ் சீக்கிரம் வாங்க'' குரல் கொடுத்தாள்.

செல்வா பளிச்சென்று வெளியே வந்தான். வீட்டுக்குள் புகுந்தான். கதவு சாத்தினான். அமுதா அவனிடம் ஒரு கவர் நீட்டினாள். ''இது வாசல்ல கிடந்தது. அப்படியே கர்சீப்ல எடுத்து மேஜைல வச்சுட்டேன், துணில பிடிச்சு பிரிச்சேன். என் தாலிக்கொடி இருக்கு. மோதிரம், வளையல் இருக்கு, லெட்டர் இருக்கு, பிரிக்கலை. செல்வா பீரோ திறந்து க்ளவுஸ் எடுத்து மாட்டி ப்ளாஸ்டிக் பை திறந்தான். மெல்ல கவிழ்த்தான். தாலிக் கொடியும், மோதிரமும், வளையலும் மேஜையில் விழுந்தன. மேஜை டிராயரைத்திறந்து லென்ஸை எடுத்தான். முகப் பவுடரைத் தூவினான். ஊதினான். ரேகைகள் இல்லை. சுத்தமாய் துடைக்கப்பட்டிருந்தது.

கவர் பிரித்துக் கடிதம் எடுத்தான், இடது கையால் எழுதப்பட்ட ஆங்கில எழுத்துக்கள்.

''நடந்தவை தெரிந்திருக்கும். உன்னால் முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். பாதிப்புக்குப் பதில்பாதிப்பு

ஏற்படுத்தலாம், லாபமில்லை. நஷ்டஈடு தர வேண்டியிருக்கும். காசு முக்கியமில்லை. இன்று நடுநிசியில் பேரம் பேசலாம். ஸி.பி.ஐ. வேலை காட்ட வேண்டாம். உன் மனைவியின் அழகு உன் தெருவில் எல்லோருக்கும் போஸ்டில் அனுப்பப்படும். உனக்கும்.''

செல்வா கடிதம் தூக்கி விளக்கொளியில் பார்த்தான். பாண்டு பேப்பர், ஸ்வஸ்திக் சின்னம், பயனீர் பேப்பர் மில்ஸ். இதுல கை ரேகை தெரியுமா? ஃபாரன்ஸிக் டிபார்ட்மெண்ட் போவோமா? தன்னால் மட்டுமே சமாளிக்க முடியுமா? இரவு 'பேரம்' பேசுவோம். 'உன்னால் முற்றிலும் பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

யார் இது. கந்தசாமியா? அவன் வேலையோ? சாராய லைசென்ஸ் கேஸால கோபமா?''

''நான் தாலிக் கொடி எடுத்துக் கட்டுமா?''

',ம்ம்...''

''நீங்க போட்டு வுட்டுர்றீங்களா இரண்டையும்?''

செல்வா மெல்ல எடுத்து அதை அவள் கழுத்தில் போட்டான். மோதிரத்தை விரலில் மாட்டினான். மோதிரம் அணிந்த கைகளைப்பற்றிக் கொண்டான்.

''ஸாரி அமுதா. இது எனக்கு வச்ச குறி.''

அமுதா தலை குனிந்தாள். ''நானும் ஹோட்டலுக்குள்ள போயிருக்க வேண்டாம்தான். என்ன கேட்கப் போறாங்க?''

''தெரியலை!''

''நீங்க ஏதாவது தேடனீங்களா?''

''ம்!''

''கிடைச்சுதா ஏதாவது?''

''வாசுதேவனைத் தேடிப் போனேன். அட்மிட் ஆயிருக்காரு.''

''எங்க?''



''ஒரு ப்ரைவேட் நர்ஸிங்ஹோம். சலைன் கொடுக்கறாங்க.''

''ஐயோ எப்படி இருக்கு... பார்த்தீங்களா?''

இது காதலா? அமுதா, அவனை நீ நேசிக்கிறாயா?

''உனக்கு அவன் ஏதாவது லெட்டர் எழுதியிருக்கானா?''

''யார்.''

''வாசுதேவன்.''

''லெட்டரா?''

''காதலிக்கிற மாதிரி.''

ச்சே... ச்சே -ஏன் கேட்கறீங்க?''

''சந்தேகம்-''

''எம் பேர்லியா?''

''தெரியலை அமுதா.''

''செல்வா, ப்ளீஸ், நான் வெளிப்படையாதானே பேசினேன். நம்புங்க. நீங்களும் அது மாதிரிப்பேசுங்க, என் மேலயா சந்தேகம்?''

''கொஞ்சம் அதிகம் பழகிட்ட.''

''யார் கிட்ட''

''வாசுதேவன் கிட்ட.''

''நான்ஸென்ஸ்.''

''அலட்டாத அமுதா. தேவைக்கு அதிகமா நீ வாசுதேவன்கிட்ட பேசியிருக்க.''

''சுட்டா செத்துப்போறதவிட்டு அவுத்துப்போட்டு ஏண்டி நின்னன்னு செருப்பால அடிங்க. வாங்கிக்கறேன். ஆனா என்னை அசிங்கமா பேசாதீங்க. உங்களுக்காக டெடி கேட்டடா வாழ்க்கை நடத்திக்கிட்டிருக்கேன். என் மனசை—உடம்பைக் கல்லாக்கிட்டிருக்கேன்.''

''கொஞ்சம் கல் இளகியிருக்கு.''

''எப்படிச் சொல்றீங்க?

''டெக்கரேடிவ்வா இருந்திருக்க.''

''எங்க?''

''ஸ்விம்மிங்பூல்ல.''

''யார் சொன்னது?''

''யார் சொன்னா என்ன. கூலிங்கிளாஸ் நீ போடற தில்லை அமுதா.''

''ஆமா போன வாரம் போட்டேன்.''

''ஏன்?''

''வெய்யில்.''

''வேற காரணம்?''

''என்ன காரணம் இருக்க முடியும் கூலிங் கிளாஸுக்கு?''

''கண் மறைக்கறதுக்கு. உன் முகம் மறைக்கற துக்கு. உன் வெட்கம் மறைக்கறதுக்கு.''

''கடவுளே!''

''நீ இன்னும் மனம்விட்டுப் பேசலை அமுதா. நீ வாசுவை லவ் பண்ணினியா? பண்ற மாதிரி நடிச்சியா? ஜஸ்ட் டாவடிச்சியா?''

''ஐயோ கடவுளே!''

''புலம்பாத அமுதா.''

''நான் புலம்பறேனா? வெளிப்படையா எல்லாம் சொல்லியாச்சு. திரும்பத் திரும்ப சந்தேகப்படற மாதிரியே கேக்கறீங்களே, போலீஸ்காரன் புத்தி போவுமா? நானா ஸ்விம்மிங் போகணும்னு துடியா துடிச்சேன்? அங்கேர்ந்து போன் பண்ணி சேர்த்துடு சேர்த்துடுன்னீங்க. வீட்ல கட்டிருக்கிற கசங்கின புடவையோட வெளியே கிளம்பிட முடியுமா? கொஞ்சம் நீட்டாத்தான் போகணும். எதேச்சையா விபரீதமா நடந்து போச்சுன்னா உடனே நீ அதிகமா பேசினே



அலங்காரமா போயிருக்கேன்னு குதர்க்கமா பேசினா— நான் புலம்பாத என்ன பண்றது?

''இத்தனை வருஷமா பொண்டாட்டிய முழுசா புரிஞ்சுக்காம என்ன குடித்தனம் பண்ணிருக்கீங்க? நான் நல்ல மூட்ல இருக்கும்போது, நான் சந்தோஷா இருக் கற நேரத்துல பாதில உத்தியோகம் அழைக்குதுன்னு எழுந்து போய்டுவீங்க உங்களுக்கு முதல்ல உத்தியோ கம், ரெண்டாவது புள்ளை, மூணாவதா நேரமிருந்து மூட் இருந்தா பொண்டாட்டி பக்கம் திரும்புவீங்க. உங் களுள்ளே உள்ளுக்குள்ள உறுத்தினால் பொண்டாட் டிய சரியா வச்சுக்காம, அவ டாவடிக்கிறாளோன்னு, கேள்வி.''—அமுதா கோபமாய் எழுந்தாள்; உள்ளே போய் கதவு சாத்திக் கொண்டாள்.

''அமுதா...''

''ப்ளீஸ், என்னைத் தனியா விடுங்க.''

'நிஜமாகவே கோபமா? இல்லை குற்ற உணர்வை மறைக்கக் கத்துகிறாளா?' செல்வா தவித்தான். நடுநிசியில் பேரம் பேசுவோம். மணி என்ன, எட்டு பத்து. அதற்குள் மடக்குகிறேன்.

ஒரே எதிரி கந்தசாமி.வெளியே வந்தான்.தோட்டக் கதவு திறந்து மூடினான். காரில் ஏறி உட்கார்ந்தான். ஸீட்டுக்குக் கீழே மொடமொடத்தது. சட்டென்று விலகி கார் லைட் போட்டான். அதே போல பிளாஸ்டிக் கவர், நுனியை மெல்ல தூக்கிச் சாய்த்தான் ஒருகாபினட் சைஸ் போட்டோ இருந்தது. அதில் அமுதா நிர்வாணமாய் இருந்தாள். செழுமையான மார்புகள்படர்ந்துஇருந்தன. பின் கை தூக்கி இருந்தாள். கேசம் கலைந்திருந்தது. கண்களில் கலக்கம் இருந்தது. தொப்புளுக்குக் கீழே சற்று இடம்விட்டு போட்டோ கத்தரிக்கப்பட்டிருந்தது. போட்டோவைத் திருப்பினான். 'நடுநிசி பேரம் பேச லாம்' அதே இடது பக்க ஆங்கில எழுத்து.

NNEMARA PUBLIC LIB

பையை உதறினான். உள்ளேயிருந்த சின்ன துண்டு பேப்பர் காற்றில் பறந்து ஸீட்டுக்கடியில் விழுந்தது. செல்வா குனிந்து எடுத்தான். லேபிள். பிராந்திபாட்டில் லேபிள்.

கந்தசாமி. கந்தசாமியா? புயல் மாதிரி போக் ரோட் பக்கம் போனான். பெரிய தோட்டக்கதவு. நேரே வண்டி நிறுத்தி இறங்கி கதவுகள் விரியத் தள்ளி, வண்டியில் ஏறி, விரைவாக்கி, உள்ளே போய் போர்டிகோவில் நிறுத்தினான்.

வாசலில் இருந்து தபதபவென்று ஆட்கள் வந்தார்கள். போலீஸ். அட்டை காட்டினான்.

''கந்தசாமி எங்கே?'' படியேறினான்.

''ஐயா படுத்துட்டாருங்க.''

''எழுப்பு.''

''எதுக்கு?''

,,எழுப்புடா.'' இடது பக்கமிருந்த ரிவால்வரை உருவினான். ஆட்கள் சிதறினார்கள். மூன்று நிமிடத்தில் கந்தசாமி கீழிறங்கி வந்தார்.

''செல்வராஜ், வா, உட்கார்.''

''என்ன, இப்பவே பேரம் பேச வந்துட்டான்னு பாக்கறீங்களா?''

''பேரமா?''

''என் பொண்டாட்டிய தாயக்கட்டையா வச்சி ஆரம்பிச்சீங்களே. அந்த பேரம்.''

''உன் பொண்டாட்டிய தாயக்கட்டையாவா? புரியலை.''

''பொய் சொல்லாதீங்க கந்தசாமி, நடிக்காதீங்க, ஆம்பளையா இருந்தா என்கிட்ட வாங்க சண்டைக்கு.''

''நான் ஆம்பளை செல்வராஜ். உன்னை அடிக்கணும்னு நினைச்சா சொல்லிச் சொல்லி அடிப்பேன்.

''அப்ப ஏன் பொண்டாட்டி போட்டோ அனுப்பினீங்க?''



''என்ன சொல்ற? தெளிவா சொல்லு, டேய்,குடிக்க ஏதாவது எடுத்தா.''

''ஐயா, இவரோட கார்ல இந்தக் கவர் இருந்ததுங்க. உள்ள துப்பாக்கி வச்சிருப்பாரோன்னு எட்டிப் பார்த்தேன். இது கிடைச்சது.''

பெரியவர் வாங்கிக் கவர் திறந்து பார்த்தார். திரும்பவும் கவரைக் கீழே வைத்தார். வாய் பொத்தி மௌனமாய் இருந்தார்.

''செல்வராஜ்! என் பையன் மேல சத்தியமா, என் குலதெய்வம் சாட்சியா இது நானில்லை. இது ஈனப் புத்திக்காரன் வேலை. இரண்டு ஆள்வுட்டு உன்னை கை வேற கால் வேறயா வாங்குவேனே தவிர, இது கந்தசாமி செய்யமாட்டான். ஏன்னா எனக்கு மூணு பொட்டப் புள்ளைங்க இருக்கு. மனசாலகூட இந்த மாதிரி காயம் பண்ணமாட்டேன் எடுத்துக்கிட்டு போ. நடுநிசி பேரம் பேசலான்னு போட்டிருக்கு. போய்ப் பாரு. என்னன்னு கேளு.''

செல்வா தலைகுனிந்தான். போட்டோ எடுத்தவன் இவர் இல்லை; இவ்வளவு சத்தியம் இவர் செய்ய மாட்டார். இவர் வரி ஏமாற்றுகிறவர். கள்ளக்கடத்தல் ஆள். ஆனால் பொய் சொல்லமாட்டார். ஒரு மெல்லிய தர்மம் உண்டு.

''போ, செல்வராஜ். போய்ட்டு போன் பண்ணு. நீ மட்டும் வந்திருக்கே. உங்க டிபார்ட்மெண்ட் வரலை. ஆக அவனுங்களுக்குத் தெரியாத நீயே வந்திருக்க, சரி, எப்படி இதை டிபார்ட்மெண்ட்ல காட்ட முடியும்? புரியுது. ம்யாருன்னு முதல்ல தெரிஞ்சுக்க. போலீஸுக்கு, போறவன் வரவன் எல்லாம்எதிரி. தேவைன்னா எனக்கு ஒரு ஃபோன் பண்ணு. ஒண்டியா மாட்டாதே. நான் ஆள் அனுப்பறேன். பெரிய போட்டோ எடுத்து கவனமா கட் பண்ணிருக்கான். முறைப்பு காட்டாதே. மஃப்டில ஒட்டுக்கு ஆள் போட்டிருக்கியா?''

"இல்லை."

"டேய், இவங்க பேட்டைக்கு போன் பண்ணி உடனே வீட்டுக்கு ரெண்டு ஆள் அனுப்பு. கழுத்துல வெள்ளைத் துண்டு போடச் சொல்லு. ஒரு அடையாளம். அதுக்குத்தான். ரெண்டு நிமிஷத்துல அவரு வீட்டு வாசல்ல ஆள் இருக்கணும்." கந்தசாமி எழுந்தார். கை கூப்பினார். வாசல் வரை வந்தார்.

"மறுமடி சொல்றேன், இதெல்லாம் நான் செய்ய மாட்டேன். நான் ஆம்பளை. குடித்தனம் பண்ற பொம்பளைய அசிங்கப் படுத்தமாட்டேன். உன் சந்தேகம் நியாயம். ஆனா, யார் எது பண்ணுவாங்கன்னு ஒரு கணக்கு வேணாம்மா?"

"இந்த லேபிளை வச்சுதான்..."

"எது?"

பிரித்துப் பார்த்தார்.

"பிளாஸ்டிக் பைல இருந்துச்சு."

"எங்க அது?"

"இதோ..."

"இது எல்லா பிராந்திக் கடைலையும் பாட்டில் போட்டுக் கொடுக்கிற பை. குடிக்கிறதுக்கு வாங்கியிருப்பான். அதுல போட்டு அனுப்பியிருப்பான். எப்படி வந்துச்சு?"

"வீட்டு வாசல்ல கார்ல போட்டிருக்கான்."

"அப்ப கிட்டதான் ஆள் இருக்கு. வீட்ல தனியாவா வுட்டுட்டு வந்தே... டேய்."

"அனுப்பிட்டேன் ஐயா, ஆள் கிளம்பிடுச்சு."

"சரி, செல்வராஜ் கிளம்பு. போய் போன் பண்ணு. பேமானிங்க."

வீட்டு வாசலில் கார் நின்றபோது இரண்டுபேர் எழுந்து நின்றார்கள்.



"பெரியவர் அனுப்பிச்சாரு."

"சரி."

"என்னாங்க தொந்தரவு?"

"ஆளுங்க வீட்டுக்குள்ள நுழையட்ரை பண்றாங்க."

"சந்தேகமானா அமுக்கிருட்டுங்களா?"

"வேணாம் அடையாளம் பார்த்துக்க."

"நல்லதுங்க." கும்பிட்டார்கள்.

செல்வராஜ் உள்ளே போனான். தெரு முனையில் உள்ள காருக்குள் இருந்தவன் சகலமும் கவனித்தான். கார் மெல்ல திருகிக் கிளப்பினான். செல்வராஜின் வீட்டைக் கார் கடந்து போயிற்று.

"சாப்பிட வர்றீங்களா?" அமுதா சமையலறையிலிருந்து கேட்டாள்.

"வேணாம். பசியில்ல. பால் மட்டும் போதும்."

பால் ஆற்றி எடுத்து வந்தாள்.

"ஏதாவது கிடைச்சுதா?"

"இல்லை."

"நான் பேசினது தப்பா?"

எனக்குப் புரியலை.

எது?

எதுவுமே.

அமுதா பேசாது பால் ஆற்றி மேஜையில் வைத்தாள். எதிர் நாற்காலியில் உட்கார்ந்தாள். மேஜையில் தலை கவிழ்ந்து கிடந்தவனை மெல்லத் தடவினாள்.

நடுநிசிக்குக் காத்திருந்தான். பன்னிரெண்டு பத்துக்குப் போன் மணி அடித்தது. செல்வா தயாராக இருந்த டேப்ரெக்கார்டர் எடுத்தான். போனோடு பொருத்தினான். நிதானமாய் ரிஸீவர் தூக்கினான். உடம்பு முழுவதும் காதாய் மாற்றி 'யெஸ்' என்றான்.

''ரிஸீவ்ட் போட்டோ?

''யெஸ்.''

''வீ ஆர் மிலிடண்ட் குரூப், பஞ்சாப்.''

''அடப் பாவிங்களா.''

''யெஸ்,''

''எங்களுக்கெதிரான சி.பி.ஐ. நடவடிக்கை பற்றி எங்களுக்குத் தகவல் வெண்டும்.''

''நான் சி.பி.ஐ. இல்லை. போலீஸ்.''

''நீ யாரென்று எங்களுக்குத் தெரியும். வெட்டிப் பேச்சு பேசாதே.''

''சொல்.''

''என் முதல் ஒத்துழைப்பாய் எங்கள் தோழர்களைத் தகனம் செய்த இடம் தெரிய வெண்டும்.''

எனக்குத் தெரியாது. ஆபீஸில் கேட்க வேண்டும்.''

''கேட்டுச் சொல்.''

''மறுத்தால்?''

''உன் தெருவில் முதல் வீட்டுக்கு உன் மனைவியின் போட்டோ—அவள் மட்டும் நிர்வாணமாய் இருக்கும் போட்டோ அனுப்பப்படும். படிப்படியாய்...''

''படிப்படியாய்?''

''நீ சம்பந்தப்பட்ட எல்லா இடத்துக்கும் போட்டோ போகும்.''

''தகவல் எங்கே சொல்லு.''

''ஒரு நிமிடம்,'' எதிரே மௌனம் நின்றது. மௌனத்தின் பின் ஒரு ஒலி கெட்டது.

''தகவல் எங்கே—சொல்லு,''

''நாளை சொல்கிறோம்.''

''எப்போது?''



''நடுநிசியில்.'' போன் துண்டிக்கப்பட்டது.

செல்வா போனை வைத்தான். அவசரமாய் டேப்பை ரிவைண்ட் செய்தான். பெரிதாக்கினான். காதில் வைத்துக் கொண்டான்.

''தகவல் எங்கே சொல்லு?''

''லவ் லவ் என்பதா
சொல் சொல் மன்மதா
சொன்னால் போதுமா
தாகம் தீருமா?''

நடுநிசியில் ரேடியோ உண்டா? இல்லை. அப்படியானால் இது டேப் ரிக்கார்டர். பஞ்சாப் மிலிடண்ட் இந்தப் பாட்டு கேட்பானா. தமிழ் பாட்டு. ஏன் கேட்கப் போகிறான்? டீக் கடை, ஹோட்டல், எந்த டீக் கடையில் பாட்டு செல்வா போன் சுழற்றினான்.

''ஐயா!''

''நான்தான், சொல்லு செல்வராஜ்.''

''பஞ்சாப் மிலிடண்ட்...''

''ம்...நீ எப்படி இதுல...''

''அவங்க கோவில்ல போன மாசம் சண்டை நான்தான் முதல்ல உள்ள பூந்தேன்.''

''என்னவாம்?''

''தகவல் சொல்லணுமாம்; ஆபீஸ் நடவடிக்கை பத்தி...இல்லேன்னா எல்லோர்க்கும் போட்டோ அனுப்புவான்.''

''ம்...ம்...''

''ஐயா, அக்கினி நட்சத்திரம் பாட்டு கேட்குது நடுவுல. கேளுங்க.'' ரிவைண்ட் பண்ணி, டேப் ரெக்கார்டரை போன் வாயில் பொருத்தினான்.

''ஒண்ணு செய்.''

''கார் எடுத்துக்கிட்டு சரசரன்னு எல்லா இடமும் ஒரு ரவுண்ட் அடி. உடனே ஓடு. இது தொடர்ச்சியா பாட்டு வருமில்ல. இடம் குறிச்சுக்க. நான் என் ஆளுங்களை

அனுப்பறேன். நாலா பக்கமும் அனுப்பறேன். டீக் கடைப் பசங்க டேப் போட்டிருப்பாங்க. அரை அவர் பொறுத்து மறுபடி போன் பண்ணு.''

கந்தசாமி வீட்டு நாலு போனும் சுழற்றப்பட்டன. ஆட்கள் எழுப்பப்பட்டு பாட்டு ஒலிக்கும் டீக் கடை தேடினார்கள். கந்தசாமி வீட்டை விட்டு இறங்கினார். கார் ஏறினார்.

''எங்க இந்நேரத்துல?'' மனைவி கேட்கும்போது... நின்றார். ''மானங்கெட்ட பசங்க குடித்தனம் பண்ற பொம்பளையை அசிங்கம் பண்றாங்க.''

கார் கிளம்பிற்று.

ஹிந்திப் பாட்டு, நாதஸ்வரம், பி.பி.எஸ், ஒரு முஸ்லிம் வீட்டுக் கல்யாணத்தில் பேண்ட் வாத்தியம். நூறு கடைகளுக்கு இரண்டு கடைகள்தான் திறந்திருந்தன. ஒரு குல்ஃபி ஐஸ் வண்டியில் டேப் ரெக்கார்டர் போயிற்று. செல்வா வண்டியை மடக்கினான். விசாரித்தான். அக்னி நட்சத்திரம் கேஸட்டே இல்லை. இனிமேல் ஓடுகிற வண்டில டேப் போட்டால் எலும்ப முறித்துவிடுவேன் என்று எச்சரித்து அனுப்பினான். சரியாய் தேடுகிறோமோ, ஒற்றை ஆளாய் நகரில் பதினைந்து நிமிடம் முன்பு ஓடிய பாட்டு வைத்து ஆள் தேடுவது சரியா, புத்திசாலித்தனமா?''

நாற்பது நிமிடங்கள் கழித்து பப்ளிக் பூத்தில் அலுப்புடன் கந்தசாமி எண்கள் சுழற்ற, எங்கேஜட் டோன் வந்தது. காத்திருந்து மறுபடி சுழற்ற மணி அடித்தது.

''செல்வராஜ் ஸ்பீக்கிங்.''

''ஐயா, வணக்கம். நான் பெரியவரு செகரட்டரி பேசறேன், உங்களை உடனே வால்டாக்ஸ் ரோடு வரச் சொன்னாங்க.''

''என்ன?''

''தெரியலை. உடனே வரச் சொன்னாங்க.''



கார் திரும்பி சென்ட்ரல் ஸ்டேஷன் பாதை நோக்கிப் போயிற்று. பாலம் ஏறி வளைந்து வால்டாக்ஸ் ரோடு திரும்ப ஜெனரல் ஆஸ்பத்திரி.

எதிரே சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கம் கந்தசாமியின் கார் நின்றிருந்தது. பின்னே போய் நிறுத்தினான். இறங்கினான்.

''செல்வராஜ். இந்த டீக்கடைல அந்தப் பாட்டு கொஞ்சம் முன்னாடி போட்டாங்களாம்.''

''யார் சொன்னது?''

''என் ஆள். என் லாரி எட்டு ஒடுதே. இங்க இப்பதான் நிறுத்தினானாம். என்ன செய்யணும்னான்?''

ஒரு லுங்கி ஆள் ஓடி வந்தான்.

''உட்கார்ந்து கேட்டேங்க.''

''போன் எங்க இருக்கு?''

''அந்த ஃபார்மஸில இருக்கு.''

''தாடிக்காரன் யாராவது போன் பண்ணாங்களா கேளு.''

''ரெண்டு பேர் போன் பண்ணாங்க. வந்து டீ சாப்பிட்டாங்க.''

''எங்க இப்போ?''

''போயிட்டாங்களே.''

''எந்தப் பக்கம்?''

''தெரியலையே?''

''வால்டாக்ஸ் ரோடில் நிறைய ஹோட்டல்கள் உண்டு. சந்துகளில் எல்லாம் லாட்ஜுகள் உண்டு. எதைத் தேட?''

''செல்வா கத்தி புண்ணியமில்லை. உள்ள உட்காரு, இந்த இடம்னு உள்ள பட்சி சொல்லுது. மறுபடி போன் பண்ண வரலாம். உட்காரு, டேய். மோட்டார் சைக்கிள் வச்சிருக்கிறவன் யாரு? ரெண்டு

பேர் ரோடு முழுக்க சுத்திக்கிட்ருங்க. தாடிக்காரன் சந்தேகப்படற மாதி[illegible]ருந்தா வந்து சொல்லுங்க."

மோட்டார் [illegible]சக்[illegible]ள் இரண்டு மேலும் கீழும் அலைந்து கொண்டிருந்தன.

"அப்பா, என்ன ஆங்கேதகராறு?" மாருதியிலிருந்து அவர் பையன் இறங்கினான். செல்வராஜைக் கண்டதும் மிரண்டான்.

"உன்னைத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன் வா. உள்ள வா. இவுக ஊடு தெரியுமில்ல?"

"தெரியும்."

"நம்ம ஊட்டுக்குப் போய் உங்க அம்மாவையும் தங்கச்சியையும் எழுப்பு. இவரு ஊட்டுக்குக் கூட்டிக் கிட்டுப் போ. இவர் சம்சாரத்தை இங்க கூட்டிக்கிட்டு வா. செல்வராஜ், ஒரு லெட்டர் கொடு."

"அமுதா உடனே வா." என்று எழுதினான்.

"எதுக்கு உங்க வீட்ல சிரமம்?"

"இவனா போய் கூப்பிட்டா நல்லா இருக்காதுல்ல. அதான். நீ போய் அம்மாவோட இவங்க ஊட்டம்மாவையும் அழைச்சிட்டு வா. செல்வராஜ் நீ போய் வீட்டுக்கு போன் பண்ணு. சென்ட்ரல் உள்ள டெலிபோன் இருக்கும்."

அமுதாவுடன் செல்வா டெலிபோனில் தொடர்பு கொண்டான்.

அமுதா தூங்கி வழியும் பையனுடன் அம்பாஸிடர் காரில் வால்டாக்ஸ் ரோடு வந்தாள்.

"தங்கச்சி எழுப்ப முடியலைப்பா. அம்மாதான் வந்திருக்காங்க. தடித்த மூதாட்டி மெல்ல மாருதி விட்டு இறங்கி அவர் அருகே வந்தாள்.



"இவர் ஊட்டு பொம்பளைய மிரட்டராங்க. ஆள் புழங்கற இடம் மாட்டுச்சு. ஆள் அடையாளம் காட்டணுமில்லை அதான், உட்கார்."

பையன் அம்பாஸிடரில் தூங்க, கிழவி பெரியவரின் காண்டஸாவில் தூங்கினாள். பெரியவர் கல்லாய் உட்கார்ந்திருந்தார். அமுதாவும் செல்வாவும் அம்பாஸிடரில் முன் சீட்டில் அமர்ந்திருந்தார்கள். இது பலனளிக்குமா? வெட்டி வேலையா? விடியும் நேரம் நாலு மணி. பால் வண்டிகள் தொடர் பயணமாக வந்தன.

டீக் கடையில் மறுபடி பாட்டுப் போட்டார்கள்.

"ராஜா ராஜாதி ராஜன் இந்த ராஜா..." இசை எகிறிக் குதித்தது. ஐந்து மணிக்கு டீக் கடையில ஆட்கள் அதிகமானார்கள். சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து முழு கம்பளி போர்த்தி தலைமூடி இரண்டு ஆட்கள் டீ குடிக்க வந்தார்கள்.

டீக் கடையிலிருந்து பெரியவர் ஆள் அருகே வந்தான்.

"இரண்டு பேரும் தாடிக்காரங்க சார்"
"அமுதா, பார்."
"தெரியலீங்க."

"நல்லா பார்," வாய் கொப்பளிக்க தண்ணீர் டம்ளருடன் ஒருவன் திரும்ப, அமுதா சிலிர்த்தாள்.

"கிட்ட போய் பார்க்கலாமா?"

பெரியவர் காண்டஸாவிலிருந்து இறங்கி அம்பாஸிடருக்கு வந்தார்.

"போய்ப் பாரும்மா. நீ மட்டும் போ. டேய், எல்லாரையும் பிரிச்சு நிக்க வை. ஓடினா மடக்கச் சொல்லு.

தயாரானார்கள். அவர் ஆட்கள் எல்லோரும் துண்டைக் கழுத்தில் பிடரியில் போட்டுக் கொண்டார்கள். தயார் என்று அர்த்தம்.

''போம்மா, போய் ஒரு கப் டீ கேளு. தலைய போத்திக்க, கூச்சல் போடாதே. நிதானமா இரு. பதட்டப் படாத.''

அமுதா தெரு கடந்தாள். தலையைப் போர்த்திக் கொண்டாள். 'ஒரு கப் டீகொடுங்க' என்று கேட்டாள். அவர்கள்தான், திரும்பி அம்பாஸிடர் கார் பாத்தாள். ஆமென்று லேசாய் தலை ஆட்டினாள். தலையாட்டும் அமுதாவை இருவரும் பார்த்தார்கள். டீ டம்ளரைக் கீழே போட்டு சென்ட்ரல் ஸ்டேஷன் நோக்கி இருவரும் ஓட...

செல்வா பேயாய் ஓடினான், முதலில் ஓடினவன் கால் இடறி இரண்டாமவன் முகத்தில் குத்தினான். புரண்டு நிமிர்வதற்குள் பெரியவர் ஆட்கள் அழுத்திக் கொள்ள பெரியவர் அசையாது நின்றார். கிழவியை எழுப்பி அம்பாஸிடருக்கு அனுப்பினார். இரண்டாவது ஆளைக் கை காட்டினார். அவனைக் கான்டஸாவுக்குக் கூட்டி வந்தார்கள். பின் ஸீட்டுக்குக் கீழே போட்டு உள்ளே நாலு ஆட்கள் உட்கார்ந்து காலில் அழுத்திக் கொண்டார்கள்.

முதல் ஆளை செல்வா சுவரோடு அழுத்தினான். உடம்பு முழுவதும் தடவினான்.

''எங்க இருக்கிற சொல்!'' மறுபடி அழுத்தினான்.

கூட்டம் சேர, பெரியவர் ஆட்கள் விரட்டினார்கள். ''சொல். எங்க தங்கியிருக்கிறாய்?'' மறுபடி அடித்தான். சென்ட்ரலுக்குள் தள்ளிக்கொண்டு போனான்.

''சார், இங்க ரிடையரிங் ரூம்ல இருக்காங்க. நான் பார்த்தேன்.'' ஆர்.பி.எஃப். போலிஸ்காரன் செல்வாவை மேலே கூட்டிக்கொண்டு போனான். போலீஸ்காரன் அடையாளம் காட்ட, பூட்டிய கதவு எட்டி உதைத்துத் திறந்தான்.

''சார் நீங்க யாரு?''

''ஸி.பி.ஐ. சூப்பிரன்ட்டென்ட் ஆஃப் போலிஸ்.''

ஆர்.பி.எஃப் சல்யூட் அடித்தது.



''ஸ்டேஷனுக்குத் தகவல் சொல்லட்டுமா?''

''வேணாம். நிறைய ஆள் இருக்கு. பதுங்கிடும். சும்மா இரு.'' ஆர்.பி. எஃபும் பெரியவர் ஆளும் அவனை அழுத்திக் கொள்ள, உருவிய பிஸ்டலுடன் உள்ளே போனான்.

இரண்டு லெதர் சூட்கேஸ். குப்புறதரையில் அடித்து உடைக்க மூடி திறந்து, கத்தி, டர்பன், துணி, சீப்பு, தாயத்து, துணிமணிகள் கடைசியில் - கடைசியில் நெகடிவ் ரோலாக விழுந்தது. பிரித்துப் பார்க்க பதினேழு படங்கள். மற்றது வெள்ளையான போட்டோ பிரிண்ட்; பேப்பர் ஸல்யூஷன். டார்க் ரூம் தேடி வாடகைக்கு எடுத்து இவர்களே கழுவி பிரிண்ட் போட்டிருக்கிறார்கள். சென்னையில் காசு கொடுத்தால் டார்க் ரூம் கிடைக்கும்.

பெரிய காபினெட் போட்டோ ஆறு உறையிலிடப் பட்டிருந்தது. பாதி வெளியே எடுக்க, நிர்வாணமான அமுதா. உள்ளே சொருகினான். நெகடிவைப் பையில் போட்டுக் கொண்டான்.

''இப்போது விலை பேசு. ஏன் இது?''

''நான் புரட்சி இயக்கம் சேர்ந்தவன். உன்னை மடக்கப் பஞ்சாபிலிருந்து அனுப்பப்பட்டிருக்கிறோம்.''

''உனக்கும் அந்த கோச்சுக்கும் என்ன தொடர்பு?''

''ஏதுமில்லை. உன் மனைவியைஉன் வீட்டிலேயே மடக்கத் தீர்மானித்தோம். ஹோட்டல் அறைக்குள் நுழைந்தபோது பயன்படுத்திக் கொண்டோம்.''

செல்வா திரும்பி அடுத்த பெட்டி உதைத்தான். துணிகள். குரு நானக் படம். படுக்கை பிரித்து சேர்த்தான். இரண்டு கைதுப்பாக்கிகள் கிடந்தன. அறைகளில் அரை பாட்டில்களாக பிராந்தி பாட்டில்கள் இரண்டு இருந்தன. ப்ளாஸ்டிக் கவர் இருந்தது. கைக்குட்டை உதவியால் இரண்டு துப்பாக்கிகளையும் எடுத்து ப்ளாஸ்டிக் கவரில் போட்டான்.

ஆர்.பி.எஃப். ஆளை நேரே போய் போலீஸ் ஸ்டேஷனில் தகவல் தரச் சொன்னான். பெரியவரின் ஆள் ஒருவன் உள்ளே வர அடுத்தவனை அழைத்துவரச் சொன்னான். ப்ளாஸ்டிக் கவர் எடுத்துக் கொண்டான். இந்த ஆளை நெட்டித் தள்ளி கீழே வந்தான். முதல் ட்ரெயின் மெல்ல உள்ளே வந்தது. கூட்டம் தரையிறங்கிற்று.

"ஓடுங்கள். ஓடி உயிர் பிழைத்துக் கொள்ளுங்கள்." இருவரையும் விடுவித்தான்.

திடுக்கிட்டார்கள். மெல்ல பின் வாங்கினார்கள். எதிரே வரும் ட்ரெயின் கூட்டம் நோக்கி ஓடினார்கள்.

செல்வா துப்பாக்கி உயர்த்தினான். ஒருவன் பின் தலைக்குக் குறி வைத்தான். ட்ரிகர் அழுத்தினான் பதினைந்தடி தூரத்தில் உள்ளவன் பின்தலை மீது நச்சென்று ரவை தைத்தது. இரண்டாவது ஆள் ஓடியபடி பயத்தில் திரும்ப அவன் நெற்றிக்குக் குறிவைத்து மறுபடி டிரிகர் அழுத்தினான். இடது கண்ணைத் துளைத்துக் கொண்டு டிரிகர் பின் மண்டை வழியே வந்தது. ரயிலில் இறங்கிய கூட்டம் வெடி சத்தம் கேட்டுப் பயந்து அலறி அலை மோதிற்று. ப்ளாஸ்டிக் பையிலிருந்து துப்பாக்கி எடுத்து அவர்கள் அருகே போட்டான்.

பெரியவர் ஆட்களைப் போய்விடுங்கள் என்று சைகை செய்தான். ஆர்.பி.எஃப் தடதடக்க உள்ளே நுழைந்தது. பெரியவர் ஆட்கள் காணாமல் போனார்கள்.

"ஏன் அவர்களைச் சுட்டுக்கொன்றாய் செல்வராஜ், விளக்கம் சொல்."

"ஐயா, காலையில் என் நண்பர் ஒருவரை எதிர்பார்த்து சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போன நான் சந்தேகப்படும்படி நடமாடிய இருவரைக் காண நேர்ந்தது. பொதுமக்கள் உதவியுடன் மடக்கி விசாரிக்க, அவர்கள் தப்பிக்க முயற்சி செய்தார்கள். துப்பாக்கி



காட்டினார்கள். பயணிகளைப் பயமுறுத்தும் விதத்தில் கொடிய ஆயுதங்களோடு ஓடிய அவர்கள் பொது ஜனங்களுக்கு இடையூறு செய்யுமுன் சுட நேர்ந்தது. ஆர்.பி.எஃப், உதவிக்கு வரத் தாமதமானதால் இந்நிலைமை ஏற்பட்டது."

மனசுக்குள் விசாரணை டைப் செய்யப்பட்டது. ஆர்.பி.எஃப். அதிகாரியிடம் பிணங்கள், அவர்களுடைய பொருட்கள் ஒப்படைத்து விட்டுக் காருக்குத் திரும்பினான்.

பெரியவர் ஆட்கள் கண்ணில் படவில்லை.

பையன் டீ குடித்துக் கொண்டிருந்தான். அமுதா காரிலிருந்து தலை நீட்டினாள். உள்ளே பெரியவர் மட்டும் தலையில் துண்டு கட்டி உட்கார்ந்திருந்தார்.

"சுட்டுட்டீங்களா?"

"ம்ம்"

"போட்டோ நெகடிவ்?"

"எடுத்துட்டேன்"

"பெரியவர் பார்த்தாரா?"

"எது?"

"பெரியவர் பார்த்தாரா?"

"எது?"

"போட்டோ."

"என்ன போட்டோ தம்பி?" பெரியவர் விழிவிரித்து செல்வாவைப் பார்த்தார். கண்களால் எச்சரித்தார்.

"ஒண்ணுமில்லீங்க!"

"மருமக ஏதோ போட்டோன்னுதே"

"நம்ம மெட்ராஸ் ஏரியல் வியூங்க.

"அது சரி" பெரியவர் சாய்ந்து கொண்டார்.

வண்டியை அவர் வீடு நோக்கி செல்வா ஓட்டினான்.

"அப்ப நான் வரேன் தம்பி" பெரியவர் இறங்கி கை கூப்பினார்.

"ஐயா!" செல்வா கீழிறங்கினான். எதிரே கரம் குவித்தான். "எப்படி நன்றி சொல்றதுன்னே..."

''பதிலுக்கு நான் எதுவும் எதிர்பார்க்கலை.எனக்குச் சண்டை உன்னோடதான். உன் வீட்டு மனுஷாளோட இல்லை. அதுதான் உனக்கும், என்னை அடி. நான் தாங்குவேன்.என் வீட்டுக் குழந்தைகளைத் தொடாதே. இது சொல்றதுக்குத்தான் இத்தினியும். போய்ட்டு வா.''

உள்ளே முகம் துடைத்தபடி நகர்ந்தான்.

வண்டி வீடு நோக்கித் திரும்பிற்று.

போன் பண்ணி டிரைவரைக் கூப்பிட்டான். பையன் குளித்துக் கிளம்பி புத்தகப்பை மாட்டி காரில் ஏறி பள்ளிக்குப் போனான்.

பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டு நெகடில் எடுத்துப் பிரித்து மறுபடி பார்த்து அமுதாவிடம் நீட்டினான். போட்டோக்கள் பிரித்துப் பார்த்தான்... அமுதா சகலமும் பார்த்தாள்.

''போய் அடுப்பு மூட்டு. அதுல வாணலி வை.''

காஸ் அடுப்பில் வாணலி ஏறிற்று. சகலமும் அதில் போடப்பட்டது. சிறிதளவு எண்ணை ஊற்றப்பட்டது. நெகடிவ் சுருங்கி மடிய, உள்ளேவிட்ட எண்ணையில் ஒரு நெருப்புக் குச்சி கிழித்துப் போட நடு எண்ணை பற்றிக் கொண்டது. போட்டோ திருதிருவென்று எரிந்தது. புருஷனும் மனைவியும் எரிவது பார்த்துக் கொண்டிருந்தார்கள். முற்றிலும் சுருங்கியதும் அமுதா தண்ணீர் ஊற்றினாள். வாணலியை எடுத்து ஸிங்கில் போட்டு குழாய் திறந்தாள். சாம்பல் நீராகி சாக்கடைக்கு ஓடியது.

அமுதா ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னால் வந்து அருகேநிற்கும்புருஷன்மீது சாய்ந்தாள்.

''அமுதா'' செல்வா குழறினான்.

''ஐ லவ் யூ.'' இறுக்கிக் கொண்டான்.

வானொலியில் செய்தி அறிவிப்பு ஒலிபரப்பாயிற்று. சென்னை சென்ட்ரல் ரயில்வேநிலையத்தில் இரண்டு பயங்கரவாதிகளைப் போலீஸார் சுட்டுக் கொன்றனர். பொதுமக்களுக்கிடையே பயங்கர ஆயுதங்களுடன்



ஓடியவர்களைத் தடுத்து நிறுத்த சுட வேண்டியிருந்தது என்று ஒரு அதிகாரி குறிப்பிட்டார். சுடப்பட்ட இருவரும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அம்மாநில போலீஸாரால் தேடப்பட்டவர்கள் என்றும் தெரிய வருகிறது.

''நான் உங்ககிட்ட அதிகமா பேசிட்டேங்க.''

''நல்லது அமுதா, மனசு விட்டுப் பேசறது ரெண்டு பேருக்கும் நல்லது. இல்லேன்னா உனக்குள்ள ஒரு குறை இருக்கறது எனக்குத் தெரிஞ்சிருக்காது.

''என்ன தெரிஞ்சுது இப்ப?''

''புருஷனுக்குப் பொண்டாட்டி முக்கியம். பொண்டாட்டிக்குப் புருஷன் முக்கியம். உத்யோகம், பிள்ளை இதோட நீ பொண்டாட்டி மேலேயும் அக்கறை காட்டனும், தைரியசாலி அமுதா.''

''நீங்க கொடுத்த தைரியம் தான்.''

''நீ அழகா இருக்கே அமுதா.''

''நீங்க கொடுக்கற சந்தோஷம்.''

''உன்னைப் பார்த்து யாராவது லவ் யூன்னு சொன்னா என்ன செய்வே?''

''எனக்கு வேணும்கற அளவு லவ் என் புருஷன் கிட்ட கிடைக்குது தம்பி. வேற எங்கனா பாருன்னு சொல்வேன்; ஏன் கேட்கறீங்க?''

''பொறாமைதான்?''

''என்ன பொறாமை?''

''இத்தினி திடம், இத்தினி அழகு, யார் வேணா இது காலடியில விழுவான்னு ஒரு பொறாமை.''

''நான் விழ வேணாமா? என்னை விழ வைக்கிற அளவுக்கு ஆம்பளை வேணாமா? இருவத்திநாலு மணி நேரத்துல கண் மூடாம பொண்டாட்டி தொட்டவனைத் தேடி நெஞ்சு மிதிக்கற ஆம்பளை எங்க கிடைக்கும் எனக்கு?''

''அமுதா''

''சொல்லுங்க.''

''என்னை லவ் பண்றியா?'' செல்வா தழுதழுத்தான்.

சை...என்ன கேள்வி இது. பாய்ந்து இறுக்கிக் கொண்டாள். அவர்கள் பேசாமல் காதலித்தார்கள். சொல்லாமல் செய்தார்கள். திரைகானம் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. கேட்பதைவிட பாடுவதைவிட இறுக்கி இணைத்துக் கொள்ளும் போது சத்தம் அதிகமிருந்தது.

செல்வா விடுவித்துக் கொண்டான். அவளைத் தூங்க விட்டான். தூங்கியதும் மறுபடி பேண்ட் பாக்கெட்டில் கை விட்டுக் கவிதையை எடுத்தான். கிழித்தான். பெரியவர் நிர்வாண போட்டோ பார்த்ததை அமுதாவிடம் சொல்லவில்லை. சொன்னால் கூசுவாள் என்று சொல்லவில்லை. நானும் சொல்ல மாட்டேன். இந்தக் கவிதையைப் பற்றிப் பேசமாட்டேன்.

கவிதை கம்மோடில் மிதந்தது. தடி சுழற்றி நீரடிக்க, உள்ளே போயிற்று.

ஓ ஓ ஓ.

''மிஸ்டர் செல்வராஜ்.''

''எஸ் ஸார்.''

''அந்தப் பசங்க இரண்டு பேர் ப்ராப்பர்ட்டீஸ் செக் பண்றப்ப இந்த போட்டோ கிடைச்சுது. என்ன இது உனக்கு ஏதாவது தெரியுதா பார்.'' —டி.ஐ.ஜி. போட்டோ நீட்டினார்.

திக்கென்றது.

ஒரு பெண்ணின் நிர்வாண போட்டோ கால் விரலிலிருந்து கொலுசு கோர்த்த கணுக்கால், முழங்கால் தொடை அடி வயிறு வரை நிர்வாணமாய் இருக்கும் போட்டோ மேல் பகுதி கத்தரிக்கப்பட்டிருந்தது.

''தலைகாணி உறைக்குள்ள இருந்தது. வாட் ஈஸ் இட்?''



''இவங்க மாதிரி ஆளுங்க செக்ஸ் பர்வர்ட்ஸ் ஸார்.''

''இருக்கும். கிழிச்சுப் போட்டிருங்க. நம்ம டிபார்ட்மெண்ட்ல இது பார்க்கவே பெரிய கும்பல் வரும். கிழிச்சிடுங்க,''

செல்வா மறுபடி அந்த போட்டோவைப் பார்த்தான்.

அது அவனுக்குப் பரிச்சயமான கால்கள், அவன் வாங்கிய கொலுசு, அவனுக்குப் பிடித்த முழங்கால், அவன் தொட்டுத் தடவிய தொடைகள். அவன் காதலிக்கும் பெண். அவன் மனைவி.

மெல்லக் கிழித்தான்.

''எரிச்சுடுங்க, செல்வராஜ்.''

டி.ஐ.ஜி. தீப்பெட்டி நீட்டினார். கிழிக்கப்பட்டவை எரிந்தது. சாம்பலாயிற்று.

''சார், எனக்கு ஒருவாரம் லீவு வேணும்.''

''டி.ஐ.ஜி. அவனை விநோதமாய்ப் பார்த்தார்.

''கார் ஆபீஸ் வாசல்ல விட்டுட்டேன் சார். சாவி இங்க...'' நீட்டினான்.

''எப்படிப் போவீங்க வீட்டுக்கு?''

''ஆட்டோல போயிடறேன் சார்.''

''செல்வா.''

''தேங்க் யூ சார்.'' மறுபடி சல்யூட் அடித்தான். வெளியேறினான்.

வெளியே நடந்து நின்றிருந்த ஆட்டோவின் முதுகு தட்ட உள்ளே டேப்ரிக்கார்டர் பாட்டு பட்டென்று நின்றது. அபிராமபுரம் என்று சொல்ல மெல்ல நகர்ந்தது. ஆட்டோவில் கூட டேப் உண்டா? கடவுளே...

''பாட்டு போடேம்பா.''

''வண்டி ஓட்டறச்சே பாட்டு போட்டா போலீஸ் புடிச்சுக்கும்.'

''பரவால்லை போடு சின்னதா வை.''

ஆட்டோக்காரன் சுவிட்ச் தட்ட,

"உனக்கே உயிரானேன் எந்நாளும்
எனை நீ மறவாதே
நீயில்லாமல் எது நிம்மதி? நீதானே இனி
என் சந்நிதி."

செல்வா கண்களை மூடிக் கொண்டான். அன்பு வேண்டுமெனில் கெஞ்சத்தான் வேண்டும். என்னை நீ மறவாதே என்று யாசிக்க வேண்டும். அதிகாரத்தில் அன்பு வருமா? ஆளுமை வருமா? அதிரடிக்குக் கட்டுப் படுமா? அயர்ச்சியோ அலுப்போ காட்டினால் தோன் றுமா? கெஞ்சு செல்வா கெஞ்சு. அன்பு வேண்டுமெனில் மண்டியிடு.

"ஏம்ப்பா என்ன படம் இது?"

"பழைய படம் சார். மூன்றாம் பிறை. பாலுமகேந் திரா படம். நான் ஆறு தடவை பார்த்தேன் சார்."

இந்தப் படம் வீடியோ கேஸட் கிடைக்குமா என்று பார்க்க வேண்டும். வீட்டில் கேஸட் போட்டு அமுதா வின் விரல் பின்னி படம் பார்க்க வேண்டும்.

"என்னப்பா நீயும் அம்மாவும் என்னை வுட்டுட்டு படம் பார்க்கிறீங்க?" பிள்ளை பள்ளியிலிருந்து திரும்பி கொஞ்சும். அவனுக்காக மறுபடி போட்டுப் பார்க்க வேண்டும்.

"கண்ணே கலைமானே
கன்னி மயிலெனக்
கண்டேன் உனை நானே."

பாட்டு செல்வாவை வருடிக் கொண்டிருந்தது.

—முற்றும்—



## சில விமர்சனங்கள்

பெ. வடிவேல் 23, வேப்பந்தோப்பு தெரு
திண்டுக்கல்

எனக்குப் பிடித்த பாத்திரம் கந்தசாமி. கந்தசாமியைப் போன்ற வரி ஏய்ப்போர் களுக்கு இப்படியும் ஒரு முகம் இருக்கக் கூடும். அதுபோன்ற சில கேரக்டர்களை நான் அனுப வத்தில் சந்தித்திருக்கிறேன். குடி, கஞ்சா, புகைப்பழக்கம் உள்ளவர், பெண்கள் விஷயத் தில் நெருப்பு. சற்றே மாறுதலான கதை.

பெ. வடிவேல்

★

கே. ஜெகன்னாதன் 18, அழகப்பா நகர்
மஞ்சக்குப்பம்
கடலூர்—1

சமீபத்தில் தங்கள் நாவல் "இனி என் முறை" படிக்க நேர்ந்தது. முதலில் 'என்னடா இவர்? க்ரைம் கதையில் நுழைகிறாரே, என்ற ஒருவித தயக்கத்துடன் ஆரம்பித்தேன். பிறகு தங்களின் வழக்கமான நடையில் என்னை மறந்து ஒன்றி விட்டேன். மற்ற க்ரைம் கதை

களுடன் ஒப்பிடும் போது தங்கள் கதையில் ஒரு யதார்த்தத்தைக் கண்டேன்.

கே. ஜெகந்நாதன்

★

C.D. ஞானேஸ்வரன் 2, மஹால் ஹார்ஸ் ஸ்டேபின் தெரு

மதுரை-625001.

'இனி என் முறை' என்ற கதை அருமையாய் அமைந்துள்ளது. கந்தசாமி பாத்திரம் (நாயகன் முதலியார் பாத்திரம்) என்னை அசத்திவிட்டது. 'அன்பு வேண்டுமெனில் மண்டியிடு' நீங்கள் எழுதியது சத்தியமான வார்த்தை (வாக்கியம்). எழுத்தாளர் பாலகுமாரனாய்க் கதையை ஆரம்பித்துவிட்டு சினிமா டைரக்டர் பாலகுமாரனாய்க் கதையை முடித்திருக்கிறீர்கள். என் வோட்டு எப்போதும் எழுத்தாளர் பாலகுமாரனுக்குத்தான்; மாற்றம் இல்லை,

C. D. ஞானேஸ்வரன்

★

சாவித்திரி

'இனி என் முறை' நாவல் படித்தேன். வழக்கமான பாலாவின் நடையிலிருந்து சற்றே மாறுபட்டது. (நிலாவே வா type). எனக்கு மிகவும் பிடித்திருந்தது. பாலாவின் சமீபத்திய கதைகளில் அதிகம் கவிதை (?!) இடம் பெறுவது நன்னா இருக்கு.

சாவித்திரி



C D S. ரவிச்சந்திரன் 41, பாரதி தெரு கோகுலபுரம் செங்கல்பட்டு 603 001

ஒரு கதை என்றால் அதை இலக்கிய ரீதியாக ஆராய்ச்சி செய்யும் ஞானம் எனக்கில்லை. அதனால் இந்தக் கதையில், எங்கோ இடறுகிறதே—அது என்ன என்றும் தெரியவில்லை. Violence கதை உங்களுக்குப் புதியது கிடையாதே! உதாரணத்திற்கு மெர்க்குரி பூக்கள். ஆனால் இதைப் படித்தபின், எனக்கு ஒரு லேசான அச்சம் ஏற்பட்டது. 'திரையுலகம் ஒரு எழுத்தாளனின், கதையின் நடையைக்கூட மாற்றிவிடுமா?' என்ற சந்தேகம் ஏற்பட்டது.

C. D. S. ரவிச்சந்திரன்

★

தி. கிருஷ்ணமூர்த்தி 67, எல்லை அம்மன் கோவில் தெரு மேற்கு மாம்பலம் சென்னை-600 033

தங்களின் 'இனி என் முறை' கதை படித்தேன். க்ரைம் கதையும் எழுத முடியும் என்று நிரூபித்துள்ளீர்கள். அமுதா, செல்வராஜ், திலீபன், கோச் எம். ஆர். வாசுதேவன், பஞ்சாப் தீவிரவாதிகள் இருவர், கந்தசாமி என்று பாத்திரப்படைப்புகள். நிமிர்ந்து நிற்கிறீர்கள்.

தி. கிருஷ்ணமூர்த்தி

★

# யானை வேட்டை

## 1

தேன்மொழி மெல்லக் கண் விழித்தபோது, விட்டத்தில் ஒட்டியிருந்த காகிதத் தாமரைதான் கண்ணில் பட்டது.

அது தாமரையா? சூரியனா...?

தலையை மெல்ல உலுக்கி தேன்மொழி அதை உற்றுப் பார்த்தாள். கையகலத்தில் கலர் ட்ரேஸ் பேப்பரில் அடுக்கடுக்காய் ஒட்டப்பட்டு ஒன்றின் மேல் ஒன்று பொருத்தப்பட்டு நடுவில் கோந்து தடவி சுவரோடு பதிந்து கிடந்தது. முதலில் நீலம், பிறகு மஞ்சள். பிறகு சிவப்பு... எல்லா இதழ்களும் தரை பார்த்துத் தொங்கின.

நர்ஸிங்ஹோமில் ஏன் கலர் தாமரை ஒட்டுகிறார்கள்? யாருக்காவது பிறந்தநாள் கொண்டாடியிருப்பார்களோ? தீபாவளி, நவராத்திரி என்று பண்டிகைக்கு ஒட்டியதாய் இருக்குமோ? இல்லை புது வருடம், கிறிஸ்துமஸ் என்று நடந்திருக்குமோ?

நர்ஸிங்ஹோம் பண்டிகை கொண்டாடுமோ? காகிதத் தாமரை அழுக்காய் இருக்கிறது, ஒட்டி நாளாகியிருக்கும்போல் தெரிகிறது. எவ்வளவு நாள் இருக்கும்? தொங்கும் ஓர் இதழைத் தடவிப் பார்த்தால் தெரிந்து



விடும். காகிதத்தின் மீது படிந்திருக்கிற தூசியை வைத்து அது ஒட்டப்பட்ட காலத்தைச் சுமாராகக் கணித்துவிட முடியும். பார்த்துக் கணிக்க முடியுமா? உற்றுப் பார்க்க வேண்டும். முதல் இதழான நீலத்தில் அழுக்கு அதிகமில்லை. இரண்டாவது மஞ்சள். அதில் சிவப்பை விட அதிக அழுக்கு. மஞ்சள் நிறமென்பதால் அழுக்கு அதிகம் தெரிகிறது. சிவப்பு சுருண்டு கொண்டிருக்கிறது. வெளிச்சம் பட்டு சற்று வண்ணம் வெளுத்துப் போயிருக்கிறது. மஞ்சள் நிறத்தில் உள்ள அழுக்கை எக்ஸ் என்று எடுத்துக் கொள்வோம்.

ச்சேய்... என்ன புத்தியிது? அகழ்வாராய்ச்சி புத்தி. ஆர்க்கியாலஜி புத்தி. நர்ஸிங்ஹோமில் கிடக்கிற போதும் அழுக்கை ஆராய்கிற புத்தி. பழங்காலத்திலேயே இருக்கிற புத்தி கேள்வி கேட்கிற புத்தி. கற்பனையில் மிதக்கிற புத்தி.

"நிகழ்காலம்தான் உசத்தி. போனதோ வரதோ முக்கியமில்லை. ப்ரஸண்ட் ஈஸ் இம்பார்ட்டண்ட், உனக்கு வேலை பழசு தேடறது. புதை பொருள் ஆராய்ச்சி அதுக்காக உம் பழசு எம் பழசெல்லாம் சொல்லிண்டிருக்க வேண்டிய அவஸ்யமில்லை. கட் ஐ லே" வரதராஜன் அடிக்கடி சொல்வான். விடுதியில் புருஷனை நினைக்க கூடாதாம். ர் விருதியில் தான் நினைக்க வேண்டுமாம். நினைப்பு இருக்கட்டும், வரதுவோடு பேசும்போது கூட ஒருமை வந்து விடுகிறது. 'சரியான தத்தி நீ' என்று வாய் வந்து விடுகிறது, கோபத்தில் மட்டுமில்லை; கொஞ்சலிலும் ஒருமைதான் ஆளுமையாகிறது.

"தடிமாடே. மூச்சு முட்டுது. கீழே இறங்கு..." என்று தள்ளுகிற போதும்... 'ச்சேய்... முதுகு முழுக்க பிசுபிசுன்னு' ஒட்டுது. குளிச்சுட்டு வந்து படுக்கறதுக்கென்ன?—எழுந்துரு...எழுந்துரு, சொல்றேன், போய்க் குளி, குளிச்சிட்டுப் பல் தேச்சிட்டு வா." முயங்க வந்த

வனை இழுத்து விலக்கிப் பாத்ருமுக்குள் அடைத்து, குளித்துப் பல்தேய்த்து வுட்டு வந்தவன் தலை துவட்டி, ஈரம் தெரிகிற சில்லென்ற தலையை நெஞ்சில் அழுத்திக் கொஞ்சுவது உண்டு. ஷவரில் நின்றதற்குப் பிறகு உடம்பு உஷ்ணம் முற்றிலும் அடங்கி வரது திண்டாடும்.

"என்ன இன்னிக்கு வச்சுக்குவமா... வேணாமா..." என்று கண் சிமிட்டி வேண்டுமென்றே இடுப்பை அசைந்து ஒயில் காட்டி நடக்கிறபோது கோபம் கொள்ளும். "நீ குடித்தனம் பண்ற பொம்பளையே இல்லை."

"சரி, இல்லை... என்ன அதுக்கு?"

"சரியான தேவிடியா. ஜாதி தேவிடியா."

"ஆமா, நான் தேவிடியா ஜாதி. என்ன செய்யப் போற?"

"மயிரைப் புடிச்சு நாலு அறை விடணும் போல இருக்கு."

"ஒண்ணும் ஆட்ட முடியாது. வேலைல திமிரு காணம். பேச்சு மட்டும்... மீசை, வேட்டி வேற கேடு உனக்கு."

"ஏய்..."

"என்ன... என்ன ஏய்?"

"கழுத்த நெரிச்சுக் கொன்னுடுவேன்."

"கொன்னுடுவியா?"

"எச்சகலை நாயே..." வரது பேயாய் எழுந்திருக்கும். ஓங்கின கையை மடக்கி புஜத்தில் வெடுக்கென்று கடித்து, அது வலி தாளாமல் சுளீர் சுளீரென்று முதுகில் அறைய படுக்கை அறைக்கு ஓடிப்போய் ஐஸ் வாட்டர் ப்ளாஸ்டிக் பாட்டிலை ஆயுதமாக்கி...

"கிட்டே வந்தே ஊத்திடுவேன்" என்று கூச்சல் போட்டு...



அது பளீரென்று பாட்டிலைப் பிடுங்கி படுக்கையில் தள்ள, மேலேறி உட்கார்ந்து தலையணையோடு முகத்தை அழுத்திக் கொக்கரிக்கும்.

"தேவிடியா... மகளே. உன்னைக் கதறக் கதறக் கற்பழிக்கிறேன் பார்..." என்று வசனம் பேசும். இடுப்பில் அழுந்த முழங்காலிட்டு உட்கார்ந்துகொண்டு வெடுக்வெடுக்கென்று இடம் பாராமல் கிள்ளும்.

ஆனால் வரதுக்கு இடுப்பை வருடினால் தாங்காது. மெல்ல கையை விடுவித்துக்கொண்டு இடுப்பைக் கிச்சு கிச்சு மூட்ட, பாம்பாய் நெளியும், கையை மறுபடி மடக்கப் போராடும். சிரிப்பும் கோபமுமாய் அழுந்தப் பற்றிக் கொள்ளும். பளீரென்று கன்னத்தில் அறையும், உதட்டைச் சுண்டுவிரலால் வலிக்க சுண்டும், மூக்கையும் வாயையும் அழுந்தப் பொத்தி சுவாசமில்லாது திணற அடிக்கும்.

முடியலை முடியலை என்று திமிறித் தளரும்போது அரசாட்சி செய்யும்.

களைத்துப் படுக்கையில் விழும் வரதுவைத்தான் மிகவும் பிடிக்கும். ஒருக்களித்து வியர்வை வழியும் நெஞ்சை நீவி 'ஏய்...என்னைப் பிடிச்சிருக்கா உனக்கு' என்ற கேள்வி வரும்.

வரது பதில் கூட சொல்லாது. இடக்கையைச் சுற்றிப் போட்டு தோளைச் சின்னதாய் அழுத்தும். திரும்பி கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொள்ளும். புடைவைத் தலைப்பால் உடம்பு முழுவதும் துடைத்து, அது தூங்கின பிறகு அதையே உட்கார்ந்து பார்த்திருக்கத் தோன்றும்.

இது பழக, பழைய சந்தோஷம். ஆனாலும் மறக்க முடியுமா? ஆயிரம் ஜென்மத்துக்கு என் புருஷனாயிருன்னு வேண்டுதல் வருகிறதே... அது எதிர் காலமா? வேண்டுதல் வேண்டாம் என்று ஆகிவிடுமா?

வரது. மனுஷாளுக்கு நிகழ் காலத்திலேயே இருக்க முடியாது. இருக்க அவஸ்யமில்லை. கனவும், கடந்ததும் கலந்ததுதான் வாழ்க்கை.

கனவு பிரமிப்பு.

கடந்தது சரித்திரம். சரித்திரமில்லாத ஓர் உயிர் உண்டா? ஒரு ஜீவன் உண்டா? புல்லுக்கும், புழுவுக்கும்கூட சரித்திரம்இருக்கிறது வரது, எப்படி ப்ரஸண்ட்லமட்டும் மனுஷரா இருக்க முடியும்?

மனித ஜாதிக்கு அஹிம்சை என்கிற இயல்பே இல்லை என்பது சுத்தமாய்த தெரிகிற இடம் படுக்கை அறைதான். பெண்ணும் சரி, ஆணும் சரி, அடிப்படையில் மிருகங்கள்தான் என்பது இரவில்தான் புரிகிறது. அந்த மிருகத்தை ஒளித்து ஒளித்து உள்ளே வைத்துப் பூட்டிக்கொண்டு, வெளியே நாகரிகம் காட்டுகிறான். இரவில் மிருகம் தன்னிச்சையாக, அதைக் காமம் என்கிறான். இரவிலும் அதைக் கட்டிப்போட, அது எப்போது வேண்டுமானாலும் எகிறும். எந்த நேரத்திலும் சங்கி அறுக்கும்

மிருகம் சங்கிலி அறுக்காமல் சுதந்திரமாய்த் திரிய ஓர் இடம், ஒரு நேரம், ஒரு விஷயம் தேவை, உள்ளே திமிறும் மிருகத்துக்கு இரவு நேரம், உணவு போட, அது பகலில் தூங்குகிறது. வேறு விஷயங்களில் லயிக்கிறது.

என்றைக்கெல்லாம் காமம் திருப்தியாய் இதமாய் இருந்ததோ அன்று பகல் எல்லாம் குடித்தனம் ஆண், பெண் இருவருக்குமே சுகமாய் இருக்கிறது. எந்தக் கோபமும் தோன்றாமல், சிடுசிடுப்பில்லாமல் ஒரு ரம்யம் ஒட்டிக் கொள்கிறது.

காலையில் காபி கொண்டு போய்க் கொடுக்க, வரது கண்சிமிட்டி வாங்கும்.

''பர்ஸில் இரண்டு ருபா இருக்கு எடுத்துக்க.''



''எதுக்கு?''

''ராத்திரி வந்ததுக்கு.''

''கூட எட்டணா போட்டுக்குடு துரை.''

''இரண்டு ருபாயே ஜாஸ்தி, இரண்டு வீடு தள்ளிப் போனா ஒரு ருபாய்க்கு...''

''என்ன சொன்ன? ரெண்டு வீடு தாண்டி...ம்... போக விட்ருவனா?'' அவன் ஆள் காட்டி விரலைப் பற்றி, பின் பக்கம் மடித்து... மிச்சம் மீதி இருக்கும் முரட்டுத்தனமும் வழிந்துவிட...

வலிதான், அழுகைதான் வரும், சிரிப்பு வருமா? வருமே.

''அம்மாடி 'சாவி எடுத்தா, கடை திறக்கணும்'' ஒன்பது மணிக்கு வீட்டு வாசலிலேயே இருக்கும் புத்தகக் கடை திறக்க அவள்தான் சாவி எடுத்துத் தர வேண்டும்.

திறந்து காலையில் போன் பேச ஆரம்பத்தில் இவள் குளித்து, சமையல் முடித்து, உடுத்தி ஆபீஸ் கிளம்புகிறவரை பேச்சுத்தான்.

''சாப்பாடு எடுத்து வச்சிருக்கேன்.''

''சரி.''

''சாப்பிட்டுட்டுப் ஃபோன் பண்ணுங்க.''

''சரி.''

''வரட்டுமா?''

''சரி; குடை எடுத்துக்கிட்டியா? பர்ஸில் பஸ்சுக்குச் சில்லரை இருக்கா?'' வாசல்படிவரை வந்து வழியனுப்பும், கையசைக்கும்.

பிற்பகல் ஒரு மணிக்கு ஃபோன் வரும்.

"மோர்க் குழம்புல உப்பு தூக்கல் தேன்மொழி."

"ஏன்? சரியாத்தானே இருந்தது, நான் சாப்பிடறப்போ."

"தெரியல, ரசம் நல்லா இருந்தது. அதஒதுக்கிட்டு, ரசம் சாதம் சாப்பிட்டேன். வேற என்ன? சாப்டியா? என்ன பண்ற?"

"நாலு பானை, ஒரு ஒடுகிடைச்சுதாம்ஆந திராவில கழுவிட்டிருக்கேன். மொகல் பீரியட்னு தோணுது. என் மதிப்புல நூறு வருஷம் கூட இருக்காது. கழுவணும்."

"அப்புறம்?"

"ஒண்ணுமில்ல."

"வச்சுரட்டா?"

மாலை வரும்போது, அடுப்பில் ரவா உப்புமாவோ, பிரட் உப்புமாவோ இருக்கும். உள்ளே நுழைந்து வந்த களைப்புத் தீர நாற்காலியில் உட்காரவும், காப்பி போட்டு கொண்டு வரும். மேடையும், சமையலறையும், ஹாலும் பளிச்சென்று இருக்கும்.

"பெருக்கினியா வரது?"

"கொஞ்சம் துணி போட்டுத் துடச்சேன்."

"எதுக்குப்பா?"

"உனக்கு வந்து முடியாது. மத்தியானம் கடைக்கு வர ஆள் கம்மி. அதான் ஒரு ரவுண்டு துடைச்சுட்டேன்."

வெட்கமேயில்லை. எந்த வேலைக்கும் எந்த நேரத்திலும் வெட்கம் இல்லை. இது என் வேலை என்கிற பேதம் இல்லை. ஆண், பெண் பேதமில்லை.



அரைமணி நேரம், சோறு இறக்கிவிட்டு, குளித்து, ஹாலுக்கு வந்து ஏதாவது படித்துக் கொண்டிருப்பார்கள், பேசுவார்கள். காலார நாலு தெரு நடப்பார்கள்.

"உறவு மனுஷாளை நெருங்க விடலை. என்னை மட்டும் இப்படித் தாங்க எப்படிக் கத்துக்கிட்ட வரது?"

"சொல்லட்டுமா?"

"அதுக்குத்தானே கேக்கறேன்?"

"கொஞ்சம் புதுசா இருக்கும் நான் பேசறது."

"சொல்லு"

"கொஞ்சம் தப்பாகூட இருக்கும் தேன்மொழி."

"உங்கிட்டயா? தப்பா? இனிமேதான் கண்டு பிடிக்கணும். சொல்லு."

"இருபது வயசில தீர்மானம் பண்ணிட்டேன் தேன்மொழி."

"என்ன?"

"என் வீட்டை விட்டுத் தனியாப் போயிடணும்னு."

"ஏன்?"

"வர பொண்டாட்டிக்கு அதுதான் சௌகர்யம்னு."

"தெசமாவா?"

"யெஸ். பெரிய கும்பலோட இருந்தா குடும்ப வாழ்க்கை சரியா இருக்காதுன்னு தெரிஞ்சு போச்சு. நான், என் பொண்டாட்டி, என் பசங்கன்னு இருக்க ஆசை."

"ஏன்?"

"மூணாவது ஆள். அது பெத்த தாயாரா இருந்தாக்கூட, குடித்தனம் பண்றது புருஷன் பொண்டாட்டிக்கு இயல்பா இருக்காது."

''எப்படித் தெரிஞ்சது?''

''ம்... தினத்தந்தில போட்டாங்க.''

''ச்சு... சொல்லுப்பா.''

''நெசமாம்மா, தினம் பேப்பர் படிக்கிறியே எத்தனை தற்கொலை, எத்தனை தீக்குளிப்பு, எத்தனை அடிதடி புருஷன் பொண்டாட்டிக்குள்ள, அதுல பாதி காரணம் அடுத்தவங்கதான்.''

''சரியா அமையாத ஜோடியா இருக்கும்.''

''அமைப்பு புரிஞ்சுக்கவே விடறதில்லை, தனியா குடித்தனம் பண்ணவே விடறதில்லை. கல்யாணம் பெத்தவங்க பாத்து நடக்குது. பொறுப்பு எப்படி வரும்? இருபது வயசில பையன் வீட்டைவிட்டு வந்திடணும். தன் சோத்துக்குத் தான் பாத்துக்கணும். தனக்குப் பிடிச்ச வழில தான் துணிஞ்சு நடந்து நிமிரணும். நிமிர வழிவிடணும். படிப்பு, பேண்ட், அண்டர்வேர், முடி வெட்டிக்கற சலூன் எல்லாம் பெத்தவங்க பாத்துப் பார்த்து போட்டா தந்தித் தனந்தான் வரும். அவன் எப்படிக் குடித்தனம் பண்ணுவான்? 'அம்மாவுக்குக் கேட்கும்; சிரிக்காதடின்னு கிச்சு கிச்சு மூட்டினா என்ன செய்வா பொம்பளை? எப்படி மதிப்பா புருஷனை?''

வரது வானுக்கும், மண்ணுக்கும் விசுவரூபம் எடுத்தான். ஒரு நிமிடப் பேச்சில் உயர்ந்து நின்றான். இவன் புருஷன், இவனே புருஷன்.

''ச்சீ, பேசிட்ட அழகா; நான் தட்டுக்கெட்ட கழுதையா இருந்தா?''

''அம்மா மடிமேல போய் அழுவேன்னு பாக்கறியா? மாட்டேன். உனக்கு அடங்கறதா, அறுக்கறதான்னு நானே யோசிக்க, நானே முடிவு பண்ணுவேன்.''

''ஒரு கேள்வி வரது.''



''கேளு.''

''இத எங்க கத்துக்கிட்ட, இருபது வயசில எப்படி, யார்கிட்ட கத்துக்கிட்ட?''

வரது யோசித்தது.

மெல்ல நிமிர்ந்து பதில் சொல்லிற்று. ''கொஞ்சம் புத்தகம், கொஞ்சம் ஜே. கிருஷ்ணமூர்த்தி, கொஞ்சம் வாழ்க்கை அனுபவம், கொஞ்சம் யோசிப்பு.''

''என்ன புத்தகம்—தமிழா? இங்கிலீஷா?''

''எல்லாம்தான். புஸ்தகம் பொழுது போக்க நான் படிக்கலை, புரிஞ்சுக்க படிச்சேன். ஒரு நாவலைப் படிச்சிட்டு அது சரியா? தப்பான்னு யோசனை பண்ணுவேன். நானே ஒரு நாவல் யோசிப்பேன்.''

''எழுதறதுதானே?''

''எழுதறதைவிட படிக்கறது சுகம். சுலபம். எழுதற நேரத்துக்கு இன்னும் நாலு படிக்க முடியும்.''

''அப்புறம்?''

''என்ன, கதையா கேக்கற?''

''சொல்லு வரது.''

''ஜே. கே. பேச்சு கண்ணைத் திறந்தது. என்ன வேணும் எனக்குன்னு கேள்விகள் கேக்க வச்சுது.''

''அப்புறம்?''

''கேள்வியோட அலையறபோது நாலு குடித்தனம் பாக்க வச்சுது. அந்தக் குடித்தன அழகு புரிஞ்சது.''

''தப்புத்தண்டாவுக்குப் போவியா?''

''போனேன், ட்ரை பண்ணினேன்; புடிக்கலை.''

''எங்க?''

''அட்ரஸா கேக்கற''

''எங்க, என்ன பண்ணினே சொல்லு.''

''எங்கியோ சைக்கிள் ரிக்ஷாக்காரன். கூட்டிக்கிட்டுப் போனான், காசு முதல்லியே வாங்கிட்டான்.''

''ம்... ம்''

''உள்ள போனா ரொம்ப பாவமா நாலு பொண்ணுங்க.''

''ம்...ம்''

''அதில ஒரு பொண்ணு குழந்தைக்குப் பால் கொடுத்துக்கிட்டு இருந்தது''

''ம்...ம்''

''அது வேணும்னு கேட்டேன். குழந்தயை விட்டுட்டு வந்தது: குழந்தையோட வான்னு சொன்னேன். கண்ட பொறுக்கிப் பசங்கள்ளாம்எம் புள்ளையத் தொடக்கூடாதுன்னுட்டா.''

''அப்புறம்?''

''அப்ப வேணாம்னு எழுந்து வந்துட்டேன். ரிக்ஷாக்காரனைக் காணம். முதல்லியே திரும்பி வர்றதுக்கும் சேர்த்து எங்கிட்ட கேட்டான். நடந்து பஜாருக்கு வந்தேன். ரொம்ப உறுத்தலா இருந்துச்சு. கோவம் வந்துச்சு, ஆனா அந்தச் குழந்தை மட்டும் பாவமாப்பட்டுச்சு.''

''க்ரேட் ஐஸே.''

''கேளு' அந்தக் கோவத்ல ரெண்டு பொம்மை, சாக்லேட், ஃபீடிங் பாட்டில், கிலுகிலுப்பை, சின்ன நைலான் சட்டை எல்லாம் வாங்கிட்டு மறுபடி போனேன். திரும்பவும் துட்டுக் கேட்டாங்க, கொடுத்தேன். அதே பொண்ணு வேணும்னேன். 'பைத்தியம் வந்திருக்கு; போடீ'ன்னாங்க மத்த பொண்ணுங்க. அதும் என்ன வேணும்னு கேட்டுது. 'குழந்தையோட வா'ன்னு சொன்னேன். கைல இருக்கிற பை பார்த்தது. என்னைப் பார்த்தது. குழந்தையோட ரூமுக்கு வந்தது. பிரிச்சு குழந்தை கிட்டக் கொடுத்தேன். 'எதுக்கு இதெல்லாம்'னு கேட்டது அந்தப் பொண்ணு.''

''நான் கொஞ்சம் பைத்தியம். அதான்னு சொன்னேன் ரொம்ப டேங்ஸ்.வான்னு சொல்லி...''

''ம்...ம்''

''படுத்துருச்சு.''

''ம்...''

''எனக்கு முடியலை, ரொம்ப அருவருப்பா ஆயிட்டுது. வந்துட்டேன். ரெண்டு நிமிஷத்தில் வந்துட்டதும் வெளிய பொண்ணுங்க சிரிச்சுது. ஒட்ட நறுக்கிடறம் பார்னு ஒன்னா சிரிச்சுதுங்க, விருவிருன்னு வந்துட்டேன்.''

''வரது?''

''போதும் தேன்மொழி.''

''சொல்லு வரது.''

''வந்து படுக்கைல விழுந்து அழுதேன்.''

''ஏன்?''

''ஏமாந்துட்டதா நினைச்சு அழுதேன். சாமர்த்தியமே இல்லைன்னு நினைச்சு அழுதேன்.''

''என் அம்மா...'' தேன்மொழி நெஞ்சு பொங்கிற்று.

''என்ன தேடின வரது?''

''ச்சு, இருவது ரூபாய்க்குக் குடித்தனம் தேடினேன் தேன்மொழி. எவ தருவா? எப்படித் தருவா? தப்பு எம்பேர்லதான்னு அப்புறம் புரிஞ்சது.

"அப்புறம்?"

"அத்தோட சரி... அந்த நினைப்பே வரலை, முத அனுபவமே போதும்பான்னு ஆயிடுச்சு."

"குடிப்பியா?"

"ஒரு தடவை குடிச்சேன், முடியலை. நெஞ்சு எரிச்சல். தலை சுத்தல், இருக்கமா, செத்துட்டாம்ன்னு தெரியாத உழப்பல், பேய் பிடிச்சாப்ல ஆயிடுச்சு. ச்சீன்னு விட்டுட்டேன்."

"அப்புறம்?"

"ஓயாத படிப்பு, வியாபாரம், உன்னைத் தேடி வந்தேனா. வீட்ல உட்கார வச்சு சோறு போட்டுங்களா? மறுபடி மனசு ஏங்க ஆரம்பிச்சு."

"எதுக்கு?"

"குடித்தனத்துக்கு."

ஆசைப்பட்டு ஈடுபட்டவனுக்குத்தான் எதுவும் ஆனந்தம். சம்சாரம் ஸாகரம்னு சொல்லிக் கொடுத்து படுக்கைக்கு அனுப்பப்பட்ட பிள்ளைகள் காலை மட்டும் நனைத்து விட்டு, மணலை ஒட்டிக் கொண்டு உதறி உதறி அவஸ்தைப்படும். உர் என்று நிற்கும். வரது வெள்ளையாய் நிற்க ஆசையே காரணம். ஆசைப்பட்டதை அனுபவிக்கும் காரணம்.

பெண் மீது, மண் மீது பொன் மீது ஆசை வரலாம். பெண் குடித்தனம் செய்ய, மண் உழவு செய்ய, பொன் வியாபாரம் செய்ய என்று நினைக்க வேண்டும். உன்னைக் கெடுப்பதே மூன்று ஆசைகள்-மண்ணாசை பெண்ணாசை, பொன்னாசை என்று போதிக்கப்பட்ட தால் சுட்ட சட்டியாய் இவற்றோடு ஒட்டாமல் நிற்கிறது.

ஆண்களுக்கு ஆசை மூன்றிலும் இருக்கிறதே தவிர இதனால் உண்டாகும் பயன் தெரியவில்லை. உழாத



வனுக்கு நிலம் எதற்கு? சுட்ட செங்கல் செய்யும் சூளை மேடுதான் கட்டுவான். வரது நிலத்தை நேசிக்கும் உழவன். நான் உயர்ந்த விளைச்சல் நிலம்.

சுளீரென்று வயிறு வலித்தது. தலையைச் சிலுப்பி நிமிர்ந்தபோது முற்றிலுமாய் முழிப்பு வந்துவிட்டது.

"என்ன தேன்மொழி, முழிச்சிக்கிட்டியா? மெல்ல எழுந்திரு." தாதி தட்டி எழுப்பினாள்.

நிமிர வயிறு மேலும் சுளீளென்று இழுத்தது.

அடடே. அரை மயக்கத்தில்தான் இத்தனை யோசனையா? தாமரை பார்த்தேனா...?

தேன்மொழி தலைதூக்கிப் பார்த்தாள். காகிதத் தாமரை காற்றில் சிலிர்த்துக் கொண்டது.

"சிஸ்டர், அது எப்ப ஒட்டினது?"

"எது காகிதப் பூவா? இந்த ஆஸ்பத்திரி கட்டின போது ஒட்டினது, ரெண்டு வருஷம் இருக்கும். ஏன்?"

"சும்மா கேட்டேன்."

"கவுனைக் கழட்டிடுங்க."

சுருக்கு நாடாவை இழுத்து கவுனைக் கழற்றினாள். மார்பகங்களைத் தொட்டுப் பார்த்தாள்.

"குழந்தையை எடுத்தாரட்டுமா... பால் கொடுக்கிறியா?"

"அடிப்பாவி, எனக்குக் குழந்தை பிறந்திருக்கு இல்ல... எப்படி மறந்தேன்..." தேன்மொழிக்கு உடம்பு விதிர்த்துப் போட்டது.

"குழந்தை எங்கே?"

சுற்றும் முற்றும் தேடினாள்.

''தனியா ஏஸி ரூம்ல வச்சிருக்கோம். எடுத்தாரட்டுமா''

''பையன் தானே?''

''சந்தேகமில்லாம பையன்தான். முழிச்சபடி தானே இருந்தே. புள்ளை பெறும்போது...அப்பவே சொன்னேனே'' நர்ஸ் சிரித்தாள்.

''சட்டுன்னு மறந்து போச்சு.''

''ஊசி போட்டதும் தூக்கம் வந்திருச்சு. எட்டு மணி நேரம் தூங்கியிருக்கே, காபி சாப்பிடறியா?''

கூட்டிப் போனது நினைவிருக்கிறது. பிறகு பனிக்குடம் உடைந்தது புரிந்தது. ஊசி வலி தொடையில் இன்னும் தெரிகிறது. பிள்ளை வயிறுவிட்டு நகர்ந்தது ஞாபகம் இருக்கிறது. தொடைகளுக்கு நடுவே திமிறி உதைத்து வெளியே அது வருவது நினைவிருக்கிறது' பிறகு சிலீரென்ற அழுகை. தலைகீழாய்த் தொங்கின குழந்தை.

''பையன் பிறந்திருக்கிறான் தேன்மொழி, கங்கிராஜுலேஷன்ஸ்.''

''அப்பாடா.''

அப்புறம் மயக்கமாகி விட்டேன்.

தேன்மொழி மெல்ல அடிவயிற்றைத் தொட்டுப் பார்த்தாள். பேடிங் போட்டிருப்பது தெரிந்தது. இடுப்பை இறக்கித் துணி கட்டியிருப்பது விரலில் பட்டது.

நர்ஸ் வெளியே போனாள். இரண்டு நிமிடத்தில் குழந்தையோடு வந்தாள். துணியில் சுற்றின ஜீவன் கண்சுருங்கி விரல்கள் சுருங்கி முகம் சுருங்கி அழுதது. கைநீட்டி வாங்கி முகம் பக்கத் துணியை விலக்கி நெஞ்சில் வைத்துப் பால் தரும்போது முலைக் காம்பில் வாய் வைத்து உறிஞ்சியது.

அப்பா...நெஞ்சு நெக்கு விட்டது. ஊற்றுக் கண் திறந்தது போல...பாசம் இறங்கினது போல...அப்பா...



இது என்ன சுகம். ஜுரது கொடுத்த சுகம் போல. அதையும் விட சுகமாய்ப் பரவுகிற சுகம்.

நர்ஸ் மாற்றிக் கொள்ளச் சொன்னாள். குழந்தையை மெல்ல அகற்றி மாற்ற, உதைத்து அழுதது. இடப்பக்க முலைக்காம்பு பாரம் இறங்கத் தவித்தது. நர்ஸ் மார்பை அழுத்திக் காம்பைத் துடைத்து ஒற்றினாள். 'அழுத்தி விடு' என்றாள் காம்பிலிருந்து மஞ்சளாய் முதல் சொட்டு பூத்ததும் பிள்ளைக்கு தேன்மொழி பாலூட்டினாள்.

''எங்க வேலை முடிஞ்சு போச்சு. இனிமே இது உன் பொறுப்பு.''

''ப்ளக்'' என்று கக்கின குழந்தையை நர்ஸ் வாங்கிக் கொண்டாள், உதடு துடைத்தாள்.

''யாரும் வரலையா தேன்மொழி?''

''இல்லீங்க.''

''அம்மா அப்பா யாரும் இல்லையா?''

''இருக்காங்க.''

''என் வரலை?''

''கூப்பிடலை. வரலை.''

''சண்டையா?''

''நான் கல்யாணம் கட்டின விதம் பிடிக்கலை.''

''லவ்வா?''

''ம்.''

''அவரும் வரலை?''

''ஆபீஸ் வேலையா டெல்லி போயிருக்காரு. ரெண்டு நாளாகும் வர.''

''தகவல் சொல்ல வேண்டாமா?''

''எதுக்கு...வந்து தெரிஞ்சுக்கட்டுமே?''

''தனியா வந்து அட்மிட் ஆனது பாத்து ரொம்பக் கவலையாயிடுச்சு எங்களுக்கு.''

''எதுக்குக் கவலை? மாசம் தவறாம இங்கதான் செக்கப்புக்கு வந்தேன். பணம் முன்கூட்டியே கட்டியாச்சு 'டாக்டருக்கும் நான் யாருஎன்னன்னு தெரியும்.''

''அது சரி. இந்த மாதிரி நேரத்துல மனுஷா வேணாமா? உறவுங்க அவசியமில்லையா?''

''உறவுதான் வரணும்னு இல்லியே. இடுப்புவலி எடுத்ததும் எதிர்வீட்டுக்குப் போய் சொன்னேன். நாலு நாள் முன்னாடியே துணிமணி எல்லாம் தயாரா எடுத்து வச்சிருந்தேன். ப்ளாஸ்க் துணிமணி எடுத்துக்கிட்டு விடு பூட்டினேன். அவங்க யார்கிட்டயோ கார் கேட்டு கொண்டாந்தாங்க. இங்க வந்த ரெண்டுமணி நேரத்துல குழந்தை பிறந்துடுச்சு.''

''கொஞ்சம் கூட அச்சமாயில்லையா?''

''இருந்தது.''

''நல்லபடியா பிறக்கணுமேன்னுதானே.''

''பிறக்கறது பெரிய ப்ராப்ளமில்லைங்க. பொண்ணா இல்லாமப் புள்ளையாப் பொறக்கணுமேன்னு கவலை இருந்தது.''

''ஏன் தேன்மொழி?''

''என் மாதிரிக் குடித்தனக்காரிக்குப் பெண்குழந்தை சிரமம்.''

''மொதக் குழந்தைக்கே கர்ப்பத்தடை பண்ணச் சொல்லிட்டியாமே?''

''ஆமாம்.''



''செய்துதான் ஆவணும்னு அடம் புடிச்சியாமே... நல்லதா இது...''

''நல்லதுக்குத்தான்.''

''அவரு வேணாங்கலியா''

''அவரு ஆரம்பத்துல கூடாதுன்னு தான் சொல்லிப் பாத்தாரு. நான் புடிவாதமாப் பண்ணிக்கத்தான் வேணும்னுட்டேன். இதுகூடப் பெத்திருக்க மாட்டேன். ஆரம்பத்திலேயே கலைச்சிருப்பேன். அவரு கண்டிப்பாக் குழந்தை வேணும்னுட்டாரு. அதுக்காகத்தான் இதைப் பெத்துக் கிட்டேன்.''

''லவ் பண்ணிக் கட்டிக்கிட்டாலே கஷ்டம்தான். ஒரு பயம்தான்.''

''பயம் ஒண்ணுமில்லீங்க.''

''அப்புறம்?''

''நான் கல்யாணம் கட்டிக்கிட்டதே குழந்தை வயித்துல வந்தப்புறம்தான்.''

''கடவுளே...''

''இல்லேன்னா ரெண்டு பேரும் அப்படியே இருந்திருப்போம்,''

''வீட்டைவிட்டு வந்ததும் கல்யாணம்கட்டலியா?''

''இல்லை. ஹாஸ்டலுக்கு வந்து விட்டேன்.''

''ஏன் ஹாஸ்டலுக்கு?''

''இவரைப் பாக்கக்கூடாது. பேசக்கூடாதுன்னாங்க. முடியாதுன்னு ஹாஸ்டலுக்கு வந்துட்டேன்.''

''ஹாஸ்டலுக்கு வந்த பிறகு?''

''அங்கேயும் கேள்வி கேட்டாங்க. ராத்திரி இவரோட தங்கக் கூடாதுன்னாங்க, 'யாரு அது, ஏன் சுத்தறே'ன்னு கேள்வி கேட்டாங்க. ஓர் இடம் பார்த்து ஒன்னா இருந்தோம்.''

''கல்யாணம் கட்டாமலியேவா?''

''ஆமா, கட்டாமலே...''

''ஏன்?''

''சேர்ந்து ரொம்ப நாள் வாழ முடியுமான்னு எனக்கு நம்பிக்கையில்லை. அவசியமானா பாத்துக்குவோம்னு நினைச்சேன். உண்டான பிறகு அவரே கட்டிக்கிறேன்னாரு. சரின்னுட்டேன்.''

''கத்திலே நடந்திருக்கே தேன்மொழி.''

''கத்தின்னு நினைச்சா கத்தி.''

''கேக்கறப்பவே எனக்குக் கஷ்டமா இருக்கு.''

''என்ன கஷ்டம்?''

''ஏன் இப்படி இருக்கோம்னு நீ கேட்டுக்கிட்டதேயில்லையா?''

''கேக்கற மாதிரி எதுவும் வரலை.''

''இப்பக்கூடவா.''

''இப்பக்கூட.''

''நான் ஒன்னு சொல்லட்டுமா?''

''சொல்லுங்க.''

''ரொம்பப் படிச்சுட்டீங்க. எம். ஏ. அப்புறம் என்னென்னவோ.''



''ப்ச்சு.''

''அப்ளிகேஷன்ல பார்த்தேன். பின்னாடி நிறைய போட்டிருக்கு.''

''ஒண்ணுமில்லை. டிப்ளமா இன் ஆர்க்யாலஜி.''

''படிப்புதான் காரணமா?''

''எதுக்கு?''

''இப்படி விட்டேத்தியா இருக்கறதுக்கு.''

''எம். ஏ. படிப்பு காரணமில்லை. வேற படிப்பு.''

''வேற படிப்புன்னா?''

''உங்களுக்குப் புரியாது.''

''தூக்கம் வருதா?''

''ஆமா.''

''தூங்கு தேன்மொழி.''

நர்ஸ் மெல்ல சாய்த்துப் படுக்க வைத்துவிட்டு இடுப்பு மேட்டைத் தொட்டுப் பார்த்தாள். ராத்திரி மாத்திடலாம் என்றாள். குழந்தையைப் பக்கத்துத் தொட்டியிலிட்டு வலையை இறுக்கினாள். தேன்மொழி கண் மூடியதும் அறையை விட்டுப் போனாள். வராந்தாவில் ஒரு முதிய பெண்மணி நர்ஸை நிறுத்தினாள்.

''தேன்மொழி எந்த ரூம்?''

''அஞ்சாம் நெம்பர்.''

,'குழந்தை பொறந்துடுத்தா?''

''ஆம்பளக் குழந்தை.''

''பார்க்கலாமா?''

''தூங்கறாங்க,''

''ரெண்டு நிமிஷம் பார்த்துட்டுப் போயிடறேன்.''

''நீங்க யாரு எதிர்வீடா?''

''இல்லை. தேன்மொழிக்கு மாமியார்.''

நர்ஸ் திடுக்கிட்டுப் பார்த்தாள். தேன்மொழியின் அறைக்கு அழைத்துப் போனாள். முதியவள் வலைத் துணியை விலக்கி விட்டுக் குழந்தையை உற்றுப் பார்த்தாள். கைப் பையிலிருந்த சின்ன டப்பா எடுத்து சர்க்கரை ஒரு சிட்டிகை எடுத்து குழந்தையின் வாயில் தடவினாள். குழந்தை முதலில் முகம் சுளித்து, பின் சப்புக் கொட்டிற்று.

''வரது மாதிரியே இருக்கு.''

''யாருங்க?''

''இவன் அப்பா மாதிரியே இருக்குன்னேன்.''

''தேன்மொழியை எழுப்பவா?''

''வேண்டாம். நான் காத்தால வரேன்.''

''வந்து போனதா சொல்லவா?''

'',சொல்லுங்க.''

தேன்மொழியும் தூக்கத்தில் சிரித்தாள். அந்தச் சிரிப்பு நர்சுக்குப் பிடித்திருந்தது.

## 2

**தே**ன்மொழி மெல்ல நகர்ந்தாள். குட்டையாய் வளர்ந்திருந்த தென்னை மரத்துக்கு அருகில் போனாள். இளம் தளிராய்த் தேடினாள். தும்பிக்கையை நீட்டி ஒரு



மட்டையைச் சுழற்றிப் பற்றினாள். இழுத்தாள். மட்டை பிய்ந்து காலடியில் விழுந்தது. காலடியில் மிதித்து மெல்லத் தூக்கி வாயில் போட்டுக் கொண்டாள். தென்னை மட்டை தித்திப்பாய் இருந்தது. வால் சுழற்றி அசை போட்டபடி முன்னேறினாள். நாணல் புதர் தாண்டி நடக்கையில் தொலைவில் கூட்டத்திலிருந்து ஓர் ஆண் யானை திரும்பிப் பார்த்தது. தேன்மொழிக்கு, அருகே நெருங்கி 'என்னுடன் வா' என்று இழுத்தது. அலட்சியமாய் விலக்கிவிட்டு மேலே நடக்க மறுபடி வந்து வழி மறித்தது. பட்டென்று கண்ணுக்குக் கீழே தும்பிக்கையில் அடித்தது. தேன்மொழி பதிலுக்குத் தன் தும்பிக்கையால் அடித்தாள். மேலும் சில யானைகள் சூழ்ந்துகொண்டன. மூன்று புறமும் மடக்கிக் கொண்டன. தேன்மொழி இடித்துத் தள்ளிவிட்டு வயல் பக்கம் ஓடினாள். யானைகளும் துரத்தின. தேன்மொழி முழு சக்தியும் சேர்த்துத் தன் ஓட்டத்தை அதிகரித்தாள்.

நூல் மாதிரி ஒன்று இடற இடப் பக்கம் படீரென்று வெடி வெடித்தது. வெடிச் சத்தம் கேட்டதும் பறையொலிகளும் எழுந்தன. ஜனங்கள் சூழ்ந்து கொள்வது தெரிந்தது. பின் வந்த யானைகள் சிதறிப் போக தேன்மொழி மட்டும் முன்னே ஓடினாள். குறுக்கே தென்னை ஓலைகள் பரப்பியிருந்தது. பார்த்ததும் தயங்கி நின்றாள். சடேர் சடேரென்று காலருகே வெடிகள் வந்து விழுந்தன, இடதும் வலதும் ஓடினாள். ஈர மண் சறுக்கிற்று. வழ வழத்தது. பூமி அசைவது போலிருந்தது. தென்னை ஓலைகள் பிளந்து கொண்டன. பெரிய குழியில் உருண்டு தேன்மொழி விழுந்தாள். பிளிறினாள். அவளைவிட உயரமான குழி. சுவர் முட்ட மண் சரிந்தது. சுளீர் சுளீரென்று நீண்ட சவுக்கடி விழுந்தன. தேன்மொழி வலி தாங்காமல் அலறினாள்.

மெல்ல ஒரு துதிக்கை நீண்டது. ''தேன்மொழி மேலே வா!''

'வரது என்று தலை நிமிர்த்தினாள்.

கனவு கலைந்துவிட்டது.

கண் விழித்துப் பார்த்தபோது இருட்டாய் இருந்தது. எழுந்து உட்கார சுள்ளென்று வயிறு இழுத்தது. மறுபடி படுக்கையில் சரிந்தாள். கை உயர்த்தி காலிங் பெல்லை அழுத்தினாள். ''இருங்க வரேன். பெல் சத்தம் கேக்குது...'' வெளியே குரல் கேட்டது.

நர்ஸ் கதவு திறந்து வந்தாள்.

''தேன்மொழி, முழிச்சிக்கிட்டியா? நானே எழுப்பணும்னு நினைச்சேன். குழந்தைக்குப் பால் குடு'' லைட் போட்டாள். மினுக்கி மினுக்கி ட்யூப்லைட் பளீரென்று எரிய கண் கூசிற்று.

''மத்த யானையெல்லாம் எங்க''

''என்ன?''

''ம்...ஒண்ணுமில்லை.''

''கனா கண்டியா?''

''ம்ம்...''

''கவுன் அவுத்துடட்டுமா''

''மணி என்ன?''

''பதினொன்று. உங்க மாமியார் வந்திருந்தார்.''

''யாரு?''

''உங்க மாமியார்?''

''எதுக்கு''

''எதுக்கா? உன்னைப் பார்க்க. உன் குழந்தையைப் பார்க்க. த்தோ பாரு, உம்புள்ளை ஒன்னுக்குப் போயிட்டு மூத்திரத்திலேயே தூங்கறான்.'' குழந்தையைத் தூக்கித் துடைத்து மடியில் போட சிணுங்கிற்று.

''எழுப்பறதுதானே சிஸ்டர்''



''வேணாம்னுட்டாங்க. பையனுக்குச் சக்கரை ஊட்டுனாங்க. நல்லா சப்புக்கொட்டிச்சு. தன் புள்ளை மாதிரியே இருக்கான்னு சொல்லிக்கிட்டாங்க. நாளைக்கு வராங்களாம்...வீட்ல எல்லாரையும் கூப்பிட்டுக்கிட்டு நானும் பாத்துட்டேன் தேன்மொழி. சாவுக்குக்கூட போவேணாம்மோன்னு ஒரு கோபம் இருக்கும். புள்ளைப் பேறுக்கு மட்டும் உறவு ஜனம் வராம இருக்கவே இருக்காது.''

''வேற என்ன சொன்னாங்க?''

''ஒண்ணும் சொல்லலை. சக்கரை டப்பா மட்டும் வச்சிட்டுப் போனாங்க'' சின்ன எவர்சில்வர் டப்பாவைக் காட்டினாள்.

பிள்ளை கால் உதைத்துப் பால் குடித்தான். மூச்சுத் திணறிக் கக்கினான்.

''எனக்குப் பசிக்குது சிஸ்டர்.''

''ப்ரட், பால் சாப்பிடறியா?''

''காரமா ஏதாவது குடுங்களேன்.''

''நாளைக்கு சாப்பிடு. இப்ப இது போதும்.'' ப்ளாஸ்கிலிருந்து பால் ஊற்றி நாலு ஸ்லைஸ் ப்ரெட் எடுத்துக் கொடுத்தாள்.

பேயாய்ப் பசித்தது. தோய்த்து முழுங்க மறுபடி கண்களைத் தூக்கம் சுற்றியது.

''உடனே தூங்காதே கொஞ்சம் எழுந்து நட.''

''நோவுதே.''

''நோவும்; நட''

கை பிடித்து இறக்கிவிட, தலை சுற்றியது. உடம்பு பூமியில் நிற்காமல் ஆடியது. நர்ஸ் தோளை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

"உங்க பேரு என்ன சிஸ்டர்?"

"சரோஜா"

"மெட்ராஸ்தானா?"

"செங்கல்பட்டு, வாழ்க்கப்பட்டது இங்க."

"குழந்தைங்க இருக்கா?"

"இரண்டு, பெரிசு பொண்ணு. அப்புறம் பையன். அவரு வீட்டு வாசல்லயே தையல்கடை வச்சிருக்காரு, நாலு மிஷின் ஒடுது."

"நடக்க முடியலை சரோஜா."

"முடியும். கொஞ்சம் நடக்கணும்." நர்ஸிங்ஹோம் வாசல் பக்கம் குளிர்ந்த காற்று வீசியது.

"மாமியார் வந்தது சந்தோஷம் தானா?"

தேன்மொழி சிரித்தாள்.

"ஏதோ மரியாதைக்கு வந்திருப்பாங்க."

"அப்படித் தெரியலை. ரொம்பப் பிரியத்தோட குழந்தையைப் பார்த்தாங்க? கேட்டுரலாமான்னு நினைச்சேன்"

"என்னது..."

"புள்ளைப் பேறு பாத்தவளுக்குத் தட்சிணை வைக்காத போறியேன்னு..."

"ச்சு... உனக்கு வேணுங்கறத என்கிட்டக் கேளு."

"அது தனி கேக்காத விடுவேனா? என் பசங்களுக்கு சட்டைத் துணி எடுத்துக் குடு."

"அவ்வளவு தானே? தரேன். இருநூறு ரூபாய்க்கு நாளைக்கே செக் தரட்டுமா?"



"போறச்சே குடும்பா போதும்."

சிஸ்டர் மறுபடி கை கொடுத்துத் திருப்பினாள். அறையை நோக்கி மெல்ல நடத்தி அழைத்துப் போனாள்.

"அவரு ரொம்பப் பிரியமா இருப்பாரா?"

"ம்ம்."

"யப்பா. துணிச்சலா ஒண்டியா வந்தியே. அப்பவே உன்னை எனக்குப் புடிச்சுப் போச்சு தேன்மொழி. இருநூறு ரூபாய்க்காகப் பேசறேன்னு நினைக்காதே."

"ச்சே... ச்சே..."

"எங்க வேலை செய்யறு?"

"ஸ்டேட் ஆர்க்கியாலஜி டிபார்ட்மெண்ட். ராஜா ராணி கோட்டையெல்லாம் தேடிக்கண்டு பிடிக்கிறது."

"கண்டு பிடிச்சு?"

"எப்படி வாழ்ந்திருப்பாங்க, என்னென்ன செய்தாங்கன்னு தெரிஞ்சுக்கறது."

"வேலை மேல 'இருக்கச் சொல்லுதான் அவரைப் பாத்தியா?'

"ம்ம்..."

"அதுக்கு முன்னாடி... வீட்டோட இருந்தியா?"

"......"

"ரொம்ப நோண்டி நோண்டிக் கேக்கறேனா?"

"கேளேன் சரோஜா. ஒளிவு மறைவு என்ன?"

"நான் எங்க சொந்தத்திலயே கட்டிக்கிட்டேன். முறை ஆளுதான். எனக்கென்னவோ லவ் பண்றவங்

களைக் கண்டா ஓர் ஆச்சரியம். சினிமாவுல காட்டற போது தெரியலை, எதிர்வீடு; பக்கத்து வீட்ல லவ்வுன்னா இது எப்படின்னு ஒரு யோசனை. விவரம் புரியாத வயசிலேயே எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சா... இது பத்திப் புரியறதேயில்லை.

"லவ்வுன்னு ஒண்ணுமில்லை சரோஜா. வெறும் உடம்பு கொழுப்புதான். எங்கியாவது விலங்கு மாட்டிக்கணும்னு நாம நினைச்சுக்கறதுதான்."

"அப்படியில்ல தேன்மொழி."

"அப்படித்தான். நாம தனியே கடைசி வரைக்கும் இருக்க முடியாதோன்ற பயம் ஆம்பளை தேடச் சொல்லுது. உரசி ஆம்பளையோட நடந்த பிறகு வேற சுகம் கேக்குது."

"அதான் சொல்றேனே, நீ தேவைக்குமேல படிச்சிட்ட. அலுப்பா பேசறே. வீட்டோட உட்கார வச்சிருந்தா இப்படி யோசிக்கவும் தோணாது. வாழ்க்கப் படவும் முடியாது."

"படிப்பு தப்புன்றியா?"

"புண்ணியமில்லை. இடதா வலதான்னு அல்லாட்டம்தான் படிப்புல அதிகமாவுது... எனக்குத் தெரிஞ்சவரை."

"கரெக்ட்."

"ஆனா சம்பாதிக்க படிச்சாவணும். பி.ஏ., எம்.ஏ., படிச்சு வேலைக்குப் போவணும்னு நிலைமை பொண்ணுங்களுக்கும் வருது."

"அந்தப் படிப்புல ஒண்ணுமில்லை சரோஜா. அதுக்கு மேல வேற சிலது நாமா படிச்சுதெரிஞ்சுக்கறம் பாரு... அங்கே குழப்பம் வருது. திசை மாறுது."

"தூக்கம் வந்தா தூங்கு தேன்மொழி. நடந்தது போதும்." சரோஜா கட்டில் அருகே கொண்டு வந்து



நிறுத்தினாள். உடம்பில் அலுப்பு படர்ந்தது. புத்தி விடி விளக்கு மாதிரி முணுமுணுப்பாய் எரிந்து கொண்டிருந்தது.

திரும்பி ஒருக்களித்துப் படுத்து பக்கத்தில் தொட்டிலில் கிடந்த குழந்தையைப் பார்த்தாள். எதிர்ப் பக்கம் முகம் திருப்பி விரல்கள் அனைத்தும் மடித்து வாய் அருகே வைத்தபடி ஆழ்ந்த உறக்கத்தில் குழந்தை இருந்தது.

என்னென்ன படப் போகிறதோ என்கிற கவலை எழுந்தது.

சரோஜா மெல்ல வெளியேறிக் கதவைச் சாத்தினாள். கால் தலையணையை எடுத்துத் தேன்மொழி முதுகுக்குப் போட்டு சாய்ந்து கொண்டாள்.

அம்மாவுக்குத் தகவல் சொல்லலாமா... யார் மூலம் சொல்வது? சரோஜாவை அனுப்பலாமா? அம்மா வருவாளா?

"கொழுப்புடி. அலையறே" படித்துக் கொண்டிருந்த வாரப் பத்திரிகையைப் பிடுங்கி எறிந்த அம்மா வருவாளா; வந்து என்ன ஆக வேண்டும்? ஏதுமில்லை. அம்மாவை மனசால் பதினெட்டு வயசிலேயே பிரித்தாகி விட்டது. முப்பது வயசில் அம்மா எதற்கு?

அப்பாவுக்கு வேண்டுமானால் சொல்லலாம். மார்க்கெட்டுக்குப் போன் செஞ்சு சொல்லலாம், அப்பா இன்னமும் காய்கறி மார்க்கெட் போய்க் கொண்டிருக்கிறாராம். விடிகாலை மூன்று மணிக்கு எழுந்து பல் தேய்த்துவிட்டு சைக்கிளில்சிந்தாரிப்பேட்டையிலிருந்து கொத்தவால் சாவடி போய் லோடியம் விளக்கு வெளிச்சத்தில் காய்கறி பார்த்து மொத்த விலைபேசி சில்லறை ஆளுக்கு விற்று பத்து மணிக்கு சுள்ளென்று வெயில் ஏறினதும் வந்து குளிக்கிற அப்பா. உணவு முடித்துத் தூங்கிஎழுந்து மறுபடி கலெக்ஷனுக்குப் போகிற அப்ப

ஒரு மாசம் நாலாயிரம், ஒரு மாசம் ஆறாயிரம், ஒரு மாசம் ஆயிரம் என்று சீசனுக்குத் தகுந்தாற்போல வருமானம்.

செலவழிக்க மூன்று பெண்கள். சமைத்துப் போட அம்மா. படிப்பை விட இது காரணமாய் இருக்குமோ... திமிருக்கும் ஒட்டாது போனதுக்கும். படிக்கிறியா படி. வேணாமா வுட்டுறு. விட்டிலேயே இரு. வழி காட்டவே இல்லை. ஐநூறுக்கு நானூத்தி அறுபது மார்க் எஸ்.எஸ். எல்.சி. புத்தகத்தைப் புரட்டிப் பார்க்க ஆளில்லை. நல்லா படிச்சியா சரி. இல்லையா விடு. பாராட்டவே இல்லை.

முதல் அக்கா ராணி, டீச்சர் ட்ரெயினிங் போனாள். இரண்டாவது அக்கா மலர்க்கொடி வீட்டோடு இருந்தாள். நானூத்தி அறுபது மார்க் வாங்கின பிறகு என்ன படிப்பது என்று வீட்டில் யாருக்கும் தெரியவில்லை. வீடு அலுப்பாய் இருந்தது.

எந்த காலேஜ் அதிகம் கேள்வி கேட்காது என்று கேட்டுத் தெரிந்து கொண்டு கடற்கரைப்பக்க காஜேஜுக்கு விண்ணப்பித்து பி. ஏ. லிட்ரேச்சர் என்று விரும்பி எடுத்துக் கொண்டு முதன் முதலாய் காட்டன் புடவையும் கரை வைத்த ரவிக்கையும் போட்டுக் கொண்டு போனது நினைவுக்கு வருகிறது.

அந்தக் கும்பல் திசைமாற்றி விட்டது. போன வாரம் வந்த லெக்சரர் இந்த வாரம் இல்லை. போன வருஷத்து ப்ரொபஸர் இந்த வருஷம் இல்லை. க்ளாஸுக்கு வந்து பெயர் கொடுத்துவிட்டு வீட்டுக்குப் போகலாம். இல்லையெனில் உட்கார்ந்து பாடம் கவனிக்கலாம். அதுவும் இல்லையெனில் கவனிக்காமல் கதைப் புத்தகம் படிக்கலாம்.

மில்ஸ் அண்ட் பூன் இரைப்படும். நாலு புத்தகம் காசு கொடுத்து வாங்கினால் பன்னிரண்டு புஸ்தகத்



துக்கு மாற்றிக் கொள்ளலாம். பிறகு சேஸ் பைத்தியம் பிடித்தது பிறகு ஹெரால்ட் ராபின்ஸ் கிடைத்தது. அதுவும் அலுக்க அயன் ராண்டில் மனசு மலர்ந்தது.

புஸ்தகம்... புஸ்தகம்... புஸ்தகம்... வீடு முழுக்க புஸ்தகமாயிற்று.

'மல்லாந்து படுத்துக்கொண்டு அவன் பெயர் சொல்லி அழைத்தாள். அவன் மெல்ல நெருங்கி நின்று துணிகளை' என்கிற இங்கிலீஷ் குப்பைகள் ஆரம்பத்தில் சூடாக்கின. பிறகு அலுப்பாயின. மறுபடி மறுபடி இதுதானா என்று பக்கங்களைப் புரட்ட வைத்தன.

'இதைப் படி' என்று எவளோ ஒரு சீனியர் கொடுத்துப் போன ஒரு தமிழ்ப் புத்தகம் நெருப்பு மாதிரி வெகுநாள் நெஞ்சைச் சுட்டது.

அம்மிணி அம்மிணி... அம்மிணி... என்று அரற்ற வைத்தது. யார் இந்த ஜானகிராமன்? எந்த ஊர்... எந்த தேசம்... என்ன உத்தியோகம்... என்ன படிப்பு எப்படி இவ்விதம் எழுத முடிகிறது என்று உடம்பெல்லாம் தவித்தது.

இங்கிலீஷ் கதையில் கெட்டுப் போனவளோ கெட்டிக்காரியோ நல்லவளோ அழுமூஞ்சியோ மனசில் ஒட்டவில்லை. அம்மிணி அணைத்துக் கொண்டாள். அரசிலையை ஒதுக்கிவிட்டு அலைந்த அந்த தஞ்சாவூர் பாப்பாத்தியைப் பைத்தியமாக்கினாள். இங்கு இப்படிப் பெண் உண்டா? நான் பார்த்திருக்கிறேனா... அம்மிணிக்கு மெட்ராஸா பஸ்ஸில் போவாளா... கடற்கரைக்கு வருவாளா? காரில் போவது அம்மிணியா... கடையில் பார்த்தது அம்மிணியா என்று தேடத் தொடங்கியது.

சங்கீதக் கச்சேரி கேட்கத் தோன்றிற்று. யார் கோபாலி என்று யோசனை வந்தது. காவிரி மீது

மோகம் வந்தது. அரசலாறு எப்படியிருக்கும் என்று பார்க்கத் தோன்றிற்று.

பெண் உலகம் தனி. அதில் ஆணுக்குப் பொறுப்பில்லை. பங்கு தரலாமே தவிர பத்திரத்துக்கு ஆண் தேவையில்லை. ஆசைக்கு இணங்கலாமே தவிர அடிமையாய் மாறத் தேவையில்லை.

உள்ளே கேள்வியும் பதிலும் கற்பனையும் யோசனையும் பதினெட்டு வயசில் நெருப்பாய்ச் சுற்றின. எரித்தன. புடம் போட்டன.

க்ளாஸுக்குக் கட்டடித்துவிட்டு கடற்கரைச் சாலையில் நாலு தோழிகளோடு உலா வருகையில் அக்கா எதிர்பட்டாள். கூட யாரோ ஒரு பையன் தோள் உரச நடந்து வந்தான். அக்கா இவளைப் பார்த்துவிட்டு விலகிக் கொண்டாள். மௌனமாய் இவள் கடந்து போக சங்கடத்தில் நெளிந்தாள்.

இரவு சாப்பிட உட்காருகையில் கையைப் பிடித்துக் கொண்டாள். அருகில் தலையணை போட்டுக் கட்டிக் கொண்டாள்.

தன் காதலைக் கதை மாதிரி சொன்னாள், எந்தச் சலனமும் இல்லாமல் விருப்பு வெறுப்பு இல்லாமல் மரபு மயக்கம் இல்லாமல் பதினெட்டு வயசில் தன் தமக்கையின் காதலைப் பற்றி மௌனமாய் தேன்மொழியால் கேட்க முடியாது.

வீட்டு சார்பாய் அந்தப் பையனோடு அக்காவின் காதலனோடு—பேச முடிந்தது.

## 3

'ஹலோ' அவன் தலைகுனிந்து வணங்கினான், தேன்மொழி கைகூப்பினாள்.

"எம்பேரு கண்ணன்."



"தெரியுங்க. ராணி சொல்லிச்சி எல்லாத்தையும் இன்கம் டாக்ஸ்ல ஒர்க் பண்றீங்களா?"

"ஆமாங்க."

"ப்ராமிஸா?"

"ஆமாங்க."

"நல்ல காபியா சாப்பிடலாமா?"

"ரெடி."

கடற்கரைச் சாலை புல்வெளிக்கு அப்பால் உள்ள ஹோட்டலுக்கு வந்தார்கள்.

காபிக்குச் சொல்லிவிட்டுக் காத்திருந்தார்கள்.

மாநிறம். சற்று நீண்ட கழுத்து, பெரிய நாசி, அடர்த்தியாய் அதே சமயம் சீராய் ஒதுக்கப்பட்ட மீசை. நடு உயரம், மெல்லிசாய் கைகள், கொஞ்சம் சிரிப்பும் அதிகக் கலவரமும் முகத்தில் தெரிந்தது.

"தஞ்சாருங்களா?"

"ப்ராப்பர் இல்லீங்க. பக்கத்துல கிராமம். பள்ளி அக்ரஹாரம்."

"அம்மா மட்டும் தான்னு ராணி சொல்றா?"

"ஓர் அக்கா, ஒரு தம்பி, அக்காவுக்கு கல்யாணமாயிடுத்து. தம்பி படிக்கிறான்."

"நீங்க ராணியை லவ் பண்றதா சொன்னா வீட்ல சரிப்படுமா, ஒத்துக்குவாங்களா?"

"மாட்டாங்க."

"பிறகு...?"

"நானா நின்னு முடிச்சுக்கலாம்னு ஐடியா."

''வீட்ல கேட்டுட்டுச் சொல்றீங்களா, கேக்காத சொல்றீங்களா?''

''கேட்டா சண்டைதான். கூடவே கூடாதுன்னு சத்தம்தான் வரும்.''

''நாங்க வேளாளர்.''

''தெரியும்.''

''எங்க பக்கமும் நிறைய எதிர்ப்பு வரும். என்ன செய்யப் போறீங்க''

''நீங்க என்ன யோசனை சொல்றீங்களோ அதைச் செய்யறேன்.''

''உங்க யோசனை என்ன?''

''முந்நூறு ரூபாய்க்குத் தனி வீடா பார்க்கணும். பாத்திரம் பண்டம் வாங்கணும். ரிஜிஸ்டர் மேரேஜுக்கு அப்ளிகேஷன் போட்டு சிம்பிளா கல்யாணம் முடிக்க ணும். உங்க வீட்டுக்கு ஒரு முறை எங்க ஊருக்கு ஒரு முறை போயிட்டு வரணும். வீட்டைத் திறந்து ராணியை சமைக்கச் சொல்லிட்டு ஆபீஸ் போகணும். எல்லார் போலயும் குடித்தனம் பண்ணணும்.''

''ராணியை ஏன் செலக்ட் பண்ணினீங்க?''

''நல்ல அழகு, கொஞ்சம் படிப்பு. நிறைய பேச்சு. அப்படியே நடுவுல எதாச்சும் ஆனா தனியா நின்னு வாழறதுக்கு ஒரு டீச்சர் ட்ரெயினிங்.''

''என் அபிப்ராயத்தில் ராணி பேசிக்கலா மக்கு.''

''வாஸ்தவம்.''

''கற்பனை அதிகம். அழகின்னு கர்வம்.''



''தப்பில்லைங்க. வீட்டோட இருந்து குடித்தனம் பண்ணா...குழந்தை பெத்துக்க இது போதும்.''

''வயசு காலத்துல எல்லா வேளாளத்தியும் வளப்பமாதான் இருப்பா. அதுல மயங்கிட்டு பின்னால் ஐயரு வாழ்க்கைக்கு ஏங்கிடக் கூடாது.''

''நான் ஐயரே இல்லீங்க. வெறும் ஆம்பளை. அழகான பொண்டாட்டி வேணுங்கற ஆம்பளை. ஆளுமை பண்ண ஆசைப்படற ஆம்பளை.''

''இதுல லவ் எங்க வந்தது?''

''லவ்ங்கறது மேத்தமெடிக்ஸ். என்ன ப்ளஸ்... என்ன மைனஸ்ன்னு போடற கணக்கு. ஆளுமை பண்றது என் ஆசை. அடங்கி நடக்கறதுல ராணிக்கு விருப்பம். அவ அழகு எனக்குப் பிடிச்ச விஷயம். என் சம்பளம் அவளுக்கு சரி. ஊர்ல நிலம் இருக்கு. வீடு இருக்கு. என் காசு தேவையில்லை. யாரோ பொண்ணு பாத்து பின்னால நொந்துக்கறதைவிட சரியோ தவறோ என் பொறுப்பாவே இருக்கலாம்னு தோணறது.''

இவ்வளவு தீர்மானமாய் இருப்பவனிடம் வேறு என்ன பேச முடியும்.

''எப்ப கல்யாணம் செய்துக்கப் போறீங்க?''

''நாளைக்கே...ஸாரி... இன்னிக்கே கூட நான் தயார், ட்ரெயினிங் முடிச்சுடறேன்னு ராணி சொல்றா.''

அடுத்த பஸ் பிடித்து ராணி கடற்கரை ஹோட்ட லுக்கு வந்தாள். மிகுந்த கவலையோடு இருவரையும் பார்த்தாள். அருகே உட்கார்ந்தாள்.

''தேன்மொழி என்ன சொல்றா?'' விரல்களைப் பின்னிக் கொண்டாள்.

இவ்வளவு திட்டமும் திமிரும் உள்ள ஐயர் பையனை நான் சந்தித்ததில்லை. ஸ்கூலுக்குப் போகாதவர்கள்

என்கிற ஜாதி, 'வம்பு வரும். வரட்டும், வரட்டும்' ஒன்று குதிகால்,ஆட்டி உட்கார்ந்திருப்பது ஆச்சரியம்தான். ஜாதிவேகம் குறைந்து மனிதர்கள் பொதுவாகிவிட்டார்களோ என்று தோன்றிற்று.

''அடுத்த வாரம் அவரை வீட்டுக்கு வரச்சொல்லு. அம்மாகிட்டயும், அப்பாகிட்டயும் முன்கூட்டிப் பேச்சு வர்றதுக்கு முன்னே இதுதான்— இவங்கதான்னு சொல்லிடு.''

''என்னங்க கண்ணன், என் வீட்டுக்கு வர்றீங்களா?''

''எப்ப வேணாலும்''

''கிளம்பு ராணி.''

''நான் கொஞ்சம் இவர்கிட்ட பேசிட்டு வரேனே.'' ராணி அனுமதிக்குக் கெஞ்சுவது வேடிக்கையாய் இருந்தது.

எழுந்து புல்வெளி தாண்டி சிவப்புக் கல் தளம் வழியே நடந்து பஸ் ஸ்டாண்டில் நிற்கையில் திரும்பி அவர்களைப் பார்க்கும் ஆவலைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

ராணியின் நீல ஷிஃபான் சாரி அவளை அடையாளம் காட்டியது. இயல்பாகவே அசைந்து நடக்கிற இடுப்பு, மணல் வெளியில் நடக்க மேலும் அழகாய் அசைவது தெரிந்தது. இடுப்பைச் சுற்றி சுதந்திரமாய் கண்ணன் கை போட்டுப் போனது தெரிந்தது.

ராணி என்னை விட மூணு அடி உயரம். மார் பாவாடையோடு குளியலறைக்குள் தலையில் எண்ணெய் அரக்கித் தேய்க்கிற போது முழுவதும் குலுங்குவது கண்டு ஆச்சரியப்பட்டதுண்டு.

பிற்பகல் மூன்று மணிக்கு சதுரக் கண்ணாடியை எடுத்து வைத்துக் கொண்டு தலை சீவி முகம் கழுவி



பவுடர் பூசி பொட்டிட்டு மையெழுதி பூ வைத்து நாலு மணிக்கு வாசலில் சும்மா உட்கார்ந்து காலை பேப்பர் படிப்பாள். அடுத்த வீட்டு அம்மாவோடு பேசுவாள், கால் கிலோ தக்காளிக்காக மார்க்கெட் வரை போவாள். வம்புக்குப் போகிற பெண்ணில்லை வசீகரிக்க ஆசையுள்ள பெண். மினுக்கி.

மினுக்கட்டுமே. கொண்டையுள்ள சீமாட்டி முடிந்து கொள்ளட்டுமே. ஆனால் ராணி. எவ்வளவு நாள் மினுக்க முடியும்? மினுக்கல் மின்னலாய் முடிவதற்குள் இடம் பார்த்து உட்கார்ந்து விடு. கண்ணனுக்கு இருப்பது மோகம்தான். நல்ல புருஷனுக்குப் பொண்டாட்டி மோகம் அறுபது வயசு வரைக்கும் இருக்கும். மயக்க ராணிக்கும் தெரியும்.

விட்டுக்கு வந்ததும் மலர்க்கொடி சுருண்டு படுத்துக் கிடந்தாள்.

''என்னடி...''

''மறுபடி வயிறு வலிக்குது தேன்மொழி.''

''நாளா...?''

''இல்லை. எட்டாம் நாளுதான் குளிச்சேன். என்னமோ வயிறு சுள் சுள்னு குத்தறாப்ப வலிக்குது''

''டாக்டர்கிட்ட போலாம் வாயேன்?''

''போயிட்டுத்தான் வந்தேன். அஜீர்ணம்னு மாத்திரை கொடுத்தார்.

''மாசாமாசம் அஜீர்ணம். என்னவோ தப்புஇருக்கு. நாளைக்கு லேடி டாக்டர்கிட்ட போலாம் வா.'' சாப்பிட்டு வாசலில் உட்காருகையில் ராணி வீட்டுக்கு வந்தாள். தட்டையெடுத்துத் தானே போட்டுக் கொண்டாள்.

என்னடி லேட்டு என்கிற அம்மாவின் கேள்விக்குப் பொருந்தாமல் பொய் சொன்னாள்.

''எங்கேடி புடிச்ச அந்த ஆளை?'' இரவு தேன்மொழி கேட்டாள்.

''பஸ்ல சில்லறை இல்லேன்னு கண்டக்டர் இறக்கி விட்டுட்டார். இவரு சில்லறை குடுத்தாரு. மறுநாள் திருப்பிக் கொடுத்தேன், வாங்கலை''

''என்ன படிக்கிறே, ஏதுன்னு விவரம் கேட்டாரு. சொன்னேன். தினம் பஸ் ஸ்டாண்ட்ல பாப்போம். பேசுவோம். பத்துநாள் கழிச்சு லெட்டர் குடுத்தாரு' 'மனம் விட்டுப் பேச வேணும்'னு எழுதியிருந்தது. மியூசியம் பக்கம் போனோம், பேசினோம்.''

''ரொம்ப சாதாரணமான காதல் கதை, அப்புறம்?... அழகு அழகுங்கறானே கையை வச்சுக்கிட்டு சும்மா இருந்தானா?''

''ச்சீ...ச்சீ...ரொம்ப நாளா தொடவேயில்லை. இன்னிக்குத்தான்.''

''இன்னிக்குத்தான்?''

''கொஞ்சம் நெருக்கமா இருந்தோம்.''

தேன்மொழிக்கு நெஞ்சில் கவலை அப்பிக் கொண்டது. ராணிக்குக் குரங்கு புத்தி. நிலையான இடம், தெளிவு எப்போதும் இல்லை. இப்போது கள்ளும் குடிக்கிறது. என்னவாகும்?

''நாளைக்கு கோல்டன் பீச் போறோம்.''

''வேணாம்.''

''ப்ளீஸ் தேன்மொழி.''

''நேர போய் அம்மாகிட்ட சொல்லிடுவேன், ராணி. சும்மா இரு.''

இரவு தேன்மொழி அருகே ராணி நெருங்கிப் படுத்துக் கட்டிக் கொண்டாள். முசுமுசுவென்று சப்தம் போடாமல் அழுதாள். உடம்பில் கங்கை படர்ந்தது. நெஞ்சுக் கூட்டில் அவள் முழங்கைச் சூடு தணலாய்த் தகித்தது.



''என்ன வேணும் ராணி?''

''ஒண்ணும் வேணாம்.''

''சரி; தள்ளிப்படு'' தேன்மொழி அவளை விலக்கி விட்டு ஒருக்களித்தாள்.

எவ்வளவு கஷ்டம் இந்த மனித ஜென்மம். இயற்கை உபாதைகள் எப்படிக் கட்டி இழுக்கின்றன. காமம் வந்து வயசு காலத்தில் பேயாய் ஆட்டுகிறது. தலை சீவலும் பவுடர் போடுதலும் சீராய் உடுத்துதலும் காமம் தான். உடம்பு துணை கேட்காமல் இருந்தால் உருவம் எப்படி வேண்டுமானாலும் இருக்கும். காமத்துக்கு அடிப்படை என்ன? ஏன் காமம் இயல்பாயிற்று? காமம் இனவிருத்திக்கு அடிப்படை. மென்மையும் திண்மையும் எதிர் எதிர் விஷயங்கள். மென்மை திண்மைக்கு ஏங்குகிறது. திண்மை மென்மைக்குப் பறக்கிறது.

காமம் தப்பு என்று சொல்பவர்கள் இன விருத்திக்கு எதிரானவர்களா?... இல்லை. மிருகங்கள் இனவிருத்தி செய்கிறதே எப்படி? காமமில்லாமலா? வேறு எங்கே தப்பு நடந்துவிட்டது? வெறும் இன விருத்தி மட்டுமில்லை என்னுடையது, என் பிள்ளை என்கிற ஸ்தாபிதம் முக்கியமாகிவிட்டது. நிலம் உடைமையாக்கப்பட்ட போது என் நிலத்தை என் பிள்ளையே ஆள வேண்டும் என்கிற எண்ணம் வந்துவிட்டது. சொத்துக்குப் பிள்ளை வேண்டும்; பிள்ளை பெறப் பெண் வேண்டும். காம வயப்பட்டு, கட்டின பெண் ஓடக்கூடாது என்றுதான், தாலி, மூக்குத்தி, மெட்டி என்று அங்கங்கு வளையம் போட்டுக் கயிறு கட்டி இழுக்கிறார்கள். பெண்ணுக்குக் காமம் வருவது தவறு என்கிறார்கள். அடக்கு அடக்கு என்று அலறுகிறார்கள். இயற்கையை, இயல்பை

எதிர்த்து. சவுக்கடி கொடுக்கிறார்கள். சவுக்கடிக்குப் பயந்து பெண் தப்பிக்க முயல்கிறாள். பொட்டும் பூவும் வைத்து உடம்பு போர்த்திப் பத்தினி வேஷம் போடுகிறாள். எது வளையமோ, எது பிடித்து இழுக்கிற கயிறோ அதையே வைத்து மாயம் காட்டுகிறாள். மூக்குத்திக்கு வைரம் வேண்டும். மெட்டிக்கு வெள்ளி வேண்டும். தாலிக்கொடிக்குத் தங்கம் வேண்டும். உடம்ப முழுக்க ஜிலுஜிலுப்பு வேண்டும் 'அடே!' என்று ஆச்சரியப்படும் ஆபரணமாய் அவை மாற வேண்டும்.

அடக்கி ஆளுகிற ஆணே ஒரு வைரம் வாங்கு. வெள்ளி வாங்கு, தங்கம் தேடு. இவை தராமல் தொடாதே. தொடவேண்டுமெனில் தங்கம்தா, வெள்ளியால் இழை. நீ மறைக்கச் சொன்ன இடங்களை மறைத்து விட்டேன். மார்பை மூடிக்கொண்டேன். மூடப்படாத இடத்துக்கு மூக்குக்கு, காதுக்குக் கழுத்துக்கு கைகளுக்கு கால்விரலுக்கு அலங்காரம் செய். அவற்றை அந்நியர் பார்க்கட்டும். மெட்டி சத்தம் கூப்பிடட்டும். கால் கொலுசு கொஞ்சிப் பேசட்டும், கை வளையல் சிரிக்கட்டும். காது தோடு கண் சிமிட்டட்டும். மூக்குத்தியும், புல்லாக்கும் 'கிட்ட வா' என்று கூப்பிடட்டும். மறைக்கச் சொல்லி உத்தரவு போடுகிறாய்? யாரும் பார்க்கக் கூடாது என்று கட்டளையிடுகிறாய். ஊர் முழுக்கக் கூப்பிடுகிறேன் பார், கூப்பிட்டு கிட்ட வரச் சொல்கிறேன்பார். வெஞ்சினம் இது. பெரிய தந்திரம் இது.

யாருக்கும் புரியவில்லை. புரிந்து கொள்ள மனசில்லை காலம் காலமாய் ஒரு திருட்டு யுத்தம் நடக்கிறது. தடுக்கத் தெரியவில்லை.

கண்ணனுக்கு ராணியின் மார்பும் வயிறும் முதுகும் பிருஷ்டமும் பிடித்துப் போயிருக்கிறது. குடித்தனம் பண்ண வா, என்று கூப்பிடுகிறான். வீடு பார்த்துப் பாத்திர பண்டம் வாங்கி ரிஜிஸ்டர் மேரேஜ் செய்து, இந்த வீட்டுக்குப் போய் அந்த வீட்டுக்குப் போய்...



அவுறுடி நாயே...

எல்லாத்தையும் அவுறு.

அவுக்கறேன், பட்டுப்புடவை நிறைய ஜரிகை போட்டு வாங்கித் தரியா?

வாங்கித் தரேன், சீக்கிரம் அவுறு.

அவிழ்த்து பட்டு வாங்கி பட்டை அவிழ்த்து நகை வாங்கி பண்டமாற்றா குடித்தனம்? வேசித்தனமா கல்யாணம்?

இதில் காமம் தீருமா?

காமம் தீருகிறதோ இல்லையோ வேறு கௌரவம் கிடைக்கிறது. கௌரவத்துக்குக் காமம் பலியாகிறது. கௌரவம் மேல் கௌரவம் வர, காமம் இரண்டாம் மூன்றாம் பட்சமாகி, ச்சீ தப்பு என்று பேசப்பட்டு, இயற்கையை, உடற்பு இயல்பை மடக்க நினைத்து முடியாமல், போறலை போறலை என்று ஆதங்கம் வர-

என்ன போறலை?

புடைவை போறலை, நகை போறலை என்று பொய் சொல்லி, சொன்ன பொய்யை உண்மையென்று நம்பி ஓடியாடி தகிடுதத்தம் செய்து மனித இயல்பையே கொன்று போட்டு விட்டோம்.

கொல்வதை மரபு என்று சொல்லி விட்டோம்.

□ □ □

தேன்மொழி எழுந்து உட்கார்ந்தாள். தலையைப் பிடித்துக் கொண்டாள். எழுந்துபோய்த் தண்ணீர் குடித்தாள். வராந்தாவைத் திறந்து வெளியே வந்தாள். வீட்டுக்கும் தோட்டத்துக் கதவுக்கும் இடையே உலவினாள்.

இவ்வளவு தெரிந்த பிறகு இனிமேல் காதலிக்க முடியுமா?

முடியாது.''

யாரையும் எதையும் எப்போதுமே காதலித்தல் முடியாது. காதலுக்குக் கீழே இருக்கிற பொய் புரிந்து போன பிறகு முடியாது. கீழே இருக்கிற சேறு தெரிந்த பிறகு தாமரை உயரே வந்துவிடும். எனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று சிரிக்கும். தெரித்தாலும் ஒட்டாது. சேறு கீழே விழும்.

ஆனாலும் தாமரை சேற்றில்தான் இருக்க வேண்டும்.

தேன்மொழிக்கு யோசிப்பு அதிர்ச்சியில் தூக்கம் வந்தது.

''கண்ணன் வருவான்
கதை சொல்லுவான்''

பாட்டுப் பாடிக்கொண்டே ராணி குளித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பல் தேய்த்து விட்டு தேன்மொழி ஹாலுக்குத் திரும்பினாள். மலர்க்கொடி சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தாள்.

''மலர் எழுந்திரு. எழாச்சு.''

மலர் எழுந்துஉட்கார்ந்து இரண்டாவது நிமிடம் மறுபடி வலியில் துடித்தாள்.

''என்னடி?'' அம்மா கத்தினாள்.

''தாங்க முடியலைம்மா.''

,இடுப்பு குறையணும், இடுப்பு குறையணும்னு இறுக்க இறுக்கப் பாவாடை கட்டிக்கிட்டா... உள்ள எசகு பிசகா சுருக்கு விழுந்திருக்கும். நாடாவ அவுறு'' அம்மா வயிற்றுப் பகுதியில் விரலால் அழுத்திப் பார்க்க, மறுபடி மலர்க்கொடி வலியில் துடித்தாள்.

குடல்பகுதியில்எக்ஸ்ரே எடுக்கவேண்டும். பேரியம் டெஸ்ட் செய்ய வேண்டும் என்று டாக்டர் எழுதிக் கொடுத்தார். வலி குறைய அயர்ந்து தூங்க மாத்திரைகள் கொடுத்தார்.



மாத்திரைக்கு வலி மட்டுப்பட்டது.

ராயப்பேட்டைக்கு அழைத்துப் போய் பேரியம் டெஸ்ட்டுக்கு வைக்கையில் மனசுக்குள் ஏதோ எங்கோ சரியில்லை என்று தோன்றி விட்டது. பேரியம் டெஸ்ட் முடிந்து பஸ் ஏறுகையில் மறுபடி வலியில் துடிக்க ஆரம்பித்து விட்டாள்.

வலி அதிகமாயிருந்தால் இரண்டு மாத்திரையாகக் கொடுங்கள் என்று டாக்டர் போனில்சொல்ல,மாத்திரைகளைச் சாப்பிட்டு சோர்வோடு படுத்துக் கொண்டாள். ''அல்சரா இருக்கலாம்னு டாக்டர் சந்தேகப்படறாரு. நாம காரம் கூட அதிகம் சேர்க்கறதில்லையே...''

வீடே மலர்க்கொடியைச் சுற்றிக்கொண்டு ஆச்சரியப்பட்டது.

அல்சருக்குத் தமிழ் வைத்தியம் கீரை வைத்தியம் கிழங்கு வைத்தியம் என்று பலதும் பேசப்பட்டது.

அப்பா பிற்பகல் மார்க்கெட்டுக்குக் கிளம்பும்போது வாசலில் தேன்மொழி பின்னாலேயே போனாள்.

''என்னம்மா?''

''ஓர் ஆயிரம் ரூபா வச்சிட்டுப் போப்பா.''

''எட்டு நூறு வீட்ல இருக்கு. என்ன வேணும்?''

''மல்லரை ஆஸ்பத்திரில சேர்க்க வேண்டியிருக்கும்.''

''அல்சர் தானம்மா... கீரைலயே குணப்படுத்திடலாமே.''

''அல்சரா இல்லேன்னா?''

''கட்டி இருக்கும்னு நினைக்கிறியா?''

''தெரியலை.''

''சட்டுன்னு சேர்க்கும்படியா ஆச்சுன்னா காசு வேணுமில்ல?''

''பீரோவுல இருக்கறதை எடுத்துக்க. தக்காளி லோடு வர ஆரம்பிச்சிடுச்சு...போவாத போனா பார்ட்டி கைமாறிடும், எதனா வேணும்னா எதிர்க்கடைக்குப் போன் பண்ணு.''

ராணி அன்றும் தாமதமாக வந்தாள்.

''போவேணாம்னு சொல்லியிருந்தேன்ல?'' தேன் மொழி இரைந்ததும் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

''வாசல்ல வந்து நின்னுட்டாங்க. போகாத இருக்க முடியல. வர வியாழக்கிழமை இங்க வரேன்னாங்க.''

''வேண்டாம். இன்னும் கொஞ்சநாள் போவட்டும்.''

''ஏன் தேன்மொழி?''

''மலருக்கு உடம்பு சரியில்லை.''

''வெறும் வயித்து நோவுதானே.''

''வேற ஏதாவது இருந்தா?''

''எதுவும் இருக்காது தேன்மொழி. அவ வயித்துக்கு சாப்பிடாதயே நோவு கொண்டாந்திருக்கா. பள்ளிக் கூடம் மட்டம் போடறதுக்கு சாக்கு கண்டு பிடிச்சா. அதையே இத்தினி வருஷம் கழிச்சும் சொல்லிக் கிட்டிருக்கா''

''உனக்குப் புரியலை ராணி. யாரும் வீட்டுக்கு வர வேணாம், சொல்லிட்டேன்.''

''வரதா ப்ராமிஸ் பண்ணிட்டாரு.''

''வேணாம்னு சொல்லிடு.''

''அதுக்கு மறுபடி நான் போயாகணும்.''

''லெட்டர் எழுதிப் போட்டுடு...''



''ஐயோ... லெட்டர் எதுக்கு... எழுத்து மூலமா மாட்டிக்கிறது நல்லதா?''

தேன்மொழிக்கு சிரிப்பு வந்தது.

''நேர போய் சொல்லப் போறியா? சரி சொல்லு. மறுபடி ஏதாவது சாக்கு வச்சுக்கிட்டு சுத்தாத.''

''அம்மாகிட்ட ஒண்ணும் சொல்லலியே நீ?''

''இருக்கற வேதனைல அதை வேற ஆரம்பிக் கணுமா... போய் சாப்பிடு'' இரவு சாப்பாடானதும் டிரான்ஸிஸ்டரோடு வாசல்படியில் உட்கார்ந்த ராணியைப் பார்க்கப் பாவமாய் இருந்தது.

''இதுக்கு ஏதாவது கல்யாணத்தைப் பண்ணி முடி யேம்மா.'' மெல்ல படுக்கையில் படுத்துக்கொண்டு பேச ஆரம்பித்தாள்.

''ம்... வந்து கேக்கத்தான் செய்யறாங்க. அப்பா என்ன நினைச்சுட்டுருக்கார்னு தெரியலையே.''

''பத்து ரூபால முடிக்க முடியாது?''

''பன்னண்டு பதிமூணு ஆவும். இருக்கற நகையைப் போட்டுக் கட்டிக் குடுத்துடலாம். படிப்பு முடியட் டும்னு அப்பா நினைக்கிறாங்களோ என்னவோ?''

''இதையேன் படிக்க வச்சே?''

''அவதான் வீட்ல இருக்கப் பிடிக்கலைன்னு படிக் கப் போறா. காலேஜ் போடின்னுதான் அப்பா சொன் னாரு. இவளுக்குப் பயம், இங்கிலீஷ் சரியா வராது எனக்கு, டீச்சர் ட்ரெயினிங் போறேன்னு சொல்லிட்டா. நம்ம ஜாதில எட்டாவது போறும்னுடுவாங்க. இப்ப தான் எல்லா ஜாதியும் படிப்பு படிப்புன்னு அலையுதே, சரி போவட்டும்னு விட்டுட்டேன். ஏன் உங்கிட்ட கேட்டாளா கல்யாணம் பண்ணச் சொல்லி?''

''கேட்கலை.''

''பின்னே?''

''உட்கார்ந்து கன்னா பின்னான்னு பாட்டுக் கேக்குது. சிங்காரிச்சிட்டு சுத்துதேன்னு கவலை.''

''தப்புவழிக்குப்போகமாட்டா. ராணிக்குத் தைரியம் பத்தாது.''

''அதெல்லாம் சொல்லாத. எந்தப் புத்துல எந்தப் பாம்பு இருக்கும்னு யாருக்குத் தெரியும்?''

''நீ தெரிஞ்சு பேசறயா தெரியாத பேசறியான்னு புரியலையே?''

''பொதுல பேசினேன். மூணுபொண்ணு பெத்துட்டு கவலையில்லாத இருக்கியேன்னு யோசிச்சேன்.''

''நான் மட்டும் கவலைப்பட்டு என்ன நடக்கும்? உங்கப்பாருக்குப் புரியணும். ஆனா அவரும் அசராத ஒரு நாள் கூட வீட்டுல உக்காராத ஓடறாரு. சாப்பாட்டுக்கு துணிமணிக்குக் கவலையில்லாத கொண்டாந்துடறாரு.''

''அது போதுமா.''

''ஒரு வகையில் பாத்தா அதுவே பெரிய விஷயம். தண்ணி போட்டுட்டு வராம... கூத்தடிச்சு செலவு பண்ணாம... வீடு மார்க்கெட்டுன்னு போய்வரது பெரிய விஷயம். உங்க சித்தப்பா கதை தெரியும் உனக்கு. கள்ளு சாராயம் இல்லாத நாள் கிடையாது. பொம்பளைய அடிக்காத ராத்திரி கிடையாது.''

''கேடு கெட்டதுங்க.''

அத்தனை கேடுல இவரு சுத்தமா இருக்கறது பார்த்தா என்னுடையது பெரிய குடித்தனம்.''



''ராணியை சட்டுன்னு கட்டிக் குடுத்துரு. அதான் நல்லது. திமுசுக்கட்டை மாதிரி வளர்ந்துட்டா. அப்பு நம் ஊர் பேச்சு வாங்கும்படியாயிடும்.''

''ஏண்டி எதுனா தப்பா நடக்கறாளா?''

''நடந்துடலாம்.''

''விவரமா சொல்லேன்.''

''யாரோ ஐயர் பையன் லவ் பண்றானாம். என்ன செய்யறதுன்னு கேட்கறா?''

''செருப்பு கழட்டி அடிக்கச் சொல்லு. என்னமோ இழுத்து இழுத்துப் பேசறியேன்னு பாத்தேன். அதான் சமாச்சாரமா?''

''வீட்டுக்கு வந்து பொண்ணு கேட்கட்டுமான்னு கேட்டானாம்.''

''விளக்குமாறு பிஞ்சிடும். எங்க அவ?''

''அவளைத் திட்டாத. பொண்ணு வெளில வாசல்ல போனா இப்படித்தான் ரெண்டு மூணு சங்கடம் வரும். கேக்கறதுக்கு என்ன சொல்றதுன்னு தைரியம் இல்லாம முழிக்கும்படியாகும்.''

''முழிக்கிறது எதுக்குடி? அவன் ஐயரு. நாம வேளாளரு. சரிப்படுமா? அவங்க வீட்ல விட்ருவாங்களா? வீட்டுக்கு முதல் பொண்ணு ஜாதி விட்டு ஜாதி கட்ட முடியுமா?''

''ஜாதி என்ன வாழ்ந்தது? கொண்டாடித் தலைல வச்சுக்கற அளவுக்கு நம்ம ஜாதிக்காரன் என்ன செய்துட்டான்?''

''அதுக்காக...''

''யாரும் வீடு தேடி வந்தா என்ன ஏதுன்னு பொறுமையா விசாரிச்சு இது சரிப்படாதுன்னு திருப்பி அனுப்பிடு.''

"வருவானேன்... திருப்புவானேன்...எவனும் வாசப்படி ஏறக்கூடாதுன்னு சொல்றதை விட்டுட்டு..."

"வீட்ல உட்கார்ந்து சொல்லிடலாம். நாளைக்கு அவ பஸ் பிடிச்சி காலேஜ் போக வேணாமா?"

"கையைப் பிடிச்சு இழுத்துருவானா?"

"இழுத்துட்டா?"

"அதோட விட்டுருவமா?"

"போய் வெட்டுவ. ஆள் கூட்டிக்கிட்டுப் போய் அடிப்பே. அப்புறம் உங்க ஜாதியே சிரிக்காதா? பொண்ணைப் படிக்க அனுப்பிட்டு இப்ப அவஸ்தைப் படறாங்கன்னு பேசாதா?"

"இழுத்து மூடிகிட்டுப் போனா எவண்டி வந்து பேசப் போறான்? இவ அழும்பு புடிச்சவள். தளுக்கி மினுக்கிக்கிட்டுப் போனா எலாஸ்டிக் நாடா பின்கொக்கி போட்டு இழுத்துக் கட்டிக்கிட்டு நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு போனா?"

"இப்ப என்ன சொல்ற? அவ அழகா இருக்கிறது அவ தப்புஇல்லை. வயசுல பொண்ணுங்க திமிறிக்கான் இருக்கும்."

"திமிறி இருந்தா தெருவுல போறவனை இழுந்து சம்பந்தம் பேசறதா?"

"யாரும் கூப்பிடலை. அவன் வரேன்றான்.

"வரட்டும், விளக்குமாறு பிஞ்சிபோற மாதிரி அவன் எதிரிலேயே நாலு போடறேன்."

"சரி போடு. போட்ட பிறகு வேளாள ஜாதில பையன் தேடறியா இல்லை... இப்பவே தேடறியா."

அம்மா மௌனமாய் இருந்தாள். உள்ளே நடந்து டிரான்ஸிஸ்டரை வைத்துவிட்டு விளக்கை



அணைத்து குப்புறப்படுத்துக் கொண்ட ராணியையே பார்த்தபடி இருந்தாள்.

சுவரில் சாய்ந்து புடைவைத் தலைப்பால் கண்களைப் பொத்திக் கொண்டு சப்தமில்லாமல் அழுதாள். இரவு புரண்டு புரண்டு நெளிந்து விடியற்காலையில் கண் எரிய எழுந்திருக்கும் போது அம்மா தலையணையின்றி சுவர் அருகே தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. மலர்க்கொடியிடமிருந்து சின்ன அனத்தல் கேட்டது தலையில் கை வைக்க ஜுரம் தெரிந்தது.

பல் தேய்த்து வாசலில் வந்து பால் வாங்கி காபி போட்டு குடித்துவிட்டு வாசலில் உட்கார்ந்து தேன்மொழி ஹிண்டு பேப்பர் படித்தாள்.

தந்தியிலிருந்து ஹிண்டுவுக்கு வர இவள் தான் அதிகம் சண்டை போட்டாள்.

ராசிபலன் கூடப் போடறதில்லை. இதை எதுக்கு வாங்கற துட்டு வேற அதிகம்... "ராணி கடுமையாய் எதிர்த்தாள்.

"தினமணி வாங்கலாம் என்று மலர் யோசனை சொன்னாள். அது டைன்டா இருக்கும். ராசி பலனும் போட்டிருக்கு."

"எனக்கு ஹிண்டு வாங்கணும். உங்களுக்கு வேண்டியது வாங்கிக்கங்க!" தேன்மொழி தீர்மானமாய் சொல்லிவிட்டாள்.

"ரெண்டு பேப்பர் வாங்க கொழுத்துப் போயிருக்குதா?" அம்மா குறுக்கிட, நிறைய சண்டைக்குப் பிறகு ஹிண்டு வாங்கப்பட்டது.

அப்பா மார்க்கெட்டில் எல்லா பேப்பரும் படித்து விடுகிறார். ஹிண்டு சும்மா புரட்டிப் பார்ப்பார்.

ராணிக்கு ஹிண்டு புரிவதில்லை. மலருக்குப்புரியும்' ஆனால் அது தமிழ் மாதிரி சுவாரஸ்யம் இல்லை. அம்மா எந்தப் பேப்பரும் படிப்பதில்லை.

## 4

வீடு மாறிவிட்டது. பல்பொடி தேய்ப்பதில்லை. எல்லாருக்கும் தனிபிரஷ்; பொதுவான பேஸ்ட், தனித் தனி சோப். பொதுவான பவுடர். எப்பவாவது இறைச்சி அநேகமாய் வருஷாவருஷம் தீபாவளிக்கு பட்டுபுடவை. தினப்படிக்கு ஷிப்பான், நைலெக்ஸ். வராந்தாவில் சோபா செட். வருக வணக்கம் என்கிற போர்டு. சமைய லறை முழுக்க எவர் சில்வர் பாத்திரம். உள்ளே சின்ன தாய் பூஜை மாடம். சுத்தம், தெளிவு, நல்ல வார்த்தை கள். வாசற்படி கோலம். துவைத்து இஸ்திரி செய்து வைத்த உடைகள். கெட்ட வழக்கம் ஏதுமில்லாத தகப்பன். கோபமில்லாத தாய். வாழ்க்கை நிலை முன் னேறியிருக்கிறது.

ஐயர் பையனுக்கு வீடு பார்த்தால் சரி என்று தான் படும். ராணியிடம் பேசுகையிலேயே நம்பிக்கை துளிர் விட்டிருக்க வேண்டும். ஐய இது வேளாள ஜாதி என்று இழிபட ஏதுமில்லை. மாறாய்—உயர்வு, ஒரு பொது உயர்வு, வந்திருக்கிறது.

பையனைப் பற்றி இன்னும் விசாரிக்க வேண்டும். காலேஜ் கட் அடித்து விட்டு ராயப்பேட்டை போய் மலர்க்கொடியின் எக்ஸ்ரே ரிசல்ட் வாங்கி வந்து இன் கம்டாக்ஸ் ஆபீஸ் போகலாம். சும்மா வந்தேனென்று போய் அவன் எதிரே நிற்கலாம். இன்கம்டாக்ஸ்தானா அவன் இடம் என்று பார்க்கலாம்.

எட்டு மணிக்கு செருப்பு மாட்டி இறங்கின போது ஏதோ ஒரு பயம் உள்ளே தள்ளாடிற்று. என்னவோ மனசு சரியில்லை என்று பட்டது.



ராணியா மலர்கொடியா யார் காரணம் என்று தெரியவில்லை.

ஒன்பது மணிக்கு ரிசல்ட் வந்ததும் தெரிந்து விட்டது.

மலர்க்கொடி.

இரப்பை முழுவதும் புண்கள்.

"அல்சரா?"... தேன்மொழி எக்ஸ்ரே ஆளிடம் கேட்டாள்.

"இருக்கலாம், அல்லது வேறெதுவாகவும் இருக்க லாம். ஐந்து வருடம் வலி இருந்திருக்கிறது. கவனிக்கா மல் விட்டது பிசகு. இரைப்பை புண் சட்டென்று ஆறாது.

பயமுறுத்தினார்கள். உடனே ஆஸ்பத்திரியில் சேரும்படி சொன்னார்கள்.

டாக்டரை ரிசல்ட் பார்த்து விட்டு உதடு பிதுக்கி னார்.

"நினைச்சதைவிட மோசமா இருக்கு."
"என்ன டாக்டர் செய்யறது?"

"உடனே ஜெனரல் ஆஸ்பத்திரி போய்டுங்க. நான் சாயந்திரம் வேற டாக்டரைக் கூப்பிட்டு வரேன்."

"ஆபரேஷனா?"
"பார்ப்போம்,"
"மைனரா மேஜரா டாக்டர்?"

"பயாப்ஸி டெஸ்ட் செய்யணும். என்ன வகைப் புண் என்று பார்க்கணும். டெஸ்ட் ப்ரைவேட் நர்ஸிங் ஹோம் பார்க்கலாமா?"

"சரி டாக்டர்..."
"கொஞ்சம் செலவாகும்."
"பரவாயில்லை டாக்டர்."

நேரே மார்க்கெட்டுக்கு ஓடினாள். கடையில் அப்பா இல்லை. ஆள் அனுப்பினாள். காத்திருந்தாள்.

சமயபுரத்தாளே, ஒண்ணுமில்லாத செஞ்சிரும்மா என்று வேண்டினாள்.

அப்பாவைக் கடை பூட்டச்சொல்லி ஆயிரம் ரூபாய் கடன் வாங்கச் சொல்லி, வீட்டுக்கு ஆட்டோவில் வந்தாள். அதே ஆட்டோவில் மலரை ஏற்றி நர்ஸிங் ஹோம் போனாள்.

ஒண்ணுக்கு நாலு டாக்டராக சூழ்ந்து கொண்டார்கள். மார்பின் குறுக்கே ஒரு துண்டு மட்டும் மடித்துப் போட்டுவிட்டு உடம்பு முழுவதும் ஆராய்ந்தார்கள்.

மலர்க்கொடி அழுதாள்.

"எதுக்குடி," டாக்டருக்குத் தெரியாமல் தேன்மொழி கடிந்து கொள்ள, 'அசிங்கமாயிருக்கு தேன்மொழி' என்று பதில் சொன்னாள்.

"உடம்பு குணமாகணுமில்ல... இதெல்லாம் பாத்தா முடியுமா...?"

மலர்க்கொடி வளர்த்தியும் இல்லை. வாட்டமும் இல்லை. ராணி மாதிரி திமுசுக் கட்டையில்லை. தேன்மொழி மாதிரி சாதாரணத்தில் சேர்த்தியில்லை. நடுவாந்திரம். வேளைக்கு ஒழுங்காகச் சாப்பாடு இறங்கினால் ராணியைக்கூட உருவ அமைப்பில் தாண்டிவிட முடியும். பிடித்தது நாலு பிடி கூட சாப்பிட்டால் வயிற்று வலி வந்துவிடும். சாப்பாடு இறங்கவில்லையென்றாலும் பருவம் தன் வேலையை ஒழுங்காகச் செய்திருந்தது.

எல்லா டாக்டர்களும் நகர்ந்துவிட ஒரே ஒருடாக்டர் மட்டும் நெஞ்சுவரை மலர்க்கொடியைப் போர்த்தி விட்டு...

"ஒண்ணும் கவலைப்படாதீங்க. புண்ணு வந்திருக்கு இரைப்பைல. மருந்துல குணப்படுத்திடலாம்,"



"குணமாகற வரைக்கும் சாப்பாட்டுல கவனம்இருக்கணும். காரமே கூடாது. ரொம்பப் புளிப்பு கூடாது. தயிர் சாதம், பால் சாதம், கீரை சாதம் சாப்பிடலாம். சரியா?"

"சரி"

"உங்களுக்குப் பிடிச்சது என்ன சாப்பாட்டுல?"

ஸ்வீட்."

"மிட்டாயா?"

"மிட்டாய் பிடிக்கும்."

"மிட்டாய் எது? சாக்லேட்டா...இல்லை..."

"ஸ்ட்ராங் பெப்பர்மிண்ட்."

"அட...நிறைய சாப்பிடுவீங்களா?"

"நிறைய இல்லை. ஒருநாளைக்கு ஒன்று இரண்டு." மலர் பதில் சொன்னாள்.

"அவளுக்குச் சின்ன வயசில பலப்பம் சாப்பிடற பழக்கம் இருந்துச்சு. அதை மாத்த இது குடுக்கச் சொன்னாங்க."

"வாட்..."

"பலப்பம்... மண்ணு... சுண்ணாம்பு... இதெல்லாம் தின்னுவா..."

"எப்ப..."

"ஏழு எட்டு வயசு வரைக்கும்..."

"ஐஸீ...இப்ப என்ன வயசு...?"

"இருபத்திரெண்டு..."

"வயித்து வலி...எப்ப வந்தது முதன் முதலா...?"

"பதினெட்டு வயசுல..."

"அப்படியா...பயாப்ஸி செய்துடலாம். வாய்வழியா ட்யூப் விட்டு இரைப்பையை மெல்ல கிளறிப் பார்க்கலாம்."

''ஏதாவது மோசமா இருக்கும்னு நினைக்கிறீங்களா டாக்டர்?...''

''வியாதி வந்த இடம் சிரமமான இடம். லிவர் ரொம்பப் பொறுமையான வஸ்து. எவ்வளவு தொந்தரவு பண்ணினாலும் சகிச்சுக்கும், அளவுக்கு மிஞ்சி தொந்தர வாச்சு...மறுபடி நார்மலுக்கு வர்றது கஷ்டம்.

நான் எவ்வளவு பணம் கட்டணும்.''

''நர்ஸ் சொல்வாங்க.''

ஐநூறு ரூபாய் டெபாஸிட். இருநூறு ரூபாய் மருந்து. இரண்டு நாள்களில் ஆயிரம் காணாமல் போயிற்று. வாய் மூடாமல் இருக்க ரப்பர் அடைத்து ரப்பர் ஒட்டை வழியா தொண்டைக்குள் ட்யூப் விட்டு உள் சதை கிளறி வெளியே எடுத்துப் பரிசோதனைக்கு அனுப்பினார்கள்.

காலையில் கூட இருந்த ராணி பத்து மணிக்கு ட்ரெயினிங் காலேஜ் போகிறேன் என்று புத்தகங்களோடு நகர்ந்துவிட்டாள். அவள் காலேஜ் போக மாட்டாள் என்பது தெளிவாய்த் தெரிந்தது. இந்த நேரத்தில் அதைக் கிளற மனசில்லை. சண்டை போட இஷ்டமில்லை. ரிசல்ட் ரிசல்ட் என்று மனசு அடித்துக் கொள்ளும்போது வேறு எந்தக் காரியம் பற்றியும் யோசிக்க முடியவில்லை.

ரிசல்ட் வந்தது.

ஒட்டப்பட்ட கவரில் வெள்ளைக் கோட்டுப் போட்ட பெண் கொண்டு வந்து கொடுத்தாள்.

''என்னங்க ரிசல்ட்?''

''டாக்டர் கிட்டதான் சொல்ல முடியும். பேஷண்ட் கிட்ட ரிசல்ட் சொல்லக்கூடாது.''

''நான் பேஷண்ட் இல்லீங்க, என் அக்காதான்.



''யார்கிட்டயும் முடியாது.'' அந்தப் பெண் நகர்ந்து விட்டாள். தேன்மொழி ஒட்டப்பட்ட கவரோடு கெஞ்சிக் கொண்டே பின்னால் ஓடினாள்.

''விடுங்கம்மா சொல்ல முடியாது.''

தேன்மொழி கோபத்துடன் நின்றாள். ஒட்டப்பட்ட கவரைத் திருப்பிப் பார்த்தாள். அவள் பார்வை அந்தப் பெண்ணுக்குப் புரிந்து விட்டது.

''கவர் கிழிக்கக் கூடாது.''

தேன்மொழி பதில் சொல்லவில்லை. மெல்ல நகர்ந்து சுவரோர பெஞ்சில் சோர்வோடு உட்கார்ந்தாள். அந்தப் பெண் மேலே நடக்கத் தொடங்கினாள் நின்றாள், மெல்லத் திரும்பினாள்.

''உங்க பேர் என்ன...''

''தேன்மொழி.''

''என்ன செய்யறீங்க...''

''பி.ஏ. லிட்ரேச்சர் படிக்கிறேன்.''

''பேஷண்ட் என்ன வேணும்...?''

''அக்கா—கூடப் பிறந்த அக்கா...''

''அவங்களுக்குக் கேன்ஸர். ஸாரி, நான் சொன்னதை டாக்டர் கிட்ட சொல்லாதீங்க. கவர் பிரிக்காதீங்க.''

இடி விழுந்து தரை பிளந்து தரையிலிருந்து அக்னி கிளம்பி சகலமும் தீய்த்தது.

தேன்மொழி சுருண்டு பெஞ்சில் படுத்தாள். அந்தக் காகித உறையால் முகம் பொத்திக் கொண்டாள். விம்மி விம்மி அழுதாள். அந்தப் பெண் அங்கேயே சற்று நேரம் நின்றுவிட்டு நகர்ந்து போனாள்.

வராந்தாவில் நடக்கிறவர்கள் நின்று பார்த்துவிட்டுப் போனார்கள்.

பயம் பயம் பயம் என்று உள்ளே கூவல் எழுந்து கொண்டிருந்தது. நாலு வாரமாய் இதுதானா...கடவுளே வீடு மேலே வந்து லட்டது என்று நினைத்தேனே... இல்லையா? சரிவா? அதல பாதாளமா... இதைச் சரி செய்ய முடியுமா?

''பதினேழாம் நம்பர் பேஷண்ட் மலர்க்கொடி யாரு? நர்ஸ் சப்தமிட்டுக் கொண்டே வந்தாள்.

மலர் எழுந்திருந்தாள்.

''ரிசல்ட் எங்க?''

''வரலையே...''

''கொடுத்தாச்சுன்னாங்க லேபில?...''

''வரலையே''...

''என்னாடி இது நாறப் பொழப்பா போச்சு. எழுந் திரு. எங்கயாவது தலைகாணிக்கடில வச்சுட்டுப் போயி ருப்பாளுங்க.''

''நான் முழிச்சுட்டுதான் இருந்தேன். யாரும் எதுவும் வைக்கலை.''

''டாக்டர் இப்ப கேக்கிறாரே...''

''தெரியலையே...''

''உன் கூட ஒரு பொண்ணு இருந்துச்சே அது எங்க...?''

''தெரியலையே...''

நர்ஸ் கோபத்தில் காலை உதைத்தாள். விறுவிறு வென்று லெபாரட்டரிக்கு நடந்து போனாள்.

தேன்மொழி எழுந்து முகம் துடைத்துக்கொண்டு உட்காரவும் நர்ஸ் அவளைக் கடக்கவும் சரியாய் இருந்தது.



''நீ தானாம்மா மலர்க்கொடி கூட வந்தது?''

''ஆமாம்''

''இது என்ன கவர்?''

''ரிசல்ட்.''

''இங்கென்ன பண்ற இதை வச்சுக்கிட்டு? ஊரெல் லாம் தேடறேன் காணமே காணமேன்னு. பெஞ்சு கிடந்தா படுத்துடுங்க. ரிசல்ட் வந்தா என்கிட்ட கொடுக்க வேண்டியது தானே? எல்லாத்துக்குமா நாய் மாதிரி நர்ஸ் அலையணும்?''

கூச்சலாய்ப் பேசினது எல்லாருக்கும் கேட்டது. தேன்மொழி சிறுத்துப் போனாள்.

''என்ன ஆச்சு ரிசல்ட்?'' நர்ஸ் கோபத்துடன் உறையைக் கிழித்துக் கடைசி வார்த்தையைப் படித்தாள்.

''மாலிக்னென்ட்...''

''போ. இது பூட்டகேஸு'' முணுமுணுத்து நர்ஸ் அலுப்புடன் திரும்ப, தேன்மொழிக்கு சுள்ளென்று கோபம் வந்தது.

''மரியாதையாய்ப் பேசு.''

''ஏன், என்ன குறைவா போச்சு?''

''பூட்ட கேஸுன்றியே... இதுக்குத்தான் ஆஸ் பத்திரி நடத்தறீங்களா?... ஆயிரம் ஆயிரமா வாங்கறீங் களே?''

''ஐயோ நான் எங்கே சொன்னேன்? ரிசல்ட்ட இடுப்புல வச்சு முடிஞ்சு தூங்கறியேன்னுகேட்டேன்...'' நர்ஸ் பச்சையாய் திசை திருப்பினாள்.

''போடி தேவடியா'' உள்ளே கனன்று கொண் டிருக்கிற துக்கமும் வேதனையும் அது கிளறப்பட்ட முறையும் ஆவணமும் பாம்பாய்ச் சீறி எழுந்தது.

"என்ன சொன்னே...?"

கூட்டம் கூடியது.

நர்ஸ் சுலபமாய் ஜெயித்தாள்.

"இவ கூலிக்கு வேலை செய்யறவம்மா... அப்படித் தான் அலுத்துக்குவாங்க. நாமதான் பட்டும் படாமயும் போவனும்." சமாதானம் சொன்னார்கள்.

"புடிக்கலைன்னா வேறஆஸ்பத்திரி போயிடுங்க." தீர்வு சொன்னார்கள்.

"மன்னிப்புக் கேட்காத விடமாட்டேன்." நர்ஸ் மிகுந்த ரோசமுள்ளவளாய் சப்தம் போட்டாள்.

மலர்க்கொடி நாலு புறமும் பார்த்து "என்னது என்னது?" என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

தேன்மொழி மன்னிப்புக் கேட்டாள். உணவு எடுத்து வந்து அம்மாவிடம் எதுவும் சொல்லாமல் மலரை ஒப்படைத்து விட்டு விட்டுக்கு வந்தாள்.

துக்கம்... அவமானம்... ரோஷம்... இயலாமை... கலவரம்...பின்னிப் பின்னி உள்ளே இழுத்தது.

யார் துக்கமும் யாருக்கும் புரிவதில்லை. புரிந்து கொள்ள முயற்சியில்லை. துக்கம் நட்பு கொடுப்ப தில்லை. விலகிப் போகச் சொல்கிறது. சந்தோஷமும் நட்பு தருவதில்லை. உனக்கு இத்தனை சந்தோஷமா என்கிற வெறுப்பை... ஆத்திரத்தை... பொறாமையைக் கவிழ்க்கிறது.

நட்பு யாரிடமும் இல்லை. உதவி கேட்கும்போது நட்பு காட்டுகிறார்கள். ஒரு ரூபாய் லாபம் இருந்தாலும் புகழ்ந்து பேசுகிறார்கள். உதவி தேவையாயிருந்தால் சிநேகத்துடன் இருக்கிறார்கள். காசோ... பொருளோ... உடம்போ தேவைப்பட்டால் ஆதரவு காட்டுகிறார்கள்.



கண்ணனுக்கு ராணியின் உடம்பு தேவை. காதல் என்கிறான். ராணிக்குத் தன் திருட்டுத்தனத்துக்கு உதவி தேவை. கைகளைப் பிடித்து சொன்னதைக் கேட்ப தாய் அடக்கம் காட்டுகிறாள். நர்ஸின் உதவி மலருக்குத் தேவை. எனக்கு மலர்க்கொடி தேவை. நான் மன் னிப்புக் கேட்கிறேன் 'பூட்டகேஸை' என்று நெருப் பாய்ப் பேசுகிறவளை 'தேவடியா என்று கூப்பிட்டது தப்பா? தப்புதான். அவள் உதவி தேவை. அதனால் தப்புதான்.

இரண்டு நாளில் ஆயிரம் ரூபாய்... இன்னும் எத்தனை நாளோ... எவ்வளவு ஹிம்சையோ...

வீடு நெருங்க...

வாசலில் விளக்கு எரிந்தது.

உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

வாசலில் பெரிய ஆண் பிள்ளைச் செருப்புகள் கிடந்தன.

"ச்சீ... உனக்கு கொஞ்சம் கூடப் பயமேயில் லப்பா... வாசப்படில உட்கார்ந்திருன்னுதானே சொன் னேன். வராந்தா ஹாலுன்னு உள்ளே நுழைஞ்சிட்டு... வேணாம்... ப்ளீஸ் வேணாம்"

ராணியின் குரல் கெஞ்சிற்று.

ஒருக்களித்த கதவைப் பளிச்சென்று தேன்மொழி திறந்தாள்.

கண்ணன்.

சோபாவில் உட்கார்ந்து ராணியைமடியில் போட்டு சுதந்திரமாய்த் தொட்டுக் கொண்டிருந்தான்.

தேன்மொழிக்கு உடம்பு ஆடிற்று.

நர்ஸும் மலரும் அம்மாவும் அப்பாவும் டாக்டரும் மண்டைக்குள் வந்து போனார்கள். திறந்த கதவு மறுபடி

தானாய் சாத்திக் கொள்ள கோபத்துடன் தேன்மொழி மூடும் கதவை எட்டி உதைத்தாள்.

கண்ணன் எழுந்திருந்தான்.

தேன்மொழி வழிவிட்டு நகர்ந்து வராந்தா கம்பிகளுக்கு அருகே போய் நின்று கொண்டிருந்தாள். இது ஏன்... இது ஏன் நடக்கிறது? பொட்டச்சி மட்டும் ஏன் இப்படி சுயநலமாய் நடக்கிறாள். இது பொட்டச்சி சுயநலமா... ஆண்பிள்ளை அத்துமீறலா... ராணி மயக்குகிறாளா... கண்ணன் வலை விரிக்கிறானா? அவன் அந்நியன், இந்த வீட்டு நிலை தெரியாதவன். இந்த நாய்க்கு என்ன துணிச்சல்? எதற்கு இவனை வரவழைத்தாள்? ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்? ஒரு பெண்ணை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பது தெரிந்தும் ஏன் இந்த அசிங்கம் செய்கிறாள்?

"வியாழக்கிழமை பார்க்கவரதாசொல்லியிருந்தேன். அதான் வந்து காத்துக்கிட்டிருந்தேன். ராணியும் தனியா இருக்க பயப்பட்டுச்சு. உள்ளே உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தோம்."

பொய்... பொய்... ச்சே! அல்பமான அசிங்கமான பொய்... கேவலமான பொய்...

"இரண்டுல ஒண்ணு பட்டுன்னு உங்க வீடு முடிவு சொல்லிடுச்சுன்னா... எனக்கு சௌகர்யம்... வீடு பார்க்கணும்... நிறைய செலவு இருக்கு."

இந்த பன்னாடையிடம் மதித்துப் பேசியதே பிசகோ? ஆண் பிள்ளையாய் இவனை மதித்ததே அசிங்கமோ...

"கோவப்படாமே நான் பேசறதைக் கேட்கணும்." கண்ணன்கிட்டே வந்தான்.

"ப்ளீஸ் வெளியே போங்க" தேன்மொழி பல்லைக் கடித்துக் கொண்டு பேசினாள்.



"விட்டுக்கு வரச் சொல்லிட்டு வெளியே போன்னா என்ன அர்த்தம்?"

"எப்ப வரச் சொன்னேன்?"

"பீச்சுல உக்காந்து ஆயிரம் கேள்வி கேட்கலை?"

"அதால..."

"பதிலுக்கு நான் கேட்டேனா...? கல்யாணம் பண்ணிக்க விருப்பம்னு சொல்ல வந்தேன், சிடுசிடுன்றீங்களே...?" கண்ணன் அதட்டினான்.

"இப்போதைக்கு எதுவும் இல்லை. போயிட்டு வாங்க... எங்க நிலைமை சரியில்லை."

"சரியான காரணம் சொல்லுங்க."

"சொல்லத் தேவையில்லை."

"சொல்லியாகணும்... இல்லேன்னா..."

"இல்லேன்னா..." தேன்மொழிக்குள் சீற்றம் பொங்கியது.

"ஐயம் ஸாரின்னு போயிட வேண்டியது தான்..."

"போயேன்..."

"ராணி..."

"வெளியே போங்க..."

"நான் ராணிகிட்டே பேசணும்..."

"ப்ளீஸ் வெளியே போங்க..."

"ஏய் ராணி... பொட்டிய எடுத்துண்டு கிளம்பு" விரல் சொடுக்கினான்.

"போடா கம்மனாட்டி போடா வெளியே..."

"ஏய்..."

"செருப்பு பிஞ்சிடும்... வெளியே போ..."

"தேன்மொழி... பின்னால இதுக்காக வருத்தப் படுவே..."

''கெட் அவுட்.''

அக்கம் பக்கம் வீடுகளின் கதவுகள் திறந்தன. ஆட்கள் வந்தார்கள்.

''யாருப்பா, என்னது... யார் நீ...?''

கண்ணன் பாம்பு மாதிரிக் கூட்டம்பார்த்து வெளியே போனான்.

''தேன்மொழி! நீ செய்தது தப்பு. நீ யாரு அவரைத் திட்டறதுக்கு?''

''பேசின... கொன்னுடுவேன்...''

''ஆத்திரக்காரி... பொறாமை புடிச்சதே... உனக்கு ஆள் கிடைக்கலேன்றதுக்கு...''

பளீர் பளீரென்று தேன்மொழி ராணியை அறைந்தாள். பாய்ந்து அடிக்க வந்தவளை இழுத்துத் தரையில் போட்டாள். மிதித்தாள். அலறினவள் முகம் பார்க்காமல் பாத்ரூமுக்குப் போனாள். தாளிட்டுக் கொண்டாள். ஷவரைத் திறந்துவிட்டு உடம்பெல்லாம் நீர் வழிய நின்றாள்.

கண்ணில் நீர் வழிந்து ஷவர்த் தண்ணீரோடு கலந்தது.

உடுத்திக் கொண்டு ஆஸ்பத்திரி போனாள். ஆஸ்பத்திரி காண்டீனில் காபி குடித்தாள். அம்மாவைத் தனியே அழைத்து மலருக்கு கான்ஸர் என்று சொன்னாள். அப்பா பன்னிரண்டு மணிக்கு வர... அவருக்கும் தெரிவிக்கப்பட்டது. மரத்தடியில் மூவரும் உட்கார்ந்து அழுதது இன்னும் நினைவில் இருக்கிறது.

## 5

ஆறு மாசம் உயிரோடு இருப்பாள் என்று சொன்னார்கள்.

காலையில் ஒரு பெதடின், மாலையில் ஒருபெதடின் போட்டார்கள்.



பலப்பம் தின்றதுதான் காரணம். அஞ்சு வருட ஆரம்பம் இல்லையா... பன்னிரண்டு வருட புண்ணாம். இரைப்பை ஓட்டையாகி விட்டதாம். உணவுக் குழாய், பெருங்குடல் எல்லாம் கொப்புளங்களாம்.

மலர் தெரிந்து கொண்டாள்.

எந்தப் பாதிப்பும் இல்லாமல் இருந்தாள். வழி விரக்தி ஏற்பட்டிருக்கலாம்.

கோபால்ட் சிகிச்சைக்கு வாரா வாரம் அழைத்துப் போகப்பட்டாள். அல்ட்ரா வயலட் பாயப் பாய வேறு தொந்தரவுகள் வந்தன. வயிற்றுப் போக்கு, தலைவலி, ஜுரம், தோல் புண் என்று வந்தன. முடி கற்றை கற்றையாய்க் கொட்டிற்று. கண் பார்வை மங்கிற்று, நினைவு தடுமாறிற்று. நெஞ்சு சுருங்கியது. தோல் வெடிப்பு ஏற்பட்டது. நகம் சொத்தையாயிற்று. பல்வலி ஏற்பட்டது.

பெண்ணாய் இடுப்பு அசைய ஆஸ்பத்திரிக்கு வந்தவள் எலும்புக் கூடாய்ப் போனாள்.

மூழியும் முன் பற்களும் மட்டுமே எடுப்பாய்த் தெரிந்தன.

''நான்தான் மலர்க்கொடி; மறந்துட்டீங்களா...'' பார்க்க வந்தவர்கள் தடுமாறுவதைக் கவனித்துவிட்டுக் குழந்தை மாதிரித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

மழைத் தண்ணீரை சொம்பால் ஊற்றி அலம்புவது மாதிரி காசு செலவாயிற்று. ஆயிரம் ஆயிரமாகத்தான் கொடுக்கும்படி இருந்தது. நகைகள் வந்த விலைக்கு விற்கப்பட்டன. கடன்... கடன் என்று பார்த்தவர்களிடமெல்லாம் பேச்சு தொடங்கியது. காலேஜ் எந்தப் பக்கம் என்பதே மறந்து போயிற்று.

ஒரு திங்கட்கிழமை காலை எட்டு மணிக்கு டாக்டர் வந்து பார்த்துவிட்டு நினைவு தப்பிப்போயிருந்த மலர்க்

கொடியை வீட்டுக்கு எடுத்துச் செல்லும்படி சொல்லி விட்டார். டாக்ஸிக்கு அலைந்து வீட்டுக்குக் கொண்டு வந்து போட்டு உறவுக்குத் தகவல் சொல்லி இரண்டு நாள் நினைவேயில்லாமல் மூச்சு மட்டும் இழுப்பாய் வந்துகொண்டிருந்தது. அம்மாவும் தானுமாய் மாறி மாறி மடியில் போட்டுக்கொண்டு "மலர், கண் திறந்து பாரும்மா." என்று அழுதது. இந்த ஜென்மத்தில் மறக்க முடியாது. கண் திறக்காமலே மலர் உயிரும் அடங்கியது. வியாதியாய்க் கிடந்த உடம்பு தாங்காது என்று அரை மணி நேரத்தில் எடுத்துப் போய்விட்டார்கள். அன்றைய துக்கத்துக்கு மிக நெருக்கமான உறவுகள்கூடக் கலந்து கொள்ளாதது உறவுமீது, ஜாதிமீது வெறுப்பை வளர்த்தது.

மலரின் போட்டோ எதிரே இலை முழுவதும் ஸ்வீட்டாய் வாங்கி வைத்து அப்பா அழுதார். பெண்ணை வளர்த்துப் பறிகொடுத்த சோகத்தில் துவண்டு கிடக்கும் அம்மாவைத் தேற்ற தேன்மொழி அருகில் இருக்க வேண்டியதாயிற்று. பெயர் நீக்கப் போவதாய் வந்த மெமோவுடன் மறுபடி காலேஜ் செல்ல நிலைமையைக் கேள்விப்பட்டு திரும்பச் சேர்த்துக் கொண்டார்கள்.

கடன் நெருக்கியது.

காலேஜ் பஸ்ஸூக்குக்கூட காசு தட்டுப்பாடு வந்தது.

ராணி, டீச்சர் ட்ரெயினிங் பரீட்சை எழுதினாள்.

தேன்மொழி எழுதவில்லை. எழுதப் பணம் கட்ட வேண்டும்.

முடியவில்லை.

வேலைக்கு மனுப்போட ஆரம்பித்தாள். பத்து ரூபாய் கட்டி டைப்ரட்டிங் கற்றுக்கொண்டாள்.

அக்கௌன்டென்ஸி படித்தாள்.

ராணி பாஸ் என்று ரிசல்ட் வந்தது.



தேன்மொழிக்கு சென்னை அரசு தலைமையகத்தில் தற்காலிக வேலை கிடைத்தது. அரசுத்தேர்வுஎழுதினால் நிரந்தரமாகும். எழுதச் சொன்னார்கள். விண்ணப்பத்தில் பிற்பட்ட வகுப்பு எனக் குறிப்பிட்டாள். தேர்வில் பாஸானாள். வேலை நிரந்தரமானது.

ராணி கார்ப்பரேஷன் பள்ளில் வேலைக்குப் போனாள். அப்பா இரவில் சைக்கிள் மிதிக்க கஷ்டமாயிருக்கிறது என்று கடையிலேயே படுத்துக்கொண்டார். கடையில் இருக்கிற நேரமெல்லாம் காசு என்பதால் இப்படி முடிவெடுத்தார்.

சிறுகச் சிறுக மலருக்கு வாங்கிய கடனை அடைத்தார்கள். நகைகளை மீட்டார்கள். மூன்று வருஷம் ஆயிற்று நிமிர்வதற்கு. ராணியைப் பெண் கேட்டு வந்தார்கள். உற்று உற்றுத் தேன்மொழியைப் பார்த்தார்கள். நிறைய விசாரித்தார்கள். என் பிள்ளைக்குத் தேன்மொழியைத் தருகிறீர்களா என்று கேட்டார்கள். அம்மா சரிதான் போய்யா என்று அந்த இடத்தை விட்டாள்.

அடுத்த வரன் வரும்போது தேன்மொழி ஆபீஸுக்குப் போய்விட்டாள். ராணியைப் பிடித்திருக்கிறதுஎன்று வந்தவர்கள் சொன்ன பிறகுதான் வீட்டில் தங்கினாள்.

ஆனால் மறுபடி கடன் வாங்க வேண்டும். எட்டாயிரம் ரூபாயாவது கடன் வாங்க வேண்டும்.

வாங்கினார்கள். பதினைந்து பவுன் நகை ராணிக்குப் போட்டு கல்யாணம் நடந்தது.

கல்யாணத்துக்கு கண்ணன் தன் மனைவியோடுவந்திருந்தான். அவன் ஜாதிப் பெண்ணாம். இன்ஷுரன்ஸ் கம்பெனியில் வேலை செய்கிறாளாம்.

மலர் செத்துப் போனதற்குத் துக்கம் கேட்டான். தேன்மொழி மன்னிப்புக் கேட்டாள். இரண்டு பேருமே விதி என்று பெருமூச்சு விட்டார்கள்.

ராணி தண்டையார்ப்பேட்டையில் தனிக்குடித்தனம் போனாள். முதல் மாத விலக்கின்போது வீட்டுக்கு வந்து பரண் ஏறி ஒரு கூடையை இறக்கினாள். கூடைக்குள் இருந்த ப்ளாஸ்டிக் பையை எடுத்தாள். கவிழ்த்தாள். நூற்று நாற்பது கடிதங்கள். கண்ணன் எழுதின கடிதங்கள்.

'படித்துப் படித்து ஒவ்வொன்றாய்க்கிழித்துப் போட்டாள். சிலதைத் தேன்மொழி படிக்கக் கொடுத்தாள்.

''என் மேல கோவமா?''

''அதெல்லாமில்லை...''

''உண்மையைச் சொல்லு...''

''எப்படிச் சொல்றது?''

''சொல்லேன் தெரிஞ்சிக்கறேன்.''

''உங்கிட்ட சொல்லியிருக்கக் கூடாது. சொன்னது பிசகு...''

,,என்?''

''உனக்குப் புரியலை. லவ்வுன்னா என்னன்னு தெரியலை. கை போடறதப் பெரிசா எடுத்துக்கிட்ட...

''உன்னுது லவ்வேயில்லை.''

''யாரு லவ் சொல்லு? நானும் கண்ணனும் ஆவி ரூபமா கந்தர்வர்களா... தேவர்களா... வெறும் காத்தா பறந்து போறது காதலா... தொடறது, கிளர்றது தடவறது இருக்கத்தான் செய்யும். ஐயய்யோன்னுட்டா... பொம்பளை கஷ்டம் பொம்பளைக்குக்கூட தெரியலைன்னா எப்படி?''

''வீட்ல கல்யாணம் பார்த்து வைக்கமாட்டோமா...''

''அதனாலேயே கண்ணனை வேணாம்னுட்ட... வெளியே போடான்னுட்ட... நெஜம் பேசு தேன்மொழி ஏதோ செய்துட்ட... அதையே சரின்னு சாதிக்காதே...



உனக்கு நாங்க தொட்டுக்கிட்டது அசிங்கமாப் போயிடுச்சு...''

''அசிங்கம்தான்...''

''எப்படிப் புரிய வைக்கிறதுன்னு தெரியலை... என் ஃபர்ஸ்ட் நைட் சொல்லட்டுமா... ஓர் அசிங்கம் கேக்கறியா... பாங்க் மாப்பிள்ளை பாங்க் மாப்பிள்ளைன்னீங்களே... உள்ள நுழைஞ்சதும் மார்ல கை வச்சாரு ஹார்னாம். செத்துட்டேன் தெரியுமா? தலைகாணிக்கடியிலேர்ந்து சப்பை பாட்டில் எடுத்து மூடி திருகி சோடா ஊத்திக் குடிச்சாரு. ஒண்ணும் கண்டுக்காதன்னு கண்ணடிச்சாரு. பாவாடையோட ஸ்கிப்பிங் ஆடுன்னாரு. தினம் ஆடுறேன். வேறு வழி? ஆனா தேன்மொழி. என் கனா வேற. பாட்டுப் பாடி தோள்ள கை போட்டு நிலா பாத்து... மல்லிப்பூ தலைக்கு வச்சுக்கிட்டு படுக்கைக்குக் கீழே கோடு போட்டு, மல்லிப்பூவும், மருக்கொழுந்தும் வச்சு ஆடு புலி ஆட்டம் ஆடி வேணும்னாலும் தோத்து கொண்டாடிக் கொண்டாடி கட்டற புருஷனுக்கு ஆசைப்பட்டேன். அழுது சிரிச்சு மயக்கி கண்ணனை என் கைக்குள்ள போட்டு வச்சிருப்பேன். நானா தேடி... நானா கண்டுபிடிச்சு... நானா தேர்ந்தெடுத்த ஆளை என் பக்கம், இழுத்திருப்பேன். இங்கிலீஷ் கத்துக்கொடு, பொயட்ரீ கத்துக் கொடுன்னு அதிகம் தெரிஞ்சுக்கிட்டிருப்பேன். இப்ப குடிக்க கத்துக்கணும்ங்கறாங்க... நேத்து குடிச்சேன், இன்னிக்கும் குடிப்பேன்.''

ராணி அழுகிறாளா என்பது தெரியவில்லை. துக்கம் மட்டும் தெரிந்தது.

''ஒண்ணும் மட்டும் தெரிஞ்சுக்க தேன்மொழி. சாகற மட்டும் என்னால கண்ணனை மறக்க முடியாது. கண்ணனும் என்னை மறக்கமாட்டார். அது காமமோ... காதலோ...டாவோ...உடம்பு கொழுப்போ... யார் கைல யாவது மாட்டி இந்தக் கடிதாசிங்க... என் குடியைக்

கெடுக்கப் போறதேன்னு கிழிக்கிறேன் தவிர, இது எதுவும் எனக்கு மறக்காது.''

''ராணி, ஐயம் ஸாரி...

ராணி வாய்விட்டுச் சிரித்தாள். மொத்தமும் ஆவேசமாய்க் கிழித்தாள். பக்கெட்டில் முக்கினாள். நீர் ஊற்றினாள். கசக்கிக் கசக்கிப் பிழிந்து குப்பைத் தொட்டியில் போட்டாள்.

''கண்ணன் நிஜமாகவே காதலிச்சிருந்தா காத்திருக்கலாமே.. ஏன் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு...?''

''நான்தான் வேண்டாம்னுட்டேன். ஒண்ணுமேயில்லாமே கிளம்பி அந்தாள் பின்னாடி பொவணும். அந்தாள் குடித்தனமும் பண்ணி எனக்கு நகையும் வாங்கிப் பூட்டணும். ஒருநாள் இதுவேஎங்களுக்குள்ளே கசப்பு கொடுக்கலாம். எனக்கு மதிப்புக் குறைவுதானே. தவிர, மலர் சாகப்போற நேரத்துல மனசு நொந்து போய் சாபம் குடுத்துட்டா நான் நல்லா இருப்பேனா ...என்னோட சுயநலத்துக்கு அந்தாளை ஏன் காத்திருக்கச் சொல்லணும்... காத்திருக்கறது மட்டுமில்லை. கட்டுத்திட்டமா நடந்துக்கச் சொல்லணும்.தொடாதே... இன்னிக்குப் பார்க்காதேன்னு இதெல்லாம் கொடுமை தானே. அதனாலதான் தெளிவா எல்லாத்தையும் சொல்லி விலகிட்டேன்.''

''நீ சந்தோஷமாயில்லையோ...''

''இரண்டாயிரத்து நூறு சம்பளம். நிலம் வாங்கிட்டாரு. வீடுஎழுப்பணும். எண்பதாயிரம் லோன் போடப் போறாரு. வீடு கட்டப் போறோம். மாமனார் அஸ்தி வாரத்துக்குக் காசு தருவார். கொழுந்தனார் பத்தாயிரம் கடன் தருவார். ஒரு மாப்பிள்ளை காண்ட்ராக்டர் வீடு கட்டித் தருவார். எல்லாருக்கும் எல்லாத்துக்கும் ஈடு கொடுத்து வீடு கட்டி... புள்ளை பெத்து சந்தோஷமா இருப்பேன். கிரஹப்பிரவேசத்துக்குக் கூப்பிடுவேன்.



வெளியே பளபளன்னு இருக்கும். நான் துணியில்லாம ஸ்கிப்பிங் ஆடறது யாருக்கும் தெரியாது. தெரிஞ்சாலும் இந்த தேவடியாதனத்துக்கு விடிவு கிடையாது.''

''ராணி...''

''ஒரு விஷயம் தேன்மொழி. என் வீட்டுக்குத் தேவையில்லாம வராதே, மெல்ல மெல்ல அறுத்துக்க.''

அந்தி மயங்கியதும் ராணி அவசரமாய்க் கிளம்பிப் போய்விட்டாள்.

மனசு முழுவதும் இருண்டு போயிற்று.

அவிழ்த்துப் போட்டு ஸ்கிப்பிங் ஆடுகிறபெண்ணும் எலும்புக் கூடாய் முடி உதிர்ந்து பல் பெரிதாய் சிரிக்கிற பெண்ணும் கனவில் வந்தார்கள். நினைவிலும் வந்தார்கள். தனிமை சுற்றிக்கொண்டு உருக்கிற்று. தேன்மொழி பிணம்போல ஆபீஸ் போனாள். திரும்பி வந்தாள்.

எங்கு தப்பு நடந்துவிட்டது என்று தேடினாள்.

## 6

வாரத்துக்கு ஒருமுறைதான் வீட்டுக்கு வருவது என்பது இன்னும் அப்பாவுக்கு வழக்கமாய் இருந்தது.

''இருமிக்கிட்டிருக்கியே... வெறும் தகரக்கூரை கீழே படுத்துப் படுத்து கபம் கட்டிப் போச்சு. பாதிநாள் போனாப் போறாதா...'' அப்பாவின் நெஞ்சில் தவிட்டுப் பையை சூடு படுத்தி வைத்துக்கொண்டு தேன்மொழி கேட்டாள்.

''ராணி கல்யாணக் கடன் இருக்கில்ல...''

''நான் அடைக்கிறேன்.''

''அப்புறம் உன் கல்யாணத்துக்கு என்ன செய்யறது? உன் காசு உனக்குன்னு வச்சுச்க.''

''எனக்கு ஒரு கருமாந்திரமும் வேணாம்.''

''அப்படிப் பேசாதம்மா. முடிஞ்ச வரைக்கும் உழைக்கிறேன். உனக்கு முடிஞ்சதைச் செய்துட்டுப் போறேன்.''

''வேணாம். உன் காசு உனக்குன்னு வச்சுக்க முடியாதபோது யாரையும் அண்டாம இப்பவே கொஞ்சம் சேத்து வச்சுக்க...''

''அது கிடக்கு. உன் கல்யாணம் முடிஞ்சிட்டா...''

''அப்படியே நெஞ்சுக்கூட்ல வச்சு அழுத்திடுவேன் போய் சேருன்னு, அந்தப் பேச்சையே எடுக்காதே...''

''ஒத்துடி நீ எங்கயாவது அழுத்திடப் போற... நகர்ந்துக்க, நான் ஒத்தடம் கொடுக்கறேன்.''—அம்மா பையை வாங்கிக் கொண்டாள்.

''இருபத்தி நாலு வயசாகுது. கல்யாணம் வேணாம்னா எப்படி? உச்சி நரைச்ச பிறகா மாப்பிள்ளை தேட முடியும்?''

''உன் கௌரவத்துக்காக ஒண்ணு தேடி முடிச்சிட்ட... அதோட வுடு...''

அப்பா சட்டை போட்டுக்கொண்டு பஸ் பிடிக்க ஓடினார். இப்போது சைக்கிள்விட முடிவதில்லை. கடைசி பஸ் பிடித்து பதினொரு மணிக்கே கொத்தவால் சாவடி போய் அங்கேயே தூங்கி மூணு மணிக்கே எழுந்திருந்து எட்டு மணிவரை மேலும் கீழும் சுற்றி வியாபாரம் பேசி அங்கேயே பகல் தூக்கம் போடுவார். முடிந்தபோது வருவார்.

அப்பா கடைக்குப் போனதும் மறுபடி வீடு வெறிச்சென்று போகும். ராணியில்லாமல், மலர் இல்லாமல், அப்பாவும் இல்லாமல்—அம்மாவும், தேன்மொழியும் வாசல் படியில் உட்கார்ந்திருப்பார்கள். கடைசி செய்தி வரை கேட்டுவிட்டு ரேடியோவை அணைத்த பிறகு தூங்கப் போவார்கள்.



''உனக்கு எத்தினி வயசுல கல்யாணம்மா...''

''ஏண்டி?''

''சொல்லேன்.''

''பதினேழு வயசுல. உங்கப்பாவுக்கு அப்போ இருபத்திமூணோ இருபத்தி நாலோ...''

''பொண்ணு பாத்தாங்களா...?''

''ம்...ம் நானேதான் ரவா கேசரி செய்தேன்.''

''என்ன கேட்டாங்க அப்பா?''

''அப்பா என்ன கேக்கறது? சும்மா உட்கார்ந்திருந்தாரு...''

''நல்லா பாத்தியா அப்பாவை...''

''வரச் சொல்லவே ஸ்டூல போட்டுஏறி நின்னுமேல் கண்ணாடி விரிசல் வழியா பார்த்தேன்.''

''பிடிச்சிருந்ததா...?''

''கைகால் ஒழுங்கா இருந்துச்சு. அது போதும்னு இறங்கிட்டேன்.''

''கல்யாணத்துக்கு முன்னாடி பேசலையா...?''

''எங்கே பேசறது... அது வரைக்கும் கடை கண்ணிக்குப் போவேன். அப்புறம் அதையும் நிறுத்திட்டாங்க...''

''எங்க கல்யாணம்...''

''டவுன்ல...''

''அப்புறம்...''

''அப்புறம் என்ன?''

''முத ராத்திரி என்ன பேசினாரு அப்பா...?''

''எதுக்குடி?''

''சும்மா கேக்கறேன் சொல்லேன்.''

''பாட்டுப் பாடுவியான்னாரு...''

''பாடுவேன். நீங்க அடிச்சு நான் அழுவுற மாதிரி வெளில இருக்கறவங்களுக்குப் படும்னு சொன்னேன்.''

தேன்மொழி சிரித்தாள்.

''அப்புறம்?''

''என்ன வேணும் உனக்கு...''

''சொல்லேன் என்ன வெட்கம் உனக்கு...''

''சொல்லக்கூடாது''

''ஏன்?''

''பொண்ணு பிள்ளைக்கிட்டே பேசற விஷயமா இது?''

''பேசினா என்ன?''

''மதிப்புக் குறைவு. நீ ஏன் இதைக் கேக்கறே...?''

''ராணி சந்தோஷமாயில்லையாம். வீட்டுக்காரரு அசிங்கப்படுத்தறாராம்...''

''அசிங்கம்னா...''

''இப்படி இரு. அப்படி இருன்றாராம்...''

''இருந்துட்டுப் போறது''

''கண்ணனை மறக்க முடியலையாம்.''

''செருப்பு எடுத்து அடி நாயை...''

''எனக்குப் புரியலைம்மா...''

''எனக்குப் புரியறது. படிக்க வச்சது தப்பு. செல்லம் கொடுத்து பொட்டச்சியை ஆணா வளர்த்தது தப்பு.''

''கோவப்படாத யோசனை பண்ணு.''

''உங்கப்பாவுக்குக் கெட்ட சகவாசம் உண்டு. தெரியுமா?''

''எங்கே?''



''மார்க்கெட்டுப் பொம்பளையோட. தலைச்சுமை தூக்கறவ... பஜாரி...''

''எப்படித் தெரிஞ்சது?...''

''அவங்க அம்மாவே சொல்லிச்சு...''

''என்ன செய்தே?''

''ஏாத்தங்கற வேலை கூடாது. தங்கினியா தள்ளிப் படு. சேராதேன்னுட்டேன்.''

''அப்புறம்...?''

''அடி போடின்னாரு... துவையல்ல உப்பு இலலேன்னு அடிச்சாரு. கல்யாணத்துக்கு வாங்கின பட்டுச் சட்டையைக் கிழிச்சுப் போட்டாரு...''

''ம்...ம்...''

''நான் திரும்பவேயில்லை''

''அப்புறம்...?''

''எல்லாம் வுட்டுட்டேன். கோச்சுக்காதேன்னாரு. நான் பெருமாள் மேல சத்தியம் பண்ணுன்னுகூடம்ரத்தி நீட்டினேன். சத்தியம் பண்ணினாரு. அதோட அந்தக் கதை முடிஞ்சு போச்சு. ராணி பொறந்தா; தகப்பனார் கடையை வுட்டுட்டு தனிக்கடை போட்டாரு. ஒத்திக்கு இருந்த வீட்டையே வாங்கினேன். துட்டு வெறி வந்துடுச்சு. அண்ணாங்கிட்டேயே கடன் வாங்கிஅடைச்சாரு. அதிகம் ஆட முடியலை...''

''அப்புறம் அடிக்கிற ரகளை இல்லை...''

''என் தம்பி ஒருநாள் குடிச்சிட்டு வந்து காசு கேட்டான். அப்ப நாலு அறை வாங்கினேன்.''

"எதுக்கு?"

"அக்காவை அடிச்சாத்தான் தம்பி வெளியே போவான்னு கணக்கு..."

"ச்சேய்"

"அதுவும் நல்லதுக்குத்தான் வெச்சுக்க. அப்புறம் யாரும் கிட்ட வரலை."

"அப்பா நல்லவரு இல்லே..."

"குடிப்பழக்கம் இல்லேங்கறதே பெரிசு. அலுத்து வந்தா சுடு தண்ணி வச்சு சாப்பாடு போட்டா போறும். மத்தியானத் தூக்கம் கெடக் கூடாது. அவரைத் தூங்க வச்சுட்டு பகல் சாப்பாடு எடுத்துக்கிட்டு உங்க பள்ளிக் கூடத்துக்கு வந்திடுவேன்."

"கண்ணனுக்கு ராணியைக் கட்டிக் குடுத்திருக்க லாம்னு தோணுது."

"சரிப்படாது"

"ஏம்மா...?"

"யார் யாரோன்னு விலகியிருப்போம். விலகற துக்கா கல்யாணம் பண்றது?"

"இப்ப என்ன ஒட்டிட்டோம்?"

"நல்லது கெட்டதுக்குப் போலாமில்ல?"

"ராணி துக்கத்தோட பேசுதம்மா..."

"எந்திரி நாளு ஆம்பளை ஆட முடியும்? ஆரம்ப வேகம் சூரத்தனம் காட்டும்.தானா சரியாய்ப் போகும்."

"எப்படிச் சொல்ற...?"

"அனுபவம்தான்..."



"சொல்வேன்"

"எழுந்து போடி போய்ப்படு."

புரியவில்லை. வாழ்க்கைஅமைப்பே புரியவில்லை. இந்தப் பண்டமாற்றுத் தத்துவம் புரியவில்லை. அம்மினிக்கு இதுதான் கேள்வியாகி விட்டது. எதற்குப் பொய்...என் இந்த வியாபாரம் என்று கேள்வி வந்து விட்டது.

பண்டமாற்று இல்லாது வாழ முடியாதா? எனக்குப் பிடிக்கிறது வா என்று கூப்பிட முடியாதா? ஏன் இந்த வட்டம்? இயற்கைக்கு எதிரே ஏன் சட்டம்?

எனக்கு ஒரு வேலை. கொஞ்சம் சம்பளம். என் இஷ்டத்துக்கு துணிமணி. எனக்குப் பிடித்த ஆளுடன் போகம். தவறா?

யார் முன்னாடியோ ஸ்கிப்பிங் ஆடிக்கொண்டு யார் உறவையோ நெஞ்சில் சுமந்துகொண்டு... கொஞ்சநாள் யவனத்தையும் அங்கு வைத்து விட்டு ஆக்கிரமிப்பு நடத்த விட்டு விட்டுப் புழுங்கிப் புழுங்கி...

அதற்குப் பதில் இளம்வயதிலேயே மரணமடைய லாம். மலர் போல் உடம்பு வற்றி சருகாகி இளமையி லேயே கிழத்தனம் வந்து ஔவையாருக்குக் கான்ஸர் வந்திருக்குமோ? முடி கொட்டி முலை சுருங்கிக் கூன் விழுந்து போதும்டா சாமி. இதுபோதும் என்று முடிந்து போயிருப்பாளோ? மன்னனுக்கு ஏன் வாழ்க்கைப்பட ஔவை மறுத்தாள்? இந்த அடிமைத்தனம்பிடிக்காமலா?

கண்ணனோடு செய்ததும் தாசித்தனம். கணவ னோடு செய்வதும் தாசித்தனம். எது பெட்டர் யோசி என்கிறாள் ராணி. இரண்டுமே அபத்தம்.

அம்மா அப்படித்தான் என்கிறாள். காதுபட பேசக் கூடாது. கண்ணுபட பேசக்கூடாது. மையிருட்டில்

புணர்ந்துவிட்டுத் தடவித் தடவி உடுத்துக் கொண்டு விடிகாலை எழுந்து விலகி விடவேண்டும். அப்படித் தான் மூன்று பெற்றாள். இது அறியாமை. அவ்வளவு தான் என்கிறது மனது.

"மூட்டை தூக்கற பொம்பளையோடு படுத்தியா? சீ போ. என்கிட்ட படுக்காதே."

ஏன்?

எனக்கு நீன்னு விலங்கு போட்டிருக்கு. அதே மாதிரி உனக்கு நான்னு விலங்கு போட்டுக்க. மூட்டை தூக்கற பொம்பளை வேணாம்னு சத்தியம் பண்ணு. நூடம் அணை, அணைத்திருக்கிறான். அம்மா நிம்மதியாய் நம்பியிருக்கிறாள். குடித்தனம் நடந்து குழந்தைகள் வளர்ந்து ஒன்றுக்குத் திருமணம் ஒன்றுக்கு... கருமாதி. ஒன்றுக்கு உத்தியோகம் எல்லாம் நடந்திருக்கிறது. வாழ்ந்திருக்கிறார்கள். அல்லது வாழ்ந்தோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

போதுமென்ற மனசு.

எனக்கு ஏன் இல்லை? ஏன் கேள்விகள். படித்தது. உடுத்துக்கொண்டு ஊர் சுற்றியது. உத்தியோகம்பார்க்கிறேன் என்று வெளியே கிளம்பியது. அம்மாவை விட நாலு பிடி உசரமாய்ப் புத்தி வளர்ந்து விட்டது. இடைவெளி வந்து விட்டது. தாலி கட்டிக் கொண்டு இரவு படுக்கைக்குப் போய் எவனாவது ஸ்ட்ரிப்பிங் ஆடு என்றால் என்ன செய்ய முடியும்...

போடா. கதவு திறந்து கொண்டு நடு இரவில் தெருவில் இறங்கி விடுவேன். எங்குபோவது? எங்கு. வேண்டுமானாலும் போகலாம். எது வேண்டுமானாலும் செய்யலாம். மாமா வரியா என்று விசில் அடித்துக் கூப்பிடலாம். இரண்டும் ஒன்று.

கண்ணெதிரே தோன்றினாள்.

கனி முகத்தைக் காட்டினாள்'



என்று எவனாவது விரல் தொட்டுப் பாடுவதை ஏற்க முடியுமா? ரசிக்க முடியுமா? இப்போது கனிமுகம் காட்டு. நாளைக்கு ஜாக்கெட் அவிழ்த்துக் காட்டு. இது தானே தந்திரம். இதற்கு எப்படி மயங்குவது? அப்பாவைப் பார்க்க வந்தேன் என்று சொல்லி நடுநாசிக் கதவை ஒருக்களித்து விட்டு மடியில் அந்த வீட்டுப் பெண்ணைப் போட்டுக் கொண்டு... எத்தனை ஆத்திரம்... வெறி... கண் மூடிக்கொள்கிற மோகம்-இது என்ன காதல்... என்ன அர்த்தம் இதற்கு? உண்மை என்ன... அப்பட்டமான உண்மைஎது நிர்வாணமான உண்மை? எது சத்தியம்? எது நிஜம்? எது அடிவேர்?

உடம்பா... மனசா... மரபா...?

உடம்பைக் கட்டிப் போடுகிற மரபு. அந்த சங்கிலிக் கட்டுக்குள்ளிருந்து தலை நீட்டும் மனசு. காமம் என்கிறது இயல்பு. கல்யாணம்என்பது மரபு. இடையே காவல் என்கிற மனசு. காமத்தை சர்க்கரை தடவிக் காட்டுகிற மனசு, தெய்வீகமென்று குடம்சுத்திக் காட்டுகிற தந்திர புத்தி. கனவு இயல்பாம். பக்கீப் பசங்க கனவு இயற்பாற்பட்ட கற்பாம்.

ஆசை வந்தது. கட்டிக் கொண்டார்கள். ஊர் பார்த்து விட்டது. கற்பு என்று சொல்லிவிட்டார்கள்.

எப்படித் தலைமுறை தலைமுறையாய் இப்படிப் பொய் சுமந்து வந்திருக்கிறோம்?

கணவனின் துணையோடு தானே

காமனை வென்றாக வேண்டும்?"

வெல்லவே முடியாது. நொந்து நெஞ்சு ரணமாகி விழுந்து விடத்தான் முடியும். பெண்ணுக்கு மட்டும் இந்த 'தானே' என்று பேசுகிறார்கள். கணவன் மட்டும் என்கிறார்கள். ஆண் உலகம் வேறு. நடு வீட்டில் மார் பில் கை போட்டு விட்டு வேறு ஒரு பாப்பாத்தியைக்

கல்யாணம் செய்யலாம்; மூட்டை தூக்குகிறவனுடன் காசுக்குப்போய் வரலாம்.

கணவனின் துணையோடு தானே என்று இவள் தலையில் மட்டும் பாறாங்கல் ஏற்றிவிட வேண்டும்.

மூளைக்குள் கொதிப்பும் கோபமும் ஏறின.

## 7

மறுநாள் உடுத்திக் கொண்டு ஆபீஸ் போகும் போது, ராணி நினைப்பே நெஞ்சை அழுத்திற்று.

"ஒரு விஷயம் தேன்மொழி. என் வீட்டுக்குத் தேவையில்லாம வராதே, மெல்ல மெல்ல அறுத்துக்க."

"ஏன்" எதற்கு அறுத்துக் கொள்ள வேண்டும்?. பெற்றவர்களை உடன்பிறப்புக்களை பெண் மட்டும் ஏன் அறுத்துக் கொள்ள வேண்டும், இருபத்து மூன்று வயதுவரை ஒட்டி ஒட்டிப் பழகி விட்டு, ஒரே நாளில் ஏன் வீடு வேறு, வாழ்க்கை வேறு, மனிதர்கள் வேறு என்று போக வேண்டும்?

ஆண்கள் இப்படிப் பிரிந்தால் என்ன? திருமண மான பின்னர் எல்லா ஆணும் மாமனார் வீட்டுக்குப் போய் விட்டால் என்ன?

இப்படிச் செய்யலாமா? பெண் தன் வீட்டோடு இருக்க, ஆண் வந்து போய்க்கொண்டிருந்தால் என்ன? மருமக்கள் தாயம். இப்படி ஒரு பகுதியில் வாழ்ந்திருக் கிறார்கள். பெண் பெயருக்கே சொத்து, சுகம் என்று எழுதி வைத்திருக்கிறார்கள்,வீடும் நிலமும். பெண்ணுக்கு பெண்ணின் பெண்ணுக்கு என்று மாறும்; பிள்ளைக்கோ மாப்பிள்ளைக்கோ போய்ச் சேராது. பிள்ளை திருமண மாகிப் பெண் வீட்டிற்குப் போய் விடுவான். மாப்



பிள்ளை இங்கு வந்து மனைவியின் நிலத்தில் விவசாயம் செய்து கொண்டிருப்பார்.

சரிதானே அது. நல்ல முறைதானே மருமக்கள் தாயம். பெண் ஸ்திரப் பொருள், நிலம் போல, வீடு போல, வா, வந்து குடியேறு, பயிர்செய் வாங்கிக் கொண்டு போகாதே, பெண் மாடு இல்லை—சந்தையில் பிடித்து ஊருக்குள் ஓட்டிப்போக, பெண் கால்நடை யில்லை. பெண் ஸ்திரப் பொருள், மனைகளர் நிலம்.

ஆனால் அங்கேயும் மருமக்கள் தாயம் ஒழிந்துவிட் டது. என்னவோ இது சரியில்லை என்று ஒழித்து விட்டார்கள். பெண் வீட்டிற்குப் பெண்டாள மட்டும் புருஷன் வருவதா என்று ஒழித்து விட்டார்கள் போலி ருக்கிறது. பொருளாதாரம், சுதந்திரம் பெண்ணுக்கு இருப்பதில் பிரச்சனைகள் வந்து விட்டது போலிருக் கிறது.

இங்கேயும் இப்பவும் இதுதான் பிரச்சனை. அம்மா ஆயிரம் ருபாய் சம்பளம் வாங்கியிருந்தால் வேறு மாதிரிக் குடித்தனம் பண்ணியிருப்பாளோ? துவைய லுக்கு உப்பில்லை என்று அடித்தபோது, போடா என் கிட்ட கவர்ன்மெண்ட் வேலை இருக்கு, நானே பொங்கி, நானே தின்னுக்கறேன், உன் கத்திரிக்காய் வியாபாரம் எனக்கு வேண்டாம் என்று போயிருப்பாளோ?

மனித உறவில் மட்டும் ஏனிந்த சிக்கல்? மரபு களாலா? இல்லை, மனித குணமே குழப்பம் நிறைந்ததா? ஏனிந்தக் குழப்பம்? மரபுக்குழப்பம்? ஏன் நம்ப மறுக்கிறான்? சக மனிதனை ஏன் சந்தேகத்தோடு பார்க்கிறான்? சந்தேகத்திற்கு என்ன காரணம்? சௌக் சியத்திற்கு எவரும் எப்போதும் இடைஞ்சல்கள் செய்ய லாம் என்கிற நிச்சயமற்ற தன்மைதானா எல்லாக்குழப் பத்திற்கும் அடிப்படை? மரணம்தானா அஸ்திவாரம்?

...NNEMARA PUBLIC LIBRA... 10 MAY 2004

ஒரு நாள் செத்துப் போகிறோம் என்று தெளிவாய் உணர்ந்துவிட்டால் எவர் மீதும் கோபம் வராது. எதுவும் முக்கியமாய்ப் படாது. கல்யாணம், பிள்ளை பெறல், பேணி வளர்த்தல் எல்லாம் மரணத்தோடு போயிற்று. எல்லாம் தீயோடு முடிந்து விட்டது. மலர்க் கொடிக்கு எத்தனை கனவுகள், எவ்வளவு ஆசைகள், எல்லாம் வியாதி தின்று விட்டது.

இந்த நெஞ்சுத் திமிரும், பிருஷ்ட பிடிப்பும், நாலு நாள் வயிற்றுப் போக்கில் காணாமல் போகும். எப்போது வேண்டுமானாலும் சரியும். மார்பு ரோமமும், முறுக்கு மீசையும், இரும்புப் பட்டயம் மாதிரி மாறும். மஞ்சக் காமாலையில் சுருங்கிப் போய்விடும். எப்போது வேண்டுமானாலும் எவரையும் நோய் தாக்கும்.

சாவு வரும். இதில் ஸ்கிப்பிங் ஆடுடி என்று எவளை யெவன் சொல்வது? முப்பது வயசுப் பெண்ணின் முலை கள் குலுங்குவது மட்டுமா காட்சி? மழையில் நனைந்து தடுமன் பிடித்து வினாடிக்கு ஒரு முறை மூக்கு உறிஞ்ச நேர்ந்தால் எந்தக் கூட்டம் ரசிக்கும்? எவர் தொட்டால் இனிக்கும்?''

இளமை பொய், வாழ்க்கை பொய், மரபு பொய் அதில் காட்டும் மதிப்பு பொய், சகலமும் பொய், எல்லா ருக்கும் இது தெரியும். சாவு பற்றி பயம், ஆனாலும் மறந்து விட முயற்சி செய்கிறார்கள். மறந்து விட்டதாய் நினைக்கிறார்கள். உள்ளே சகலரையும் மரணம் குத்திக் கொண்டேயிருக்கிறது.

ஒரு வேளை ஜனங்கள் சந்தோஷத்திற்குப் பறக்கிற காரணமும் மரணம் தானோ சாகறதுக்கு முன்னாடி ஒரு தடவை தாஜ்மஹால் பாக்கணும். அம்மா சொல்லியிருக் கிறாள். சாவுக்குக் கட்டின கட்டிடத்தை சாகுமுன் பார்க்க வேண்டுமாம். சாவதற்கு முன் என்னென்னவோ ஆசை. சாகும்போது சாகாமல் இருக்க ஆசை.

மடியில் படுத்தபடி செத்துப்போன மலர்க்கொடி நினைப்பே தினம் தினம் நெஞ்சுள் சுற்றி சுற்றி வந்தது.



இடை இடையே பாவாடையோடு ஸ்கிப்பிங் ஆடு கிற ராணி நினைவு வந்தது.

மரபுக்குச் சம்பந்தமில்லை. மரணத்துக்கும் அர்த்த மில்லை.

இங்கே எந்த நியதியும் எந்த இலக்கணமும் சரி யில்லை. இதுதான் வாழ்க்கை, இதுதான் இதன் இலக்கணம் என்று மனிதனுக்குத் தெரியவே இல்லை. அதனால்தான் இத்தனை மதங்கள், இத்தனை மரபுகள் இதுதான் சரி என்று வாதங்கள்.

இந்த வழி நல்ல வழி என்று நடக்க ஆரம்பித்து முட்டுச் சந்தாகவே போய் நிற்கிறது, பாதை தேடி நடந்து இருட்டில் முடிகிறது. எல்லாப் பாதையும் முட்டுச் சந்துதான்.

சோறு தின்னு, தினம் தூங்கி, மலம் கழித்து, மறுபடி தின்னு. மறுபடி தூங்கி ஒரு நாள் க்ளோஸ்.

அத்தனை யோசனையும், 'பட்'டென்று ஒரு நாள். ஒரே ஒரு காட்சியில் அறுந்து விட்டது.

பைத்தியம்? அப்படித்தான் எல்லாரும் சொன்னார் கள். பத்துப் பேர் சுற்றி நின்றிருந்தார்கள்.

சாக்கடை, சிந்தாதிரிப்பேட்டையில் நடைபாதை உடைந்து, உடைந்த நடைபாதையில் லாரி இறங்கி, சைபன் பைப்பை உடைத்து, கழிவு நீர் சாக்கடையை உண்டு பண்ணியிருந்தது. இரண்டு இடுப்பு ஆழமும், தாங்க முடியாத துர்நாற்றமும் அந்தப் பகுதியில் வீசிற்று. சுற்றி நடக்க ஜனங்கள் பழகினார்கள். அவர் மட்டும் நடு சாக்கடையில் இருந்தார்.

கலைந்த தலை; வெறித்த கண்கள்; இரண்டு கை நரகல் கும்பலை அள்ளி உடம்பில் பூசிக் கொண்டார்: ''சோறு தின்று, பேண்டு தின்று. சோறு தின்று பேண்டு தின்று'' என்று ஆயிரம் தடவை சொன்னார்.

பைத்தியம் என்றார்கள். கயிறு வீசி, கட்டி, தரையோடு இழுத்துப் போனார்கள். போகும்போது அதையே சொன்னார்கள்.

தேன்மொழி உறைந்து போனாள், 'ஐயோ' என்று காதைப் பொத்திக் கொண்டாள். பரிதாபப்பட்டு கத்துவதாகக் கூட நின்றவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

தேன்மொழி நிஜம் தைத்த வலி தாங்காமல் அலறியது யாருக்கும் தெரியவில்லை. கனவிலும் பைத்தியம் வந்தான். தேன்மொழி 'ஐயோ' என்று கூவினாள்.

மெடிடேட் பண்ணினா கனவு வராது என்று யாரோ தவிர்க்க வைத்தியம் சொன்னார்கள்.

தேன்மொழி சம்மணமிட்டு சிந்தனையை ஒரு முகப் படுத்திக் கொள்வதைக் கற்றாள்.

எதில் ஒருமுகப்படுத்துவது என்று கேட்டாள்.

விவேகானந்தர் இதே மாதிரி உட்கார்ந்தபோது பக்கத்துல இருக்கற தொழிற்சாலை சங்கு அடிக்கடி தியானத்தைக் கலைத்ததாம். பரமஹம்ஸர் கிட்ட போய்க் கேட்டாராம். சங்கு சத்தம் தியானம் பண்ண முடியலை. தொந்தரவு பண்றதுன்னு.

எது தொந்தரவோ அதைத் தியானம் பண்ணுன்னா ராம் பரமஹம்ஸர். ஸோ, யூ டிஸைட்.

கற்றுத் தந்த யோகி சிரித்தபடி சொன்னார்.

தேன்மொழி பைத்தியத்தின் மீது சிந்தனையை ஒருமுகப்படுத்தினாள்.

அவன் பைத்தியமில்லை என்று தெரிந்து கொண்டாள். அவனைப் பைத்தியம் என்பவர்களே பைத்தியம் என்பது தெரிந்து கொண்டாள்.



விட்டுப் போயிற்று.

விட்டுப்போன கணத்தில் சகலரோடும் உறவு ஏற்பட்டது. எல்லா உடம்பும் மலம், எல்லா மனிதரும் சாம்பல், மலர்க்கொடி, ராணி, ராணி புருஷன்' கண்ணன் சகலரும் சாம்பல்.

தேன்மொழி சந்தோஷமானாள்.

அது சிரிப்பு இல்லாத சந்தோஷம். கேள்வியே வராத இடம்.

## 8

தேன்மொழி நினைவிலும் ஒருமுறை சறுக்கினாள்

அப்பாவுக்கு முடியாமல் போய் விட்டது. மூச்சிரைப்பும் ஜுரமும் வாட்டி வதைத்தன. ஆறுநாள் கடை மூடும்படியாகிவிட்டது. நாலு இடத்தில் கலெக்ஷன் நிற்கிறது. ஒரு லாரி லோடுக்குக் காசு கொடுக்க முடியாமல் போய் விட்டது.

போய் எதிர்க்கடை பாண்டியனை காசு கொடு என்று கேட்டு நாலாயிரத்து நானூறு ரூபாய் கொடுத்தனுப்பினார். கலெக்ஷன் ஐந்தாயிரம் வர வேண்டும் என்கிற கணக்கு எழுதித் தந்தார். கடைக்கு உள்ளே நாலு கூடை தக்காளி இருக்கிறதாம், கடை திறந்து வெளிறே போடச் சொன்னார்.

பாண்டியன் கை கூப்பினான். "நானே வரணும்னு நினைச்சேங்க. காசு குடுத்தாரா? எதுக்கு? வச்சுக்கங்க லாரிக்காரன் கேட்டான். உடம்புக்கு முடியலைன்னேன். சரின்னு கோயம்புத்தூர் போயிட்டேன். கேக்கவேயில்லை கேக்கமாட்டாங்க. அய்யா அப்படிஆளு. இங்க உட்காருங்க."

கடை சாவி வாங்கித் திறந்து தக்காளிக் கூடையை வெளியே போட்டான். ஜனங்கள் பாய்ந்து வாரி

கொண்டனர். தக்காளி புழுக்கத்தில் அதுங்கியிருந்தது. "இதுகூட வியாபாரமாயிடுங்க"என்று சிரித்தான்.

கலெக்‌ஷனுக்கு ஆள் அனுப்பினான். தாவா சொன்ன யாரிடமோ சண்டைக்குப் போனான்,

"மொத்த கலெக்‌ஷன் வாங்கிட்டேன். அறநூறு. மிச்சக் காசு கோயம்புத்தூர் லாரி ஆள்கிட்ட நாளே சேர்த்துடறேன். சாயந்திரம் வரதா சொல்லுங்க... எப்படிப் போவீங்க...அஞ்சாயிரம் வச்சுகிட்டு... கொஞ்சம் இருங்க..."

மேல் கயிறு பிடித்துக் கொண்டு வேட்டியை மடித்துக்கொண்டு கோசு மூட்டையைக் கூவி ஏலம்போட்டுக் காசு கொடுத்து காசு வாங்கி "இப்ப தூங்க முடியாது. லேடீஸ இருக்காங்க. வெளியே போ!"—யாரிடமோ சீறி விழுந்து...

"எதுக்கு விரட்டறீங்க..."

"லாரி க்ளீனர், கடை பின்னால் வந்து தூங்குவான்."

"நான் கிளம்பறேன்."

"இருங்க கொத்தவால்சாவடி ஒரு மாதிரியான இடம். வாசல் வரைக்கும் வரேன்."

மார்க்கெட் கடந்து பஸ் ஏறியதும் கை கூப்பினான்.

சாயந்திரம் கதவு தட்டும்போது ஆளே அடையாளம் தெரியவில்லை. பேண்டும் சட்டையும் மாற்றியிருந்தான். "கடைல பேண்ட் போட முடியாதுங்க. சேறாயிடும். அப்பா இருக்காரா?"

அப்பாவும் அவனும் நிறையப் பேசினார்கள்.

"ஒரு மாசம் கடைக்கு வராதீங்க. உங்களால முடியலை என்கிட்ட வாடகைக்கு விடுங்க. இல்லை முதல் போடுங்க. சமமா பிரிச்சுக்குவோம். பகடி அம்பதாயிரம் போவும். அந்தக் கடைக்கும்..."



கூசாம வாடகை ஆயிரம் தருவான். பத்துக்குப் பதினைஞ்சு அடி. ஆனால் அது கொத்தவால்சாவடி.

"அப்பா, ஒரு மாத வாடகைக்கு உடலாம்."

அஞ்சாயிரம் அவனிடமே கொடுத்து வட்டி தரச் சொன்னார்.

நடுவே ஒருமுறை காய்கறிகளோடு பாண்டியன் வந்தான். சாப்பாடு சாப்பிட...அம்மாவும் தேன்மொழியும் பரிமாறினார்கள். எம். ஏ.வாம்..."

"எதுக்குப் படிச்சீங்க...?"

'திமிரு. காய்கறிக் கடைன்னு தலைல எழுதியிருக்குன்னு தெரியும். எப்படியும் இதுலதான் வந்துவிழணும். அத மெல்ல விழலாம்னு தள்ளிப் போட்டேன்."

"பிடிச்சிருக்கா..."

"கொஞ்சம் காட்டுத்தனமான வியாபாரம். கூச்சல் போடணும், கைமேல ரொக்கம். ஒருநாள் அடிபடும். ஒரு நாள் டபுள் ரேட் போகும். சூதாட்ட சுகம்."

"எப்படி டபுள் ரேட்?"

"உருளைக்கிழங்கு லாரி வருது. நான் ரெண்டு லாரி லோட் பத்தாயிரத்துக்கு எடுப்பேன். மலை மாதிரி கூடை கூடையாகக் கொட்டுவான். அன்னிக்கு ரெண்டாயிரம் ரூபா சரக்கு விப்பேன். மறுநாள் கிழங்கு லோட் வரலை...ஏத்திடுவேன்."

வந்திடுச்சுன்னா?"

"இரண்டாயிரம். ஆயிரத்து எட்டுநூறு...ஏழு நூறுக்குப் போகும்..."

"அடியா...?"

"லாபத்துல அடி..."

"நஷ்டம் வராதா"

"தக்காளி மெறிச்சிடும். இரண்டு நாளைக்கு மேல பந்தயம் ஆட முடியாது. சும்மா எடுத்துக்கினு போன்னு பத்துக் கூடையை தள்ளும்படியா ஆயிடும். கூடை காசு ரெண்டு ருபா குடுத்துட்டுப் போவான்..."

"சூதுதான்..."

"சரியான சூது..."

"எது லாபம்..."

"வெங்காயம், இப்போதைக்கு மூனு ரேட் போச்சு ஒரு சமயம் ஐயாகூட செமத்தியா அள்ளினாரு. ஆனா அவரு ரொம்ப நிதானம். ஏதாவது "ஒரு லோடுதான் வாங்குவாரு. நீங்க பி. ஏ.வா?"

"முடிக்கலை..."

"ஐயாவுக்குப் புள்ளை இருந்தா இந்நேரம் கடை மூடியிருக்குமா?"

"எனக்கேகூட ஆசையாயிருக்கு நீங்க பேசறதப் பார்த்தா..."

"பொம்பளைங்களுக்கு கஷ்டம்."

"என்ன கஷ்டம்?"

"ஓடணும். லாரி கிட்டே போய்ப் பேசணும். துட்டு புடின்னு முந்திக்கணும், சரக்கு சரியா இறக்கறானான்னு பார்க்கணும். அதட்டணும். சில சமயம் அடிதடிகூட வரும், நம்பிக்கையான கூலியாள் வேணும்."

"பொம்பளையே இல்லியா கொத்தவால்சாவடில."

"ஏன் இல்லை...?"

"இருக்கற பொம்பளைங்க எப்படி?"



"பத்து ஆம்பளைக்கு சமமா பொம்பளை உண்டு. நாலு லாரி லோட் இறக்கி நாலையும் ஒரே நாள்ல விக்கிறவ உண்டு."

"எப்படி?"

"திமிருதான்."

அடிக்கடி அவன் சொன்ன திமிர் அவளுக்குப் பிடித்திருந்தது.

"நான் கத்துக்கட்டுமா?"

"வேணாங்க..."

"ஏன்...?"

"கச்சடாவாக இனிமே முடியாது. சின்ன வயசிலேர்ந்து அங்கேயே ஊறின பொம்பளைங்களுக்கு முடியும். ஐயாவுக்குத் தெரியுமா. காமாட்சின்னு ஒரு பொம்பளை..." அம்மா தோளில் இடித்துக்கொண்டாள்.

"மூட்டை தூக்கற பொம்பளையா...?"

"எப்பவோ மூட்டை தூக்கிச்சு, இப்ப ரெண்டு கடை இருக்கு. மடமடன்னு ருபா நோட்டு எண்ணத் தெரியாது. ஆனா பண்டுல தடவிச் சொல்லிடும் கட்டு சரியில்லைன்னு..."

"எப்படி?"

"திமிருதான்..."

வாடகை வாங்க தேன்மொழி கடைக்குப் போனாள். வட்டியும் வாடகையும் சேர்த்து எண்ணிக் கொடுத்தான். திருப்பிப் புரட்டி தேன்மொழி எண்ணுவதை வியப்புடன் பார்த்தான்.

"சரசரன்னு எண்றீங்களே?"

"பார்க்கறது கேஷியர் வேலைதானே..."

"ஓர் உதவி செய்வீங்களா?..."

"சொல்லுங்க..."

"காலைலேர்ந்து வாங்கிப் போட்டது போட்டபடி இருக்கு. கட்டே கட்டலை. பிரிச்சு அடுக்கித் தாரீங்களா?" மேஜை டிராயரை இழுத்துக் காட்டினான். சுருளலும், கசங்கலுமாய் நோட்டுகள் குப்பையாய்க் கிடந்தன.

புடவைத் தலைப்பை விரித்துப் பிடித்தாள். அள்ளி அள்ளிப் போட்டான். கீழே சுவரோரம் கோணி பரப்பினான். மணக்கட்டை கொடுத்தான். மணையில் உட்கார்ந்து ரூபாய் நோட்டுகளைத் தரையில் போட்டாள். சரசரவென்று அடுக்கினாள். தலை வால் புரட்டிப் போட்டாள். ஐந்து கட்டு, பத்து கட்டு, இரண்டு கட்டு, நூறு கட்டு என்று பிரித்தாள். அரைமணி நேரம் முதுகு வியர்வை ஓட வகை பிரித்துக் கட்டுக் கட்டி மறுபடி எண்ணிப் பேரேட்டில் குறித்து டோட்டல் போட்டு நிமிரும் நேரம் மேஜை டிராயரில் மறுபடி காசு குப்பையாயிற்று. தக்காளிக்கூடை காலியாகி கோசு மூட்டை இறங்கிற்று.

"கோசு பிரிக்கிற மாதிரியில்லை. அப்புறம் வா." துரத்தினான்.

"போதும் வாங்க." காட்ரெஜ் மேஜையைப் பூட்டிக் கொண்டுகட்டுக்களைபனியனுக்குள் செருகிக்கொண்டு கீழே இறங்கினான். அங்கேயே விநியோகம் செய்தான்.

"சாப்பிட்டீங்களா?"

"இல்லை...வீட்டுக்குப் போவணும்..."

"என்கூட சாப்பிடறீங்களா?"

"தாஜ் ஹோட்டல் போனார்கள். சின்னச் சின்ன அறைகளாகப் பிரிக்கப்பட்ட இடத்தில் நுழைந்தார்கள். நெய் பரோட்டா...சிக்கன் குருமா... சூப் இரண்டு ஆர்டர் செய்தான்.

குனிந்து ஏதோ பேசினாள்.

"கடையை நீங்கஎடுத்து நடத்துங்களேன், நான் உதவி செய்றேன்—"



சிரித்தாள், முடியாது என்று தலையசைத்தாள்.

"ஏங்க?"

"திமிருதான்,"

அவனும் சிரித்தான்.

சாப்பிட்டார்கள்.

"ஐஸ்கிரீம் சொல்லட்டுமா"

தலையசைத்தாள்.

சாப்பிடும்போது அவன் பார்வை உடல் முழுவதும் மேய்வதை உணர்ந்தாள். முழங்கால் உரசல் செய்தி சொல்வதை அறிந்தாள். அவன் சட்டையில் சிதறின குருமா துளிகளைச் சுண்டிவிட்டாள்.

"எப்ப கல்யாணம் உங்களுக்கு? பார்க்கறாங்களா வீட்ல..." முகத்தை சீரியஸாக வைத்துக் கேட்டான்.

"இல்லை"

"ஏன்?"

"நான் சரியின்னு சொலலலை..."

"அதான் ஏன்?"

"திமிருதான்"

"எனக்குப் புடிச்சிருக்கு."

"எது?..."

"உங்க திமிரு..."

அவள் வேண்டுமென்றே நாற்காலி பின்பக்கம் சாய்ந்து கொண்டாள்.

"என் திமிரு ரொம்பக் கஷ்டம் ஆம்பளைக்கு, தாங்காது."

"புரியுது"

"எப்படி?"

"தரைல கோணி போட்டு உக்கார்ந்து எந்தப் பொம்பளைக்கும் இப்படி நோட்டு எண்ண முடியாது."

"ம்ம்......அப்புறம்?..."

''முழங்கால் தொட்ட பிறகும் நெளிந்து உட்கார முடியாது...''

''ம்ம்... அப்புறம்?...''

''பார்க்கறது தெரிஞ்ச பிறகும் சாஞ்சி உட்கார முடியாது. இந்தத் திமிரு எனக்குப் பிடிச்சிருக்கு.''

''பிடிச்சு... என்ன பண்ணப் போறீங்க...?''

''தொடப் போறேன்...''

''அப்புறம்...''

''உங்க இஷ்டம்...''

''லவ்வா...''

''நான் வியாபாரி... எனக்கு லவ் பண்ண முடியாது''

''நான் வியாபாரியும் இல்லை... லவ்வரும் இல்லை...'' தென்மொழி ஐஸ்கிரீமை வெட்டிச் சிதைக்து சாஸரில் தள்ளினாள்.

''அப்புறம்?...''

''திமிர் பிடிச்சவ; அவ்வளவுதான்...''

அவன் சட்டென்று நெருங்கி அவள் கன்னத்தில் முத்தமிட்டான். தேன்மொழி பேசாதிருந்தாள். வலக் கையைத் தோளில் போட்டு இறுக்கினான். மெல்லத் துழாவினான். முகம் திருப்பி உதடுகளைக் கௌவி னான்.

தேன்மொழி ஸ்பூனால் அவன் முகத்தைத் திருப்பி னாள். ''போதும்'' என்றாள்.

''பம்மாடியோவ் செம திமிரு!'' பாண்டியன் நிஜ மாகவே வியந்தான்.

''கும்புட வைக்கிற திமிரு இது. கட்டிக்கிறியா தேன் மொழி ன்னு கேக்கமுடியாதுங்க—கேக்கவும் மாட்டேன். ரெண்டு கையெடுத்துக் கும்புடுவேன். அடிச்சிட்டீங்க என்னை. மாக்ஸீம் காக்கி படிச்சிருக்கீங்களா... அவரு கதைல வர்ற பொம்பளை ,எனக்கு ரொம்பப் பிடிக்கும்.



என்ன உதவி வேணுமோ கேளுங்க. பாண்டியன் செய்வான். முந்தம் கொடுத்த கிக்குல பெசலீங்க... ஒரு நட்புல பேசறேன்... நட்புன்னுதான் சொல்லத் தோணுது, சரீங்களா...''

தேன்மொழி அவனுக்காகத் திரும்பினாள். ஆரத் தழுவிக் கொண்டாள். வலிய முத்தமிட்டாள். நெஞ்சு ரோமம் பற்றினாள். வலிக்க இழுத்தாள். அவன் தொட அனுமதித்தாள்.

ஐஸ்கிரீம் தானாய் உருகி மிதந்தது.

அது அவ்வளவுதான்,

அதோடு சரி. வீடு திரும்பி காரைக் கொடுத்து விட்ட பிறகு சோர்வு வந்து விட்டது. கண்மூடிக் கொண்டாள்.பாண்டியன் விரல்கள் இன்னும் உடம்பில் பிரமையாய் இருந்தன. அதன் பிறகு கடைக்கு வாட கைக்காக அப்பா மட்டும் போனார்.

ஆபீஸுக்குப் போன் வந்தது.

''ஹலோ...கோபங்களா...?''

''இல்லையே...''

''வருத்தமுண்டா...?''

''சசே...ச்சே...''

''அதான் கேட்டேன். எனக்குக் கொஞ்சம் வருத் தமாயிடுச்சு...''

''எதுக்கு வருத்தப்படணும்?''

''ரொம்ப நன்றிங்க.'' போன் வைக்கப்பட்டு விட்டது.

புது வருட வாழ்த்து ஒன்று அனுப்பினாள்.

அதன் திருமணப் பத்திரிகையை நேரில் கொண்டு வந்து கொடுத்தான். குண்டாய் கறுப்பாய் சின்னமுக மாய் ஒரு பொண்ணை இருநூறு சவரன் தங்கம்—நாற் பது கிலோ வெள்ளி—லட்ச ரூபாய் ரொக்கம் என்கிற வகைகளோடு கல்யாணம் செய்து கொண்டான்.

"எப்படியிருக்கா எம் பொண்டாட்டி?"

"சுமார்தான். ஏன் சரின்னுட்டீங்க?"

"ஒரு திமிருதான்."

ரிசப்ஷன் கூட்டத்தில்இரண்டு நிமிடம் ரகசியமாய்ப் பேசிப் பிரிந்து விட்டார்கள்.

அப்பா கடையை எழுபதாயிரத்துக்கு விற்றுவிட்டார். பிறகு பாண்டியனைப் பார்க்கவேயில்லை. பார்க்கத் தோன்றவில்லை.

உடம்பு தணல் மட்டும் சீறிச் சீறி எழுந்தது.

மறக்க மாலை கல்லூரிக்குப் போனாள். பி. ஏ. முடித்தாள். எம். ஏ. எழுதினாள்.

தலைமையகத்தில் ப்ரமோஷன் கிடைத்தபோது எக்மோர் மியூசியத்துக்கு மாற்றல் கேட்டு வாங்கிக் கொண்டாள். டிப்ளமா இன் ஆர்க்கியாலஜி மனுப் போட்டாள். கிடைத்தது. விடுமுறை போட்டுப் படித்தாள். அகழ்வராய்ச்சிக்குப் போனாள்.ஊர் ஊராய் சுற்றினாள்.

நெல் வயல் நடுவே கூடாரம் போட்டு, நிலம் தோண்டி நடுகல் படிமம் எடுத்து, ராஜராஜன் காலத்தில் தரைப்போர் என்கிற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தாள்.

ரகுராம ரெட்டி அதை ஆட்சேபித்தான். 'நடுகல் மட்டும் எடுத்தாக்க போறாது, [இன்னும் ஆழ தோண்டியிருக்க வேண்டும், அது புதைக்கப்பட்ட இடமா. இல்லை போர் நடந்த இடமா என்றுதெரிய வேண்டும்' என்று வாதாடினான்.

ரகுராம ரெட்டி ராஜமுந்திரி, எம். ஏ. படித்தவன். ஆந்திரா அரசு. தமிழகம் வந்தான். விஜயநகரப் பேரரசு கன்யாகுமரி வரை பரவியிருந்தது என்பதற்கு சாட்சி தேடுபவன். மதுரையும் ஸ்ரீரங்கமும் அவனுக்கு மனப்பாடம். அங்குள்ள சகல கல்வெட்டுகளும் அவனுக்கு



அத்துப்படி. தமிழர் பெருமை பேசினால் கொஞ்சம் கோவம் வரும்.

மறுபடி நடுகல் இடத்துக்குப் போனாள். ரெட்டியும் கூட வந்தான். தோண்ட கலெக்டரிடம் மனு செய்து காத்திருந்தார்கள். நெல் வயலில் எட்டு எட்டடி என்று நில ஆர்ஜிதம் செய்தார்கள்.

ரெட்டி தோண்டினான். தேன்மொழி மண்வாரிக் கொண்டாள். ஆறடி ஆழத்தில் மண்டை ஓடு தெரிந்து ரெட்டி மேலே ஏறிவிட்டான். போதும், இது இடுகாடு தான் என்றான், தேன்மொழி பள்ளத்தில் இறங்கினாள். சின்னக் கரண்டியால் மெல்ல, மெல்ல மண் அகற்றினாள். இரண்டு எலும்புக் கூடுகள் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டபடி இருந்தன.

நடுகல் விஷயம் தெளிவாய்த் தெரிந்தது. ராஜராஜ சோழன் காலத்தில் நடந்த விற்போர். ஒரு பெண் பொருட்டு சண்டை எதிர் எதிரே நின்று பளிச்சென்று வில் விட்டிருக்கிறார்கள். ஒருவன் இறந்து விட்டான். அவன் இறந்த பிறகு எந்தப் பெண் பொருட்டு சண்டையிட்டார்களோ அவள் கத்தியால் தன்னைக் குத்திக் கொண்டு இறந்து போனாள். தற்கொலை செத்துப் போனவனைக் காதலித்திருப்பாள் போலிருக்கிறது. வேண்டாதவன் ஜெயித்துவிட செத்தவனுடன் தானும் சேர்ந்துவிட்டாள். வென்றவன் நொந்து வருந்தி அறுபது ஆடுகள் இவன் கோயிலுக்கு நிவந்தமாய் விளக்கெரிய விட்டிருக்கிறான். இதுவே நடுகல்.

தழுவின நிலையில் இறந்த இரண்டு பேரையும் புதைத்திருக்கிறார்கள்.

கை வளையல்கள், காற்சிலம்பு, தாலி, குறுவாள், காது பாம்படம், வீரக்கழல், செப்பு நாணயம் எல்லாம் கிடைத்தன.

ரெட்டி எலும்புக் கூடு பார்த்துவிட்டு வெளிறிப் போயிருந்தான்.

பத்திரிகைகள் போட்டோ பிடித்துப் போயின. முக்கிய தடயம் என்று பாராட்டின. தஞ்சாவூர் அரசு, விருந்தினர் மாளிகையில் ரெட்டி இரவு குடித்து விட்டு வாய்விட்டு அழுதான்.

தேன்மொழி அவனைச் சமாதானப்படுத்தினாள்.

''யார் யாரையோ காதலித்து விட்டுப் போகிறார்கள். இதற்கு யுத்தம் அவசியமா? இது அம்பினால் தீர்மானிக்கப்பட முடியுமா? எவ்வளவு கோரம் தேன்மொழி! மனிதர்கள் எவ்வளவு கீழ்த்தரம்! இந்த நாகரிகம் ஏன் மனிதன் இப்படி இருக்கிறான்? இன்னமும் இன்னமும் இது நடக்கிறதே தேன்மொழி?

''காமம், காமம்தான் சகலத்துக்கும் சத்ரு. உடம்பில், நெருப்பு வைத்து அனுப்பப்பட்டிருக்கும். அந்தக் கங்குதான், பொறாமை, காழ்ப்பு, ஆளுமை. ஆண்மை என்று தழல் தழலாய் எரிகிறது. ஒவ்வொரு சூழ்நிலை சூறாவளிக்கு வெவ்வேறு விதமாய்ப் படர்ந்து நம்மைக் கொல்கிறது. உலகில் எந்த உயிரும் இப்படிக் காமத்தில் சாவதில்லை. நீ என்ன சொல்கிறாய் தேன்மொழி?''

''சரி...சரி...படு...படுத்துத் தூங்கு.''

தூங்கிவிட்டான்.

காலையில் எழுந்து பல்தேய்த்து விட்டுப் பேப்பர் படிக்க உட்காருகையில் இரவு புலம்பலுக்குமன்னிப்புக் கேட்டான்.

மறுநாள் இரவு திருச்சிபோய் அங்கிருந்து சென்னை கிளம்ப முதல் வகுப்பு கூபேதான் கிடைத்தது.

''நான் தேர்ட் க்ளாஸுக்கு மாற்றிக் கொள்கிறேன். நீ கதவு சாத்தித் தூங்கு.''

''ஏன், நீயும் வாயேன்.''

''எதற்கு வம்பு?''

''ஒரு வம்புமில்லை வா?''

''நம்ம சண்டை பெரிசாகும்.''

''உன்னோடு ஒரு சண்டையுமில்லை. நீ சண்டை போட்டதால்தான் இவ்வளவு பெரிய விஷயம் கிடைத்தது. பேசாமல் வா.'' ஸ்ரீரங்கம் தாண்டியதும் விளக்கை அணைத்துவிட்டு மேலே போக யத்தனித்தவனைக் கீழே இழுத்தாள்.

''தேன்மொழி.''

''கமான் ஐ ஸே''

''பட் வொய் தேன்மொழி?''

''டு ஸெலிபரேட். டு ஸே தேங்க்யூ.''

''துணியின்றி ஓர் ஆண் எதிரே நின்றது ஓடும் ரயிலில்தான்.''

''உன்னை எனக்குப் புரியலை, தேன்மொழி.'' மடியில் உட்கார்ந்தவளை ரெட்டி வியப்புடன் பார்த்தான்.

''யாரை யார் புரிந்து கொள்ள முடியும்?''

''இது எதற்கு?''

''அந்த செத்துப் போன சோழதேசத்துப் பெண்ணுக்காக.''

''புரியவில்லை.''

''வேண்டியவனைக் கலக்க முடியாமல் வேண்டாதவன் கொன்றான், இவள் தன்னைக் குத்திக் கொண்டாள்.''

''ஸோ?...''

''என்னை அவளாக நினைத்துக் கொள்.''

''பட் வொய்?''

''காமம் தீராமல் சாவது துரதிருஷ்டம். அந்த ஆளுக்கும் ஆசை இருந்திருக்கும். நீதான் அந்த ஆள். நான் அந்தப் பெண். அவளோ அவனோ சாகவில்லை. சாக நாம் விடக் கூடாது.''

ரெட்டி எழுந்து அவளை ஆரத் தழுவிக்கொண்டான். மரப்பசு அம்மிணி எச்சல் துப்பினது போல் கிடந்தேன் என்று ஒரு முறை சொல்லியிருக்கிறாள்.

இது வெறும் எச்சல் இல்லை.
தாம்பூல எச்சல்.

## 9

தஞ்சாவூர் நடுகல் பற்றி தேன்மொழி நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினாள். அகநானூறு, புறநானூறு பாடல்களை மேற்கோள் காட்டினாள், இருநூற்று நாற்பது பக்கம் கட்டுரை, நல்ல தமிழில் சுவையாய் எழுதிக்கொடுக்க டிபார்ட்மென்ட் முழுவதும் பேசப்பட்டது. கல்வி அமைச்சகத்திலிருந்து பாராட்டாய் ஒரு குறிப்பு வந்தது.

தனிப்பட்ட முறையில் தன் ஆராய்ச்சியைப் புத்தகமாய்ப் போட அனுமதி கோரினாள். புதை பொருள் ஆராய்ச்சித் துறை அனுமதி வழங்கியது. எடுத்துக்கொண்டு இரண்டு மூன்று பதிப்பகம் ஏறியிறங்கினாள்.

''நாவலா எழுதிக் கொடுங்கம்மா. கட்டுரை யார் படிக்கிறாங்க? கட்டுரைன்னா ஜோசிய புஸ்தகம்தான் போகும். சரித்திர ஆராய்ச்சி எல்லாம் சரிப்படாது.'' ஒரு பதிப்பகம் கூறிற்று.

''அஞ்சாயிரம் கொடுங்க. ஆறாயிரம் காப்பி போட்டுருவோம்.'' ஒரு பதிப்பகம் சிரித்துக்கொண்டே தந்திரம் பேசியது. பண்டமாற்று முறை.

''சரிங்க வாரம் வாரம் காசோட கட்டுரை எழுதித் தரேன்.'' அதே சிரிப்பு பதிலுக்குக் கொடுத்துவிட்டு அந்தப் பதிப்பகத்தை மறந்து போனாள்.

மறுபடி ஓர் அகழ்வாராய்ச்சிக்குக் கும்பகோணம் போனாள். சோழன் மேடு என்கிற இடத்தை அளவெடுத்தாள்.



வந்த பிறகு ''உன்னைத் தேடி யாரோ வந்திருந்தாங்க.'' அம்மா சிறிய விஸிடிங் கார்ட் கொடுத்தாள்.

ஆர். வரதராஜன்.
நல்ல நூல் விற்பனை நிலையம்.
சென்னை-4
விலாசம் போன் நம்பர் இருந்தது.

''என்னவாம்?''

''உன்னைப் பார்க்கணுமாம். இன்னிக்கு சாயந்திரம் வரேன்னு போயிருக்காரு.''

இந்த வரதராஜன் தன் வரதுவாக மாறுபவன் என்று அப்போது நினைக்கவேயில்லை.

ஸ்போர்ட்ஸ் பனியனும் அரைக்கால் சட்டையும் நாடா இன்றி ஒட்டுகின்ற ஷூவுமாக ஸ்கூட்டரில் ஓர் ஆள் இறங்கியதும் தேன்மொழியின் புருவங்கள் உயர்ந்தன.

''தஞ்சாவூர் நடுகல் ராஜராஜன் காலத்தில் தனிப் போர் கட்டுரை எழுதியது நீங்கதானே?''

''ஆமாம்.''

''நான் வரதராஜன். புத்தகப் பதிப்பாளன்.''

''சொல்லுங்க.''

''உங்க ஆராய்ச்சி பத்தி ஹிண்டு, எக்ஸ்பிரஸ் ரெண்டுலயும் படிச்சேன். இருநூத்தி நாற்பது பக்கத்து மேட்டர் இருக்காமே. ஒரே அகழ்வு பற்றி அத்தினி பக்கமா...பல அகழ்வுகளா...?''

''ஒரே அகழ்வு.''

''அவ்வளவுக்கு மேட்டர் இருக்கா அதுல?''

''பல அகழ்வோட கம்பேர் பண்ணியிருக்கேன், ராஜராஜன் காலம் பத்தி நிறைய எழுதியிருக்கேன்.''

''அந்த மேட்டர் எனக்குத் தரீங்களா?''

''எதுக்கு?''

''படிச்சுப் பார்த்து நல்லா இருந்தா போட்டுறலாம்.''

''நான் எவ்வளவு முன் பணம் தரணும்''

''எதுவும் வேண்டாம். பத்து பர்ஸெண்ட் ராயல்டி. புத்தகம் வந்தவுடனே... அல்லது வருஷக் கடைசில கணக்குப் போட்டுக் கொடுத்துருவேன்.''

''இது ட்ரை மேட்டர். நாவல் இல்லை.''

''எனக்குத் தெரியும். இப்ப தமிழ்ல எல்லா புத்தகமும் நல்லபடி போகுது. விளம்பரம் சரியா செய்யணும்.''

''இதுக்கு விளம்பரமா?''

''செய்யலாம்.''

''எப்படி?''

''வாரப் பத்திரிகைல பிரபலமானவங்கள விட்டு எழுதச் சொல்லணும்.',

''செய்வார்களா...பிரபலம்னா யாரு?''

''சினிமா நடிகர், நடிகை அல்லது நாவலாசிரியர்.''

''ஆராய்ச்சிக் கட்டுரைக்கும் சினிமா ஸ்டாருக்கும் என்ன சம்பந்தம்?''

''பிடிக்கட்டுக்கும் சினிமா நடிகைக்கும் என்ன சம்பந்தம்? சீக்காய்த் தூளுக்கும் நடிகருக்கும் என்ன சம்பந்தம்? அதேதான்.''

''அவங்க பேர்ல யாராவது எழுதுவாங்களா?''

''கொடுங்களேன் கட்டுரையை...''

எட்டு நாளில் ''ப்ரூஃப் ரெடி. வந்து திருத்திக் கொடுங்கள்'' என்று கடிதம் வந்தது.

பெரிய பழங்கால வீடு, வாசலில் பட்டைத் தூண்கள். முல்லைக் கொடி, முதுகு சாய்மானத்துடன் சிவப்புக்கல் பெஞ்சு, தரையில் பச்சையாய் பழைய சலவைக்கல். இடப்புறம் பெரிய ஹால் முழுவதும்



இரும்பு ஷெல்ஃப் போட்டு புத்தகங்கள். ஹாலுக்குப் பிறகு வீடு. பழசுதான், சொத்து பாகம் பிரிக்க இவருக்கு எஞ்சியதாம். கம்பெனி வேலை சரிப்படவில்லை என்று பதிப்பகம் ஆரம்பித்தானாம். புத்தகம் கட்டுக்கட்ட ஒரு பையன், கணக்குப் பார்க்க ஒரு முதியவர்.

புத்தகம் புத்தகமாய் எடுத்துப் பிரித்தாள். இசை, நாட்டியம், சிற்பம், நெல் வகைகள், பருத்திப் பயிர், பணப்பயிர், கவிதைகள், நாவல்கள், உலகப் போர் பற்றிப் பல நூல்கள், பதிப்பகத்தில் ஒரு ரசனை தெரிந்தது.

''பதிப்பகம் லாபமா?''

''லாபம்தான், கண்டு முதல் எடுக்க வருஷமாகும். காத்திருக்க வேண்டும்''

''எப்படி இருக்கிறது கட்டுரை?''

''ரொம்ப அற்புதம். இன்னொன்று எழுதறீங்களா? ராஜராஜன் பத்திப் பெரிதாய் எழுதித் தரீங்களா?''

''இதுவெல்லாம் விற்குமா?''

''அரசே வாங்கும். மூன்னூறு காப்பி வாங்கும். ஏப்ரல், மே மாசம் பள்ளிக்கூடங்கள் புத்தகம் வாங்கும்.'' மொத்த ப்ரூஃபும் இரண்டு நாளில் திருத்தினாள். அவனே சமையல், அவனே சுத்தம் செய்தல், அவனே பதிப்பகம் என்று புரிந்து கொண்டாள்.

''ஏன் அப்படி?''

''எங்களுக்குத் தங்க வியாபாரம். கட்டிட காண்ட்ராக்ட். இதில் எதுவும் ஈடுபடாது புத்தகம் விற்க வந்ததில் குடும்பத்துக்குக் கோபம். வேஸ்ட் என்று அபிப்ராயம். விலக்கி விட்டார்கள். புஸ்தகத்தைவிட சுகம் எதிலும் இல்லை என்று நான் இங்கேயே உட்கார்ந்து விட்டேன்.''

''என் கட்டுரையில் தவறு உண்டா?''

"ஆராய்ச்சிக் கட்டுரை. அதனால் வெறும் உரை நடையாய் இருக்கிறது. அடுத்த முறை அகழ்வாராய்ச்சி பற்றிக் கதைபோலச் சொல்லுங்கள். உங்கள் யூகங்களை எழுதுங்கள். சிரமங்களைத் தெரிவியுங்கள். அடுத்த கட்டுரைக்கு எம். ஏ. படித்த பெண்ணும் ராஜ ராஜ சோழனும் என்ற தலைப்பை வையுங்கள்."

தேன்மொழி வாய்விட்டுச் சிரித்தாள்.

ஒரு தமிழனின் கதை என்று ராஜராஜனின் சரித்திரம் எழுதினான்.

ஒரு தமிழனின் கதை.புத்தகமாகக் கொடுக்க வரும் போது சொட்ட சொட்டநனைந்தபடி வந்தான்.கிளம்பும் போது மழை இன்னும் வலுத்தது. ஸ்கூட்டரும் கிளம்பாமல் மக்கர் செய்தது.

அப்பா அவனை இருந்து மழை விட்டதும் போகச் சொன்னார். அம்மா குக்கரில்கூட அரிசி களைந்து போட்டு சாதம் வைத்தாள். கொத்தவால்சாவடி சரித்திரம்பற்றி அப்பாவிடம் தெரிந்துகொண்டான். பழைய சிந்தாதிரிப்பேட்டை, மவுண்ட்ரோடு, கடற்கரை சாலை என்று பேச்சிலேயே பழைய விஷயங்களை சிலாகித்துக் கொண்டார்கள்.

மழை வலுத்துப் புயற்காற்று சேர கவலையோடு மௌனமாய் இருந்தார்கள்.

"இருந்துடேன் தம்பி..." அப்பா கேட்டார்.

"நல்லா இருக்காதுங்க."

"பஸ் ஆட்டோ எதுவும் இருக்காது. நடந்தா மயிலாப்பூர் போக முடியும்? விடிஞ்சு போய்க்கலாம்."

அப்பாவின் வேட்டி உடுத்தி சாப்பிட உட்கார அம்மாவும் தேன்மொழியும் பரிமாறினார்கள். சாப்பிட்ட பிறகு சென்னைப் பட்டினம் பற்றிப் பேசினார்கள். முதலில் கட்டிய கோட்டை சர்ச்,ஐஸ்ஹவுஸ் தோன்றிய விதம், மயிலைக் கோபுரம், செயின் தாமஸ் வருகை, சின்னமலைத் திருநாள் என்று பேசினார்கள்.



சென்னைப் பட்டினம் என்ற கட்டுரைப் புத்தகம் எழுதச் சொன்னான். இரவு அங்கேயே படுத்துக்கொண்டான். ஏனோ கண்ணனையும் ராணியையும் தேன்மொழி நினைத்துக்கொண்டாள்.

காலையிலும் மழை இருந்தது. அரசு அலுவலகம், பள்ளி விடுமுறை என்று வானொலி அறிவித்தது.

"மழையானாலும் போகணுங்க. நானும் சோறு கண்ட இடம் சொர்க்கம்னு உட்காந்துட்டேன்: ஜன்னல் கதவு பையன் சாத்தினானோ இல்லையோ? திறந்து போட்டிருந்தா இந்த மழைக்கு ஹால் முழுவதும் நனைஞ்சுட்டிருக்கும்."

"எப்படிப் போவீங்க?" தேன்மொழி கவலைப்பட்டாள். அவனும் குளித்து உடுத்திக் கிளம்பினான். மவுண்ட் ரோடு ஜலம் சிந்தாதிரிப்பேட்டைக்குள் பாய்ந்து கூவம் ததும்பி நின்றது. பி.ஆர். அண்ட் சன்ஸ் வரும் வரை இடுப்பு ஜலம். சைபன் வீங்கி தெருவெல்லாம் கழிவும் கசண்டும் ஓடியது. கைபிடித்துக் கொண்டு தான் நடக்க வேண்டியிருந்தது.

ஆட்டோ பிடித்து லஸ் வரைக்கும் போய் அங்கிருந்து மயிலாப்பூர் நடந்தார்கள்.

ஜன்னல் சாத்தப்படவில்லை. கூரை வரைக்கும் ஈரம் தெறித்திருந்தது. ஜன்னலோர ஷெல்ஃப் முழுக்க நனைந்திருந்தது.

கடவுளே கடவுளே என்று கன்னம் பொத்திக் கொண்டான், கெட்ட வார்த்தைகளால் இறைந்தான். குமுட்டி அடுப்பு மூட்டி மேலே தகரப்பட்டம் வைத்துப் புத்தகத்தைக் காய்ச்சினார்கள். ஈரம் போக்கினார்கள்.

"என்னவோ வீச்சம் வருதே என்னது?"

"நம்ம ட்ரஸ் தான், கூவம் தண்ணி."

ஐயய்யோ மாத்த வேணாமா?"

"மாத்தணும், இல்லேன்னா மஞ்சள்காமாலை வரும்."

எங்கிட்ட புடவை இல்லீங்களே 'லுங்கி', பேண்ட் தான் இருக்கு."

"பேண்ட் குடுங்க."

அவன் பேண்டைப் போட்டு பெல்ட் போட்டுக் கட்டி மேலே சட்டை போட்டு உடுத்திக் கொண்டு எல்லா துணிகளையும் தண்ணீரில் டெட்டால் விட்டு நனைத்தாள்.

ப்ரெட் வாட்டித் தர சாப்பிட்டாள். மேலும் தணல் போட்டு அறையைச் சூடாக்கி நைலக்ஸ் புடவையை ஒற்றையாய் விரித்துக் கட்டி உலர வைத்தாள்.

இருட்டி இருட்டி வானம் பொழிந்தது. தன் வீட்டுக்கு போன் செய்து ஜீப் வரவழைத்தான். கொண்டு போய் சிந்தாதிரிப்பேட்டையில் பத்திரமாய் இறக்கினான்.

மழை விட்ட பிறகு நாலுநாள் கழித்து போன் செய்தாள்.

மஞ்சள் காமாலையாம். ஆஸ்பத்திரியில இருக்கிறானாம். ஓடினாள்.

"ஒண்ணுமில்லீங்க: ஆரம்ப ஸிம்ப்டம்ஸ். வீட்ல கவனிக்க ஆள் இல்லேன்னுட்டு இங்க சேர்ந்துட்டேன்"

பத்து நாள் தினமும் காலையும் மாலையும் பதிப்பகம் போனாள். கணக்கு வழக்கு கவனித்தாள். கீழா நெல்லி அரைத்துக் கொண்டு போய்க் குடிக்க வைத்தாள்.

மஞ்சள் தோலும் வைர பேசரியுமாய் ஆஸ்பத்திரிக்கு வந்த அவன் அம்மாவைக் கும்பிட்டாள்,

"யார் இது"

"சிநேகிதம்."

"என்ன ஜாதி?"

"மனுஷாதான்."

"இரண்டு வரியில் அம்மாவை அறுத்தது மனசுக்குப் பிடித்திருந்தது.

ப்ரெட்டும் தயிர் சாதமும் அடுத்த ஒரு மாதம் வரை உணவாய் இருந்தது. அவனை வாட வைத்தது. சென்னைப் பட்டினம் எழுதி முடிக்கும்போது மறுபடி அவன் கன்னத்தில் புது ரத்தம் ஏறியது.

ராஜராஜன் காலத்தில் தனிப் போர், புத்தகத்துக்குத் தமிழக அரசுப் பரிசும், தமிழ்ப் பாடநூல் நிறுவனத்தின் பாராட்டும் கிடைத்தன.பி.ஏ.தமிழுக்குப் சிறப்புப் புத்தகமாய் வைக்கப்பட்டது. எழுதியவருக்கு ஆயிரம் ரூபாயும்



பாராட்டுப் பத்திரமும் பதிப்பகத்தாருக்குப் பாராட்டுப் பத்திரம் மட்டும்.

வாங்கிக் கொண்டு வள்ளுவர் கோட்டத்திலிருந்து இரவு திரும்புகையில் கேட்டான்:

"என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதா?"

"பார்க்கலாம்."

"ஏன் பார்க்கலாம்."

"அது அவசியமான்னு பார்க்கலாம்."

"புரியலையே?"

"விலங்கு மாட்டிக்கிட்டு முழிக்கிறதைவிட விலங்கு இல்லாம இருக்க முடியுமான்னு யோசிக்கலாம்."

"எது விலங்கு தேன்மொழி"

"உனக்கு நான் எனக்கு நீ. இது தவிர வேற வழியேயில்லை. வேற உலகமேயில்லைன்னு கண்ணை மூடிக்கிற விலங்கு கல்யாண விலங்கு."

"கல்யாணம் ஏன் இப்படி வெறுப்பாச்சு?"

"பொய்யா வாழ வேண்டாம்னுதான். வம்பு இல்லாம வல்லடி வழக்கு இல்லாம இருக்கத்தான்."

"என்ன பொய் வரும்?"

"கல்யாணம் செய்துகிட்டா உன்னை நான் காதலிச்சாகணும் வரது. உன்னை மாதிரி உண்டான்னு பேசியாகணும். உன் கோபம் அசட்டுத்தனம் எல்லாம் பொறுத்துக்கிட்டு சிரிக்கணும், என்னால முடியாது. நீ கத்தினா பதிலுக்கு நானும் உன்னை முட்டாள்னு திட்டத்தோணும். கல்யாணம்ங்கறதே என்னை மூச்சு முட்டக் கட்டிப் போடற மாதிரி இருக்கு. என்னால முடியாது"

"ஸோ..."

"சும்மா இருந்துட்டுப் போறது."

''போகலாமே...சும்மா இருந்து பார்ப்போம். ரெண்டு பேருக்குமே அவசியம்னு பட்டுதுன்னா மேற்கொண்டு யோசிப்போம்.''

''கற்பு கேரண்டி தர முடியாது. கன்னிப் பொண்ணான்னு படுத்த பிறகு கவலைப்படக் கூடாது.''

''பட்டத்துக்கு ஆண் வாரிசு வேணும்னு உன்னைத் தேடலை தேன்மொழி''

''நாளை நான் மதுரை போறேன் வரது.''

''சரி, எப்ப வருவே?''

''அஸாம் சீஃப் மினிஸ்டர் வரார். மதுரை, தஞ்சாவூர் இரண்டு இடமும் சுத்திக் காட்டணும், கைடா போகணும் கவர்மென்ட் ஆர்டர். மினிஸ்டர் ப்ரோக்ராம் ஒருநாள்தான். ஆனா நான் நாலு நாள் இருந்துட்டு வரலாம்னு இருக்கேன்.''

''ஏன்?''

''சும்மாதான். இங்க இருந்தா தினமும் பார்க்கலாம்னு தோணும். பார்க்காம இருந்தா எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கத்தான்.''

''நான் அங்க தேடிகிட்டு வந்தா?''

''ஏன் வந்தேன்னு கேக்க மாட்டேன். வர்றதும் வராததும் உன் இஷ்டம். வான்னு உன்னைக் கெஞ்சவும் மாட்டேன், வந்தா ஏன் வந்தேன்னு கேக்கவும் மாட்டேன்.''

''ஒட்டுதல் வரவே வராதுங்கறியா?''

''இல்லை, திமிர்தான். என்னவோ தெரியலை. என் பரம்பரைக்கும் என் திமிருக்கும் சம்பந்தமேயில்லை. எல்லாருமே சாதுவான பொம்பளைங்கதான். ஆனா எல்லாருமே கல்யாணத்துக்குப் பிறகு விதியேன்னு சகிச்சுகிட்டுப் போறாங்களேன்னு கோவம் இருக்கு. நல்லா வாழ வேண்டிய வயசுல என் அக்கா வியாதிய



அவஸ்தப்பட்டு செத்துப்போனது பற்றுதலை அறுத்திடுக்கு. எதிர்பார்ப்புன்னு எதுவும் இல்லை. இப்படி நிறைய காரணம்.''

''சந்திரனுக்கு மனுஷன் போனதை லீப்னு சொல்லுவாங்க தேன்மொழி. லீப்னா என்ன தெரியுமா? தாண்டல். நடுல பத்தடி விட்டுட்டு, ஒவ்வோர் அடியா முன்னேறத விட்டுட்டுத் தாவிப் தாவிப் போறது. யோசிக்க ஆரம்பிச்சிட்டோமில்ல. அதை நடையா நடக்க முடியலை. ஓடத் தோணுது.''

''தப்பா வரது?''

''தப்பு, சரின்றது தனி அனுபவம் இப்ப தேன்மொழி.. நாளைக்கு இன்னும் நாலு பேர். நாலு வருஷம் கழிச்சு நாப்பது பேர், நானூறு பேர்...பத்து வருஷத்துல நடக்கற மாற்றம் பத்து நாள்ல நடக்கும். நடந்து போனோம். குதிரைல போனோம். தேர்ல போனோம். திடீர்னு பறந்திடலையா, பதினெட்டு நூற்றாண்டுகளா குதிரைல போயிட்டு பத்தொன்பதுல ஒரே மூச்சுல வேகம் எடுத்துடலையா? அந்த வேகம் பண்ற விஷயம் இது. பயண வேகம் அதிகமாக அதிகமாக உலகமே சுருங்கிப் போச்சு தேன்மொழி. தப்புன்னு எப்படிச் சொல்ல முடியும்?''

⁂ ⁂ ⁂

மினிஸ்டரை அனுப்பிவிட்டு அரசு மாளிகைக்கு வந்தாள், குளித்தாள், சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போனாள். போன் என்று ரிசப்ஷனில் கூப்பிட்டார்கள்.

''வரது.''
''எங்க இருக்கே வரது?''
''மீனாட்சியம்மன் கோயில் வாசல்ல.''
''அங்கேயே இரு; வரேன்.''
''பொட்டி எடுத்துக்கிட்டு.''
''எங்க போறோம்?''

''எங்கயாவது.''

கோயில் கோயிலாய்ச் சுற்றினார்கள். கும்பிடாமல், குங்குமம் விபூதி வாங்காமல், கல்தூண் கல்தூணாப் பார்த்து வந்தார்கள்.

''இங்க வா வரது...படிக்கறேன் கேளேன்.''

''நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார்க்கு...''

நாங்குடுந்தநவும், அக்கன் குடுத்தநவும் நம் பெண்டுகள் குடுத்தநவும் மற்றும் குடுத்தார் குடுத்தநவும் ஸ்ரீ விமானத்தில் கல்லிலே வெட்டுக என்று திருவாய் மொழிஞ்சருள வெட்டிந.''

''இங்க வாங்க வரது, ராஜராஜன் தளிச்சேரி பெண்டுகளுக்கு நிவந்தம் விட்ட கல்வெட்டு. தளிச்சேரி பெண்டுனா டான்ஸ் ஆடறவ;நூறுகலம்—வருஷத்துக்கு நெல்லு—ஆடறவளுக்குக் கொடுத்துருக்கான்.

''தெற்குத் தளிச்சேரித் தென் சிறகு'' மஹாதேவி ஈச்வரத்து நக்கன் சேர மங்கைக்குப் பங்கு ஒன்றும்;

இரண்டாம் வீட இத்தளி நக்கன் இரணமுகராமிக்குப் பங்கு ஒன்றும்;

ஆரும் வீடு இத்தளி நக்கன் சோழகுல சுந்தரிக்குப் பங்கு ஒன்றும்...இப்படி நானூத்தி சொச்சம் பெண்களுக்கு வீடு, நெல்லு கொடுத்திருக்கான்.''

''தளிச்சேரி பெண்டுகள்னா ப்ராஸ்டிடியூட்டா?''

''இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். கோயில் டான்ஸர். ராஜாங்க சம்பளம்?''

''நம் பெண்டுகள்னா?'' வரது கேட்டான்.



''மனைவிகள், ராஜராஜனுக்கு ஒன்பது மனைவியர்.''

''எல்லாமே பொண்டாட்டிதானா?''

''பட்ட மகிஷி ஒருத்தி, மத்தவங்க மனைவியர்.''

''இது தவிர?''

''அனுக்கின்னு சிலர் உண்டு.''

''அனுக்கின்னா?''

''தோழின்னு அர்த்தம்.''

''ராஜாவுக்குத் தோழி ஜஸ்ட் ஃப்ரண்ட். கூத்தி வேற. மனைவி வேற... ரெண்டுக்கும் இடைப்பட்ட ஓர் உறவு அனுக்கின்னு. கூத்தின்னா ப்ராஸ்டிட்யூட்டா இருக்கலாம். மனைவி கற்புக்கரசி. அனுக்கி ப்ராஸ்டிட்யூட்டும் இல்லை, மனைவியும் இல்லை, ஜஸ்ட் லைக் தட்.''

''எய்... நிஜமா சொல்றியா...?''

''கல்வெட்டுல இருக்குப்பா.''

''எப்படி உறவு இருந்திருக்கும்? என்ன மரபு இது? என்ன கண்டிஷன் இருந்திருக்கும்?''

''தெரியலை.''

''அனுக்கிக்குக் குழந்தை பொறந்தா என்னவாகும்?''

''தெரியலை...''

''தேன்மொழி, உனக்கு அனுக்கியா இருக்கணும்னு ஆசையா?''

''தெரியலை வரது. ஆனா தமிழன் சந்தோஷமானன்னு தெரியுது. பெண்களை ஹிம்ஸை படுத்தாத

குறிப்புதவி நூல்



வன்னு தெரியுது. பெண் அதிகாரிச்சியா இருந்திருக்கா' அவ கல்வெட்டு வெட்றா. நிபந்தம் தரா. கட்டளை போடறா.'

''தேன்மொழி...''

''நான் செத்துப் போயிட்டேன்னா வரது, எரிச்ச சாம்பல்ல ஒரு பிடி இந்த தஞ்சாவூர் மண்ல வீசிடு. இந்த விமானம் தெரியற இடமா பாத்து வீசிடு.''

''தேன்மொழி''

''ஏதாவதொரு லாட்ஜுக்குப் போலாம்.''

அறைக்குள் சோழி வீசி ஆடினார்கள், ஒவ்வொரு தாயத்துக்கும் எதிராளி ஒவ்வோர் உடையை உருவி எறிந்து விடவேண்டும் என்று பந்தயம் போட்டார்கள். தேன்மொழி பாவாடையோடு நின்றாள். வரது திகம்பரனானான். மன்னனும் அனுக்கியும் வாய் விட்டு சிரித்தார்கள்.

சிரிப்பு சிந்தாதிரிப் பேட்டை வரை கேட்டது.

## 10

**நா**ற்பத்தெட்டு நாளில் சூல் கொண்டது தெரிந்த போது வரதுவிடம் சொன்னாள்.

''தாலி கட்டிடட்டும?''

''வேணாம்...''

''ஏன் தேன்மொழி?...''

''குழந்தை அவசியமான்னு யோசிக்கிறேன்.''

''கலைக்க வேண்டாம் தேன்மொழி. பெற்றுக் கொள், உன்னை மென்மையாக்கும். ஒரு நல்ல மாற்றம் தரும். நிதானம் வரும். தாலி கட்டுகிறேன் என்று



சொன்னது கூட குழந்தையின் பொருட்டுதான். மெதுவாக மாறிவரும் சமுதாயத்தில் அவனுக்குக் கௌரவம் தர வேண்டாமா?''

''யோசித்துச் சொல்கிறேன்.''

அம்மா விஷயம் தெரிந்து அழுதாள். கலைத்து விடும்படி கதறினாள்.

வரது வீட்டுக்கு வந்து அப்பாவிடம் பேசினான்.

தேன்மொழி தாலி கட்டிக் கொள்ள மறுத்து விட்டாள்.

மூவரும் மாறி மாறிக் கெஞ்சியதும், கயிற்றில் தாலி கோர்த்துத் தானாய் முடித்துக் கொண்டாள்.

அம்மா வெளியே போய்விடச் சொல்லி விட்டாள்.

வரது வீட்டுக்கு வந்து விட்டாள்.

அக்கம் பக்கம் கேள்வி கேட்டது. வரதுவின் அம்மா வாசலில் நின்று வாயார வைதாள்.

திடீர்த் தாலி கண்டு ஆபீஸில் புருவம் உயர்த்தினார்கள். இரண்டு மாதத்தில் விஷயம் தெரிந்து பின்னால் சிரித்தார்கள்.

தேன்மொழிக்கு வலி எடுத்தபோது வரதுபக்கத்தில் இல்லை. தானே நர்ஸிங்ஹோம் வந்தாள். பிள்ளை பெற்றாள்.

டெல்லியிலிருந்து வரது வரவேண்டும் என்று காத்திருந்தாள்.

வரது டெல்லியிலிருந்து வீட்டுக்கு வந்தான். விஷயம் கேள்விப்பட்டதும் அதே டாக்ஸியில் நர்ஸிங்ஹோம் நுழைந்தான்.

''தேன்மொழி...''

''ராஜாவுக்கும் அனுக்கிக்கும் குழந்தை பிறந்தா என்னவாகும் வரது?''

''நீதான் சொல்லணும் தேன்மொழி.''

''அனுக்கன்.''

''அப்படீன்னா?''

''இவன் நமக்கு ஃப்ரண்ட். சிநேகிதன். நான் அம்மா இல்லை நீ அப்பா இல்லை. நான் உனக்கு சிநேகிதம். நீ எனக்கு சிநேகிதம். நமக்கு இவன் சிநேகிதம்.''

''வார்த்தை தான் மாற்றம்.''

''இல்லை வரது. உறவு மறந்து வாழ்க்கை மாறுது, இவனை ஃப்ரண்டா ட்ரீட் பண்ணலாம். இவன் இஷ்டத்துக்கு இவன் சுபாவத்துக்கு விடலாம். அப்பான்னு அதட்டாம, அம்மான்னு ஆளுமை பண்ணாம... நமக்குத் தெரிஞ்சதையெல்லாம் சுமத்தாம. அவன் அவனா வளரட்டும்... நாம வெறுமே கார்டியனா இருப்போம்.''

''புரியறது தேன்மொழி.''

அனுக்கன் சிரித்தான்.

தென்மொழி கனவில் யானை வந்தது. தேன்மொழி யானையை மற்றவை துரத்த பள்ளத்தில் விழுந்தது.

விழுந்த யானையை இன்னொரு யானை தூக்கிற்று. இரண்டும் ஓடின. காதுகளைச் சிறகாய் விரித்துப் பறந்தன. பறக்கத் தெரிந்த யானைகளைப் பள்ளத்தில் வீழ்த்த முடியாது. வேட்டையாட முடியாது. மதம் பிடித்த யானைகளை, யானைகளை வைத்தே வேட்டையாடுவது இனி முடியாது. இனி யானைகள் பறக்கும். தாவத் தெரிந்துவிட்டது, லீப் நடந்து விட்டது. இனி பறப்பது முடியாதா? தாவல் நடக்குமென்று யாரும் நினைத்தார்களா? பறப்பது சாத்தியமில்லை. எப்படிச் சொல்கிறீர்கள்?

தேன்மொழி பறந்தபடி கேள்வி கேட்டாள்.

—முற்றும்—

CONNEMARA PUBLIC LIBRARY
1 8 MAY 2004
CHENNAI-600 008